சட்டவியல்

(JURISPRUDENCE)

ஆசிரியர் :

திரு மா சண்முக சுப்பிரமணியம், பிஏ, பிஎல்,



கழக வெளியீடு

சட்டவியல்

[JURISPRUDENCE]

◙

ஆசிரியர் :

திரு எம் சண்முக சுப்பிரமணியம், பி ஏ, பி எல்.

அணிந்துரை :

உயர்திரு சு கணபதியா பிள்ளை அவர்கள்

நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம்

◙

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி–6 சென்னை-1.

1962

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1 Feb 1962

SATTAVIYAL

(JURISPRUDENCE)

கழக வெளியீடு, 1074

Appar Achakam, Madras-1.

பதிப்புரை

சட்டம் என்னும் சொல் செப்பத்தை யுணர்த்துவதாகும். நாடும், மொழியும், நன்மக்களும், நன்னெறியும் செம்மையுற்றிருந்தாலன்றி வையக வாழ்வு தெய்வவாழ்வாகத் திகழாது. குடும்பம், ஆசான், குழு, கோன் முதலிய பலதிறப்பட்ட நிலைகள் எல்லாவற்றிலும் ஆள்வோர் ஆளப்படுவோர் என இருபகுதியினர் காணப்படுவதியல்பேயாம். இவ்விருபகுதியினரும் தத்தமக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் மேற்கொண்டு ஒழுகுவதற்குச் சட்டம் கண்போன்று மிக்க சிறப்புடையதாகும்.

இவ்வுண்மை தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனுரருளிய செந்தமிழ்ப் பொதுமறையானுணரலாம். அதுவருமாறு :

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்." —திருக்குறள், ருஅக

ஆளப்படுவோர் ஆள்வோரால் காக்கப்படுவதுபோல், ஆள்வோர் முறையினுல் காக்கப்படுவர். இம்முறையினை முட்டாது செய்பவனே மெய்ம்மை இறையென மேலோரா னழைக்கப்படுவான். முறையெனினும் நெறியெனினும் ஒன்றே. "மாண்ட, அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" (புறம். ருரு.) என்பதனுல் இது நன்கு உணரப்படும்.

சட்டம் இருதிறத்தார்க்கும் இன்றியமையாது வேண்டப்படுவதொன்று. மாந்தரனைவருக்கும் தாந்தாம் தொழிலுடையராய் ஆந்துணையும் பிறர்க்குதவி, அனைவரும் ஒற்றுமையுடன் பகைவராகாது நகைவராய் நல்வாழ்க்கை வாழ்ந்து நாடும், மொழியும், நற்சார்பும், நன்னெறியும் பீடுறப் பேணி உறுதியுடன் ஒழுகுவதே கடப்பாடாகும். அக்கடப்பாட்டினை உணர்ந்தொழுகுவதற்கு உலகப் பொதுநூலாம் திருக்குறள் ஒன்றே என்றும் மாருச் சிறப்புடைத்தாகும். அந்நூல் தொகையாக ஓதும் தெய்வநன்னூலாகும். அவற்றை வகையாகவும் விரியாகவும் விளக்குவதற்கு ஒவ்வொரு நாட்டிலும் செவ்விய அற நூலாகிய விரிந்த சட்ட நூல்கள் வேண்டப்படுவனவாகும்.

அம்முறையில் யாக்கப்பட்டு வெளிவருவதே 'சட்டவியல்' என்னும் இச் சீரிய நூலாகும். இதுகாறும் ஆட்சிமொழி ஆங்கிலமாக இருந்து வந்தமையால் இத்தகைய நூல்கள் ஆங்கிலத்தில் அமையப்பட்டு ஆங்கிலங் கற்ருர் சிலரால் பயிலப்பட்டு அனைவர்க்கும் பயன்பட ஏதுவின்றியிருந்தது. இப்பொழுது நம் தமிழ்மாநிலத்துத் தாய்மொழியாந் தமிழ்மொழி ஆட்சிமொழியாய்க் கல்லூரிப் பயிற்சி மொழியாய்க் கவினுற விளங்குகின்றது. அதனுல் இத்தகைய நூல்கள் பலப்பல

நம் செந்தமிழ் மொழியில் தோன்றவேண்டுவன இன்றியமையாதன வாகும். அவற்றை வரவேற்று அவ்வவ்வாசிரியன்மாரை ஊக்குவிக்க வேண்டுவது தமிழரனைவர்க்கும் தலைக்கடனாகும்.

இந் நூலாசிரியர் திரு. மா. சண்முக சுப்பிரமணியம் மாவட்ட முறைமன்ற நடுவராய்ச் சட்டநூற்பயிற்சி மிக்காராய் ஆங்கிலமுந் தமிழும் பாங்குறப் பயின்ற பண்பினராய்த் திகழ்வதால் மிகவும் செம்மையான முறையில் இந்நூல் அமையப்பெற்றுள்ளது. இது 'சட்டமும் சட்டவியலும்' 'சட்டத்தின் அடிப்படைக் கருத்துக்கள்' 'மனித உரிமைகள் அல்லது ஆதார உரிமைகள்' என்னும் முப்பாலாய்த் திகழ்கின்றது. இம்மூன்று பிரிவுகளும் முறையே 14, 8, 7 என்னும் உட்பிரிவுகளைக்கொண்டிலங்குகின்றன. இந்நூலால் தொன்மைத் தமிழ்மொழியின் நன்மை வளமும், புதுப்புதுச் சொற்களை எளிமையும் இனிமையும் பொதுள ஆக்கிக்கொள்ளும் ஆற்றற் சிறப்பும் நன்குணரலாம்.

இந்நூலில் திருக்குறள், சங்கநூல், சிலப்பதிகாரம், திருமுறை, தாயுமானவர், மனுநூல், சுக்கிரநீதி, யாக்ஞ்யவால்கியர், பாரதியார் முதலிய நூல்களிலிருந்து சிறந்த பல மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. இரண்டாயிரமாண்டுகட்கு முன்னுள்ள திருக்குறள் இன்றுள்ள சட்டநூலுக்குக் கருப்போலமைந்துள்ளமையை எடுத்துக்காட்டி விளக்கங்கூறும் பகுதி வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்ததாகும். மேலும் ஆங்கிலநூற்கள் பலவற்றினின்றும் பல சான்றுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தரப்பட்டுள்ளன. அசோகப் பேரரசு பிளேட்டோ அரிஸ்டாட்டல் முதலாயினோர் கொள்கைகளும் விளக்கப்பட்டுள்ளன.

ஆட்சி தோன்றிய முறையும், அது கோனாட்சியாக வமைந்ததும், பின் அவ்வாட்சிக் கொடுமையினால் குடியாட்சியாக மலர்ந்ததும், பிரித்தானியா, பிரஞ்சு, அமெரிக்கா, செர்மெனி, இத்தாலி, உருசியா முதலிய நாடுகளின் வரலாறுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலினைக் கழகத்தார் விருப்பப்படி செவ்விய முறையில் ஆக்கித்தந்த திரு. மா. சண்முக சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல். அவர்கட்கும் அணிந்துரை வழங்கிய உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு. சு. கணபதியா பிள்ளை அவர்கட்கும் கழகத்தார் நன்றி உரித்தாகும்.

இதனைச் சட்ட வல்லுநர்களும், சட்ட ஆசிரிய மாணவர்களும் செந்தமிழ் அன்பர்களும் வாங்கியும் வாங்குவித்தும், கற்றுங் கற்பித்தும் பயனெய்துவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

அணிந்துரை

தக்க சமயத்தில் இச் சட்டநூல் வெளிவருகின்றது. தமிழ் மொழியை ஆட்சிமொழி என்று சட்டம் இயற்றியபின் அரசாங்க அலுவலகங்களில் தமிழ்மொழியிலேயே அலுவல்கள் எல்லாம் நடைபெறுவதற்குத் தமிழ்நாட்டரசாங்கம் வேண்டுவன செய்து வருகின்றது. உயர்நிலைப் பள்ளிகளோடு நின்றுவிடாமல் கல்லூரிகளிலும் போதனுமொழி தமிழ்நாட்டில் தமிழாகவே இருக்கவேண்டுமென்ற கொள்கை ஓர் அளவுக்கு நிறைவேற்றப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் சட்டக் கல்வியும் தமிழிலேயே கற்பிக்கப்படவேண்டும் என்ற ஓர் அவாவைப் பூர்த்தி செய்வதற்கு இதுபோன்ற நூல்கள் உதவுகின்றன. பேராசிரியர் பழனிச்சாமி சர்வதேசச் சட்டத்தைப்பற்றி ஒரு சிறந்த நூல் சமீபத்தில் எழுதியுள்ளார்கள். இப்போது சட்டவியல் (Jurisprudence) என்னும் பொருளைப்பற்றி ஆசிரியர் சண்முக சுப்பிரமணியம் எழுதியுள்ளார். சட்டக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கை ஒருபுறமிருக்கக் கவி பாரதியார் கண்ட கனவு கொஞ்சம் கொஞ்சமாக உண்மையாகின்றது என்ற எண்ணம் நமக்கு உவகை ஊட்டுகின்றது. அமரகவி காலத்தில் அனேக கலைகளில் தமிழில் நூல்கள் இல்லை. தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அது ஓர் இழுக்கே.

சட்டத்தைப் பொறுத்தவரை அக்குறையை ஓர் அளவு இந்த ஆசிரியர் நீக்கியிருக்கிறார். அவருடைய அரசாங்க அலுவல்களுக்கிடையே இந்த நூலை எழுதும் பணியில் ஈடுபட்டது பாராட்டத்தக்கது. ஆசிரியர் தம்முடைய பரந்த தமிழ் இலக்கிய அறிவை இந்த நூலில் நன்கு பயன்படுத்தியிருக்கிறார். ஆங்காங்கே திருக்குறள், சுக்கிரநீதி, தேவாரம் முதலிய இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் கொடுத்திருக்கின்றார். சால்மண்ட், பேராசிரியர் கிரே, சர் ஹென்றி மெயின் முதலிய மேல்நாட்டு ஆசிரியர்களின் நூல்களிலிருந்து நுணுக்கமான கருத்தைத் தெரிவிக்கும் வாக்கியங்களை அவ்வவ்விடங்களில் சேர்த்திருக்கிறார். சட்டவியலுக்குப் பொருத்தமான தமிழ்க் கலைச்சொற்களைத் தேடிக் கையாண்டிருக்கிறார். எடுத்துக்காட்டாக, derivative title, precedent, easement முதலிய கடினமான ஆங்கிலச் சொற்றொடர்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்றொடர்களைக் கையாண்டிருக்கிறார். மரபையொட்டி நூலில் முதல் இரண்டு பிரிவுகளும் அமைந்திருக்கின்றன. இந்த இரண்டு பிரிவுகளிலும் நூலின் நடை மொழிபெயர்ப்பு நடையாக இல்லாமல் மூல நூலுக்கு ஒத்த நடையில் எழுதப்பட்டிருப்பது இதன் தனிச் சிறப்பைக் காட்டுகிறது. ஆசிரியரின் முயற்சி இங்கு நல்ல வெற்றி கண்டது என்றே நம்புகின்றேன். சிறப்புக் கூறுக நூலின்

மூன்றாவது பிரிவைக் குறிப்பிடவேண்டும். இந்தப் பிரிவு சாதாரண மாகச் சட்டவியல் நூல்களில் தென்படாது. காலத்தின் முற்போக்கை யொட்டிச் சட்டவியலின் ஒரு கூறாக இந்தப் பிரிவைக் கருத இட முண்டு. ஆதார உரிமைகள் அவைகளின் முக்கியத்துவம், அவை களுக்கும் அரசியல் சட்டத்துக்கும் உள்ள தொடர்பு, அவை எவ்வாறு தமிழ்நாட்டுப் பண்டை அறநெறியை ஒட்டியே அமைந்திருக்கின்றன என்பனபோன்ற கூறுகள் எல்லாம் ஆசிரியரால் விரிவாக எளிய இனிய நடையில் இந்த மூன்றாவது பிரிவில் கையாளப்பட்டிருக் கின்றன. தமிழ் மட்டும் கற்றுணர்ந்த தமிழ்மக்களுக்கும் உதவுமாறு எழுதப்பட்டிருப்பது ஒரு சிறந்த கூறாகும்.

சட்டங்களுக்கெல்லாம் இலக்கணம் வகுக்கும் சட்டவியலைத் தமிழில் ஆக்குவதுதான் மிகவும் கடினம். மற்றச் சட்டப் பிரிவுகளைத் தமிழில் எழுதுவது இதைவிட எளிது. இந்நூலைத் தமிழில் நல்ல வடிவில் பார்த்த எனக்கு மற்ற எல்லாச் சட்டங்களும், சட்டப் பிரிவு களும், சட்ட நுணுக்கங்களும் தமிழில் விரைவில் மலரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பொது மக்களும் சட்ட மாணாக்கர்களும் இந்த நூலைப் படித்துப் பெரிதும் பயன் அடைவார்கள் என நம்புகின்றேன். அவர்களுடைய ஆதரவினால் ஆசிரியருக்கு இன்னும் பல சட்ட நூல்கள் எழுதும் ஊக்கம் ஏற்படுமென்று நம்புகின்றேன்.

சென்னை,
18—1—1962

(ஒப்பம்) சு. கணபதியா பிள்ளை,
நீதிபதி,
சென்னை உயர்நீதி மன்றம்.

முன்னுரை

சட்டம் நம் அன்றாட வாழ்வோடு ஒன்றியிருக்கிறது. நம் ஒவ்வொருவரின் வாழ்வும் அரசால் ஓரளவு முறைப்படுத்தப்படுகிறது. அவ்வாறு முறைப்படுத்துவதற்குக் கருவியாக அமைவது சட்டமேயாகும்.

இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தையும்பற்றி நாம் அறிந்து கொள்வது எளிதன்று. அது அவசியமும் இல்லை. ஆனால், சட்டத்தின் அடிப்படைக் கருத்துக்கள் பற்றிய ஞானம் நம் பொது அறிவிற்கு இன்றியமையாதது.

சொத்துரிமைச் சட்டம், குற்றவியல் சட்டம், வாரிசு உரிமைச் சட்டம் எனப் பலவேறு சட்டங்கள் இருக்கின்றன. மக்களின் உரிமை, உடைமை, சொத்து இவைகளைப் பாதுகாத்து, ஒருவரால் இன்னொருவருக்குத் தீமை செய்தால், அதனால் நேர்ந்த கேட்டிற்கு ஈடு செய்யும்படி தீமை செய்தவரைப் பொறுப்பாக்கி, குற்றம் செய்தவர்களைத் தண்டித்து, மக்கள் வாழ்வை முறைப்படுத்தும் கருவிகளாகவே பெரும்பாலான சட்டங்கள் அமைகின்றன.

உரிமை, உடைமை, சொத்து, பொறுப்பு, தண்டனை முதலிய சட்டக் கருத்துக்கள் எல்லாச் சட்டங்களுக்கும் பொதுவானவை. இவை சட்டத்தின் மூலக் கருத்துக்கள் (Elements of Law). இந்த அடிப்படையான சட்டக்கருத்துக்களை ஆராய்வதே "சட்ட வியல்", என்ற அறிவுநூல். மேலும், சட்டம் என்றால் என்ன? அதன் தன்மை என்ன? முறை செய்தல் - நீதி வழங்குதல் - என்பது என்ன? முறை செய்வதில் அரசு எவ்வாறு இயங்குகிறது? இவைபற்றியும் விரிவாக, நுணுகி ஆராய்கின்றது சட்டவியல்.

இசைக்கலைப் பயிற்சியில் முதலாவதாக ஒருவர் பயிலுவது ஏழு இசைகளின் கூறுபாடுகளேயாகும். குழலிசை, குரலிசை, வேறு கருவிகளின் இசை, எல்லாவற்றுக்கும் ஏழிசைகள் ஆதாரமானவை. இந்த ஏழிசைகளின் அடிப்படை ஞானம் இன்றி ஒருவர் இசைக்கலையைப் பயிலுதல் இயலாது. இந்த முறையிலேயே, எல்லாவகைச் சட்டங்களுக்கும் மேலே சொல்லப்பட்ட சட்டக்கருத்துக்கள் ஆதாரமானவை. ஆகவே, இந்த அடிப்படைச் சட்டக் கருத்துக்கள்பற்றி ஆராயும் சட்டவியல் எல்லாச் சட்டங்களுக்கும் அடிப்படை நூலாக இருக்கிறது. சட்டக்கல்விக்கு ஆதாரமாக விளங்குகிறது.

ஆங்கிலத்திலும், மற்றும் மேலைநாட்டு மொழிகளிலும் "சட்டவியல்", ஒரு முக்கியமான அறிவியல் நூலாக நெடுநாட்களாகக் கற்கப்பட்டு வருகிறது. Austin, Holland, Salmond போன்ற பேரறிஞர்கள் ஆங்கிலத்தில் இயற்றியுள்ள "சட்டவியல்" நூல்கள் பெரிதும் போற்றப்படுகின்றன. அந்த ஆங்கில நூல்களின் அடிப்படையில் எழுதப்பட்டதே இந்நூலின் முதல் இரண்டு பிரிவுகளும்.

"மனித உரிமைகள்" என்ற தலைப்பில் உள்ள மூன்றுவது பிரிவு எந்த ஆங்கில நூலையும் தழுவியதன்று. மனிதனின் அடிப்படை உரிமைகளுக்கு ஆதாரமான தத்துவம் எது என்று எண்ணி ஓர்ந்ததின்பயனால் தோன்றிய கருத்துக்களே அந்தத் தலைப்பில் இடம் பெறுகின்றன.

சட்டக் கல்லூரி மாணவர்களுக்குக் கூட ஆங்கிலத்தில் உள்ள "சட்டவியலை"க் கற்று அறிந்து கொள்வதில் அயர்வு தோன்றுவது உண்டு. காரணம் ஆங்கில மொழியில் கூறப்படும் நுட்பமான சட்டக் கருத்துக்கள் எளிதாகப் புரிவதில்லை. எனவே, ஓரளவு அச்சத்துடனேயே இந்நூலைத் தமிழில் ஆக்கத் துணிந்தேன். ஆனால், எழுதுவதில் ஈடுபட்டபின், எவ்வளவு நுண்ணிய கருத்துக்களையும் தமிழில் கூறமுடியும் என்பது தெளிவாயிற்று. மேலும், இன்றைய சட்டக் கருத்துக்கள் பல நம் பழங்கால அறநூல்களிலே அமைந்திருப்பதை அறிய வியப்பாக இருக்கிறது! பொதுமறையான திருக்குறளிலும், மனு, யாக்ஞவால்கியர் இவர்களின் நீதி நூல்களிலும் இன்றைய சட்டக்கருத்துக்கள் பலவற்றைக் காண்கிறோம்! அவை ஆங்காங்கே தரப்பட்டிருக்கின்றன.

இதுபோன்ற முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் முறையில் இந்நூலுக்கு அன்புடன் அணிந்துரை வழங்கியுள்ள சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு எஸ். கணபதியாபிள்ளை அவர்களுக்கு நான் மிகவும் கடப்பாடுடையேன்.

சட்டம் பற்றித் தமிழில் எழுதவேண்டும் என்று என்னைக் காணும்பொழுதெல்லாம் தூண்டி, ஊக்கமளித்தவர்கள் கழக ஆட்சியாளர் உயர்திரு வ. சுப்பையாபிள்ளை அவர்கள். இவ்வாறு ஊக்கமளித்து, இந்நூலைச் செவ்விய முறையில் வெளியிட்டுள்ள அன்னாருக்கு எனது உளங்கனிந்த நன்றி.

வடமொழி நீதிநூல்களை எல்லாம் விளக்கிக் கூறி, இந்நூலை எழுதும்பொழுது உடனிருந்து உதவியவர் மன்னார்குடி பின்ட்லே உயர்நிலைப்பள்ளி ஆசிரியரான சிரோமணி நரசிம்மராகவன் ஆவார்கள். அவருக்கு எனது நன்றி உரித்தாகும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"

என்ற கவிபாரதியின் கனவை நனவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் நன்முயற்சி வெல்க !

ஆங்கிலத்திலுள்ள நுண்ணிய சட்டக் கருத்துக்களை தமிழிற் கூறும் இந்தப் புதிய முயற்சியிலே குறைபாடுகள் இருக்கலாம். இதற்கு அஞ்சி முயற்சியில் ஈடுபடவில்லை எனில் வளர்ச்சி தடைப் படுகிறது. குறைபாடுகளை அறிந்தோர்கள் எடுத்துக்கூறினுல், பின்னுல் வரும் நூல்கள் இன்னும் திருந்திய முறையில் இருப்ப தற்கு ஏதுவாகும்.

இந்நூல் எனது சொந்த முயற்சியால் எழுதப்பட்டதே யன்றி, எனது உத்தியோக முறையிலோ, அரசாங்கத்தின் சார்பிலோ எழுதப்பட்டதன்று.

தமிழன்னையின் திருவடிகட்கு, இச்சிறிய, ஆனுல் புதிய மலரைத் தமிழ்ப் பெருமக்களின் வாயிலாகக் காணிக்கையாக்குகி றேன்.

திருப்பத்தூர்
10-1-62

மா. சண்முக சுப்பிரமணியம்.

உள்ளுறை

பக்கம்

முதற் பிரிவு

இரண்டாவது பிரிவு

மூன்றாவது பிரிவு

முதற் பிரிவு

சட்டமும், (அதன் தன்மையும், மூலங்களும்) நீதிமுறையும்

1. சட்டமும் சட்டவியலும் (Law and Jurisprudence)

விதி அல்லது முறை என்ருல் என்ன? விஞ்ஞான நியதி, இயற்கை நியதி அல்லது தெய்வ நியதி - அரசிஞல் விதிக்கப்பட்ட நியதியே சட்டம் - சட்டவியல் என்பது என்ன? சட்டத்தின் மூலதத்துவங்கள் குறித்து ஆராய்வது சட்டவியல் - அது அறிவு நூல், சமூக நூல்.

2. அரசு (State)

அரசின் தோற்றம் — அரசு மலர்ந்த கதை - அரசின் தன்மையும், கடமையும் - அரசின் அங்கங்கள் - சட்டம் இயற்றுதல், நீதி வழங்குதல், ஆட்சி செய்தல்-இம் மூன்றும் இசைந்து இயங்கவேண்டும்.

3. சட்டம் (Law)

'சட்டம்' என்பது என்ன? அரசின் ஆணை சட்டம் - நீதிமன்றங்கள் நடைமுறைப்படுத்தும் விதிகளே சட்டம் - சட்டத்தின் குறிக்கோள் நீதிமுறை - சட்டம் அரசின் ஆணை மட்டும் அல்ல, அறத்தின் ஆணையுமாகும் - அரசின் அச்சுறுத்தலும், அறமும் அண்டி நிற்கின்றன சட்டத்தில்.

4. அறமும், முறையும் (Natural law and Natural justice)

அறம் என்ருல் என்ன? அறமே இன்பத்தின் அடிப்படை - நல்லவை எல்லாம் அறம் - மனத்துக்கண் மாசிலஞதல் அறம்-முறை என்ருல் என்ன? அறம் நிலைப்பதே முறையாகிறது - அறநெறியில் அமைந்து ஒழுகுவதே முறைமை.

5. சட்டமும் அறமும் ஒன்றியிருப்பினும் ஒன்றல்ல

அறக்கொள்கைகளை அண்டியே சட்டம் எழுகின்றது - ஒழுக்க நெறிகள் அனைத்தும் அரசால் சட்டங்களாக நிறைவேற்றப்படுவது இல்லை - ஒருசில ஒழுக்க நெறிகளே சட்டங்களாகின்றன - சட்டமும், அறமும் ஒன்றியிருப்பினும் ஒன்றல்ல.

6. நீதிமுறை (Administration of Justice)

ஆதிகாலத்தில் மனிதன் தன் உரிமைகளைத் தானே காத்து வந்தான் - அரசு, தனது வலிமையால், நீதிமன்றங்கள் மூலம் மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதே நீதி வழங்குதல், முறை செய்தல், என்பதாகும் - உரிமை வழக்குகளும், குற்ற வழக்குகளும் - நீதிமுறையின் நீர்மை.

7. சட்டத்தை ஒட்டிய நீதிமுறை (Justice according to Law)

சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்கப்படுகிறது - இதில் உள்ள நலன்கள் - உறுதிப்பாடும் ஒரே சீருடைய தன்மையையும் நீதிமுறைக்குச் சட்டம் நல்குகிறது - தனிப் பட்ட நடுவர்களின் ஞானத்தை விடச் சட்டம் உயர்ந்தது - சில குறைகளும் சட்டத்தை ஒட்டிய நீதி முறையில் உண்டு.

8. சட்டம் இயற்றல் (Legislation)

ஆதிகாலச் சட்டங்கள் மத சம்பந்தமான விதிகளே யாவன - அரசனின் கடமை அவைகளை அமுல் செய்வதே யாகும் - விதிகளை இயற்றும் அதிகாரம் அரசனுக்கு அன்று இல்லை - நாளடைவில் மக்கள் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் பெற்றனர் - சட்டவிதிகளைச் சட்டசபையோ, அல்லது அதற்கென அதிகாரம் பெற்றவர்களோ இயற்றுவது "சட்டம் இயற்றுதல்" எனப்படுகிறது.

9. இயற்றப்பட்ட சட்டங்களின் விளக்கம் (Interpretation of Enacted Law)

இயற்றப்பட்ட சட்டங்களின் கருத்தறிந்து அவை நடை முறைப்படுத்தப்படுகின்றன - சட்ட வாசகத்தின் இலக்கணப் படியுள்ள பொருளே சட்டசபையின் கருத்தாக நிர்ணயிக்கப் படுகிறது - வாசகம் தெளிவற்று முரண்பாடுடன் இருந்தால் நீதிபதிகள் சட்டவாசகத்தின் உட்கருத்தை ஓர்ந்து உணர்ந்து அமுல் செய்கின்றனர்.

10. முன்தீர்ப்பு முறைமை (Precedents)

ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கான வழி இயற்றப்பட்ட சட்டத்தில் இல்லையேல் நீதிபதியே வழியை வகுக்கிறார் - அவ்வாறு வகுக்கப்பட்ட கொள்கையே தீர்ப்பு முறைமை ஆகிறது - தீர்ப்பு முறைமை ஒரு கொள்கையின் அடிப்படை யில் அமைதல் வேண்டும் - பின் வழக்குகளில் அந்த முறைமை பின்பற்றப்படுகிறது.

11. இயற்றப்பட்ட சட்டமும், முன்தீர்ப்பு முறைமையும் (Legislation and Precedents)

இயற்றப்பட்ட சட்டத்திற்கும், முன்தீர்ப்பு முறைமைக்கும் உள்ள வேறுபாடுகள் - சட்டத்தின் வளர்ச்சிக்குத் தீர்ப்பு முறைமைகள் உதவுதல்.

12. வழக்கநெறி (Custom)

மக்களுக்கு உகந்ததாய், நியாயமானதாய், தொன்று தொட்டுவரும் பழக்கம் வழக்கம் ஆகிறது - வழக்க நெறியை ஒட்டியும் வழக்குகள் தீர்க்கப்படுகின்றன - தொன்மையான தாய், தொடர்ந்து வழக்கில் உள்ளதாய், அறிவுக்கு உகந்த தாய், இயற்றப்பட்ட சட்டங்களுக்கு முரண்பாடில்லாததாய் வழக்கநெறி அமைகிறது - வழக்க நெறியும் சட்டத்தின் மூலமாக விளங்குகிறது.

13. சட்டத்தின் மூலங்கள் (Sources of Law)

இயற்றப்பட்ட சட்டங்கள், முன்தீர்ப்பு முறைமை, வழக்க நெறி இம்மூன்றையும் நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்கின்றன - "சட்டம்" என்ற சொல் இம் மூன்றையும் குறிக்கின்றது - இம் மூன்றும் சட்டத்தின் மூலங்களாய் அமைகின்றன.

14. அரசியல் சட்டம் (The Constitution of the State)

அரசியலுக்கு அமைக்கப்பட்ட இலக்கணமே அரசமைப் புச் சட்டமாகும் - மக்கள் தங்களுக்குத் தாங்களே அளித்துக் கொள்ளும் சட்டம், அரசமைப்பு முறை - அரசியலமைப்பு முறை தோன்றி வளர்ந்து நிலைத்த பின்னரே அரசமைப்புச் சட்டம் தோன்றுகிறது - மக்களின் அடிப்படை உரிமைகளைப் போற்றிப் பாதுகாக்கும் புனிதத் தன்மை பெற்றது அரசிய லமைப்புச் சட்டம்.

15. சர்வதேசச் சட்டம் (International Law)

உலகநாடுகள் ஒன்றுக் கொன்று நடந்து கொள்ள வேண்டிய விதி முறைகளை, சம்பிரதாயங்களைக் கொண்டதே சர்வதேசச் சட்டம் ஆகும்.

சட்டவியல்
[JURISPRUDENCE]

1. சட்டமும் சட்டவியலும்
(Law and Jurisprudence)

"அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில." —குறள். 39.

ஒரு செயல் அல்லது நிகழ்ச்சி எவ்வாறு அமையவேண்டுமோ அதை நியதி, முறை, விதி என்று சொல்லுகிறோம். செயல் முறை, நிகழ்ச்சியின் நியதி இவை விதி அல்லது முறை என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன.[1]

இயற்கையின் சக்திகளெல்லாம் முறை தவறாது செயல்படுகின்றன. அண்ட பகிரண்டப் பொருள்கள் அனைத்தும் ஒரு வரையறைக்கு உட்பட்டு, நியதிப்படியுள்ள கதியில் செல்லுகின்றன. சூரியனும், சந்திரனும், பருவங்களும், ஐம்பூதங்களும், இயற்கையின் நியதியில் மாறாது இயங்குவதை நாம் காண்கிறோம். அலைகடலில் அலைகள் அடங்கி நிற்பதும், விண்ணின் கோள்கள் தங்கள் கதியில் விரைந்து செல்வதும், பூமி சுழல்வதும், பூதங்கள் இயலுவதும் நியதிக்கு உட்பட்ட நிகழ்ச்சிகள் அன்றோ! இதை பொருளியல் நியதி அல்லது விஞ்ஞான நியதி (Physical Laws or Scientific Laws) என்கிறோம்.[2] இந்த நியதி ஒரு சிறிது தவறினாலும் குழப்பமும், அழிவும் நேருகின்றன.

1. "In its widest sense the term 'law' includes any rule of action, that is to say, any standard or pattern to which actions (whether the acts of rational agents or the operations of nature) are or ought to be conformed"— Salmond

• "We term any kind of rule or canon whereby actions are framed a law"— Hooker.

2. "Physical laws or the laws of science are expressions of the uniformities of nature — general principles expressing the regularity and harmony observable in the activities and operations of the universe" — Salmond.

இதுபோலவே, மனிதனின் வாழ்வும் நியதிக்கு உட்பட்டு, முறைப்படி அமைவது அவசியமாகிறது. மனிதனின் செயல்கள் வரையறுக்கப்பட்ட ஒழுங்குக்கு அடங்கி நடைபெற்றால்தான், அவனது வாழ்வும் முறையாக அமைய முடியும். ஒழுங்குக்கு உட்பட்டு அவன் செயலாற்றுவது வாழ்க்கையின் முறைமை ஆகிறது. கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய செயல்களையே முறையான செயல்கள் என்று நாம் கொள்கிறோம். சமுதாய அமைப்பு ஒழுங்குபட இயங்க வேண்டுமானால், அந்தச் சமுதாயத்திலுள்ள மனிதர்களின் வாழ்வும்,செயல்களும் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். நியமங்களுக்கு அடங்கி மனிதன் முறையாகச் செயலாற்றினால் தான், அந்தச் சமூகத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலவ முடியும். மனிதன் இவ்வாறுதான் நடக்கவேண்டும் என்று வரைமுறைகளை விதித்து, அந்த விதிகளின்படி அவன் செயல்களை ஒழுங்குபடுத்துவதுதான் வாழ்வின் நெறி ஆகும்.

இந்த நெறியான வாழ்வின் பொருட்டு, அரசு, வாழ்க்கைக்கான நியமங்களை—மக்களின் செயல்களைக் கட்டுப்படுத்தும் விதிகளை—வகுக்கிறது. இந்த விதிகளுக்கு அடங்கியேதான் மனிதன் வாழவேண்டியவன் ஆகிறான். விதிகளுக்கு உட்பட்டு நடப்பது மக்களின் கடமை ஆகிறது. ஒழுங்கு தவறாமல் நடக்குமாறு, அரசு தனது அதிகாரத்தினால் மக்களுக்கு இடும் கட்டளையே முறைமை, விதி அல்லது சட்டம் எனப்படுகிறது.

அரசு தனது அதிகாரத்தினால் குடிமக்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்கென வகுக்கும் விதிகளைச் சட்டம் (Law) என்று நாம் கூறுகிறோம்.[1]

விஞ்ஞான நியதி, இயற்கை நியதி, தெய்வ நியதி என்று நியதிகளைப் பிரிப்பது உண்டு.

பூமியின் இழுக்கும் சக்தியும், காற்றின் சலனத்தன்மையும், நீரினது ஓடும் குணமும், இவை போன்ற பலவும் **விஞ்ஞான நியதி அல்லது இயற்கை நியதி** (Scientific Law or Physical Law) எனப்படுகிறது.

நல்லதையே ஒருவர் செய்யவேண்டும், பிறருக்குத் தீமை புரிதல் கூடாது, என்ற விதி இயற்கை நியதி ஆகும். இயல்பாகவே மனிதர் உள்ளங்களில் எழும் இரக்கம், உண்மையின்மேல்

1. "A law is a command which obliges a person or persons to a course of conduct" — Austin.

"The civil laws are the command of him who is endued with supreme power in the city (State) concerning the future actions of his subjects" — Hobbes.

நாட்டம், அன்புடைமை, அருளுடைமை இவைகளையெல்லாம் இயற்கை நெறி என்று குறிப்பிடுவது உண்டு. இதையே தெய்வ நியதி (Divine Law or Natural Law) என்றும் கூறுவார்கள். இந்த நியதிகள் அரசினல் இயற்றப்படாவிட்டாலும், உண்மையில், உலகத்தை இயக்கும் நியதிகளாக, உயர்ந்தோர் உள்ளங்களில் ஆட்சிபுரியும் எண்ணங்களாக இருக்கின்றன.

நாம் இந்நூலில் ஆராய இருக்கும் நியதி, இயற்கை நியதியோ, விஞ்ஞான நியதியோ அல்ல; அரசினல் மக்களின் வாழ்வைச் செப்பமுறச் செய்வதற்கென விதிக்கப்பட்ட நியதியேயாகும்.

நியதி—நியமம்—நெறி—முறைமை—முறை—விதி—ஒழுங்கு—உண்மை—சட்டம்—என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பன ஆகும். இவைகளில், சட்டம் என்ற சொல்லே தற்காலத்தில் எல்லோருக்கும் விளங்கும் பழக்கச் சொல்லாக இருப்பதால், நியதி, நியமம், விதி என்பனவற்றிற்குப் பதிலாகச் சட்டம் என்ற சொல்லையே இனிப் பயன்படுத்துவோம்.

சட்டவியல் (Jurisprudence) என்பது என்ன?

சட்டவியல் ஓர் அறிவு நூல். சட்டத்தின் இயல்புகள் பற்றி, சட்டத்தின் மூல தத்துவங்களைக் குறித்து ஆராயும் நூல்.[1]

ஆராய்ச்சியின் போக்கு, குறிப்பிட்ட ஒரு சட்டத்தைப் பற்றிய விரிவுரை அன்று. பொதுவாக, "சட்டம்" என்ற சொல்லின் பொருள், அதன் தன்மை, சட்டத்தை இயற்றி அதை நடைமுறைப் படுத்தும் அரசு, சட்டத்தின் குறிக்கோளான நீதிமுறை, நீதிமுறைக்கும் சட்டத்திற்கும் உள்ள தொடர்பு, சட்டத்தின் மூலங்கள் (தோற்றுவாய்), சட்டத்தின் வகைகள் இவைபற்றிச் சட்டவியல் ஆராய்கின்றது. மேலும், சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளான உரிமை, கடமை, உடைமை, சொத்து, பொறுப்பு, தண்டனை முதலிய கருத்துக்களின் உட்பொருள்கள் குறித்தும் இந்நூல் ஆராய்கின்றது.

மனிதனின் உள்ளத்தை உயர்த்தும் உண்மைகளைக் கூறுவது ஒழுக்க நூல், (Ethics). அவன் புறச்செயல்களை ஒழுங்குபடுத்துவது சட்டம். நன்னெறியை எடுத்துச் சொல்லுவது ஒழுக்க நூல்; நியாயமான நடத்தையை வலியுறுத்துவது சட்டம். ஆகவே,

1. "...... we may define jurisprudence as the science of civil law. .... It is the science of the first principles of the civil law." — **Salmond.**

சட்டமும் பெரும்பாலும் ஒழுக்கத்தை ஒட்டியே இருக்கிறது. சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் சட்டவியல் ஆராய்கின்றது [1]

மனிதனின் தனி நலனும் சமூகத்தின் பொது நலனும் முரண்பாடு இன்றி வளருமாறு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டது சட்டம். ஆகவே, சட்டவியல் ஒரு சமூக நூல். சமுதாய வாழ்விற்கு இன்றியமையாத விதிமுறைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் அறிவு நூலாகும்.

---

1. "Ethical jurisprudence is concerned, therefore, with the theory of justice in its relation to law. It is the meeting point and common ground of moral and legal philosophy — of ethics and jurisprudence" — Salmond.

2. அரசு (State)

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு. —குறள். 384.

அரசின் தோற்றம்

அரசின் வலிமை கொண்டு சமுதாயத்தில் நீதியை நிலை நிற்கச் செய்வதே சட்டத்தின் குறிக்கோளாகும்.[1] ஆதலால், சட்டத்தைப் பற்றி நாம் மேலும் தெரிந்துகொள்ளுவதற்குமுன், அரசு எவ்வாறு தோன்றியது என்பது குறித்தும், அரசினது கடமை, தன்மை பற்றியும் நாம் அறிந்துகொள்வது அவசிய மாகும். முதலாவதாக, அரசு தோன்றிய வரலாற்றைச் சுருக்க மாகத் தெரிந்துகொள்வோம்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன், பூமியில் வாழ்ந்த மனிதன் கட்டுப்பாடற்ற தன்னுரிமையுடன் இருந்தான். அவனது இயற்கை யான வாழ்வைக் கட்டுப்படுத்தும் சட்டங்களோ, விதிகளோ அப்பொழுது இல்லை. சமுதாயம், வழிமுறைப் பழக்கம் (சம்பிர தாயம்), சட்டம், ஆட்சிமுறை, உரிமை, கடமை என்ற எதுவுமே தோன்றாத காலம் அது. தனக்கு வேண்டிய உணவைத் தேடி உண்பதும், உறங்குவதுமே அன்றைய மனிதனின் முக்கியத் தொழிலாக இருந்தது. ஆணும் பெண்ணும் கூடி வாழும் குடும்பம் என்ற ஒரு கூட்டு வாழ்க்கை நாளடைவில் மலர்ந்தது. வயதிலே பெரியவன் குடும்பத் தலைவனாக இருந்தான். பிறகு, பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழ ஆரம்பித்தன.[2]

மனிதர்களுக்கு அப்பொழுது பயிர்த்தொழில் என்ற கலை தெரியாது. வேட்டையாடியோ, காய் கனிகளைப் புசித்தோ தங்கள் பசியை அவர்கள் ஆற்றிக்கொண்டனர். உணவைத் தேடிக் கூட்டமாகப் பல இடங்களுக்கு அலைந்துகொண்டிருந்தார்கள். நிலைத்து ஓர் இடத்தில் வாழும் வகையை அவர்கள் அறிந்திருக்க வில்லை. இயற்கையின் சக்திகள் அவர்களுக்கு ஊக்கத்தை ஒரு பக்கமும், பயத்தை ஒருபுறமும் ஏற்படுத்திக்கொண்டிருந்தன. காலைக் கதிரவனின் ஒளி அவர்கள் உள்ளத்திலே உவகையை

1. Now the purpose and end of the law may be said generally to be the maintenance of justice within a political community by means of the physical force of the State—Salmond.

2. " . . . Society in primitive times ...... was an aggregation of families" —Sir Henry Maine-in "Ancient Law."

ஊட்டியது ; மாலைத் தென்றலிலே அவர்கள் மனம் மகிழ்ந்தனர் ; விண்ணின் மீன்களைக் கண்டு அவர்கள் வியப்பு எய்தினர். பூமியில் பசுமையைப் பரப்பும் மழைத்துளிகளை "அமிழ்தம்" என வரவேற்றனர். வருணனையும், வாயுவையும், வான்மதிதனையும் வழிபடு தெய்வங்களென வழுத்தி நின்றனர். பல நூற்றுண்டுகள் சென்றபின், மனிதன், தானியங்களை விளைவிக்கக் கற்றுக் கொண்டான். பயிர்த் தொழில் மனிதனை நிலையாக ஒரே இடத்தில் வாழச் செய்துவிட்டது. உணவைத் தேடி அலைந்த மனிதன், இப்பொழுது உணவை உற்பத்தி செய்யக் கற்றுக்கொண்டான். இனி, இடம்விட்டு இடம் அலைய வேண்டிய அவசியமில்லை. பல குடும்பங்கள் கொண்ட கூட்டத்தினர் நிலையான ஓர் இடத்திலே பயிர் செய்து வாழ ஆரம்பித்தனர். அந்த நிலையான வாழ்வினால் கூடாரங்கள் குடிசைகளாக மாறின. ஆடுகளும், மாடுகளும் அவர்களை அண்டி வளர்ந்தன.

இது ஓரளவு நிம்மதியான வாழ்வுதான். ஆயினும் இன்னல் களும் இருந்தன. காட்டுமிருகங்கள் பயிர்களையும், ஆடு மாடுகளை யும் அழித்து வந்தன. நிலையான வாழ்வுபெறாத மற்றக் கூட்டத் தினர் இவர்களுக்குத் துன்பம் விளைவித்தனர். ஆகவே, காட்டு விலங்குகளிடமிருந்தும், வேற்றுக் கூட்டத்தினரிடமிருந்தும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய இன்றியமையாமை இவர்களுக்கு ஏற்பட்டது. காட்டு மிருகங்களை வேட்டையாடி ஒழிக்கவும், எதிரிகளைச் சண்டையிட்டு விரட்டவும் வல்லமையுள்ள ஒரு தலைவன் அக் கூட்டத்தினருக்கு வேண்டியிருந்தது. அவர்க ளிடையே உடல் வலிவும் வீரமும் உள்ளவன் அவர்கள் தலைவன் ஆனான். அந்த வீரன் அவர்களுக்குத் தலைமை தாங்கி வேட்டையாடியும், எதிரிகளுடன் போரிட்டும், தன் கூட்டத் தினரைப் பாதுகாத்து வந்தான். தலைவனது கட்டளையை மதித்து அவனுக்கு அடங்கி அந்தக் கூட்டத்தினர் நடந்து வந்தனர். இத் தலைவன்தான் காலப்போக்கிலே, அக்கூட்டத் தினரின்—அக் கூட்டத்தினர் நிலையாக வசிக்கும் நாட்டின்—அரசன் ஆகிவிட்டான். முற்காலத்து அரசர்களின் கடமைகளில், பகைவர்கள்மீது போர் தொடுப்பதும், வேட்டையாடுவதும் முக்கியமானவை ஆகும்.

ஆண்டுகள் ஓடின ; மக்கள் பெருகினர் ; ஊர்கள் வளர்ந் தன. அரசன் இருந்த இடம் நகரமாக மாறியது. அவனது ஆணை—ஆட்சி—விரிந்து பரவியது. ஓர் அரசனின் ஆட்சி பரவி நின்ற நிலப் பரப்பு நாடு எனப் பெயர் பெற்றது. இவ்வாறு பலப்பல நாடுகள் தோன்றின. ஒவ்வொரு நாட்டிற்கும் வரம்பு. அங்கு வாழும் மக்கள் (குடிகள்), அவர்களை ஆளும் அரசன், என்ற

அங்கங்களுடன் அரசுகள் உலகின் பல பகுதிகளிலும் எழுந்தன. இந்த முறையில், மக்கள் ஓர் அரசனின்கீழ், அவன் ஆட்சிக்கு உட்பட்டு வாழத் தொடங்கினர்.

ஒரு மன்னன் முழு அதிகாரத்துடன் குடிமக்களை ஆளுவதை "முடியாட்சி" என்று கூறுவார்கள். அரசியல் முன்னேற்றத்தின் பயனாக முடியாட்சி, பல நாடுகளில் குடியாட்சியாக மாறியது. கோனாட்சி குடியாட்சியாக மலர்ந்த வரலாறு தனிப்பட்டதாகும். அந்த வரலாற்றின் சுருக்கத்தை பின்னர்க் காணலாம்.

அரசின் தன்மையும் கடமையும்

ஆட்சிமுறை எவ்வாறு மாறினாலும், அரசின் அடிப்படைத் தன்மைகளும் கடமைகளும் மாறுவது இல்லை. சமுதாயத்தில் நீதியைச் சட்டம் என்ற கருவி கொண்டு நிலைக்கச் செய்வது அரசின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும். அரசின் ஆணையே சட்டமாக விளங்குகிறது. சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அரசு. இவ்வாறு, சட்டமும் (Law) அரசும் (State) இணைந்திருக்கின்றன. ஆதலால், சட்ட நூலில், அரசின் அடிப்படைத் தன்மைகள் பற்றிக் கூறவேண்டியதாகிறது. அரசியல் ஆராய்ச்சி நூலில் (Politics) தான் அரசு பற்றிய விரிவான ஆராய்ச்சிகள் இடம்பெற வேண்டும். சட்ட நூலில் நாம் கவனிக்க வேண்டியது அரசின் முக்கிய கூறுகள் பற்றியேதான்.

மக்கள் அரசியற் கூட்டாகச் (Political Society) சேர்ந்து இயங்குவதை அரசு (State) என்கிறோம். மனிதர்கள் ஒழுங்காகவும், அமைதியோடும், நாகரிகத்துடனும், பயனுள்ள வாழ்க்கை நடத்துவதற்கு இந்த அரசியல் கூட்டு இன்றியமையாததாக இருக்கிறது.[1] அரசு இல்லையெனில் நம் வாழ்வு நிலையற்ற, இடர்நிறைந்த, கதிகெட்ட வாழ்வாகவே இருக்கமுடியும். நெறியான நேர் வாழ்விற்கு நிலையான அரசு இன்றியமையாததாகும். இதனாலேயே, "அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்" என்றும், "மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி" என்றும், செம்மையான அரசு முறை சிறப்பித்துக் கூறப்படுகிறது.

அரசின் முக்கிய, தனிப்பட்ட, கடமைகள் இரண்டு. முதலாவது, நாட்டையும் மக்களையும் வெளிப் பகைவர்களிடமிருந்து காப்பது. இதற்குப் போர் செய்வது அவசியமாகிறது இரண்டாவது, மக்கள் ஒருவருக்கொருவர் நியாயமான முறையில் அமைதி

1. A State......is the most important of all the various kinds of society in which men unite, being indeed the necessary basis and condition of peace, order and civilisation — Salmond.

யாக நடந்து ஒழுங்கான வாழ்க்கையை நடத்தச் செய்வது. இதை, முறை செய்தல், நீதி வழங்குதல், என்கிறோம். வெளிப்பகைவர்களுடன் போர் செய்வதும், மக்களுக்கு நீதி செலுத்துவதுமே, அரசின் தலையாய, தனிப்பட்ட கடமைகளாக இருந்தன; இப்பொழுதும் இருக்கின்றன. தற்காலத்தில் அரசு, கல்வி போதித்தல், வாணிபம் செய்தல், வங்கிகள் நடத்தல், தபால் இலாகாவை நடத்துதல் போன்ற பல தொழில்களைச் செய்தாலும், அரசின் தலையாய தொழில்கள் போர் செய்வதும், நீதி செலுத்துவதுமே ஆகும்.[1] இந்த இரண்டு கடமைகளைச் செய்யாத மக்களின் கூட்டை "அரசு" என்று கூறமுடியாது.

போரிலும் நீதி வழங்குவதிலும் அரசு தனது வலிமையைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. போரில் வெளிப் பகைவர்களுக்கு எதிராகவும், நீதி செலுத்துவதில், பிற மக்களுக்குத் தீங்கு செய்யும் உட்பகைவர்களுக்கு எதிராகவும் அரசின் வலிமை இயங்குகிறது. ஆனால், போரில் அந்த வலிமை வெளிப்படுவதற்கும், நீதி செலுத்துவதில் அது பயன்படுவதற்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. நீதிமுறையில் நீதிமன்றத்தின் தீர்ப்பைச் செயல்படுத்தவே அரசின் வலிமை பயன்படுகிறது. நீதிமன்றத்தில் கேள்வி (விசாரணை) முடிந்து தீர்ப்பும் ஏற்பட்டபின், அந்தத் தீர்ப்பின்படியேதான், அரசு தனது வலிமையைப் பயன்படுத்துகின்றது. அதுவும், நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பணிந்து நடக்காதவர்களுக்கு எதிராகவே வலிமை பயன்படுத்தப்படுகிறது. போரில் அரசு தனது ஆற்றலைத் தன் விருப்பப்படியே செலுத்துகின்றது. போரில், நீதிமன்ற விசாரணையோ, தீர்ப்போ எதுவும் கிடையாது. ஒரு பெரும் கலகத்தை அடக்கும் பொழுதும், அரசு, தனது வலிமையைப் போர் செய்வது போன்றே செலுத்துகின்றது. போர்க்களத்திலோ அல்லது பெருங்கலகத்திலோ மக்களைக் கொல்வது அரசின் போர்ச்செயலாகும். கொலைக்குற்றவாளி என நீதிமன்றத்தால் தீர்ப்புக் கூறப்பட்ட ஒருவனை, அரசு, தூக்கில் இட்டுக் கொல்வது நீதி செலுத்துவதாகிறது.[2]

1. The fundamental purpose and end of political society is defence against external enemies, and the maintenance of peaceable and orderly relations within the community itself.
— Salmond.

Leviathan carried two swords, the sword of war and that of justice. — Hobbes.

2. To shoot a man on the field of battle or at a barricade is war; to shoot him after capture and condemnation by court martial is the administration of justice. — Salmond.

நீதி செலுத்தும் முறையில் அரசின் வலிமை மறைந்து நிற்கிறது. ஏனெனின், சாதாரண மக்கள் நீதிமன்றத் தீர்ப்புக்களை ஏற்று, அவைகளுக்குப்பணிந்து நடக்கச் சித்தமாக இருக்கிறார்கள். ஆதலால், அரசின் ஆற்றல் வெளிப்படையாக இயங்குவதற்கு அவசியம் இல்லாமல் போகிறது. எனவே, மேலெழுந்த வாரியாக நோக்குகையில், நீதி செலுத்துதலில், வழக்குகள் விசாரிக்கப்படுவதும், தீர்ப்புக்கள் கூறப்படுவதுமே முக்கியமாகத் தோன்றுகின்றன. வன்முறை சிறிதும் இன்றி, வழக்குகள் தீர்க்கப்படுவனவாகவே நாம் உணருகிறோம். ஆனால், யாராவது ஒருவர் அந்தத் தீர்ப்பைப் புறக்கணித்து, அதற்குப் பணிய மறுத்தால் அரசின் வலிமை பயன்படுத்தப்பட வேண்டிய அவசியம் நேர்ந்து விடுகிறது. ஆதலால், அரசின் வலிமை நீதி செலுத்துவதிலும் பொதிந்து கிடப்பது தெளிவாகும். இவ்வாறு, போர் செய்தல், நீதி செலுத்துதல், இந்த இரண்டு முக்கிய கடமைகளையும் அரசு நிறைவேற்றுவதற்குப் படை வலிமை இன்றியமையாததாகிறது.[1]

நீதி செலுத்துவதற்காக, அரசு, சட்டங்களை இயற்றுகிறது. நீதி செலுத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை வகுப்பதே சட்டம் இயற்றுவதாகும்.[2]

நாம், அரசு, நாடு என்று கூறுகையில் அந்நாட்டிற்குப் பூமியில் வரையறுக்கப்பட்ட எல்லைகளையும் கருத்தில் கொண்டே குறிப்பிடுகிறோம். அந்தக் குறிப்பிட்ட பரப்பு அந்த அரசின் தனிப்பட்ட ஆளுகையில் இருக்கிறது. இவ்வாறு, குறிப்பிட்ட நிலப்பரப்பு இல்லாத அரசு தற்காலத்தில் இல்லை.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு." —குறள் 737.

இவ்வாறு நாட்டின் இயற்கை வளம் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

அரசியல் (சமுதாயத்திலே வாழும் மக்கள் அரசின் ஓர் உறுப்பாக இருக்கின்றனர். அரசின் ஆணைக்கு அடங்கி, அதன் ஆட்சிக்கு உட்பட்டுத் தங்கள் வாழ்வை நடத்துகிறார்கள். அரசால் விதிக்கப்படும் சட்டங்களைப் போற்றி நடப்பதைத் தங்கள்

1. Force is essence of the administration of justice, no less than of war; but for the most part it lies latent and concealed. — Salmond.

2. Legislation is the formulation of the principles in accordance with which the state intends to fulfil its functions of administering justice. — Salmond.

கடமையாகக் கொண்டிருக்கின்றனர். அரசு, மக்களின் இன்ப வாழ்விற்கு உறுதுணையாக நிற்கிறது. அவர்களுடைய உரிமைகளைத் தனது வலிமை கொண்டு பாதுகாக்கிறது. இவ்வாறு, அரசுக்கு அடங்கி ஒழுகும் மக்களும், மக்களைக் காத்து நிற்கும் அரசும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக இருக்கின்றன. இந்த முறையில், ஓர் அரசின் ஆட்சியில் வாழும் மக்களைக் குடிகள் (Citizens) என்கிறோம்.

குடிமக்களிடையே நீதிவழங்கவும், அரசனுக்கு ஆலோசனை கூறுவதற்கும், அமைச்சரும், அரசனுக்குத் துணையாக நட்பு நாடுகளும், நாட்டிற்குப் பாதுகாப்பாக அரண்களும் இருப்பது நாட்டிற்குச் சிறப்பாகும்.

அரசு இயங்குவதற்கு, முக்கியமாகப் போர் செய்வதற்குப் படை வேண்டும். அந்தப் படையை ஓம்புவதற்கும் அரசின் மற்ற அலுவல்களுக்கும் பொருள் வேண்டி இருக்கிறது. இவ்வாறு, அரசுக்குப் பொருள் தேவையாவதால், அரசு, மக்கள்மீது வரி விதித்துப் பொருளைப் பெறுகிறது.

இந்த முறையிலே, படை, குடிமக்கள், பொருள், அமைச்சு, நட்பு நாடுகள், இயற்கை அரண்கள் என ஆறு உறுப்புக்களுடன் அரசு இயங்குகிறது. இக் கருத்து புலப்படும் வகையிலே எழுந்த வள்ளுவர் வாக்கு,

> "படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு." —குறள். 381.

இன்னும் பொருத்தமாக இருப்பது சிந்தித்துத் திளைக்கத் தக்கதாகும்.

"அரசன், அமைச்சர், குடிமக்கள், அரண், செல்வம், படை, நட்பு" என்ற ஏழு அங்கங்களைக் கொண்டதே அரசு' என்பது யாக்ஞ்ய வல்கியரின் வாக்குமாகும்.

அரசு மக்கள்மீது வரி விதித்துப் பொருளைப் பெறுகின்றது வேண்டிய பொருளை மக்கள் எல்லோரிடமும் சமமான பங்காகப் பெறுவது இயலுவதாகவோ, நியாயமானதாகவோ இருக்க முடியாது. ஆதலால் மக்களின் செல்வநிலைக்கு ஏற்ப அவர்களிடமிருந்து வரிப் பணம் பெறுகின்றது. இவ்வாறு, அரசு, தனக்கு வேண்டிய பொருளை மக்களிடமிருந்து, அவரவர்களின் தகுதிக்கேற்பப் பெறுவதை, வரி விதிப்பு என்கிறோம்.[1] வரி விதிப்பு மூலம்

1. Taxation is the instrument by which the state obtains that revenue which is the essential condition of all its activities.
— Salmond.

பொருளைச் சேர்த்து, அதைக் காத்து, மக்களின் நலனுக்காக அதைப் பயன்படுத்த வேண்டியது அரசின் கடன் என்பதை வலியுறுத்தும் வகையில்,

> " இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு" —குறள். 385.

என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

அரசின் அங்கங்கள்

அரசு செயல்பட வேண்டுமெனில், ஒரு சிலர் அரசின் கடமைகளைச் செய்யவும், அதன் அதிகாரத்தை வகிக்கவும் வேண்டியிருக்கிறது. அவர்கள் மூலமாகவே அரசு இயங்க முடிகிறது. இவ்வாறு, அரசின் அதிகாரத்தைப் பெற்று அரசை இயங்கச் செய்பவர்களை " அரசாங்கம் " அல்லது " அரசினர் " (Government) எனக் குறிப்பிடுகிறோம். அரசாங்கத்தின் வழியாக, அரசு, தனது அதிகாரத்தையும் கடமைகளையும் நிறைவேற்றுகிறது. அரசாங்கம் அரசை இயக்குகிறது; அரசாங்கத்தின் வழியாக அரசு இயங்குகிறது, அரசாங்கம் மாறலாம் ; மக்கள் அரசாங்கத்தை மாற்றலாம்; ஆனால், அரசு நிலைத்திருப்பதாகும். அரசு, தனது குறிக்கோளை எய்துவதற்கு அரசாங்கம் என்ற கருவியை அமைத்து இயங்குகிறது.[1]

அரசின் அதிகாரங்கள் மூன்று வகைப்படுவன: (1) சட்டம் இயற்றல், (2) நீதி வழங்குதல், (3) ஆட்சி செய்தல். சட்டங்கள் இயற்ற சட்டசபைகளும், நீதி வழங்குவதற்கு நீதி மன்றங்களும், ஆட்சியை நடத்த நிறைவேற்ற (நிர்வாக) அதிகாரிகளும் அரசாங்கத்திற்கு உண்டு. இந்த மூன்று அங்கங்களுடன் அரசு இயங்குகிறது.[2]

இந்த மூவகை அதிகாரங்களும் பிரிக்கப்படாமல் இருந்தால், அரசு செப்பமுறச் செயல்பட முடியாது. ஆதிகால அரசு முறையில் இந்தப் பிரிவுகள் இல்லை. ஆனால், தற்காலத்தில், ஆட்சித்துறை அதிகாரிகளையே நீதி வழங்கச் செய்தால், நீதி வழங்குவதின் நிர்மை குன்றலாம். மேலும், மக்கள், அரசாங்கத்திற்கு எதிராக

1. The aggregate of all the persons or groups of persons who possess any share of this civil power constitutes the *Government* of the state. They are the agents through whom the state, as a corporate unity, acts and moves and fulfils its end. — Salmond.

2 In respect of its subject - matter, civil power is of three kinds, distinguished as *legislative*, *judicial* and *executive*.
—Salmond.

வழக்குகள் தொடரும்பொழுது, அரசாங்கத்தின் நேரிடையான மேற்பார்வையில் உள்ள ஆட்சித்துறை அதிகாரிகளிடம் மக்களுக்கு அசையாத நம்பிக்கை ஏற்படாமல் இருக்கலாம். ஆதலால், அரசின் முக்கிய கடமையான நீதி வழங்குதலைத் தனிப்பட்ட உறுப்பினர்களிடம் ஒப்புவிப்பதே முறையாகும். இதுபோலவே, சட்டம் இயற்றுபவர்கள் மக்களின் வகையாளர் (பிரதிநிதி)களாக இருக்கின்றனர். அவர்கள், அரசின் அன்றாடவாட்சியில் பங்கு பெறாதவர்கள். அவர்கள் அவ்வாறு இருந்தால்தான், ஆட்சியிலுள்ள குறைபாடுகளை ஓர (பாரபட்ச)மற்ற முறையில் கண்டு, அதற்கான சீர்திருத்தங்களைச் செய்ய இயலும்.

அரசின் இம் மூன்று உறுப்புக்களும் தனித்தனியாக இயங்கினாலும் அவைகளுள் முரண்பாடு கிடையாது. உடலின் உறுப்புக்கள் இயைந்து தொழிற்படுவது உடல் நலனுக்கு அவசியம் ஆவது போல், இந்த மூன்று பிரிவுகளும் இசைந்து இயங்கினால்தான் அரசு திறம்பட அமையமுடியும். இந்த உறுப்புக்களில் எதற்குத் தலையான அதிகாரம் (Sovereignty) உண்டு என்பது பற்றிய சிக்கல் (சர்ச்சை)கள் உண்டு. அவைகளின் விளக்கம் அரசியல் நூல் பற்றியதாகும். சட்ட நூலிலே அவை பற்றி விரிவாகக் காண வேண்டியது இல்லை.

அரசின் தன்மை, அதன் முதன்மை, அதன் உறுப்புக்கள் இவைபற்றிக் கண்டோம். இனி, அரசு ஆட்சி செய்யும் சட்டத்தின் தன்மை பற்றி ஆராய்வது பொருந்தும்.

3. சட்டம் (Law)

"முறை செயும் வகையெலாம் மொழிவது சட்டம்."

சட்டம் என்றால் என்ன?

அரசு தனது அதிகாரத்தினால் மக்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்கென வகுக்கும் விதிகளே சட்டம் என முன்பு கண்டோம்.[1] அந்த விதிகளை நாம் எப்படிக் கண்டுகொள்வது என்பது பற்றிப் பார்ப்போம்.

"குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதலே" அரசின் முக்கிய கடனாகும். இவ்வாறு நியாயம் வழங்குவதற்குக் கருவியாகவே சட்டம் அமைகிறது. சட்டங்களின் அடிப்படையில் நீதி வழங்கப்படுகிறது. ஆதலால், நீதி வழங்கும்போது ஏற்றுக்கொள்ளப்படும் விதிகளையே சட்டம் என்று நாம் கொள்ளுகிறோம்.

பொதுவாக, சட்டசபைகளிலே நிறைவேற்றப்பட்டுச் செயல்படுத்தப்படும் விதிகளை மட்டும் நாம் சட்டம் என்ற பெயரால் அழைக்கிறோம். இது சரி அல்ல. நீதிமன்றங்களில் வழக்குகளைத் தீர்க்கும்பொழுது, என்னென்ன விதிமுறைகளை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துகின்றார்களோ, அவை அனைத்தையும்தான் 'சட்டம்' என்ற சொல் குறிக்கின்றது.[2]

நீதிமன்றங்கள் சட்டத்தின் அடிப்படையில்தானே நியாயம் வழங்குகின்றன? சட்டங்களை நடைமுறைப்படுத்துவதுதானே நீதிமன்றங்களின் கடமை? இயற்றப்பட்ட சட்டங்கள் (Enacted Laws) இல்லையெனின் நீதிப் பொறுப்பு இயங்க இயலாதே? அப்படி இருக்க நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கையாளப்படும் விதிமுறைகள்தான் "சட்டம்" என்று கூறுவது பொருந்துமா? இவ்வாறு சொன்னால், சட்டத்தைவிட நீதிமன்றங்களுக்கு அல்லவா முக்கியத்துவம் கிடைக்கிறது என்ற கேள்விகள் எழலாம்.

சட்டங்கள் இல்லாமலேயே நியாயம் வழங்க முடியும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆதிகால நீதிமுறையில்,

1. A law is a command which obliges a person or persons to a course of conduct — Austin.

2. The law may be defined as the body of principles recognised and applied by the state in the administration of justice. In other words, the law consists of the rules recognised and acted on by courts of justice — Salmond.

அரசனது ஆணைக்கோ அல்லது வழக்குகளைத் தீர்க்கும் பஞ்சாயத்தார்களின் முடிவிற்கோ மக்கள் பணிந்தனர். அவ்வாறு வழங்கப்பட்ட நியாயத் தீர்ப்புக்கள் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை என்று சொல்ல முடியாது. நீதி செலுத்துவோரின் நியாய உணர்வும், மனச்சாட்சியும், சமன்செய்து சீர்தூக்கும் தன்மையுமே நீதி வழங்குவதற்கு உறுதுணையாக நின்றன. ஆதலால், சட்டம் என்பது நீதிமுறைக்கு முந்தியது அல்ல.

நீதிமன்றங்களில் நியாயம் வழங்கப்படுவதற்குச் சட்டங்கள் உதவி செய்கின்றன. சட்டசபைகளால் இயற்றப்பட்ட சட்டங்களை ஒட்டியே வழக்குகளில் தீர்ப்புக்கள் கூறப்படுகின்றன. ஆனால், அவ்வாறு தீர்ப்புக் கூறுவதற்கு எந்தெந்த விதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது நீதிபதிகளைப் பொறுத்ததேயாகும். தங்கள் முன்னால் வரும் வழக்குகளுக்கு ஏற்றவாறு பலவிதிகளை நீதிபதிகளே இயற்றுகின்றனர். மேலும், சட்டசபைகளால் பிறப்பிக்கப்பட்ட சட்டங்களில் ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கான விடை கிடையாதபோது, வழக்கத்தையும் நியாயத்தையும் அடிப்படையாகக் கொண்டு நீதிபதிகள் தாங்களாகவே, அந்த வழக்கைத் தீர்ப்பதற்கென ஒரு கொள்கையை வகுக்கின்றனர். அந்தக் கொள்கைகளும் பிற்காலத்தில் மற்ற நீதிபதிகளால் பின்பற்றப் பட்டு, நியாயம் வழங்குவதற்கு உதவிபுரிகின்றன. இவ்வாறு, தீர்ப்பு முறைமை (Precedent), வழக்கநெறி (Custom), சட்டசபைகளால் இயற்றப்பட்ட சட்டங்கள் (Statutes or Enacted Laws), இவை எல்லாமே நீதி வழங்குவதற்குப் பயன்படுகின்றன. இப்படியாக, வளர்ந்து விரியும் சட்ட விதிகள் நியாயம் வழங்கும் முறையில் இருந்து தோன்றுவன ஆகும்.[1] நீதிமுறைமையிலிருந்துதான் இந்த விதிகளை நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

சட்டத்தின் அடிப்படையில் நியாயம் வழங்கப்பட்டாலும், நீதிமன்ற நடுவரின் நியாய உணர்வை ஒட்டியே தீர்ப்புக்கள் அமைகின்றன என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். நடுவர்களின் அற உணர்வுக்கு நீதி வழங்கும் முறையில் தகுந்த இடம் உண்டு.

எந்தக் கலையும், ஒவ்வொரு கலைஞனின் தனிச்சிறப்புத் தன்மையை ஓரளவு எதிரொலிக்கின்றது. அவ்வாறு, கலைஞனின் தனிப்பட்ட மனச் சிறப்பை உணர்த்துவதாலேயே, ஓரேவிதக் கலையில் பலவிதப் புதுமைகளையும், புதுமை அளிக்கும் இனிமையை

1. That great aggregate of rules which constitutes a developed legal system is not a condition precedent of the administration of justice, but a product of it. —Salmond.

யும் நாம் கண்டு களிக்க முடிகிறது. சிக்கல் நிறைந்த வழக்கை, சீராக ஓர்ந்து, நடுநிலைமை தவறாது, தேர்ந்து செய்யும் தீர்ப்பிலும் கலையின் சாயல் கவிந்திருக்கிறது. அந்தத் தீர்ப்புக்களிலே நீதிபதிகளின் நீர்மையும் நேர்மையும் நிறைந்து நிற்கின்றன. அந்தத் தீர்ப்புக்களில், நீதிபதிகளின் நியாய உணர்வுகள் உறைந்து உருவெடுத்து உள்ளன. அவை, பிற்காலத்தில், வழக்குகளைத் தீர்ப்பதற்கு வழிகாட்டிகளாக அமைகின்றன. மற்ற நீதிபதிகளும் அவைகளைப் போற்றிப் பின்பற்றுகின்றனர். ஆதலால், சட்ட விதிகளில் பெரும்பகுதி நீதி வழங்கும் நடுவர்கள் வகுத்த வழிகளைக் கொண்டதாக இருக்கிறது. ஆகவே, நீதிபதிகளால் ஏற்படுத்தப்பட்ட நீதிமுறைமைகளைப் புறக்கணித்துவிட்டு, நாம் சட்டத்திற்கு இலக்கணம் கூறுவது பொருந்தாது.

மக்கள் நீதிமன்றங்களிலிருந்து எதிர்பார்ப்பதும், பெறுவதும் நீதியைத்தான். அது சட்டங்களின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கலாம்; ஆனாலும், நீதிமன்ற முடிவுகளை நியாயத் தீர்ப்புக்கள் என்று கூறுகிறோமே தவிர சட்டத் தீர்ப்புக்கள் என்று சொல்வதில்லை. ஆகவே, சட்டங்களின் குறிக்கோள் நீதியே ஆகும். நீதிக்கு அடிகோலும் முறையிலேயே, நீதியைக் குறிக்கோளாகக் கொண்டே, சட்டங்கள் அமைகின்றன. அதனால்தான் சட்டத்தை நாம் விளக்கும் போது நீதி செலுத்துவதற்குப் பயன்படும் விதிமுறைகள் என்று கூறுகிறோம்.[1]

ஆகவே, நீதிமன்றங்கள் நியாயம் வழங்குகையில் எந்தெந்த விதிகளை ஏற்று, வகுத்துக் கையாளுகின்றனவோ அந்த விதிகளே "சட்டம்" என்படுகின்றன.

சட்டம் அரசின் ஆணைமட்டுமல்ல; அறத்தின் ஆணையுமாகும்

சட்டமியற்றல், நீதிவழங்கல், ஆட்சி (நிர்வாகம்) செய்தல், என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது அரசு என்று முன்பு கண்டோம். நீதி வழங்குகையில், நீதிபதிகள் ஏற்றுக் கையாளும் விதிகளே சட்டம் ஆகிறது எனவும் பார்த்தோம். நீதிபதிகள் அரசின் வகையாளர் (பிரதிநிதி(களாகவே நியாயம் வழங்குகின்றனர். ஆதலால், அவர்கள் செயல்படுத்தும் விதிகள், சட்டம் அனைத்தும், அரசு உருவாக்கும், ஆணையிடும் கட்டளைகளாகவே அமைகின்றன. நீதிமன்றத் தீர்ப்புக்களுக்குப் பணியாதவர்களை அரசு தனது வலிமையைப் பயன்படுத்திப் பணியவைக்கிறது,

1. Justice is the end, law is merely the instrument and the means, and the instrument must be defined by reference to its end.—Salmond.

என்றும் பார்த்தோம். இவ்வாறு, "சட்டம்" அரசின் படைபலத்தைத் துணைகொண்டு ஆட்சி செலுத்துகிறது என்பது தெளிவு. இதை வைத்து, அரசின் படை வலியே சட்டத்திற்கு ஆதாரமாக உள்ளது என்ற கொள்கை ஒன்று உண்டு. இந்தக் கொள்கையில் ஓரளவு உண்மை இருந்தாலும், அரசின் மறவலியே சட்டத்தின் அடிப்படை என்று கூறுவதை நாம் ஏற்பதற்கு இல்லை. சட்டம், எந்த அளவுக்கு அரசின் பலத்தை அண்டி நிற்கிறது என ஆராய்வோம்.

மக்கள் நெறியுடன் நடந்து நேர்மையாக வாழ்வதற்கு. அவர்களை அச்சுறுத்தி அடக்கி ஆளும் சக்தி ஒன்று தேவைப்படுகிறது. "ஓநாய்க் கூட்டங்களாவது அமைதியாகவும் ஒற்றுமையாகவும் இருக்கலாம். ஆனல், மனிதர்களை அடக்கி ஆளும் சக்தி ஒன்று இல்லை எனில், அவர்களுக்குள் பொது நோக்கும் இல்லையெனில், அவர்கள் அமைதியுடனும் ஒற்றுமையுடனும் இருப்பது இயலாது," என்று ஹாப்ஸ் என்னும் அறிஞர் கூறுகிறுர்.[1] இவருடைய இந்தக் கூற்றைப் பின்வந்த அறிஞர்கள் பலர் எதிர்த்தனர். ஆனாலும், அதிலுள்ள உண்மையை மறப்பதற்கோ, மறைப்பதற்கோ இல்லை.

தனது வலிமையினுல் ஆட்சிபுரியும் அரசு இல்லையெனில், சட்டம். நீதி இவைகளுக்குச் சமுதாயத்தில் இடம் இல்லை. மக்களின் நடத்தையைச் செப்பமுறச் செய்யும் விதிகளை இயற்றி அமுல் செய்வதற்கு அரசின் வலிமையே ஆதாரமாக இருக்கிறது. சட்டத்திற்குப் பின் நிற்கும் அரசின் அதிகாரத்திற்கு அஞ்சியே மக்கள் சட்டத்தை ஏற்று அதற்கு அடங்கி நடக்கின்றனர். அரசும் அதன் வலிமையும் இல்லாத கட்டளையைச் சட்டம் என்று கூறுவது பொருந்தாது. ஆகவே, சட்டம் என்பது வலிமைமிக்க அரசின் ஆணையாகவே இருக்கின்றது. "அரசின் படைபலமே சட்டத்தின் ஆற்றலாகும்," என்று ஹாப்ஸ் கூறுகிறுர்.[2] "எரியாத நெருப்பு, ஒளிராத ஒளி இருக்கமுடியாததைப்போல், கட்டாயப்படுத்தும் ஆற்றல் இல்லாத சட்டம் இருப்பது முடியாது," என்பது ஐரிங் என்ற பேராசிரியரின் முடிவாகும்.[3]

ஆதிமக்களுக்கு அரசியல் ஞானம் வருவதற்கு முன்பே, அரசாங்கம் என்று மக்கள் ஏற்படுத்திக்கொள்ளுவதற்கு முன்னமேயே, சட்டம் இருந்தது, அதற்கு மக்கள் பணிந்தனர் என்று

1. A herd of wolves is quieter and more at one than so many men, unless they all had one reason in them, or have one power over them.—Hobbes Leviathan.

2. It is men and arms that makes the force and power of the laws.—Hobbes.

3 A legal rule without coercion is a fire which does not burn, a light that does not shine.—Ihering.

ஒரு கொள்கை உண்டு. அரசியல் அமைப்புக்கள் தோன்ருத காலத்திலேயே, மக்கள் ஒருசில கொள்கைகளைப் பேணி அவைகளுக்குப் பணிந்து வந்திருக்கலாம். மதம், பழக்கவழக்கங்கள் காரணமாக எழுந்த நம்பிக்கைகளில் தோன்றிய கொள்கைகளை மக்கள் பின்பற்றி இருக்கலாம். ஆனல், அவைகளைச் சட்டம் என்று கூறுவதற்கில்லை. முன் காலத்தில் மக்கள் கடைப்பிடித்து வந்த வழக்க நெறியை ஒட்டி, அரசியல் வாழ்வு முறை வளர்ந்த பின் சில சட்டங்கள் தோன்றியிருக்கலாம். ஆனல், அரசியல் ஏற்படுமுன் நிலவிய கொள்கைகளும், அதற்குப்பின் வகுக்கப்பட்ட சட்டங்களும் ஒரே தன்மையுடையன என்று சொல்லுவது பொருந்தாது. ஆதிகாலக் கொள்கைகளிலிருந்து தற்காலச் சட்டங்கள் சில தோன்றி இருந்தாலும், இன்றைய சட்டத்திற்கு ஓரளவு பழைய கொள்கைகள் மூலமாக இருந்தாலும், இரண்டும் ஒன்றல்ல. பாலிலிருந்து கிடைப்பதுதான் நெய். உரையிட்டுக் கடைவதற்கு முன்னமேயே நெய் பாலில் கலந்திருந்தது என்பதில் ஐயமில்லை. அதனல், பாலும் நெய்யும் ஒன்று என்று கூறமுடியாது. கடைந்தெடுத்த வெண்ணெயை உருக்கிய பின்தான் அதை நெய் என்கிருேம். அதுபோலவே, சில சட்டங்களுக்கு மூலமாக ஆதிகாலக் கொள்கைகள் இருந்தாலும், அந்தக் கொள்கைகளைச் "சட்டம்" என்ற பெயரால் நாம் அழைக்க முடியாது. **அரசியல் அமைப்புக்கள் ஏற்பட்டபின், அரசின் வலிமையுடன் அமுல் நடத்தப்படும் விதிமுறைகளையே நாம் "சட்டம்" என்று கூறுகின்ருேம்.**[1]

நாம் சட்டத்திற்குப் பணிந்து நடப்பது ஏன்? சட்டத்தை மீறினல் அரசு தண்டனை விதிக்கிறது என்பது உண்மைதான். சட்டத்திற்கு மக்களைப் பணியுமாறு அரசு அச்சுறுத்துகிறது என்பதும் உண்மையே. ஆனல், அச்சம் ஒன்றினல்தான் நாம் சட்டத்தின்படி நடக்கின்ருேமா? இல்லை. அச்சுறுத்தலை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சட்டம் இயங்குகிறது என்று கூறினல், அது சட்டத்தின் அடிப்படையை மறப்பதாகும். நம்முடைய பகுத்தறிவே நமக்குச் சொல்லுகிறது, ஒரு சமுதாயத்தில் மக்கள் வாழ்வு ஒழுங்குடனும், அமைதியுடனும் அமைய வேண்டுமானல், அந்தச் சமுதாயத்தில் வாழும் மக்கள் ஒழுங்குடனும், முறையுடனும் வாழ வேண்டும் என்று. இயல்பாகவே நம் உள்ளத்தில் எழும் ஒழுக்க உணர்வும், நியாய எண்ணங்களும், நாம் ஒரு முறைக்கு, வரைமுறைக்கு உட்பட்டு நடக்கவேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்றன. இதை இயற்கையான அற உணர்வு, இயல்பான

1. Where there is no state which governs a community by the use of physical force, there can be no such thing as civil law.—Salmond.

நீதி (Natural Law and Natural Justice) என்று கூறுகிறோம். நாம் பிறருக்குத் துன்பம் செய்தல் கூடாது, உண்மை பேசவேண்டும், நமது வாக்கை நிறைவேற்ற வேண்டும், என்பன போன்ற கொள்கைகள் நம் மனத்தில் இயல்பாக எழுந்து நிற்கும் அற உணர்வுகள், நேர்வழிச் சிந்தனைகள். பெரும்பாலும் இந்த உணர்வுகளே சட்டமாகத் திகழ்கின்றன. ஆதலால்தான், சாதாரணமாகச் சட்டத்தையும் நியாயத்தையும் நாம் ஓரளவு ஒன்றாகவே எண்ணுகிறோம்.

நல்லவை, தீயவை, கடமை, நீதி என்ற சொற்கள் சட்டத்துறைக்கும் ஒழுக்கத்துறைக்கும் பொதுவான சொற்கள். இவ்வாறு ஒரேவித சொற்கள் இரு துறைகளுக்கும் பொதுவாகப் பொருந்தி இருப்பது பொருளற்ற அமைப்பல்ல. ஒழுக்கவியலில் எது நல்லதாகக் கருதப்படுகிறதோ, எது தீயதாக எண்ணப்படுகிறதோ, அதுவே, பெரும்பாலும், சட்டவியலிலும் நல்லதாகவும் தீயதாகவும் விதிக்கப்படுகிறது.[1]

ஒருவரை மற்றொருவர் ஏமாற்றுவது ஒழுக்கத்திற்கு ஒவ்வாதது என்றால், அது சட்டப்படியும் குற்றம்தான். கற்பு காக்கப்பட வேண்டியது அறம் என்றால், கற்பு அழிக்கப்படுவது சட்டப்படியும் கொடுங்குற்றமாகிறது. மக்களின் நியாயமான இன்ப வாழ்விற்கு யாரும் ஊறு செய்தல் ஆகாது என்பது அறநெறியானால், இன்ப வாழ்விற்கு இன்றியமையாத மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துப் பணிசெய்கின்றது சட்டம்.

இவ்வாறு ஒழுக்கத்துறையில் எதை நீதி என்கிறோமோ, அதையேதான் சட்டமும் கூடியவரை நீதியாகக் கொள்கிறது. இந்த முறையில், மக்களது அற உணர்வின் அடிப்படையில் முளைத்து இயங்கும் சட்டம் அரசின் வலிமை என்ற ஆற்றலையும் பெற்று நிற்கிறது. ஆதலால்தான் மக்கள் சட்டத்திற்கு இயல்பாகவே பணிந்து நடக்கின்றனர்.

சட்டத்தின் அதிகாரமும் ஒரு வரையறைக்கு உட்பட்டதேயாகும். நீதிமன்றங்கள் சட்டத்தின்படி நியாயம் வழங்குகின்றன. ஆனால், நீதிபதிகள் சட்டத்தைக் கடைப்பிடிப்பது அவர்களது நேர்மையான கடமை (Moral Obligation) என்பதைத் தவிர, அவர்கள் சட்டத்தைப் புறக்கணித்துவிடில், நீதிபதிகளை ஒன்றும்

1. The terms law and justice are familiar associates ... ... **Right**, wrong and duty are leading terms of law, as well as of **morals.** — Salmond.

செய்வதற்கில்லை.[1] கீழ் நீதிமன்ற நடுவர்கள் சட்டத்தை அசட்டை செய்தால் அவர்களை மேல் நீதிமன்றங்கள் திருத்தலாம். ஆனால், உயர்நீதிமன்றம் ஒரு சட்டத்திற்கு வேண்டுமென்றே எதிரிடையான விளக்கம் கொடுத்து அதைப் புறக்கணித்துவிட்டால், சட்டத்தால் ஆவது ஒன்றுமில்லை. அதுமட்டுமல்ல. உயர்நீதிமன்றத்தினர் அவ்வாறு செய்த விளக்கமே அந்த நாட்டின் சட்டமாக நிலைத்துவிடுகிறது. உயர்நீதிமன்றத்தைக் கட்டாயப்படுத்தும் சக்தி சட்டத்திற்கு இல்லை.[2] ஆனால், நீதிபதிகள் பொதுவாகச் சட்டத்தைப் புறக்கணிப்பதும் இல்லை. உயர்நீதிமன்ற நடுவர்கள் தங்கள் அற உணர்வைக் கட்டளைக்கல்லாக வைத்தே சட்டத்தை ஏற்றுக்கொள்ளுகின்றனர். இவ்வாறு நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்வதாலேயே சட்டம், சட்டம் ஆகிறது.[3]

விளையாட்டில் விருப்பமுற்று உணவுண்ண இசையாமல், துள்ளித்திரியும் குழந்தையை அள்ளி அணைத்து, ஆதரவோடு சிறிது அதட்டி, அச்சுறுத்தி, அமுதூட்டுகின்றாள் அன்னை. தாயின் அச்சுறுத்தலுக்கு அஞ்சியே உண்ணுகிறது இளம்பிள்ளை. இந்தத் தாயின் அச்சுறுத்தலில் அன்பு இருப்பதை, பயமுறுத்தலில் பரிவு இருப்பதை, நாம் நன்கு அறிவோம். இந்த முறையிலேதான் சட்டத்தின் அச்சுறுத்தலில் அறம் இருக்கிறது; தண்டனையில் தருமம் இருக்கிறது.

சமுதாயத்தின் அற உணர்வுக்கு அரசின் மறவலியும் துணையாக நிற்கும் பொழுது அது சட்டம் ஆகிறது.

"எங்கும் எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும்" என்பது ஒழுக்கநெறி, சமுதாயம் கூறும் அறநெறி. ஆனால் அது சட்டம் அன்று; பொய் புகல்வோரையெல்லாம் அரசு தண்டிப்பது இல்லை "நீதிமன்றங்களில் சாட்சியம் சொல்வோர் உண்மையையே உரைக்க வேண்டும்" என்பதும் அறநெறிதான். அரசு, நீதிமன்றங்களில் பொய் கூறுவோரைத் தண்டிக்கிறது. ஆகவே,

1. The duty of the final tribunal to administer justice according to law must be recognised as a moral obligation merely.
— Salmond.

2. If the House of Lords were wilfully to misconstrue an Act of Parliament, the interpretation so placed on that Act would *ipso facto* be the law of England, for there is no other judicial tribunal with jurisdiction and authority to decide the contrary.
— Salmond.

3 Law is law, not because the courts are under any legal obligation to observe it, but because they do in fact observe it.
— Salmond.

"பொய்ச் சாட்சியம் கூறுதல் கூடாது" என்பதைச் சட்டம் என்கிறோம். மக்களின் பொது நலனுக்கு உகந்த வகையில், அவரவர்களது தனி நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு, அறக்கொள்கைகள் சிலவற்றை அரசு தன் வலிமையால் நடைமுறைப் படுத்துகிறது. அக்கொள்கைகளே சட்டங்கள் ஆகின்றன. இவ்வாறு மக்களின் அற உணர்வும், அரசின் மறவலியும் சட்டத்தில் இணைந்து நிற்கின்றன.

இந்த முறையில், ஒழுக்க நெறியும், ஒறுத்தல் முறையும் சட்டத்தில் ஒன்றி நிற்கின்றன. மக்களின் அறஉணர்வும், அரசின் மறவலியும் இணைந்து இயங்குவது சட்டம். அரசு நடைமுறைப் படுத்தும் அறவழிகளே சட்டங்கள் ஆகின்றன.[1]

---

1. Law is not right alone, or might alone, but the perfect union of the two. It is justice speaking to men by the voice of the state. — Salmond.

4. அறமும் முறையும்
(Natural Law & Natural Justice)

"கடவுள் தத்துவங்களை உணர்ந்தான் ஒருவன், தனியனாய் இருந்து எதனைக் கூறுகின்றானோ அதுவே அறமாகும்"

—சுக்கிர நீதி

இயற்கை நெறி

சட்டம் அரசின் ஆணையாக நடைமுறைப் படுத்தப்பட்டாலும், அறக்கொள்கைகளே அதன் அடிப்படை எனக் கண்டோம். ஒழுக்கவியலும் சட்டவியலும் ஒன்றி நிற்கின்றன. அறத்தை நிலை நிறுத்தலே முறை எனப்படும்; நேர்மையைக் காத்தலே நீதியாகும். ஆதலால், "அறம்" "முறை" என்ற இரு சொற்களில் பொதிந் துள்ள உண்மைகளை நாம் ஓர்ந்து உணர்வது, சட்டக்கல்விக்கு இன்றியமையாததாகிறது.[1] சட்டவியலில் ஒழுக்கவியல் பற்றி ஓர் அளவு ஆராய்வது அவசியமாகும் என்று சால்மண்டு (Salmond) என்ற பேராசிரியர் வற்புறுத்திக் கூறுகிறார்.

ரோமானியர்களின் சட்டமுறையே ஆங்கிலச் சட்டவியலுக்கு அடிப்படை ஆகும். ஏறக்குறைய, 2000 ஆண்டுகளுக்கு முன்பே ரோமானியர்களின் ஆட்சி முறையில் சட்டங்கள் இயற்றப்பட்டு அந்தக்கலை நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. அவர்கள் மக்களின் இயல்பான நற்பண்புகளை "**இயற்கை நெறி**" (Natural Law) என் றும், இயல்பான நீதி உணர்வுகளை "**இயற்கை நீதி**"; (Natural Justice) என்றும் அழைத்தனர். நன்னெறியும், நீதி உணர்வும் மனி தனின் உள்ளத்தில் இயல்பாகவே இருப்பதால் அவற்றை "இயற்கை" என்ற அடைமொழியோடு குறிப்பிட்டனர். யாராலும் இயற்றப்படாமலும், காலப்போக்கிலே மாறுமலும், இயல்பாகவே மனிதனின் பகுத்தறிவிற்கு உகந்ததாகவும் உள்ள கொள்கை களையே இயற்கை நெறியாகவும், நீதியாகவும் கொண்டனர்.[2] மனிதர்களால் விதிக்கப்படும் மற்ற நியமங்களுக்கெல்லாம் மேலானதாக அவர்கள் இயற்கை நெறியை மதித்தனர். ஒழுக்கத்

1. Further reflection has satisfied me that it is not permissible for a book of jurisprudence thus wholly to ignore the ethical implications of the subject — Salmond in his preface.

2. That law is just which conforms to the nature of society among reasonable beings. Such law is absolutely natural and independent of time and place. No one can change it. It would exist and remain the same even if there were no God. — Grotius.

திற்கு அடிப்படையாகவும் கடவுளின் கட்டளையாகவும் அதைப் போற்றினர்.

அந்தக் காலத்து கிரேக்க நாட்டு அறிஞர்களும், இயற்கை நெறியை இன்ப நெறியாகவும், தெய்வ நெறியாகவும் கருதிவந்தனர். இயற்கையால், மனிதனின் உள்ளமாகிய ஏட்டிலே எழுதப் பட்ட அரிய உண்மைகளே இயற்கை நெறிகள். மனிதனுக்கு உறுதுணையாக, அவன் செயல்களின் தன்மையைச் சோதிக்கும் ஒப்பற்ற உரைகல்லாக, அமைந்திருப்பது அவனது மனச்சாட்சி யாகும். அந்தத் தூய மனச்சான்றிலே தோன்றி நிலைத்த உயர் உண்மைகளையே இயற்கை நெறியாகக் கொண்டனர்.[1]

அண்டரண்டங்களை அமைவுற, நியதிப்படி, இயங்கச் செய்யும் இயற்கைத் தெய்வமே, மனிதனின் இயல்பான நன்னெறியையும் நீதியையும் வகுத்தது என்பது அவர்கள் துணிபு. இது, உலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் பொருந்துவது; காலம் கடந்து நிற்பது; மாறுதல் இல்லாதது; மாண்பு மிக்கது. இந்தத் தெய்வ நியதியை (Divine Law) அடிப்படையாகக் கொண்டே மனிதனின் வாழ்வு அமைதல் வேண்டுமென்பது கிரேக்க நாட்டு ஞானிகளின் அடிப்படைக்கொள்கையாகும்.[2] வாய்மை, ஒழுக்கமுடைமை, இன்னு செய்யாமை, இவை போன்ற அற நெறிகளைத் தெய்வ நியதியாகத் தேர்ந்து ஒழுகினர். இதுவே நம்முடைய முன்னோர்களின் கொள்கையுமாகும்.

தற்காலத்தில், இந்த இயற்கை நியதியைத்தான் "ஒழுக்க நெறி" (Moral Law) என்று கூறுகிறோம். இப்பொழுதுள்ள சட்டத்திலும் கூட, இயற்கை நீதி (Natural Justice) என்ற தத்துவம் கையாளப்படுகிறது. மேலை நாட்டினர் கண்ட இந்த இயற்கை நியதியையே நாம் "அறம்" அல்லது "தருமம்" என்று கூறுகிறோம். சட்டவியலில் சொல்லப் படும் இந்தத் தெய்வ (இயற்கை) நெறியையே நாமும் தெய்வத் தன்மை பொருந்தியதாகக் கருதி, அதை "அறக் கடவுள்" என்றும் "அறவாழி அந்தணன்"[3] என்றும், "தருமதேவதை"

1. This natural law was conceived by the Greeks as a body of imperative rules imposed upon mankind by Nature, the personified universe .... It is Divine Law—the command of God imposed upon men— .... It is also the Unwritten Law as being written not on brazen tablets or on pillars of stone, but solely by the finger of nature in the hearts of men. — Salmond.

2. This proposition — to live according to Nature — was the sum of the tenets of the famous stoic philosophy. — Maine.

3. திருக்குறள், அ.

என்றும் போற்றுகிறேம். "நெறியதனை விரித்துரைத்த நேர்மை" யாளன் என்றும்,[1] "நின்றவன் நின்றவன் நீதி நிறைந்தவர் தங் கள்பால்"[2] என்றும், இறைவனை இறைஞ்சி நின்ருர்கள் பெருமை மிக்க அடியார்கள்.

நமது தீந்தமிழிலுள்ள அறம் என்ற சொல் உண்மை நெறியை, உயர் கருத்துக்களை உணர்த்தி நிற்கும் ஒப்பற்ற சொல்லாகும். "தருமம்" என்ற சொல்லின் பண்பெலாம் உணர்த்தும் வகையில் ஆங்கிலச் சொல் எதுவும் அமையவில்லை.

வாழ்விற்கு அடிப்படையாக, வழிகாட்டியாக, அமைவது அறம் அல்லது தருமம் ஆகும.

உலகில் வாழும் உயிர்கள் எல்லாம் இன்பத்தையே நாடுகின் றன. மனிதனும் இன்பத்திற்காகவே வாழ்கின்ருன். புகழ்தரும் இன்பத்தை மனிதன் எய்துவதற்கு அறமே துணையாக இருக் கிறது. அறத்தின்வழி வருவதே உண்மையான இன்பம்; மற்றவை எல்லாம் துன்பம் தருவன, நமது புகழையும் கெடுப்பன, என்று கூறுகின்ருர் வள்ளுவர்.

"அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல." (குறள்-39)

ஆகவே, மெய்யான, புகழ்தரும் இன்பம் பெறுவதற்கு அறமே நல் வழியாக நம் வாழ்வில் அமைகிறது.

சிறப்பையும் செல்வத்தையும் நமக்கு அறவாழ்வு அளிக்கிறது. அறத்தைவிடச் சிறந்த செல்வம் நமக்கு வேறென்றும் இல்லை என்று அறுதியிட்டுக் கூறுகிருர் குறளாசிரியர்.

"சிறப்பு ஈனும் செல்வமும்ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு." (குறள்-31)

அறநெறியிலே நாம் வாழ்ந்தால்தான் ஆக்கத்தைப பெறமுடி யும். அறநெறியை மறந்தால் நமக்கு விளைவது கேடேயாகும்.

"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு." (குறள்-32)

ஆகவே, புகழ்தரும் இன்பமும், சிறப்பும், செல்வமும், நம்மை வந்து அடைய வேண்டுமெனில், கேடு நம்மைவந்து அடையாது இருக்க வேண்டுமெனில், நம் வாழ்வு அறநெறியிலே செல்வது இன்றியமையாததாகிறது.

1. திருநாவுக்கரசர்—திருப்பூவணம், திருத்தாண்டகம்.
2. சுந்தரர்—திருஆமாத்தூர், தேவாரம்,

"அறமின்றி இன்பம் உண்டாகாது. ஆதலின் மனிதன் அறத்தில் பற்றுடையவனுக இருத்தல் வேண்டும்."

—சுக்கிரநீதி

அறம் என்பது என்ன?

நல்லவை எல்லாம் அறம், அல்லவையெல்லாம் பழிதரும் மறம். நல்ல செயல்கள் என்னென்ன என்று விரிவாக விளக்கு வதைக் காட்டிலும், அல்லாத செயல்களைக் கூறி அவற்றை அகற்ற வேண்டும் என்று சொல்லி, அறத்திற்கு இலக்கணம் கூறலாம். இந்த முறையிலேயே வள்ளுவர் அறத்தை விளக்கி இருக்கிறார்.

"அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்." (குறள்-35)

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற." (குறள்-34)

பொருமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் இவற்றை விலக்கி ஒருவன் வாழ வேண்டும். இந்த நான்கையும் ஒழிக்க முயல்வதே, ஒழித்து வாழ்வதே அறமாகும். தீய செயல்களுக்கு வித்தாகத் தீமையான எண்ணங்கள் இருப்பதால், மனதை மாசற்ற நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும், அதுவே அறம் என்று அறத்தின் இலக்கணத்தை வகுத்துக் கூறுகின்றார் வள்ளுவர்.

"மாசறக் கற்று, நற்பண்புகளோடு, எப்பொழுதும் விருப்பு வெறுப்பற்ற உள்ளம் படைத்த சான்றோர்கள், எந்தக் கொள்கை களை மனமுவந்து ஏற்று அதன்படி ஒழுகுகின்றனரோ அந் நெறியே தருமம் ஆகும் என்பதை உணர்ந்து கொள்க.". மனு: அத். 2: விதி 1.

"நாம் தருமத்தைப் பேணி நடந்தால் அது நம்மைக் காப் பாற்றுகிறது. அதை அழித்து நடக்க முற்பட்டால், அந்தத் தருமமே நம்மை அழித்து விடுகிறது. ஆதலால், தருமம் நம்மை அழிக் காமல் நாம் ஒழுகுவதே முறையாகும்.' மனு : அத் 8: விதி 15.

சான்றோர்களின் மாசற்ற சிந்தனைகளிலே தோன்றி அவர்க ளது ஒழுக்கத்திற்கு உறுதுணையாக இருப்பது நேர்மைத்திறம் என்றும், "தருமமே தலைகாக்கிறது" என்றும், "அறம் பிழைத் தோர்க்கு அறமே கூற்றுகிறது" என்றும் தமது நீதி நூலிலே மனு முனிவர் கூறியிருப்பது ஓர்ந்து உணரத்தக்கது.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுவதை" உணர்த்தும் வகையில் உதித்த நூலே சிலப்பதிகாரம் என்பதை நூலின் பாயிரம் நுவலுகின்றது.

இதில் இருந்து, அறமே நம்மைக் காப்பது என்றும், அதனுல் வருவதே இன்பம் என்றும், அது எல்லா மக்களுக்கும் பொதுவானது என்றும், அது காலத்தால் மாருத மாண்புடையது என்றும் காணு கிருேம்.

முறை (நீதி) என்பது என்ன ?

மக்கள் அறத்தின் அடிப்படையில் ஒழுகுவதை முறை என் கிருேம். நேர்மைத்திறம் (தருமம்) வாழ்வில் நிலைப்பதே நீதி எனப் படுகிறது. அறக்கொள்கைகளைக் கடைப்பிடித்து அதற்கிசைய மக்கள் வாழ்வதே முறையான வாழ்வாகும். அறத்தை ஒட்டிய ஒழுக்கம், அறநெறி, முறை ஆகிறது. இவ்வாறு, நமது வாழ்வில் அறம் இயங்குவதை, தருமம் தழைப்பதை, முறை அல்லது நீதி என்று கூறுகிருேம்.

"நன்று எது, தீது எது என்று துணிதற்குரிய கருவி, நீதி எனப்படும்." (சுக்கிர நீதி.)

அறத்தை ஒட்டிய முறையான வாழ்வின் அறி குறிகள் என்ன ?

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறென்றறியேன் பராபரமே"—இந்த உயர் தனிக் கொள்கையே முறையான வாழ்வை முன்னின்று நடத்துவது. நாம் செய்யும் தீச் செயல்களுக்கு மூல காரணங்களாக இருப்பவை பொருமை, பேராசை, கோபம் என்ற தீய குணங்கள்தாம். இவைகளால் உந்தப்பட்டே நாம் பிறருக்கு ஊறு செய்கின்ருேம். நாம் செய்த இன்னுமையின் பயனுக இப்பொழுது பிறருக்கும், முடிவில் நமக்கும் கேடு விளைகின்றது. ஆதலால், எனது நலனைப் பெருக்குவதற்கு நான் பிறரது நலனைப் பறிப்பது கூடாது. எல்லோருடைய நலனும் சேர்ந்தே பொது நலன் ஆகிறது. பிறர் நலனுக்கு நான் ஊறு செய்தால், பொது நலனுக்கு ஊறு செய்தவன் ஆகிறேன். பொது நலன் பெருக வேண்டு மெனில், ஒருவரால் இன்னெருவருக்குச் செய்யப்பட்ட கேடு, குறை, அகற்றப்பட வேண்டும். இந்தக் குறைகள் களையப்பட்டால் தான் அனைவரின் வாழ்வும் நிறைவு பெற்றதாக அமையும்.[1] முறை என்பது குறைகள் இன்றி வாழ்வு நிறைவு எய்துவதே யாகும்.

ஒலிகள் ஒன்று சேர்வது, இசை; வண்ணங்களின் சேர்க்கை, ஓவியம்; மக்களின் கூட்டு, சமுதாயம்; சேரும் ஒலிகள் எல்லாம்

1 *The rule of wisdom* — that is to say, self - regarding wisdom, the prudence of self-interest—instructs a man how he must act in order thereby to serve and promote his own welfare. *The rule of justice* instructs him how he must act in order to serve and promote the general welfare of mankind. —Salmond.

இசை ஆவது இல்லை; வண்ணங்களின் கலவைகள் அனைத்தும் ஓவியம் ஆகா. ஒலிகள் இசைந்து ஒன்றும்பொழுதே இன்னிசை எழுவது இயல்பாகின்றது; பலவித வண்ணங்கள் பாங்குடன் அமைந்தால்தான் சித்திரத்தின் தோற்றம் சீரடைகிறது. அது போலவே மக்கள் தங்களுக்குள் இசைந்து, பொருந்தி வாழும் பொழுதுதான் சமுதாயம் பிறக்கிறது. "இசை" என்ற சொல்லுக்கு இணக்கம் என்ற பொருளும் உண்டு. ஒலிகள் ஒன்றுக் கொன்று இணங்கி, ஒன்றி ஒலிக்கும் போதுதான் இனிய இசை எழுகின்றது. ஒன்றாத ஒலிகளிலே இசை இல்லை, இனிமை இல்லை; அவை 'ஓசை' அல்லது 'சத்தம்' என்றே பெயர் பெறுகின்றன. ஒன்றிய, இசைந்த ஒலிகளே, இசையாகி நின்று இன்பம் அளிக்கின்றன. அவ்வாறே, இணக்கமுடன், பொருந்தி, இசைந்து வாழாத மக்களைக் "கூட்டம்" என்று கூறலாமே தவிர "சமுதாயம்" என்று அழைக்க முடியாது.

ஒழுங்கில் பிறப்பதே உயர்கலைகள். எல்லாக்கலைகளுக்கும் உயிராக இருப்பது, அடிப்படையான ஒழுங்கும், இசைவுந்தான். சமுதாய வாழ்வும் ஒரு கலையே ஆகும். ஆதலால், அந்தக் கலை வாழ்விலே இசைவும், ஒழுங்கும் இனிதாய் அமைவது இன்றியமையாத இலக்கணமாகும். இந்த இசைந்த வாழ்வில்தான் இன்பம் பிறக்கிறது.

சமுதாயத்திலுள்ள மக்கள் ஒருவருக்கொருவர் இசைந்து வாழும் பொழுது ஒவ்வொருவரின் தனிப்பட்ட இன்பமும், நலனும் பாதுகாக்கப் படுகின்றன. மக்கள் அனைவரின் தனிப்பட்ட இன்பமே பொது இன்பமாகத் திகழ்கிறது. ஒருவர் நலனை இன்னொருவர் பறிக்காமல், ஒருவர் இன்பத்திற்கு இன்னொருவர் ஊறு செய்யாமல் வாழ்வதே, இசைந்து ஒழுங்குடன் வாழ்தல் ஆகும். இவ்வாறு இசைந்த வாழ்வு இனிதாக நடைபெற்றால்தான் தனிப்பட்டோரின் இன்பமும், சமுதாயத்தின் இன்பமும் சேர்ந்து வளர முடியும்.

மக்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட நலனையும் இன்பத்தையும் பேணி, அதேசமயம், சமுதாயத்தின் நலனையும் இன்பத்தையும் பாதுகாப்பதே ஒழுங்குபட்ட சமூக அமைப்பின் உயர் நோக்காகும், இந்த உயர் நோக்கையே "நீதி" அல்லது "முறை" என்று கூறுகிறோம்.[1]

சமுதாயத்திலுள்ள ஒருவர் நலனை மற்றொருவர் பறிக்காமல், ஒருவர் இன்பத்திற்கு இன்னொருவர் ஊறு செய்யாமல், சமுதாயத்தின் பொது நலனைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொருவரும் பிற

1. The rule of justice determines the sphere of individual liberty in the pursuit of individual welfare, so as to confine that liberty within the limits which are consistent with the general welfare of mankind — Salmond.

ருடன் இசைந்து, பொருந்தி, ஒழுங்காக வாழ்வதே முறையான, நீதியான வாழ்வு எனப்படும்.[1] முன் கூறியபடி, அறநெறியில் அமையும் வாழ்வே, முறையான வாழ்வாகும். இவ்வாறு, அறநெறியே நல்வாழ்வின் முறையாக, நீதியாக நிலைக்கிறது.

இந்த உண்மை, உலகில் நாகரிகம் அடைந்துள்ள எந்த சமுதாயத்திற்கும் என்றும் பொருந்துவதாகும்.

அறநெறியின் அடிப்படையில் மக்களின் வாழ்வை இயங்கச் செய்வதே முறை செய்தல் (நீதி வழங்குதல்) எனப்படுகிறது. அற நெறியில் அமைந்து ஒழுகுவது முறைமை ஆகிறது.

---

1. The all—embracing formula of justice is: "Every man is free to do what he wills, provided he infringes not the equal freedom of any other man."—Herbert Spencer.

(Principles of Ethics.)

5. சட்டமும் அறமும் ஒன்றியிருப்பினும், ஒன்றல்ல

சட்டம் அறத்தை அடிப்படையாகக் கொண்டது எனக் கண்டோம். அரசின் ஆணையான சட்டத்தில் அறக் கொள்கைகள் பொதிந்திருக்கின்றன எனக் கூறப்பட்டது. ஆனால், அறக் கொள்கைகள் அனைத்தும் சட்டம் என்றோ, சட்ட விதிகள் எல்லாம் அறக்கொள்கைகள் என்றோ நாம் கொண்டால், அது தவறாகும். அறமும் சட்டமும் ஒன்றி இருந்தாலும், இரண்டும் ஒன்றல்ல.

வாய்மையும் வாக்குறுதியும், ஈதலும் இரக்கமும், ஒழுக்கமும் ஒப்புரவும், அறக்கொள்கைகள். ஆனால், இவையனைத்தும் அப்படியே சட்டமாகிவிடுவது இல்லை அதாவது, இக்கொள்கைகள் எல்லாவற்றையும் அரசு தன் வலிமையினால் நடைமுறைப்படுத்துவது இல்லை. அறக்கொள்கைகள் அனைத்தையும் அரசு நடைமுறைப்படுத்த முற்படுவதும் ஆகாத காரியமே ஆகும். மனச்சான்றே மனிதனை அறவழியில் நிறுத்தும் சக்தியாகிறது; அதற்குப் புறச்சட்டங்கள் பயன்படா. ''மனது மாசற்று இருக்க வேண்டும்'' என்பது அறம். நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும், செயலில் உருவெடுக்காது, தோன்றி மறையும் தீய எண்ண அலைகள் எத்தனை எத்தனையோ! இவைகளைக் கண்டுபிடித்து அறிவது இயலுமா? இவ்வாறு தீமையான எண்ணங்கள் எண்ணப்படுவதே சட்டப்படி குற்றமானால், உலகில் எவராவது இந்தக் குற்றத்திலிருந்து தப்பமுடியுமா? இவ்வகைப்பட்டதே பல அறக் கொள்கைகளும்.

நம்மில் இரக்கமில்லாதவரும் சிலருண்டு. ஈதல் இயல்பே இல்லாதவர்களும் இருக்கின்றனர், ஈதல் அறம்; இரக்கமும் அறமே. ஈதலும் இரக்கமும் நம்மிடம் இல்லையெனில், சட்டத்தால் ஆவது என்ன? இவ்வாறு, அறக்கொள்கைகள் பல மனிதனின் மனச்சான்றின் அடிப்படையில்தான் இயங்கமுடியும்.

சட்டம் அறக் கொள்கைகளைப்பற்றி அக்கரை காட்டாமல் விடுவதும் இயலாது. ஏனெனில், முன்னர் கூறியபடி அறமின்றி ஆக்கமில்லை; சமுதாயத்தின் முறையான வாழ்விற்கு அறநெறியே அடிப்படையாக இருக்கிறது. முறை செய்தலை முன்னோக்கி இயங்குவதே சட்டமாகும். ஆதலால், பல அறநெறிகளை அண்டியே சட்டம் எழுகின்றது.

சமுதாயத்தின் பொது நலனைப் பாதுகாப்பதற்கு, அரசு எந்தெந்த அறநெறிகளை அவசியமெனக் கருதுகிறதோ, அந்த நெறிகளைமட்டும் சட்டமாக்கி நடைமுறைப்படுத்துகிறது.

ஒழுக்கம் என்பது உயர்ந்த அறக்கொள்கையே. ஆயினும், ஒழுக்கநெறிகள் அனைத்தையும் சட்டம் நடைமுறைப்படுத்த இயலாது. பிறர் மனை நயப்பதை "விளியாது நிற்கும்பழி" யாகக் கொண்டு சட்டம் தண்டிக்கிறது. ஏனெனில் 'பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோருக்கு அறம்" என்பது மட்டுமின்றி, பிறனில் விழைதல் பகையையும் பழியையும் உண்டாக்கும், பிறர் நலனைப் பறிக்கும், செயலாகிறது. பிறர் நலனுக்குக் குந்தகம் விளைவிப்பதால் இது சடடப்படியும் குற்றமாகிறது. "வாய்மை" என்பது "எங்கும் எப்பொழுதும் உண்மை உரைக்க வேண்டு"மென்ற அறக் கொள்கை. உலகத்தார் எல்லோரும் "உள்ளத்தாற் பொய்யாது ஒழுக வேண்டு"மென்று அரசு ஆணையிட்டு நடைமுறைப்படுத்த முடியாது. ஆனால், நீதி மன்றத்தில் பொய் கூறுவோர், இன்னொருவரை ஏமாற்றிப் பொருள் பறிக்கும் நோக்கத்துடன் பொய் பகருவோர், இவர்களைச் சட்டம் ஒறுக்கிறது. ஏனெனில் பொய்ச்சான்று கூறுவதும், பிறரை ஏமாற்றப் பொய் புகல்வதும், பிறருக்குத் தீங்காக விளைகிறது. இந்த முறையிலே எந்தெந்த அறக்கொள்கைகள், சமுதாயத்தின் பொது நலனுக்கு அவசியமாகின்றனவோ, அவைகளே சட்டமாக்கப் படுகின்றன.

அறத்தோடு உறவில்லாத விதிகள் பலவும் சட்டமாக நடைமுறைப்படுத்தப் படுவதும் உண்டு. "அரசாங்கத்திற்கு வரி கொடுக்கவேண்டும்" என்பது சட்டம். ஆனால், வரி செலுத்த வேண்டிய கடமை அறநெறியின் பாற்பட்டது அன்று.

காலத்திற்கும், வளர்ந்து மாறிக்கொண்டுவரும் சமுதாயத்திற்கும் ஏற்ப அறநெறியும் மாறுகிறது. இவ்வாறு காலப் போக்கிலே வளரும் தன்மை அறத்தின் இயல்பு என்பதை நாம் அறிந்து கொண்டால், சமூக தருமம் மாறுவது இயல்பு என்பதை நாம் நினைவில் கொண்டால், சட்டவிதிகள் பலவும் காலத்திற்கேற்ற நேர்மைத் திறத்தைக் கருத்தில் கொண்டு இயங்குவன என்பது எளிதில் புலப்படும். வளரும் சமூக நீதியின் சாயலை, அதற்கேற்ப மாறும் சட்ட விதிகளில் பார்க்கலாம்.

ஆகவே, அறத்தின் அடிப்படையில் சட்டம் இயங்கினாலும், இரண்டும் ஒன்றாய் இருப்பது அல்ல.

6. நீதி முறை
(Administration of Justice)

" முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்." (குறள்-388)

முறை செய்தலில் அடங்கியுள்ள கொள்கைபற்றி முன் அத்தியாயத்தில் கண்டோம். அரசு எவ்வாறு நீதி வழங்குகிறது? நீதி வழங்க வேண்டியதின் அவசியம் என்ன? நீதி முறைகளின் பாகுபாடுகள் என்ன? இவைபற்றி இனிப் பார்ப்போம்.

அறநெறியைப் பேணியே நாம் அனைவரும் வாழ்கின்றோம் என்று சொல்ல முடியாது. அறநெறியைக் கடைப்பிடித்து நிற்பவர்கள்கூடச் சில வேளைகளில் அதற்கு முரணான செயல்களைச் செய்து விடுகின்றனர். மனிதன் தனது இன்பத்திற்காக பிறருடைய இன்ப வாழ்விற்கு ஊறு விளைவிக்கின்றான். தனது நலனைப் பெருக்கிக் கொள்வதற்கென பிறரது நலனைப் பறித்து விடுகிறான்,

நம் ஒவ்வொருவரின் நலன்களையும் (Interests) பாதுகாத்துக் கொள்வதையே நமது உரிமை (Right) என்கிறோம். நமது சொத்துக்களை நாமே நுகர்ந்து மகிழும் உரிமை, நமது உடலுக்குப் பிறர் தீங்கு செய்யாமல் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை, இவையிரண்டும் நமது முக்கிய உரிமைகளாக இருக்கின்றன..

தங்களது சொந்த நலன்களை எந்த வகையிலும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டுச் சிலர் பிறருடைய உடைமைகளை பலவந்தமாகவேனும் கைப்பற்றுகின்றனர். நமது நிலத்தை இன்னொருவர் கவர்ந்து கொள்ளுகிறார்; நம்மிடமிருந்து வாங்கிய கடனைப் பிறர் திருப்பிக் கொடுப்பது இல்லை; நம்மோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மற்றவர் மீறுகிறார். இன்னொருவர், பகைமையின் காரணமாக நம்மைத் தாக்கி நம் உடலுக்கு ஊறு விளைவிக்கின்றார். இவ்வாறு, நமது வாழ்வில் நம்முடைய நலன்களுக்கும் உரிமைகளுக்கும் இடையூறுகள் பல வழிகளிலும் நேருகின்றன.[1]

1. Men being what they are – each keen to see his own interest and passionate to follow it- society can exist only under the shelter of the state, and the law and justice of the state is a permanent and necessary condition of peace, order and civilisation — Salmond.

நாகரிகம் அடையாத வாழ்விலே தனது சொந்த வலிமையினுல் மனிதன் தன் உரிமைகளைப் பாதுகாத்து வந்தான். தனி மனிதனின் உடல் வலிவும், அவனுக்கு உதவியாய் நின்றோரின் ஆற்றலுமே அவன் உரிமைகளைப் பாதுகாக்கும் அரண்களாக இருந்தன. முன்னேற்றம் அடையாத நிலையில் வாழும் போது, ஒவ்வொருவனும் தனது வழக்கிற்குத்தானே நீதிபதியாக இருந்தான். தன் பலத்தையே துணைகொண்டு தனது இச்சையைப் பூர்த்தி செய்து கொண்டான்.[1]

அந்நாளில், வேலெடுத்தவன் வெற்றிபெற்றுன், கோலெடுத்தவனின் கொள்கை நிலைத்தது. அச்சுறுத்தலே அறமாக, வலிமையே நீதியாக இருந்த காலம் அது. இந்த நிலையில், மனிதனின் தனி வாழ்வு ஆபத்து நிறைந்ததாகவும், பெரிய மீன் சிறிய மீனை விழுங்கும் நிலையுள்ள விலங்கின வாழ்வை ஒத்ததாகவும் இருந்தது.[2]

அரசு முறை ஏற்பட்டபின் கூட, மக்கள் தங்களுக்குள் ஏற்படும் விவகாரங்களைத் தாங்களே சண்டையிட்டுத் தீர்த்துக் கொள்ளும் வழக்கத்தை விட்டு விடவில்லை. ஒருவருக் கொருவர் போரிட்டுத் தங்கள் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் முறை இங்கிலாந்து தேசத்தில் பத்தொன்பதாம் நூற்றுண்டு வரை நிலைத்திருந்தது என்பது சரித்திர வரலாறு போரில் வெற்றி பெற்றவன் வழக்கிலும் வெற்றி பெற்றவன் ஆனுன்!

அரசியல் வாழ்வில் முன்னேற்றம் அடைந்த பின்னரே, படிப்படியாக அரசு தன் வலிமையைப் பயன்படுத்தி, மக்களிடையே தோன்றும் வழக்குகளைத் தீர்த்து வைக்கத் தலைப்பட்டது. நாளடைவில் அரசின் ஆதிக்கம் வளர வளர, வலிமையே நியாயம் என்ற மூடத்தன்மையான பழைய வழக்கத்தை ஒழித்து விட்டு, மக்கள் தங்கள் வழக்குகளை அரசால் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றத்திலே தீர்த்துக் கொள்ளவேண்டுமென்ற கொள்கை வற்புறுத்தப்பட்டது. தனிமனிதனின் பலத்திற்குப் பதிலாக, சமூகத்தின் கூட்டு வலிமை அரசின் மூலமாக ஒவ்வொருவரின் உரிமையையும் பாதுகாக்க முற்பட்டது. இவ்வாறு, தனிப்பட்டவரின் வலிமைக்குப் பதிலாக, அரசு தனது வலிமையினுல் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க ஆரம்பித்த செயல்,

1. In the state of nature, the law of nature is alone in force, and every man is in his own case charged with the execution of it. — Locke.

2. Without a common power to keep them all in awe ...... the life of man was solitary, poor, nasty, brutish and short.

— Hobbes

மனிதனின் அரசியல் வளர்ச்சி வரலாற்றிலே மிக முக்கியமான தாகும்.

நாகரிகம் அடைந்துள்ள சமூகத்திலே, ஒவ்வொருவரும் தனது சொந்த வலிமை கொண்டு 'தனது உரிமைகளைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வது என்று ஏற்பட்டால், நாட்டில் குழப்பமும் அமைதி இன்மையும் பரவிவிடும். நிலையான, ஒழுங்கான ஆட்சிமுறை இயங்க இயலாது. நாகரிகமான நாட்டு வாழ்வு நிலைகெட்ட காட்டு வாழ்வாக மாறிவிடும். ஆகவே, ஒழுங்கு பட்ட சமூகத்தில், மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கடமையை, மக்களுக்குள் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை, அரசு ஏற்று நடத்துகிறது.[1]

தனி ஒருவரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசின் ஒப்பற்ற வலிமை இன்று துணையாக நிற்கிறது. தனது சொந்த வலிமையை நம்பி வாழ்ந்த மனிதன், இப்பொழுது சமூகத்தின் கூட்டு வலிமையினால் பாதுகாக்கப் படுகிறான்.[2] அதனால் மனிதன் தனது சொந்த வலிமையைப் பயன்படுத்தித் தன் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இன்று இல்லை. அப்படித் தனிப்பட்டோர் தங்கள் வலிமையை உபயோகிப்பதை அரசு தடுத்து நிறுத்துகிறது. இந்த முறையிலே, ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் தங்களுக்குள் தோன்றும் வழக்குகளை நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு விட்டு, அவைகளுக்குப் பணிந்து நடக்கும் முறை சமுதாய நாகரிகத்தின் சின்னமாக விளங்குகின்றது. இவ்வாறு, தன் வலிமை கொண்டு தன்னலம் பேணும் துயர நிலை மறைந்து, சமூகவாழவு நாகரிகத்தின் அடிப்படையில் இயங்கத் துவங்கியது.

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவருமே, நெறியுடன் வாழும் நீர்மை பெற்றிருந்தால், அவர்களது நடத்தையை ஒழுங்கு படுத்துவதற்கெனச் சட்டமோ, அரசின் வலிமையோ அவசியமில்லாமற் போகலாம். ஆனால், மக்கள் ஒரு சிலரின் தன்மை நன்னெறிக்கு முரண்பட்டதாகவே அமைகிறது. அறநெறியிலிருந்து மனிதன் விலகுவது அவன் இயல்பாக இருப்பதால், தன்னலனையே பெரிதும் கருதி அவன் நடப்பதால், அழுக்காறு,

1. The administration of justice is the modern and civilised substitute for the primitive practice of private vengence and violent self-help. — Salmond.

2. In the beginning, a man redressed his wrongs and avenge himself upon his enemies by his own hand, aided, if need be, by the hands of his friends and kinsmen; but at the present day he is defended by the sword of the state. — Salmond.

பேராசை, கோபம் முதலிய தீக்குணங்கள் அவனை ஆட்டி வைப்ப தால், சட்டத்தையும் நியாயத்தையும் அரசு தனது வலிமை கொண்டு நிலைநாட்டுவது அவசியமாகிறது.

"குற்றம் செய்யாதவர்கள் உலகில் இருப்பது அருமை. எல்லா உயிர்களும் தண்டனைக்கு அஞ்சியே ஒழுகுகின்றன. தண்டமுறையின் பயனாகவே வாழ்வதற்கு உகந்த இடமாக உலகு அமைகிறது. தண்டனையினாலேயே உலகம் திருத்தப் படவேண்டி இருக்கிறது."

மனு: அத். 7 : விதி 22.

இந்த வகையில், அரசின் ஆற்றலின் காரணமாகவே சமூகத்தில் அமைதியும், ஒழுங்கும், பண்பாடும், நிலைபெறமுடிகிறது.

இவ்வாறு, அரசு, தனது ஆற்றல் (வலிமை) கொண்டு, மக்களின் உரிமைகளை நீதிமன்றங்கள் மூலம் பாதுகாத்து நியாயம் அளிப்பதையே நீதி வழங்குதல்—முறை செய்தல்—(Administration of Justice) என்று கூறுகிறோம்.[1]

உரிமை வழக்குகளும் (Civil Cases), குற்ற வழக்குகளும் (Criminal Cases)

மக்கள் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டுமெனில், அந் நலன்களைப் பொறுத்து அவர்களுக்கு உரிமைகள் இருக்கவேண் டும். அந்த உரிமைகளை அடிப்படையாகக் கொண்டுதான், மக்களின் வாழ்வு நிறைவுபெற்று விளங்க முடியும். ஒருவன் தன்து சொத்தை நுகர்ந்து அதனால் நலம்பெறவேண்டும் எனில், அவனுக்குச் சொத்துரிமை இருக்கவேண்டும். அவ்வாறே, தொழில் நடததுவதற்கோ, பிறருடன் செய்துகொண்ட ஒப்பந் தத்தை ஈடேற்றுவதற்கோ அவனுக்கு உரிமைகள் இருக்க வேண்டும். இந்த உரிமைகளை எல்லாம் அரசாங்கம் வழங்கிப் பாதுகாக்கின்றது.

மக்கள் தங்களின் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, நீதி மன்றங்களில் வழக்காடுகின்றனர். அரசாங்கம் நடுநாயக மாக விளங்கி, மக்களுக்குள் ஏற்படும் இந்த உரிமை வழக்குகளைத் தீர்த்துவைத்து நியாயம் வழங்குகிறது. எனது நிலத்தை இன் னொருவன் கைப்பற்றிக் கொண்டால், அந்த ஆக்கிரமிப்பை நீதி மன்றத்தின் மூலம் அகற்றும் அதிகாரம் எனக்கு இருக்கிறது. பிறரிடமிருந்து எனக்கு வரவேண்டிய கடனை நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து திரும்பப் பெறுகிறேன்.

1. The administration of justice has been already defined as the maintenance of right within a political community by means of the physical force of the state. — Salmond.

இவ்வாறு, அரசு, நீதிமன்றங்கள் மூலம் மக்களின் உரிமைகளை நிலைநாட்டி நீதி செலுத்துகிறது. இதை ஆங்கிலத்தில் "Civil Justice - சிவில் ஜஸ்டிஸ்", அதாவது உரிமைகளைப் பாதுகாக்க நியாயம் வழங்குதல் என்று கூறுவார்கள்.

முன்னரே சொல்லியபடி, மக்கள் ஒருவருக்கெதிராக ஒருவர் தங்கள் சொந்த வலிமையைப் பயன்படுத்தி வன்முறைச் செயலில் இறங்கிவிட்டால், நாட்டில் ஒழுங்கோ அமைதியோ நிலவ முடியாது. இது, அரசின் அடிப்படையையே நிலைகுலையச் செய்துவிடும். சமூகத்தில் அமைதியை நிலைநாட்டுவது அரசின் தலையாய கடமையாகும். ஆகவே, அமைதியைக் கெடுக்கும் செயல்களைத் தண்டிக்கத் தகுந்த குற்றங்களாக அரசு கருதுகின்றது. கொலை செய்யப்பட்டவர் தனிநபராக இருந்தாலும், கொலைச் செயல் சமுதாயத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் செயலாக, சமூகத்திற்கு விரோதமான குற்றமாகவே கருதப்படுகிறது.

சமூகத்தின் ஒப்பற்ற உரிமை அமைதியான வாழ்வாகும். அந்த அமைதிக்கு ஊறு விளைவிப்போரை, சமூக விரோதி எனக் கருதி, அரசாங்கமே வாதியாக இருந்து, குற்றங்கள் புரிந்தவர்களுக்கு, நீதி மன்றங்கள் மூலம் தண்டனை அளிக்கிறது.

இவ்வாறு குற்றங்கள் செய்தவர்களைத் தண்டித்து நீதி செலுத்துவதை ஆங்கிலத்தில் "Criminal Justice - கிரிமினல் ஜஸ்டிஸ்" என்று கூறுகிறோம்.

இந்த வகையில், அரசு நீதி வழங்குவதை, உரிமை வழக்கு முறை, குற்ற வழக்கு முறை என்று இரு வகையாகப் பிரிக்கலாம். உரிமை வழக்குகளில் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன; குற்ற வழக்குகளில் செய்த குற்றத்திற்கான தண்டனை அளிக்கப்படுகிறது. இரண்டு முறைகளிலும் வாதி, எதிர்வாதி என்று இருவர் உண்டு. வாதியின் உரிமைகளை நிலை நாட்டுவது ஒருமுறை; செய்த குற்றத்திற்காக எதிர்வாதியை ஒறுப்பது மற்றொரு முறை. உரிமைகளைப் பாதுகாக்கும் அடிப்படைக் கொள்கையிலேயே இரு வகைப்பட்ட முறை செய்தலும் இயங்குகின்றன: ஒன்றில், வாதியின் உரிமையைப் பறிக்காமல் எதிர்வாதி தடுக்கப்படுகிறார்; மற்றொன்றில் பிறர் உரிமையைப் பறித்த குற்றத்திற்காக எதிர்வாதி தண்டிக்கப்படுகிறார்.[1]

1. 'In civil justice it amounts to a claim of right; in criminal justice it amounts merely to an accusation of wrong. Civil justice is concerned primarily with the plaintiff and his rights; criminal justice with the defendant and his offences. — Salmond.

உரிமை வழக்கைத் தொடரும் வாதி நீதி மன்றத்திலே கோருவது, தனது உரிமை பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதே; எதிர்வாதி தனது கடமையை நிறைவேற்றும்படி செய்யவேண்டும் என்பதே. "என்னுடைய நிலத்தில் எதிர்வாதி நுழைய ஆயத்தப்படுகிருர், ஆதலால், அவர் தடுக்கப்பட வேண்டும்;" "என்னிடமிருந்து வாங்கிய கடனை எதிர்வாதி திரும்பத் தரவில்லை; அதை அவர் தரும்படி செய்யவேண்டும்;": "எனக்கு உரித்தான சொத்தை எதிர்வாதி வைத்திருக்கிருர். அவர் அதை என்னிடம் ஒப்புவிக்கும்படி செய்யவேண்டும்", இதுபோன்ற வேண்டுகோள்களோடுதான் உரிமை வழக்குகள் தொடரப்படுகின்றன. குற்ற வழக்குகளில் வாதியாக உள்ளவர் தனது உரிமை எதையும் கோரவில்லை. அவர் எதிர்வாதியின்மேல் குற்றம் சாட்டுகிருர். குற்றம் மெய்யெனத் தெளியப்பட்டால், குற்றவாளிக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது. வாதிக்கு அவர் கோரும் உரிமை அளிக்கப்பட வேண்டுமா என்பது பற்றி ஆராய்வது **உரிமை வழக்கு**. குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்தாரா என்பதை முடிவு செய்வது **குற்ற வழக்கு**. இந்த வகையில், உரிமை வழக்குகளில் வாதிக்கும், குற்ற வழக்குகளில் எதிர்வாதிக்கும் ஏற்ற முறையில் நியாயம் அளிக்கப்படுகிறது.

"சிவில்" வழக்குகளை வாதியும் எதிர்வாதியும் ஒத்துடன் பட்டுத் தீர்த்துக் கொள்ளலாம். இதற்கு நீதிமன்றத்தின் அனுமதி தேவையில்லை. ஆனல், குற்ற (கிரிமினல்) வழக்குகளில், பெரும் பாலும், அரசாங்கமே வாதியாக இருப்பதால், அரசாங்கத்தினர் தான் நீதிமன்றத்தின் அனுமதியுடன் வழக்குகளை நிறுத்திக் கொள்ளமுடியும்.

இதுவே உரிமை வழக்கு, குற்ற வழக்கு என்ற இருதிறப்பட்ட நீதி முறைகளுக்கும் உள்ள வேறுபாடாகும்.

நீதி முறையின் நீர்மை

அரசு எல்லோருக்கும் பொதுவானது. மக்கள் அனைவரின் நலத்தையும் போற்றிக் காத்து நிற்பது. மக்களிடையே அது வேற்றுமை பாராட்டுவது இல்லை. ஆதலால், அரசின் பிரதிநிதி களாக நியாயம் வழங்கும் நீதி மன்ற நடுவர்கள், தங்கள் கடமை யைச் செய்யும்பொழுது, வழக்கில் சம்பந்தப்பட்டவர்களிடம் தாட்சண்யம் (கண்ணோட்டம்) காட்டாமல், நடுவு நிலைவிட்டு அணுவளவேனும் அகலாமல் அமைந்து ஒழுகல்வேண்டும். வழக்கில் உள்ள சிக்கல்களை நுணுகி ஆராய்ந்து பார்க்கவேண்டும். மேலும், இன்னமுறையில் வழக்கைத் தீர்க்கவேண்டுமென நன்கு சிந்தித்துத் தேர்ந்து தீர்ப்புக்கூற வேண்டும்.

மதி நுட்பம், வழக்கில் சம்பந்தப்பட்டவர் மீது கண்ணோட்டம் இன்மை, நடுவு நிலைமை, பழக்கமுதிர்ச்சியால் தேர்ந்து தீர்ப்புச் செய்யும் திறன், இவை அனைத்தும் ஒருங்கே நீதிபதிகளிடம் அமைந்தால்தான் முறை செய்தல் செப்பமுற விளங்கும்.

இவ்வளவு சிறப்புடன் நீதி செலுத்துவது அரசின் தலையாய கடன் என்பது நம் நாட்டில் பண்டைக்காலம் தொட்டு வழங்கி வரும் கொள்கையாகும். தலைப்பிற் காணும் குறளின் கருத்துப்படி, முறைசெய்து குடிகளைக் காக்கும் மன்னனை, கடவுளுக்கு ஒப்பாகக் கருதிப் போற்றினர் மக்கள். நீதி வழங்குவதின் நீர்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் வலியுறுத்திக் கூறியுள்ளார். முறை செய்தல் என்பது ஒருபாற்கோடாது செவ்விய கோல் போன்றதனால் அது "செங்கோல்" எனப் பட்டது. செங்கோன்மை அத்தியாயத்தில் முதல் குறளிலேயே முறை செய்தலின் இலக்கணம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை." —குறள். 541.

குறிப்பு :- 1. *உரையாசிரியர் பரிமேலழகர் குற்ற வழக்குகளுக்கு, மட்டும், குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கும் முறைக்கு மாத்திரம், பொருந்தும் வகையில் இந்தக் குறளுக்குப் பொருளை அருளியிருக் கின்றார். "ஓர்ந்து" என்பதற்கு, "தன் கீழ் வாழ்வார் குற்றம் செய்தால் அக் குற்றத்தை நாடி" என்றும், "தேர்ந்து" என்பதற்கு, "அக் குற் றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து", என்றும் பொருள் கண்டிருக்கின்றார். "ஓர்ந்து" என்பது "வழக்கை ஆராய்ந்து" என்ற பொருளையும், "தேர்ந்து" என்ற சொல், "செய்யத்தக்க தீர்ப் பைத் தேர்ந்து", என்ற பொருளையுமே உணர்த்துவதாகும். அத்தியாயத் தின் ஆரம்பத்திலேயே "செங்கோன்மை" என்பது "தண்டம்" என்ப தாகும் என்று ஆசிரியர் பரிமேலழகர் கொண்டதாலேயே, இந்தக் குறளின் பொருளையும் தண்டமுறைக்கே ஏற்ற வகையில் கூறத்தலைப்பட்டார். உரைப்பாயிரத்தில், உரிமை வழக்குகளை "வழக்கு" என்றும், குற்ற வழக்குகளைத் "தண்டம்" என்றும் பரிமேலழகர் குறிப்பிட்டிருக்கிறார். செங்கோன்மை (முறை செய்தல்) என்பது, தண்டம் மட்டுமன்று, மக் களுக்குள் எழுகின்ற வழக்குகளைத் தீர்ப்பதுமாகும். ஆகவே, உரையா சிரியர் பரிமேலழகர் "செங்கோன்மை" என்பது தண்டத்தை மட்டும் குறிக்கிறது எனக்கொள்ளாமல், "தண்டம்" "வழக்கு" என்ற இரண் டிற்கும் பொதுவான "முறை செய்தல்" என்பதையே குறிக்கும் எனக் கொண்டிருந்தால் பொருத்தமுடையதாகும். இந்தக் குறளில் வரும் "முறை" என்ற சொல் இருவகை வழக்குகளுக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை. இந்த வகையிலேயேதான், திருக்குறள் உரையாசிரியர்களான*

தன் முன் வந்த வழக்கை நன்கு ஆராய்ந்து, யாவர்மாட்டும் கண்ணோட்டம் செய்யாமல் (ஒருபுறச் சார்பு காட்டாமல்), நடுவு நிலைமை பொருந்தி, செய்யத்தக்கதைத் தேர்ந்து, தீர்ப்புச் செய்வதே முறை செய்தல் என்பதாகும். இதுவே இந்தக் குறளின் பொருள்.

இன்றைய சட்டவியலில் நீதிமுறைக்குக் கூறப்படும் இலக்கணங்களனைத்தையும் இந்தக் குறளில் காண்கிறோம். நீதி முறை, உரிமை வழக்கு, குற்ற வழக்கு இரண்டிற்கும் பொதுவானதாகும், இருவகை வழக்குகளுக்கும் பொதுவான நீதி முறைக்குப் பொருந்தும் இலக்கணத்தையே இந்தக் குறளில் காண்கிறோம்[1]. ஓர்ந்து, கண்ணோடாது, இறைபுரிந்து, தேர்ந்து செய்வதே "முறை" யாகும் என்று கூறியிருப்பது சிந்தித்துத் திளைக்கத்தக்கது.

பரிதியார், காலிங்கர் இருவரும் இக்குறளிற்கு உரை கண்டிருக்கின்றனர். அறிஞர் வ. வே. சு. ஐயரும் இக்குறளுக்குக் கீழ்க்கண்டவாறு ஆங்கிலத்தில் பொருள் கூறியிருக்கிறார் :-

Deliberate well and lean not to either side; be impartial. and consult with the men of law: that is the way to administer justice.

7. சட்டத்தை ஒட்டிய நீதி முறை
(Justice According to Law)

"அரசன் விழிப்பு மிக்க மனத்தையுடையனுய், அற நூல்களைத் தழுவி, அறநூல் முறையை மேற்கொண்டு, அவ்வழியே வழக்குகளை ஆராய்ந்து முறை செயல் வேண்டும்."

[சுக்கிர நீதி.]

நீதி வழங்குவதற்குச் சட்டமே வழிகாட்டியாக இருக்கிறது. சட்டத்தின் அடிப்படையிலேயே நீதி வழங்கப்படுகிறது. அற நெறியை அமைப்பதே முறை செயல் ஆகும். ஆகவே, அறநெறியை ஒட்டிய சட்டம் முறை செய்வதற்கு இன்றியமையாத கருவியாக அமைகிறது.

ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கு முன் அவ்வழக்கிலுள்ள சிக்கல் களுக்கு எந்தெந்தச் சட்ட விதிகள் சம்பந்தப்பட்டவை எனக் கண்டு, அவைகளுக்குத் தகுந்தவாறே, அந்தச் சட்ட விதிகளை நடைமுறைப்படுத்தும் வகையிலேயே, நியாயம் வழங்கப் படுகிறது. சம்பந்தப்பட்ட சட்ட விதிகளைப் புறக்கணித்து விட்டு, அவைக ளுக்கு மாருக, ஒரு வழக்கில் தீர்ப்புச் சொல்வது கூடாது. சட்டங் கள் என்ற கால்வாய்களின் வழியேதான் நீதி என்ற நீர் பாய வேண்டும். இந்த முறையில் நீதி வழங்குவதுதான் நீதி மன்ற நடுவர்களின் கடமை ஆகும். நீதிமுறையின் செப்பமும், சிறப்பும் அது சட்டத்தின் அடிப்படையில் இயங்குவதுதான். ஆதலால், சட்டத்தின் சார்புள்ள நியாயம் (Justice According to Law) நீதிமன்றங்களில் அளிக்கப்படுகிறது.

சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்குவதில் உள்ள நலன் களையும், குறைகளையும் நாம் இனி ஆராய்வோம்.

நீதி மன்றத் தீர்ப்புக்கள் சரியானவையாகவும், நேர்மையான வையாகவும் இருந்தால் மட்டும் போதாது; நிச்சயத்தன்மை (Certainty) உடையதாகவும் இருக்கவேண்டும். இன்ன சூழ்நிலையில் இன்ன முறையில்தான் தீர்ப்பு இருக்கும் என்று மக்கள் தெரிந்து கொள்ளும் நிலை ஏற்படவேண்டும். இல்லாவிடில், நியாயத்தைப் பொறுத்து மக்களுக்கு உறுதிப்பாடில்லாத, நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்டு விடும். நீதி மன்றம் தேடிச் செல்வோர் எதிர் பார்க்கும் நியாயம் தேர்ந்து துணியமுடியாத பொருளாகி விட்டால் அது நேர்மையான நீதி முறை ஆகாது. இயற்றப்பட்ட சட்டங்களையும், ஏற்கனவே வகுக்கப்பட்ட சட்ட விதிகளையும் மக்கள் அறிவார்கள். அவர்கள் அவைகளை நன்கு அறிய வாய்ப்பும் உண்டு. ஆதலால், ஒரு வழக்கில் சட்டச்சார்புள்ள தீர்ப்பு இப்படித்தான் இருக்கும் என்பதை, அறிந்த மக்கள் தெரிந்துகொள்ள வழியுண்டு. இவ்

வாறு, சட்டத்தை ஒட்டிய நியாயத்தீர்ப்புக்கள் பெரும்பாலும் உறுதிப்பாடுடையதாக இருக்கின்றன. இந்த உறுதிப்பாட்டின் அடிப்படையில் தான், மக்களுக்கு நீதிமுறையிலுள்ள அசையாத நம்பிக்கை அமைய முடியும்.[1]

நீதி மன்றத் தீர்ப்புக்கள் ஒரே சீருடையதாக, (Uniformity) தன்மையில் மாறுதல் இல்லாததாக, இருக்கவேண்டும். எல்லோருக்கும் ஒரே முறையில் நியாயம் வழங்குவதே நேர்மையாகும். ஒரு வழக்கில், ஒரு நீதிபதியால் தீர்ப்புக் கூறப்படுகிறது; அதே போன்ற வேறொரு வழக்கில் மற்றொரு நீதிபதியால் கூறப்படும் தீர்ப்பும் முன்போன்று அமைவதே இயல்பு. இந்த மாறுத தன்மையையே தீர்ப்புக்களின் ஒரே சீருடைய தன்மை (Uniformity) எனக் கூறுகிறோம். முறை செய்தலின் முறை, தீர்ப்புக்களில் உள்ள இந்தச் சீர்மையே ஆகும்.

சட்டத்திலே குறைகள் இருக்கலாம்; ஆனால், அது மாறுதலின்றியும், யாவரும் அறிந்து கொள்ளும் முறையிலும் இருக்கிறது. அச்சட்டத்தின் வழிச்செல்லும் தீர்ப்புக்களும் அவ்வாறே அமைகின்றன. எல்லோருக்கும் ஒரே தன்மையான நியாயம் வழங்குவதற்குச் சட்டம் உதவியாக இருக்கிறது. சட்டம் வகுக்கும் வரம்பிற்குள் இயங்கும் நியாயம், வரையறைக்கு உட்பட்டு, தன்மையில் மாறுத சீர்மையுடன் விளங்குகிறது. இவ்வாறு, சட்டத்தை ஒட்டிய தீர்ப்புக்களிலே மாறுத தன்மை அமைந்திருக்கிறது.

நீதி வழங்கும் முறையில் விருப்பு வெறுப்பற்ற தன்மை, நடுவு நிலைமை, மிகவும் முக்கியமானதாகும்.

> "சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்தொருபால்
> கோடாமை சான்றோர்க் கணி." (குறள். 118.)

நியாயமன்ற நடுவரின் "நெஞ்சத்துக் கோடாமை" யிலே மக்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். "நடு ஓரீஇ அல்ல" செய்வதற்கு வாய்ப்பே இல்லாமல் இருந்தால் தான் நீதிப் பொறுப்பு செப்ப முடையதாக இருக்கும்.

சட்டம் விருப்பு வெறுப்பற்றது. குறிப்பிட்ட ஒருவருக்கென்று இயற்றப்படாமல் மக்கள் யாவருக்கும் பொதுவாக அமைவது. குடிமக்களுக்குள் அது வேற்றுமை பாராட்டுவதில்லை. ஆகவே, அச்சட்டத்தின் அடியொற்றி வழங்கப்படும் நியாயம் விருப்புவெறுப்பு

1. It is often more important that a rule should be definite, certain, known, and permanent, than that it should be ideally just. — Salmond.

அற்றதாக அமைகிறது.[1] சட்டம் என்ற வகுக்கப்பட்ட பாதையி லிருந்து நீதிபதி ஒரு சிறிது விலகினாலும் அது மக்களுக்குத் தெரிந்து விடுகிறது. சட்டத்தைப் புறக்கணித்து விட்டும், சட்டத் தின் உதவியின்றியும் நியாயம் வழங்குவதானால் இந்தக் கண் காணிப்பு இல்லாமல் போய் விடுகிறது.[2] நீதிபதிகளின் சொந்த விருப்பப்படி, எந்தச் சட்டத்திற்கும் கட்டுப்படாமல், நீதி வழங்க லாம் என்று இருந்தால் நீதிப் பொறுப்பு சீர்கேடு அடைந்து விடலாம். ஆதலால்தான் சட்டத்தின் அடிப்படையிலே நியாயம் வழங்கப்பட வேண்டும், நீதிப்பொறுப்பு இயங்க வேண்டும், என்ற விதி அரசியல் சுதந்திர வாழ்வின் மூலாதாரக் கொள்கையாகக் கருதப்படுகிறது.

சட்டம் வகுக்கும் விதிகள் மக்கள் வாழ்விற்கு வழிகாட்டி நிற்பதோடு மட்டுமின்றி, நியாயம் வழங்கும் நீதிமன்ற நடுவர்கள் பின்பற்ற வேண்டிய நெறியாகவும் அமைகின்றன. இவ்வாறு இல்லையெனில் நீதிஎன்ற பெயரால் செய்யப்படும் காரியங்கள், பல திறப்பட்ட நீதிபதிகளின் கருத்துக்களுக் கேற்ப மாறிக் கொண்டிருக்கும் வரைமுறையற்ற செயல்களாகி விடும். இது, மக்களின் சுதந்திரத்திற்குச் சட்டம் அளிக்கும் பாதுகாப்பு நாள டைவில் மங்கி மறைந்து விட ஏதுவாகும். இக்கருத்தை உணர்த் தவே "சட்டத்திற்கு அடிமை பூண்டு, நமது சுதந்திரத்தைக் காத்துக் கொள்ளுகிறோம்" என்று ஸிஸரோ என்ற அறிஞர் கூறுகிறார். [We are the slaves of the law that we may be free - Cicero]

சட்டம் என்பது சமூகத்தின் கூட்டு அனுபவ ஞானத்தில் பிறந்ததாகும். மக்களின் உடன்பாட்டைப் பெற்று இயற்றப் பட்ட சட்டங்களும் [Enacted Laws], தொன்று தொட்டு வரும் வழக்க நெறியும் [Custom], நீதிபதிகளின் புரை தீர்ந்த அனுபவ ஞானத்தில் பிறந்த தீர்ப்பு முறைமைகளும் [Precedents], கூடிய கோட்பாடுகளின் தொகுப்பே சட்டம் ஆகின்றது.

நியாயம் வழங்கும் நீதிபதிகள் கல்வியிற் சிறந்த சான்றோர் களாகவும், நடுவு நிலையுடன் மெய்ப்பொருள் காணும் கூரிய அறிவுடையவர்களாகவும் இருக்கலாம். அவர்களது சொந்த

1. Wise or foolish, it (law) is the same for all, and to it, therefore, men have ever been willing to submit their quarrels, knowing, as Hooker says that "the law doth speak with all indifference, that the law has no side respect to their persons." — Salmond.

2. Given a definite rule of law, a departure from it by a hair's breadth is visible to all men .... — Salmond.

அறிவையும் அனுபவத்தையும் மட்டும் கொண்டு ஒரு வழக்கில் நியாயம் வழங்கவும் முடியும். இருப்பினும், சமுதாயத்தின் கூட்டுப் பழக்க ஞானத்தில் எழுந்த சட்டம், தனிப்பட்ட அறிஞர்களின் ஞானத்தைவிடச் சிறந்ததாகவே இருக்கின்றது. ஒரு சில சட்ட விதிகளில் குறைகள் இருந்தாலும், பொதுவாகச் சட்டத்தில் அடங்கும் விதி முறைகள் நீதிபதிகளுக்கு வழிகாட்டும் முறையில் தகுதி பெற்றிருக்கின்றன.[1]

"சட்டத்தை விட நான் அதிக ஞானம் உடையவன்" என்று எவரும் சொல்ல முடியாது; சட்டத்தின் உயர் ஞானத்தை முற்றிலும் உணர்ந்தவர் எவரும் அவ்வாறு கருதுவது இல்லை. சட்டத்தில் அடங்கியுள்ள ஞானம் தனது அறிவைவிடப் பெரியது, சிறந்தது, என்று உணர்வதே சட்ட ஞானத்தையும், மெய்யுணர்வையும், பெற முயல்வோரின் முதல் பாடமும், மெய்யுணர்வு பெற்றோரின் இறுதி நிலையும் ஆகும்.[2]

ஆதலால், சட்டத்தின் அடியொற்றி நீதி வழங்குவதே பெற்றிமையுற்ற நீதி முறையாகும்.

சட்டத்தை ஒட்டிய நீதி முறையில் உள்ள நலன்களைக் கண்டோம். குறைவில்லாத பொருளே இவ்வுலகில் இருப்பது இல்லை. இந்த வகையில், பல கேடுகளுக்கு மாற்றாக அமையும் சட்டத்தை ஒட்டிய நீதி முறையிலும் சில குறைபாடுகள் உண்டு.[3]

• மக்கள் அனைவருக்கும் பொதுவாக நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளையும் விதிகளையும் கொண்டது சட்டம். அது, தனிப்பட்ட நபருக்கு என்றோ ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை வைத்தோ வகுக்கப்பட்டதல்ல. ஒரு சில வழக்குகளில் தோன்றும் சிக்கல்களுக்கு இன்றுள்ள சட்ட விதிகளின்படி வழிகாணமுடியாத நிலை ஏற்படலாம். எல்லாவித வழக்குகளுக்கும் இயைந்தபடி நீதி வழங்க வகைசெய்யும் சட்ட விதிகள் அமைவது இயலாததாகும். ஆதலால், சட்டத்தின் ஒரு பொதுவிதி, ஒரு குறிப்பிட்ட வழக்கிற்குப் பொருத்தமற்றதாகவும், நியாய உணர்வுக்கு

1. The law is not always wise, but on the whole, and in the long run, it is wiser than those who administer it. —Salmond.

2. (1) To seek to be wiser than the laws is the very thing which by good laws forbidden, — Aristotle.

(2) The wisdom of the law is wiser than any man's wisdom. — Lord Coke.

3. The law is without doubt a remedy for greater evils, yet it brings with it evils of its own. — Salmond.

உகந்ததாக இல்லாமலும் போகலாம். இருப்பினும், சட்டத்தின் பொதுவிதியிலிருந்து அந்த வழக்கில் உள்ளவர்களுக்கு விலக்களிக்க முடியாது; சட்டத்தின் பொதுவிதியின் படியேதான் அந்த வழக்கிலும் தீர்ப்பளிக்கவேண்டியிருக்கிறது. இப்படியாக, புதிது புதிதான சூழ்நிலைகளுக்கு ஏற்ப இயைந்த முறையில் அமைந்த நியாயம், சட்டத்தை ஒட்டிய நீதி முறையில், சில வேளைகளில் கிடைக்காமல் போகலாம். மாறுபட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப தகுந்த முறையில் அமையும் தன்மையில்லாமை என்ற குறை (Rigidity) சட்டத்திற்கும் அதை ஒட்டிய நீதி முறைக்கும் உண்டு.[1] ஆனால், இது தவிர்க்க முடியாதது. பொது விதியை நடைமுறைப்படுத்தும் பொழுது, அந்த விதியிலிருந்து விலக்குக் குத் தகுதியுடையவர்கள் இருக்கலாம். அவர்களுக்கெல்லாம் விதி விலக்கு அளிப்பது என்று ஏற்பட்டால், விதிவிலக்கே விதியாக மாறிவிடலாம்; பொதுவிதியின் தன்மை அதனால் அழிந்து போகலாம். ஆதலால், விதிவிலக்குக்குத் தகுதி உடையோர்களும் பொதுவிதியின்படியே ஒழுக வேண்டியவர் ஆகின்றனர். இவ்வாறு, பொதுவிதியின் புனிதத் தன்மையைக் காப்பாற்றுவதற்காக ஒரு சிலருக்கு நேரும் இடையூறுகள் தவிர்க்கமுடியாதவை ஆகின்றன.

சட்டத்தை ஒட்டிய நீதி முறையிலுள்ள மற்றொரு குறை, அது பழமையைப்பற்றி நிற்கும் தன்மை (Conservatism). மக்கள் சமுதாயம் வளர்கிறது. காலப்போக்கிலே மக்களின் லட்சியங்களும் கொள்கைகளும் முன்னேற்றப் பாதை நோக்கி வளர்கின்றன. இன்று நாம் உண்மை என்று நினைக்கும் கொள்கைகள் நாளை பொய்யாகி விடுகின்றன. நாம் எதை மெய்ஞ்ஞானம் என்று எண்ணுகிறோமோ, அதையே பிறகு அஞ்ஞானம் என்று நாம் காண்கிறோம், நமது அறிவின் வளர்ச்சியால். ஆனால், மக்களின் முன்னேற்றக் கொள்கைகளுக்குத் தக்கவாறு சட்டம் உடனுக்குடன் மாறுவது இல்லை.[2] அப்படி மாற்றுவதும் இயலாது.

1. The result of this inflexibility is that, however carefully and cunningly a legal rule may be framed, there will in all probability be some special instances in which it will work hardship and injustice, and prove a source of error instead of a guide to truth. — Salmond.

2. The vice of conservatism is its (law's) failure to conform itself to those changes in circumstances and in men's views of truth and justice which are inevitably brought about by the lapse of time. — Salmond.

சட்டம் இயற்றும் சாதனங்கள் எவ்வளவு நன்கு தொழிற்பட்டாலும், சட்டம் மக்களின் இலட்சியக்கருத்துக்களுக்குப் பின் தங்கியே இருக்கிறது. சிலவேளைகளில், மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாகக்கூடச் சட்டம் அமைந்துவிடுவது உண்டு. ஆனால், மக்கள் விழிப்புடன் இருந்தால் தங்கள் கொள்கைகளுக்குத் தகுந்தாற்போல், ஏற்ற வகையில், சட்டத்தை மாற்றிக் கொள்வது இயலாத காரியமல்ல.

சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான விதிமுறைகள் உண்டு. விதிமுறைகள் (Procedure) என்ற பெயரால் வகுக்கப்படும் வழிகளைப் பின்பற்றியேதான் சட்டத்தின்படி நியாயம் பெற விரும்புவோர் செல்லவேண்டியவராகின்றனர். அந்த வழிகளைப் புறக்கணித்துவிடில் சட்டத்தின் உதவி அவர்களுக்கு இல்லாமற் போகிறது. விதிமுறைகளைப் பேணி அதன்படி செல்பவர்களுக்குத் தான் சட்டத்தின் உதவி கிட்டுகின்றது. விதிமுறைகளுக்கு, இவ்வாறு அதிக முக்கியத்துவம் இருப்பதால் சில சமயங்களில் நீதி நிலை நிறுத்தப்படாமல் போகலாம். நீதியைவிட விதிமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மை (Formalism) சட்டத்திலுள்ள மற்றொரு குறைபாடெனக் கருதப்படுகிறது.

சமுதாயத்தின் கூட்டுக்கொள்கைகளும், அறக் கோட்பாடுகளும் பரிணமிக்கும் விதிகளைக் கொண்டதே சட்டம். அச்சட்டத்தின் வழியில், அதன் அடிப்படையில், நீதி வழங்கும் முறை அமைவதே, நீதி நிர்வாகத்தில் மக்களுக்கு நம்பிக்கையையும், ஒருபுறச் சார்பற்ற நியாயம் கிடைக்குமென்ற உறுதியையும் அளிக்க ஏதுவாகிறது[1]. சட்டத்தை ஒட்டிய நீதி முறையே நாகரிகம் அடைந்துள்ள எல்லா நாடுகளிலும் இயங்கி வருகிறது.

---

1. In the case of the civil law, only so far as justice is transformed into law, and the love of justice into the spirit of law abidingness, will the influence of the judicature rise to an efficient level, and the purpose of civil government be adequately fulfilled.
—Salmond.

8. சட்டம் இயற்றல் (Legislation)

ஆதிகாலத்தில், முறைசெய்து மக்களைக் காப்பாற்றும் மன்னவன், அறநூல்களின் அடிப்படையில் நீதி வழங்கினன். அரசனின் நீதி முறைக்கு அற நூல்களே ஆதாரமாக அன்று இருந்தன. மதக் கோட்பாடுகளும், சம்பிரதாயங்களும், தொன்மையான வழக்க நெறியும் அன்றையச் சட்டமாக இருந்தன.

மத குருக்களே மன்னர்களின் சட்ட அறிவுரையாளர்களாக அக்காலத்தில் இருந்தனர். விதிக்கப்பட்ட செயல்கள் புண்ணியத்தை அளிப்பதாயும், விலக்கப்பட்ட வினைகள் பாவத்தைச் சேர்ப்பதாகவும் கருதப்பட்டன. பாவங்களுக்குக் கழுவாயாகவே தண்டனையை ஒருவர் அனுபவிக்கவேண்டும் என்ற கொள்கை அன்று நிலவியது. இன்று இருப்பது போன்ற சட்டங்கள் அன்று தோன்றவில்லை. அறநெறிகளை வகுப்பது அரசின் தொழிலல்ல. அவற்றை நடைமுறைப்படுத்துவதே அரசின் கடனாக இருந்தது[1]. தெய்வத் தன்மையுடைய "நிறைமொழி மாந்தர்"களால் அற நூல்கள் அருளப்பட்டதாக அன்று கருதினர்[2]. அவ்வாறு இயற்றப்பட்ட அற நூல்களைப் பாதுகாத்து, அறநெறியை அமைப்பதே அன்றைய அரசன் செங்கோல் ஓச்சும் செப்பமாக அமைந்தது.

> "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல்." —குறள்-543.

ஆனல், அறக் கொள்கைகளை இயற்றுவதற்கு மன்னனுக்கும் மக்களுக்கும் அதிகாரமோ, தகுதியோ அக்காலத்தில் இருக்கவில்லை. இவ்வாறு, தெய்வத்தன்மை பொருந்தியவை, தெய்வங்களால் விதிக்கப்பட்டவை என்று மக்கள் கருதிப் போற்றிய விதிகள் பழங் கால அரசுகள் பலவற்றில் ஆட்சி புரிந்தன.

சமுதாயம் முன்னேறியது. காலப்போக்கில் மக்களின் கருத்துக்கள் மாறத்தொடங்கின. மதத்தின் அடிப்படைக் கொள்கைகளை மக்கள் ஏற்றுக்கொண்டாலும் மதத்தின் பெயரால் தோன்றிய

1. Early law is conceived as *jus* (the principles of justice), rather than as *lex* (the will of the state). The function of the state in its earlier conception is to *enforce* the law, not to *make* it.

—Salmond,

2. It is well known that the earliest codes were the work. not of mortal men, but of the gods. — Salmond.

வழிமுறைப் பழக்கங்கள், வழக்கங்கள் முதலியவற்றை மக்கள் போற்றவில்லை. இருப்பினும், ஆதிகால நீதிக் கொள்கைகளே அவர்களை ஆண்டு வந்தன. ஆதலால், மக்களது வாழ்வின் வளர்ச்சி தடைப்பட்டது. மதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட விதிமுறைகள் மக்களது வாழ்க்கை முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக, தளைகளாக, இருந்தன. நாட்கள் பல சென்றபின், மனிதன் பழைய விதிமுறைகளை விலக்கி, மாறுதலடைந்த சமுதாயத்தின் எண்ணத்திற் கேற்பப் புதிய விதிமுறைகளைப் பின்பற்ற முயற்சி செய்தான். முன்னேற்றமடைந்த இலட்சியங்களுக்கேற்ப நெறிமுறைகளைத் தனக்கு மனிதன் வகுத்துக் கொள்ள ஆரம்பித்தான். அவ்வாறு வகுக்கப்பட்ட விதிகள் தன்னைக் கட்டுப்படுத்துவன என்று கருதி அவைகளை நியமங்களாகப் போற்றி வந்தான். வாழ்விற்கான நியமங்களைத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம் மெல்ல மெல்ல மக்களிடையே பரவி, நியமங்களை நிர்ணயிக்கும் பொறுப்பையும், அதிகாரத்தையும் மக்கள் ஏற்றுக்கொண்டனர். தங்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களைத் தாங்களே வகுத்துக் கொள்ளலாம் என்று துணிந்து, சட்டங்களை மக்கள் இயற்றத் தொடங்கிய செயல், சட்ட வளர்ச்சியில் மட்டுமின்றி மனித நாகரிக வளர்ச்சியிலும் மிக முக்கிய இடம் பெறுவதாகும்.

இத்தன்மையுடைய சட்ட விதிகளைச் சட்டசபையோ, அல்லது அதற்கான தனி அதிகாரம் பெற்றவர்களோ இயற்றுவது "சட்டம் இயற்றுதல்" (Legislation) எனப்படும்.[1]

இயற்றப்பட்ட சட்டம் (Enacted Law), இயற்றப்படாத சட்டம் (Unenacted Law) எனச் சட்டங்களை இருவகையாகப் பிரிப்பது உண்டு.

"சட்டம்" என்றால் நீதி வழங்குகையில் ஏற்றுக்கொள்ளப்படும் விதிமுறைகள் என முன்பு கண்டோம். சட்டசபைகளாலும், அல்லது தனி அதிகாரம் பெற்றவர்களாலும் இயற்றப்படும் சட்டங்களை மட்டுமின்றி, வேறு பல விதிமுறைகளையும் நீதி மன்றங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றன. உதாரணமாக, நீதி மன்றங்களின் முந்திய தீர்ப்புக்களில் காணும் கொள்கைகளும், பழைய வழக்க நெறியும், ஏற்கப்பட்டு அதன்படி நியாயம் வழங்கப்படுகிறது. இந்த முறையில் முன்தீர்ப்பு முறைமைகளும் (Precedents), வழக்க நெறி

1. Legislation is the making of law by the formal and express declaration of new rules by some authority in the body politic which is recognised by courts of law as adequate for that purpose. — Salmond.

யும் (Custom) நீதி மன்றங்கள் ஏற்றுக்கொள்ளும் விதிகளாகவே, அதாவது சட்ட விதிகளாகவே, இருக்கின்றன. ஆனல், இந்தச் சட்ட விதிகள் சட்டசபைகளால் இயற்றப்பட்டவை அல்ல. ஆதலால், இந்த விதிகளை "இயற்றப்படாத சட்டம்" (Unenacted Law) என்கிறேம். சட்டசபைகளும், தனி அதிகாரம் பெற்றவர்களும் இயற்றும் சட்டங்களை, "இயற்றப்பட்ட சட்டங்கள்" (Enacted Law) என்று கூறுகிறேம். "சட்டம்" என்ற சொல்லில் இந்த இருவகைச் சட்டங்களும் அடங்கி இருக்கின்றன.

9. இயற்றப்பட்ட சட்டங்களின் விளக்கம்
(Interpretation of Enacted Law)

அரசு சட்டசபைகளின் மூலமாகச் சட்டங்களை இயற்றுகிறது. இவைகள் "இயற்றப்பட்ட சட்டங்கள்" (Enacted Laws) என்று அழைக்கப்படுகின்றன என்று முன்பு கண்டோம். இச்சட்டங்களை விளக்குவது, அதாவது, இந்தச் சட்டங்களின் கருத்தறிந்து அதன்படி நீதி வழங்குவது, நீதிபதிகளின் உரிமையும் கடமையும் ஆகிறது.

சட்டத்தின் வாசகத்திலிருந்துதான், சட்டசபையின் கருத்தை —சட்டத்தின் கருத்தினை, நீதிபதி அறிய முடிகிறது. (இந்தப் பிரிவில் சட்டம் என்ற சொல் இயற்றப்பட்ட சட்டங்களை (Enacted Laws) மட்டும் குறிக்கிறது.) ஆதலால், சட்டங்களில் கையாளப் படும் வாசகம் தெளிவாகவும், சிக்கலற்றதாகவும் இருப்பது அவசியமாகும்.

சட்டசபையின் கருத்தை அடிப்படையாய்க் கொண்டுதான் சட்டத்தின் விளக்கம் அமையவேண்டும். ஆதலால், சட்டத்தை விளக்கும் பொழுது, சட்டசபையின் கருத்தை ஆராய்ந்து அறிவதே முதற் கடமையாகும்.[1] இதை அறிவதற்குச் சட்டத்தின் வாசகமே கருவியாக இருப்பதால், அந்த வாசகத்தின் இயல்பான பொருளைப் புறக்கணித்து விட்டுச் சட்டசபையின் கருத்தைக் காண முற்படுவது முறையாகாது. ஆதலால், சட்ட வாசகத்தை அடிப்படை யாகக் கொண்டே, அதன் இயல்பான, இலக்கணப் படியுள்ள பொருளே, சட்ட சபையின் கருத்தாகத் தீர்மானிக்கப் படுகிறது. இதுவே, சட்ட விளக்கத்தின் அடிப்படை விதியாகும்.[2]

சட்டத்தின் சொல்லாட்சி தெளிவாகவும், நிச்சயமான பொருளை உணர்த்துவதாகவும் அமைந்து விடில், அச்சட்டத்தை விளக்குவதற்கு அவசியம் இருப்பதில்லை. சில வேளைகளில், சட்டங்களின் சொல்லாட்சி இருபொருள் படும்படியாகவும், முன் னுக்குப் பின் முரணாகவும் அமைந்து விடுவதும் உண்டு. இப் பொழுது நீதிபதிகளின் கடமை என்ன?

1. The duty of the judicature is to discover and to act upon the true intention of the legislature—the *mens* or sententia legis. The essence of the law lies in its spirit, not in its letter.... —Salmond.

2. Judges are not at liberty to add to or to take from or modify the letter of the law......That is to say, in all ordinary cases grammatical interpretation is the sole form allowable.

—Salmond.

ஒரு சட்டத்தை இயற்றியவுடன் சட்டசபையின் பொறுப்புத் தீர்ந்து விடுகிறது. அச்சட்டத்திற்கான விளக்கத்தையோ, விரிவுரையையோ செய்யும் அதிகாரம் சட்டசபைக்குக் கிடையாது. சட்டமன்ற உறுப்பினரோ, அந்த உறுப்பினர்களின் பிரதிநிதியாக ஆட்சியை ஏற்று நடத்தும் அதிகாரத்தைப் பெற்ற அமைச்சரோ, அவர்களாலேயே இயற்றப்பட்ட சட்டத்தின் பொருள் இதுதான் என்று சொல்லும் அதிகாரம் அற்றவர்கள்! வேண்டுமானால், ஒரு சட்டத்திற்கான திருத்தங்கள் கொண்டு வந்து நிறைவேற்றலாம்; ஆனால் திருத்தமான விளக்கத்தை ஒரு சட்டத்திற்கு ஏற்றிச் செல்லும் உரிமை சட்டசபைக்கு இல்லை. சட்டத்தின் கருத்தறிந்து முடிக்கும், அதாவது சட்டப்படி நீதி வழங்கும் உரிமையும் பொறுப்பும் நீதிபதிகளுக்கே உண்டு. இந்த வகையில், சட்டத்தின் கருத்தறிந்து அதன்படி நீதி வழங்குவதே நீதிபதியின் கடமையாகிறது. இவ்வாறு, இயற்றப்பட்ட சட்டங்களின் உட்கருத்தை ஓர்ந்தறிந்து, அக் கருத்துப்படி வழக்குகளைத் தீர்த்து நியாயம் வழங்குவதையே "சட்ட விளக்கம்" (Interpretation of Statutes) என்று கூறுகிறோம்.

சட்ட வாசகத்தின் ஒரு பகுதியிலுள்ள சொற்களுக்கு நேரடியான பொருளை ஏற்று, சட்டவிளக்கம் செய்யும் பொழுது அந்த விளக்கம் சட்டத்தின் மற்றொரு பகுதிக்கு முரணாக (inconsistency) அமைந்து விடலாம். இந்நிலையில், சட்டத்தின் பொதுக் கருத்தை ஆராய்ந்து, அக்கருத்துக்கு ஒத்தவகையில் முரண்படும் பகுதிகளின் பொருளை விளக்கம் செய்தல் வேண்டும்.

குறிப்பிட்ட சட்டம் எதற்காக இயற்றப்பட்டது, எந்தக் குறைகளை அகற்றுவதற்கென, எந்த நோக்கத்தோடு, அது இயற்றப்பட்டது, என்பதை எல்லாம் ஆராய்ந்து சட்டசபையின் கருத்தை அறியவேண்டும். அந்தக் கருத்திற்கு இசைய, சட்டத்தின் பகுதிகள் அனைத்திற்கும், ஒன்றுக்கொன்று முரண்படாத வகையில் பொருள் தந்து சட்டத்திற்கு விளக்கம் கூறவேண்டும். ஒரு பகுதிக்கும் மற்றொருபகுதிக்கும் முரண்பாடு ஏதுமின்றிச் சட்டத்திற்கு விளக்கம் தருவதே முறையாகும். இவ்வாறு செய்கையில், சில சொற்றொடர்களின் இயல்பான பொருள் புறக்கணிக்கப்படலாம். இருப்பினும், சட்டத்தின் நோக்கத்திற்கு இசைய முரண்பாடற்ற முறையில் விளக்கம் தருவதே நெறியாகும்.[1]

1. A second logical object of stationary expression is inconsistency......In this case it is the duty of the judicature to ascertain in some other way the true *senteatia legis*, and to correct the letter of the law accordingly—Salmond.

சில சமயங்களில், சட்ட வாசகத்தின் பொருள் தெளிவாகவும், முரண்பாடு இன்றியும் அமைந்தும்கூட, சட்டம் முழுமை பெருமல் (incompleteness) இருக்கலாம். கூறப்படும் கருத்து முற்றுப் பெருமல், சட்டவாசகம் குறைவு பட்டதாக அமைந்து விடுவதும் உண்டு. அப்பொழுது, சட்டசபையின் கருத்திற்கேற்ப அந்தக் குறைபாட்டை நீக்கும் வகையில், சட்டத்திற்கான விளக்கத்தைத் தரவேண்டும். பொதுவாக, ஒரு சட்டத்திற்கு அளிக்கப்படும் விளக்கம், அச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் முறையில் அமைய வேண்டும்.

இவ்வாறு, இயற்றப்பட்ட சட்டத்தின் வாசகம் தெளிவற்றதாகவோ(ambiguity)முரண்பட்டதாகவோ, முழுமையற்றதாகவோ இருந்து விடில், அச்சட்டம் நிறைவேற்றப்பட்டதின் கருத்தை அறிந்து, அந்த நோக்கத்திற்கு ஏற்ப அந்த வாசகங்களின் பொருளைத் தெரிந்து நிச்சயித்து, அதன்படி நியாயம் வழங்குவதே முறைமை ஆகும்.[1] ஆனால், சட்டவாசகம் தெளிவாக இருக்கும் பொழுது, அந்த வாசகத்திற்கு எதிரிடையான கருத்தை ஏற்றி விளக்கம் கொடுப்பது கூடாது. ஒரு சட்டத்திலுள்ள கொள்கைகள் நீதிபதியின் நியாய உணர்விற்கு மாறுபட்டதாக இருக்கலாம். ஆனாலும், அச்சட்டத்தின் கருத்தைத் தனது விருப்பத்திற்கு ஏற்றவாறு நீதிபதி மாற்றுவது தகாது. சட்ட வாசகத்திற்கு எதிராகத் தனது கொள்கையைச் சட்டத்தின் பொருளாக நீதிபதி ஏற்றிச் சொல்வது, சட்ட விளக்கநெறிக்கு மாறுபட்டதாகும்.[2]

இந்த முறையிலே, சட்ட மன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களின் விளக்கம், நீதிமன்றங்களில் செய்யப்படுகிறது.

---

1. In such case it is the right and duty of the courts to go behind the letter of the law, and to ascertain from other sources as best they can, the true intention which has thus failed to attain perfect expression.—Salmond.

2. That the intention of the legislature is ethically defective, is not a fact with which the judicature has any concern...... the courts have no authority to detract from it, add to it, or alter it on that account.—Salmond.

10. முன் தீர்ப்பு முறைமை
(Precedents)

சட்டம் இயற்றல், நீதி வழங்குதல், நிர்வாகம் செய்தல் என்ற மூன்று முக்கிய கடமைகளைச் செய்து அரசு இயங்குகிறது என்று நாம் ஏற்கனவே கண்டோம், சட்டம் இயற்றும் அங்கமான சட்ட சபை நீதி வழங்குவது இல்லை. சட்டம் இயற்றுவதே அதன் அதிகாரம் ஆகும். இயற்றப்பட்ட சட்டங்களை அமுல் நடத்துவது நிர்வாக உறுப்பினர்களின் கடமையாகும். சட்டங்களின் அடிப்படையில் நீதி வழங்குவது நீதி மன்றங்களின் பொறுப்பாகிறது.

நீதிபதிகள், தங்கள் முன் கொண்டுவரப்பட்ட வழக்குகளை, அவ்வழக்குகளில் உள்ள சிக்கல்களை, இயற்றப்பட்ட சட்டங்களில் (Enacted Laws) உள்ள விதிகளின்படி ஆராய்ந்து, அந்த விதிகளின் அடிப்படையில் தீர்ப்புக்களைக் கூறுகின்றனர்கள். வழக்குகளைத் தீர்ப்பதற்கு இயற்றப்பட்ட சட்ட விதிகள் வழிகாட்டிகளாக நிற்கின்றன. அந்த விதிகளைப் பின்பற்ற வேண்டியதே நீதிபதிகளின் கடமையாகிறது. இயற்றப்பட்ட சட்டங்களைக் கையாண்டு, வழக்குகளில் புதிது புதிதாகத் தோன்றும் இடர்ப்பாடுகளைத் தீர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு நீதிமன்ற நடுவர்களுக்கு உண்டு.

வாழ்வின் கதியை ஒருவரும் நிச்சயிக்க முடியாது. அது போலவே, வாழ்வில் மக்களுக்குள் ஏற்படும் வழக்குகளின் தன்மையை முன் கூட்டியே உறுதிசெய்தல் முடியாததாகிறது. புதிய புதிய சிக்கல்கள், எதிர்பாராத இடர்ப்பாடுகள், இதுவரை தோன்றியிராத புதிர்கள், வழக்குகளைத் தீர்க்கும்போது எழுவது இயல்பு. இவைகளுக்கான விடைகள் இயற்றப்பட்ட சட்டங்களில் சில வேளைகளில் இருப்பதில்லை. வழக்குகளில் இன்னின்ன சிக்கல்கள் தோன்றலாம் என முன்னமேயே கண்டறிந்து அவைகள் அனைத்திற்கும் விடைகூறும் வகையில் சட்டங்களை இயற்றுவது மனித சாத்தியமில்லை. ஒரு வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய இடர்ப்பாட்டிற்கு நேரடியான விடை இயற்றப்பட்ட சட்டங்களில் இல்லை என்ற காரணம் காட்டி, அந்த வழக்கில் தீர்ப்புக் கூறாமல் நீதிபதி இருக்க முடியாது. அவர் தீர்ப்புக் கூறியே ஆகவேண்டும். ஆகவே, நீதிபதிகளின் பொறுப்பு அதிகமாகிறது.

இயற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையிலோ, அல்லது வழக்க நெறியை ஒட்டியோ, இவை இரண்டும் பயன்படாத பொழுது, அவருடைய இயல்பான

அற உணர்வின் துணை கொண்டோ நீதிபதி தீர்ப்புக் கூறுகின்றார்.[1] அந்தத் தீர்ப்பில், அந்தத் தீர்ப்புக்கான காரணங்கள் சொல்லப்பட்டிருக்க வேண்டும். எந்த முறையில் அந்த வழக்கில் எழுப்பப்பட்ட இடர்ப் பாட்டிற்கு விடை காணப்பட்டது, எந்தக் கொள்கையைப் பின் பற்றி முடிவு கூறப்பட்டிருக்கிறது என்ற விபரங்கள் அனைத்தும் அந்தத் தீர்ப்பிலே காணப்படும்.

இந்த முறையிலே, இயற்றப்பட்ட சட்டங்கள் வழக்கில் தோன்றும் இடர்ப்பாடுகளுக்கு விடை கொடுக்க இயலாதபோது, நீதிபதியே, மேலே சொன்னவாறு, ஒரு கொள்கையை வகுத்து. அக்கொள்கையின் அடிப்படையில் தீர்ப்புக் கூறவேண்டிய தாகிறது. இவ்வாறு, ஒரு வழக்கை ஆராயும் நீதிபதி, தனது கூர்மதியினாலும், நுண்ணிய சட்ட ஞானத்தினாலும், பரந்த அனுபவத்தினாலும், நியாய உணர்வை ஒட்டி, அந்த வழக்கைத் தீர்ப்ப தற்கு ஒரு கொள்கையை வகுத்து, அக்கொள்கையின்படி தீர்ப்புக் கூறுகின்றார் இந்தத் தீர்ப்பில் அடங்கி இருக்கும் கொள்கையை, முறைமையை, தீர்ப்பு முறைமை[2] (Precedent) என்று கூறுகிறோம்.

இதுபோன்ற வழக்கு பின் ஒருசமயம் வரும் பொழுது, அந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதி இதற்கு முன்னால் விதிக்கப் பட்ட தீர்ப்பு முறைமையைப் பின்பற்றி, அதன்படியே தீர்ப்புக் கூறுகின்றார். ஓர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு முறைமை அதன் கீழுள்ள மற்ற நீதி மன்றங்களைக் கட்டுப்படுத்துவது ஆகும். இந்த முறையில், தீர்ப்பு முறைமை பின் வழக்குகளில் பின் பற்றப்பட வேண்டிய சட்டமாக ஆகிவிடுகிறது. இவ்வாறு, முன் தீர்ப்பு முறைமையும் சட்டத்தின் மூலமாக (Source) அமைகிறது.

வழக்கிற்குச் சம்பந்தப்படாத சங்கதிகள் குறித்து நீதிபதிகள் கொள்கைகளை இயற்ற முடியாது. அவ்வாறு இயற்றினால், அது, தீர்ப்பு முறைமையாக ஆவதில்லை. அக்கொள்கை, தீர்ப்பு முறைமைக்கு அப்பாற்பட்ட, சட்டத்தின் மதிப்பற்ற வெறும் வாசகமே (Obiter dictum) ஆகும். அது மற்ற நியாய மன்றங்களைக் கட்டுப்படுத்துவது ஆகாது. ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கு அவசியமான கொள்கையை உறுதிசெய்து, அதைப் பின்பற்றி, அந்த வழக்குத் தீர்க்கப் பட்டிருக்க வேண்டும். அந்த

1. Judges are appointed to administer justice—justice according to law, as far as the law extends, but so for as there is no law, then justice according to nature.—Salmond.

2. A precedent, on the other hand, is the making of law by the recognition and application of new rules by the Courts themselves in the administration of justice.—Salmond.

வழக்கில் தீர்ப்புக் கூறுவதற்குக் காரணமான, அந்தத் தீர்ப்பில் கையாளப்பட்ட கொள்கையாக (Ratio decidenti) இருந்தால் மட்டுமே அது தீர்ப்பு முறைமை ஆகும். அப்பொழுதுதான் அது மற்ற நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் தன்மை பெறுகின்றது, சட்டவிதி ஆகிறது.[1]

ஒரு கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவன் இறந்தவனைக் கொலை செய்ததை நேரில் பார்த்ததாகச் சாட்சிகள் கூறுகின்றனர். அந்தச் சாட்சியத்தை நம்புவதா இல்லையா என்பது விசாரணை செய்யும் நீதிபதியின் அபிப்பிராயத்தைப் பொறுத்தது. சாட்சியத்தைப் பொறுத்து, அதன் அடிப்படையில் முடிவு செய்வது விசாரணை செய்யும் நீதிபதியின் பொறுப்பாகும். அந்த வழக்கிலேயே, கொலை செய்யப்பட்டு இறந்தவர் அணிந்திருந்த நகையை, தான் ஒளித்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்துப் போலீசாரிடம் குற்றவாளி கொடுத்திருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அவ்வாறு கொடுக்கும் பொழுது அவன் போலீசாரிடம் கூறிய விவரங்கள் அந்த வழக்கில் உண்மையைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்கலாம். அந்த விபரங்களைக் குற்றவாளிக்கு எதிராகப் பயன்படுத்தலாமா, கூடாதா என்ற விஷயம் சட்டத்தைப் (Question of Law) பொறுத்ததாகும். அதை உறுதிசெய்து, அந்தக் கொள்கையின்படி அந்த வழக்கில் தீர்ப்புக் கூறினால் அந்தக் கொள்கை தீர்ப்புமுறைமை ஆகிறது.

இவ்வாறு, தீர்ப்பு முறைமை சாட்சியத்தைப் (Question of fact) பொறுத்ததாக இல்லாமல், சட்டப்படிப் பின்பற்றப்படவேண்டிய கொள்கையாக, விதியாக, அமைகிறது. ஒரு தீர்ப்பிலுள்ள ஆதார விதியையே தீர்ப்பு முறைமை என்று கூறுகிறோம்.[2] அந்தத் தீர்ப்பு, வழக்கில் சம்பந்தப் பட்டவர்களை மட்டுமே கட்டுப்படுத்துகிறது. ஆனால், எந்தக் கொள்கையின் அடிப்படையில் அந்தத் தீர்ப்புக் கூறப்பட்டதோ அந்தக் கொள்கை எல்லோரையும் கட்டுப்படுத்தும் சட்டவிதி (Rule of Law) ஆகிறது.

சட்டம் உறுதிப்பாடு உடையதாய் இருக்கவேண்டும். உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கள் சரியானவை என்பதே மக்களின் நம்பிக்கை. ஆதலால், மக்கள் அந்தத் தீர்ப்புக்களில் அடங்கியிருக்கும் கொள்கைகளைச் சட்டவிதிகளாக ஏற்று அதன்படி நடக்கின்றனர். ஆதலால், தீர்ப்பு முறைமைகள் நிலைத்ததாக,

1. Judicial declaration, unaccompanied by judicial application, is of no authority.—Salmond.

2. A precedent, therefore, is a judicial decision which contains in itself a principle.—Salmond.

உறுதிப்பாடுடையதாக, பின் வழக்குகளில் பின்பற்றப் படுவதாக, அமையவேண்டியது அவசியமாகிறது.

தீர்ப்பு முறைமை மாற்றப் படுவதும் உண்டு. உயர் நீதி மன்றத்தில் ஒரு நீதிபதி இயற்றிய தீர்ப்பு முறைமையை அந்த மன்றத்தின் இரண்டு நீதிபதிகள் ஒன்றாக அமர்ந்து ஆராய்ந்து மாற்றலாம்; அதாவது, முந்திய தீர்ப்பு முறைமையைச் சரியானது அல்ல என்று கூறி அதைத் திருத்தலாம். இவ்வாறே, இரண்டு நீதிபதிகள் சேர்ந்து செய்த தீர்ப்பு முறைமையை, இரண்டிற்கு மேற்பட்ட நீதிபதிகள் ஒன்றாக ஓர்ந்து, திருத்துவதும் உண்டு.

தீர்ப்பு முறைமை மூலம் நீதிபதிகள் புதிய சட்டங்களை இயற்றுகிறார்கள் என்று நினைப்பது தவறாகும். அவர்களது தீர்ப்பு முறைமையில் சட்டத்தின் விளக்கமே அமைந்திருக்கிறது. இயற்றப்பட்ட சட்டத்திலுள்ள குறைகளைத் தீர்க்கும் வகையிலும், இயற்றப்பட்ட சட்டம் ஒரு வழக்கைத் தீர்க்க உதவியாக இல்லாத வேளைகளிலுமே, தீர்ப்பு முறைமையை இயற்றுவது இன்றியமையாததாகிறது. நீதிபதிகள் தங்களது பொது அறிவையும் சூழ்திறனையும் பயன்படுத்தி இயல்பான அற உணர்விற்கேற்ப (Natural Justice) அந்த வழக்கைத் தீர்ப்பதற்கென்று புதிய கொள்கையை வகுத்து அதன்படி வழக்கில் முடிவு செய்கின்றனர்.

இந்த முறையில், நீதிமன்றங்களால் இயற்றப்படும் தீர்ப்பு முறைமைகள், பின் வழக்குகளைத் தீர்ப்பதில் பின்பற்றிப் பயன்படுத்தப் படுவதால் அவைகளும் சட்டத்தின் மூலமாக (Source of Law) விளங்குகின்றன.

11. இயற்றப்பட்ட சட்டமும், தீர்ப்பு முறைமையும்
(Legislation and Precedents)

சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் சட்டங்களும் (இயற்றப்பட்ட சட்டங்களும்), அவைகளின் அடிப்படையில் நியாயம் வழங்கும்பொழுது நீதிபதிகளால் உறுதிசெய்யப்படும் தீர்ப்பு முறைமைகளும், நியாய மன்றங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் சட்டவிதிகளாக அமைகின்றன எனப் பார்த்தோம். இந்த இருவகைச் சட்டமூலங்களின் (Sources of Law) தராதரங்களைப் பற்றி இங்குக் கவனிப்போம்.

சட்டவிதிகளைத் தெளிவாகத் தொகுத்துத் தருகின்றது இயற்றப்படும் சட்டம். தீர்ப்பு முறைமை, தீர்ப்புக் கூறும்பொழுது உறுதிசெய்யப்படும் விதியாகும். ஒரு வழக்கு ஏற்பட்டு, அந்த வழக்கில் தீர்ப்புக் கூறுவதற்காகச் சட்டத்தைப் பொறுத்த கொள்கை உறுதிசெய்யப்பட வேண்டிய நிலைமை ஏற்படும் பொழுதுதான் தீர்ப்பு முறைமை தோன்றுகிறது. தீர்ப்புக்கு வரும் வழக்குகளின் தன்மையைப் பொறுத்தே, தீர்ப்பு முறைமை தோன்றுவது சாத்தியமாகிறது. ஆனால், இயற்றப்படும் சட்டம், வழக்குகள் ஏற்படும் வரை காத்திருக்கவேண்டியது இல்லை. முன் கூட்டியே சட்ட விதிகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுவது "இயற்றப்படும் சட்ட"த்தில்தான்.[1]

சட்டம் என்றால் அது எல்லோருக்கும் தெரியும்படி இருக்க வேண்டும். "இயற்றப்பட்ட சட்டம்" எல்லோரும் அறிந்து கொள்ளும்படி வெளியிடப்படுவதால் யாவரும் அதை அறிவார்கள். ஆனால், தீர்ப்பு முறைமை உறுதிசெய்யப்படுவதும், வழக்கில் கையாளப்படுவதும் ஒரே காலத்தில் நிகழ்வதால் முன்னமேயே அதை அறிந்துகொள்ளும் வாய்ப்பு மக்களுக்கு இருப்பதில்லை. வழக்குகளைத் தீர்க்கும்பொழுதுதான், முதன் முதலாகத் தீர்ப்புமுறைமை இயற்றப்படுவதால் முன்கூட்டியே அறிவிக்க முடியாத குறை அதற்கு உண்டு.

அப்போதைக்கப்போது வரும் வழக்குகளின் தன்மையைப் பொறுத்தே தீர்ப்பு முறைமை தோன்றுவதால் அது ஒழுங்கு

1. Precedent is dependent on, legislation is independent of, the accidental course of litigation.—Salmond.

முறையாக அமையாமலும், முழுமை இன்றியும் இருக்கிறது. இந்தக் குறை இயற்றப்பட்ட சட்டத்தில் இல்லை.[1]

பழைய சட்டத்தை மாற்றுவது இயற்றப்பட்ட சட்டத்தால் இயலும். தீர்ப்பு முறைமைக்கு முந்திய இயற்றப்பட்ட சட்டத்தை மாற்றும் அதிகாரம் கிடையாது. ஆதலால், சட்டத்தைச் சீர்திருத்துவதற்கும், மாற்றி அமைப்பதற்கும், இயற்றப்படும் சட்டமே இன்றியமையாத சாதனமாகும்.

இயற்றப்பட்ட சட்டம், திட்டவட்டமான உருவில் அமைந்து, சட்ட விதிகளைப் பறைசாற்றித் தனித்து நிற்கிறது. ஆனால், தீர்ப்பு முறைமையில் உள்ள விதிகள், வழக்குகள் சம்பந்தப்பட்ட பல விவரங்களின் மத்தியில், பொதிந்து, சிதறிக் கிடக்கின்றன. இயற்றப்பட்ட சட்டங்களை எவரும் எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். தீர்ப்பு முறைமை விதிகளை, கணக்கற்ற வழக்கு களின் சாரத்தையும் தீர்ப்புக்களையும் கூறும் தீர்ப்பு அறிக்கை களைக் கொண்ட ஆயிரக்கணக்கான புத்தகங்களில் (Law Reports) தான் தேடிப் பார்க்கவேண்டியதிருக்கிறது. ஆதலால், தீர்ப்பு முறைமையைத் தேடி அறிந்துகொள்வது சுரங்கத்திலிருந்து தங்கம் எடுப்பது போன்றது என்றும், இயற்றப்பட்ட சட்டம் உடனே பயன்படும் அரசின் தங்கநாணயத்தைப் போன்றது என்றும் சட்ட அறிஞர் சால்மண்ட் கூறுகிறார்.[2]

இயற்றப்பட்ட சட்டங்களிலும் குறைகள் உண்டு.

பலப்பல வழக்குகளில் தோன்றும் சிக்கல்களுக்கு விடைகூறும் வகையில் இயற்றப்பட்ட சட்டங்கள் அமைவது இல்லை. அந்தந்த வழக்குகளின் தன்மைக்கேற்ற விதிகளை இயற்றப்பட்ட சட்டத்தில், சில சமயங்களில் நாம் காணமுடியாமல் போகிறது. அது மாருத தன்மை உடையதாதலால், சில வழக்குகளில் எழும் புதிய பிரச்சினைகளுக்கு இயற்றப்பட்ட சட்டங்களில் விடை கிடைப்பது இல்லை. காலப்போக்கிற்குத் தகுந்தாற்போல், வளர்ச்சிபெற்று, மாறும் தன்மை அதற்குக் கிடையாது. புதிய சட்டங்கள் இயற்றப் படுவதின் மூலமாகவேதான் அந்த மாற்றத்தை நாம் ஏற்படுத்த முடியும். ஆனால், தீர்ப்பு முறைமை, வழக்குகளில் எழும் பிரச்சினை களோடு கூடிய நேரடித் தொடர்புடன் உறுதிசெய்யப்படுவதால்,

1. Case law, therefore, is essentially incomplete, uncertain and unsystematic.—Salmond.

2. Case law is gold in the mine—a few grains of the precious metal to the ton of useless matter—while statute law is coin of the realm ready for immediate use.—Salmond.

சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி இயைந்து, வளர்ந்து, காலத்துக்கேற்ப மாறும் தன்மை பெற்றதாகிறது. இவ்வாறு இயைந்து வளரும் சீர்மை இயற்றப்பட்ட சட்டத்திற்குக் கிடையாது.[1]

மருந்து மூலிகைகளைப் போன்றவை இயற்றப்பட்ட சட்டங்கள்; நோய்க்குத் தகுந்த முறையில் மூலிகைகளைச் சேர்த்துத் தயார்செய்யப்பட்ட கலவை மருந்து போன்றதாகும் தீர்ப்பு முறைமைகள்.

முன்னேற்றமடைந்துள்ள அரசு முறையிலே, இயற்றப்பட்ட சட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்ப்பு முறைமைகள் பெரிதும் பயன்படுகின்றன. சட்டத்தின் வளர்ச்சிக்கும் தீர்ப்பு முறைமைகள் இன்றியமையாததாகின்றன.

---

1. Statute law is rigid, straitly bound within the limits of authoritative formulae; case law, with all its imperfections, has at least this merit, that it remains in living contact with the reason and justice of the matter, and draws from this source a flexibility and a power of growth and adaptation.—Salmond.

12. வழக்க நெறி (Custom)

"எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு." —*குறள். 426.*

பழக்கம் வழக்கம் ஆகிறது. பலர் பலநாள் நடந்து சென்ற தடம் பாதையாவதுபோல், பலநாள் செய்யப்பட்ட செயல் வழக்கம் ஆகிறது. வழக்கம் வகுக்கும் பாதையில் வாழ்வு செல்லுகிறது.

நம் வாழ்வில் பல கூறுகள் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. மக்களுக்கு உகந்ததாக, நியாயமானதாக, நீண்ட நாள் சமூகத்தில் நிலவிவரும் பழக்கத்தை, வழக்கமாக மனிதன் வாழ்வில் ஏற்றுக்கொள்ளுகிறான்.[1] அதன் பின், அந்த வழக்கத்திற்கு மாறுபாடு நேர்ந்தால், அதை ஒழுங்குக்கு மாறுபட்டதாகக் கருதுகிறான். வழக்கத்திலிருந்து வழுவாமையே ஒழுக்கம் எனக் கருதப்படுகிறது. உலகத்தோடு ஒட்ட ஒழுகாதவனை ஒழுக்க மற்றவனாகக் கருதும் நிலை இன்றும் நம்மிடை இருந்துவருகிறது.

சட்டங்கள் இயற்றப்படுவதற்கு முன் வழக்கத்திற்கு உள்ள மதிப்பு அதிகமாக இருந்தது. பழங்காலத்தில் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டே நீதி வழங்கபபட்டது. இன்றைய சட்டங்களுக்கு மக்கள் அடங்கி நடப்பதுபோல், அன்று வழக்கத்தினின்று வழுவாமல் நடந்துவந்தனர். வழக்கத்திற்கு மாறாக ஒழுகியவர்கள் தண்டிக்கப்பட்டனர். "தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற் பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தக ஒறுத்தல்," என்று பரிமேலழகர் திருக்குறளின் உரைப்பாயிரத்திலே கூறுகின்றார். இதிலிருந்து, முற்காலத்தில் வழக்க நெறியினின்றும் வழுகியவர்கள் தண்டிக்கப்பட்டனர் என்பது தெளிவாகும்.

நியாயமானதாகச் சமுதாயத்தால் ஏற்கப்படும் கொள்கைகளே வழக்க நெறியாக வளர்ந்து நிலைபெறுகின்றன. மக்கள் ஏற்றுப் பேணும் கொள்கைகளை நீதிமன்றங்கள் நியாயமளிப்பதற்கு வழி காட்டியாகக் கொள்வது இயல்பேயாகும். சட்டத்தை அரசு இயற்றுவதுபோல், வழக்க நெறியைச் சமூகம் ஏற்றுப் பேணுகிறது. பெரும்பாலும் நேர்மையாகவும் நியாயமாகவும் உள்ள கொள்கைகளே சட்டங்களாகவும், வழக்கங்களாகவும் விளங்குகின்றன. சமுதாயத்தின் அதிகாரம் பெற்ற அரசின் கொள்கைகள் சட்ட விதிகளாக

1. Custom is the embodiment of those principles which have commended themselves to the national conscience as principles of truth, justice and public utility.—Salmond.

இயங்குகின்றன; சமூகம் ஏற்று ஆமோதிக்கும் கொள்கைகள் வழக்க நெறியாகப் பேணப்படுகின்றன.[1]

ஆதிகாலச் சட்டங்கள் வழக்கநெறியை ஒட்டியே இயற்றப்பட்டிருக்கவேண்டும். சட்டங்களில் உள்ள கொள்கைகள் பல, வழக்க நெறியின் அடிப்படையில் அமைந்தவை. இவ்வாறு, வழக்கநெறி சட்ட விதிகள் பலவற்றின் தோற்றுவாயாக அமைந்திருந்தது. ஆனால், அரசியல்முறை வளர்ந்து நிலைத்தபின், தன் சட்டங்களை ஒட்டியே வழக்கநெறி அமையவேண்டுமென அரசு விரும்புகிறது.

நீதிமன்றங்களில் சட்டத்தை அடிப்படையாக வைத்தே நியாயம் வழங்கப்படுகிறது என முன்னர்க் கண்டோம். வழக்குகளில் வரும் எல்லாச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் சட்டங்கள் இருப்பதில்லை. சில இடர்ப்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்குச் சட்டம் பயன்படாமல் போகலாம். அப்பொழுது வழக்கநெறியை ஒட்டியே நியாயம் கூறவேண்டியிருக்கிறது. இந்த முறையில், நீதிமன்றங்கள் வழக்கநெறியை ஏற்று அதை நடைமுறைப்படுத்துகின்றன. இவ்வாறாக, வழக்கநெறி சட்டத்தை ஒத்த தகுதி பெறுகிறது; சட்டத்திற்கு மூலமாக அமைகிறது.

ஆனால், எல்லா வழக்கங்களையும் மக்களைக் கட்டுப்படுத்தும் விதிகளாக நீதிமன்றங்கள் ஏற்பதில்லை. வழக்கநெறி கீழ்க்கண்ட குறைகள் இன்றி இருக்கின்றதா எனப் பார்த்த பின்னரே அது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

வழக்க நெறி பகுத்தறிவிற்கு ஒத்ததாக இருக்கவேண்டும். பகுத்தறிவிற்கு முரணான வழக்கங்களை நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை. மனிதன் வளர்வதுபோல் சமுதாயத்தின் அற உணர்வும் வளர்கின்றது. ஒரு காலத்தில் வழக்கமாக ஏற்றுக்கொண்ட ஒரு நெறியைப் பிற்காலத்தில் அந்தச் சமூகம் வெறுக்கலாம். வழிபாட்டிற்கென்று மிருகங்களைப் பலியிடுதல் ஒரு காலத்தில் வழக்க நெறியாக இருக்கிறது. அதே சமூகம் அந்தப் பலியிடும் வழக்கத்தைப் பிற்காலத்தில் இழுக்காகக் கருதி ஒதுக்கிவிடுகிறது. பிந்திய மனநிலை சமூகத்திற்கு வந்த பிறகு, முந்திய வழக்கம் மக்களைக் கட்டுப்படுத்தும் விதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. சமுதாயத்தின் இன்றைய கொள்கைகளுக்குப் பொருந்தாதவற்றை வழக்கநெறியாக நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்வது இல்லை.[2]

1. Custom is to the society what law is to the state. Each is the expression and realisation, to the measure of men's insight and ability, of the principles of right and justice.—Salmond.

2. A custom must be reasonable. The authority of usage is not absolute, but conditional on a certain measure of conformity with justice and public utility.—Salmond.

வழக்கநெறி இயற்றப்பட்ட சட்டங்களுக்கு விரோதமாக இருத்தல் கூடாது.[1] இயற்றப்பட்ட சட்டங்களுக்கு மாறான வழக்கங்களை நீதி மன்றங்கள் ஏற்பதாக இருந்தால் அச்சட்டங்களுக்கு மதிப்பே இல்லாமல்போய்விடும். அதுமட்டுமன்று. பல சட்டங்கள் வழக்கங் களை மாற்றுவதற்காவே இயற்றப்படுகின்றன. பெண்களுக்குச் சொத்துரிமை கிடையாது என்று இருந்த காலம் உண்டு. அந்த வழக்கநெறியை மாற்றவேண்டுமென்றே, சட்டத்தின்மூலம் பெண் களுக்குச் சொத்துரிமை இன்று அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு சட்டம் இயற்றப்பட்ட பின், முன் இருந்த வழக்கநெறி செல்லுபடி ஆவதில்லை. இந்த முறையில் இயற்றப்பட்ட சட்டங்களுக்குப் பொருந்தாத எல்லா வழக்கங்களும் மதிப்பற்றுப் போகின்றன.

ஒருவரின் உரிமையை நிலைநாட்டும் நோக்கத்துடன் வழக்க நெறி இருந்திருக்க வேண்டும். எவருடைய நலனுக்காகவும் இல்லாத ஒரு வழக்கத்தை மக்களைக் கட்டுப்படுத்தும் விதியாகக் கொள்வதற்கில்லை. மக்களிடை உரிமைகளையும் கடமைகளையும் உறுதிசெய்யும் எண்ணத்துடன், சமூகம் ஒரு வழக்கத்தைப் பின் பற்றி நடந்திருந்தால்தான் அந்த வழக்கத்திற்கு மதிப்பு உண்டு. எவருடைய நலனுக்கும், கடமைக்கும் சம்பந்தப்படாத ஒரு வழக் கத்தைச் சமூகம் ஆராய்ந்து ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று சொல்லமுடியாது; ஆதலால் அந்த வழக்கம் பயனற்றதாகிறது.

நெடுங்காலமாகப் பின்பற்றப்படுவதையே வழக்கநெறி என்று கொள்ள முடியும். சில ஆண்டுகள் மட்டும் பழக்கத்திலுள்ள ஒன்றை வழக்கம் என்று நீதிமன்றங்கள் ஏற்பதில்லை. நினைவிற்கு அப்பாற்பட்ட காலத்திலிருந்து, தொடர்ந்து, பின்பற்றப்பட்டு வரும் வழக்கங்களாக அவை இருக்கவேண்டும். "இன்ன காலத் திற்கு முன் இந்த வழக்கம் இல்லை" என்று ஒருவரும் கூற முடியாதபடி, தொன்றுதொட்டுப் பின்பற்றப்படும் வழக்கமாக அது அமைந்திருக்கவேண்டும்.[2]

இவ்வாறாக, உரிமைகள் பற்றிய வழக்கம் தொன்மையானதாய், தொடர்ச்சி உடையதாய், அறிவுக்கு உகந்ததாய், இன்றைய இயற்றப்பட்ட சட்டங்களுக்கு முரண் இல்லாததாய் இருந்தால்தான் அது நீதிமன்றங் களால் ஏற்கப்படும் ஏற்புடைத்தாகிறது. இந்த வகையில், வழக்க நெறி சட்டத்திற்கு மூலமாக ஓரளவு அமைகிறது.

---

1. "No custom or prescription can take away the force of an Act of Parliament."—Lord Coke.

2. No custom is to be allowed, but such custom as hath been used by title of prescription, that is to say from time out of mind.—Littleton.

13. சட்டத்தின் மூலங்கள்
(Sources of Law)

சாதாரணமாக, "சட்டம்" என்ருல் சட்ட சபைகள் இயற்றும் சட்டங்கள்தான் என நாம் எண்ணுகிருேம். இது சரியன்று. நீதி மன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்படும் விதிகளே, "சட்டம்" ஆகிறது என்று ஏற்கனவே கண்டோம். நீதிமன்றங்கள் எந்தெந்த விதிகளை ஏற்று நியாயம் வழங்குகின்றனவோ அவைகளையெல்லாம் சேர்த்தே பொதுவாகச் "சட்டம்" என்ற சொல்லால் குறிப்பிடுகிருேம்.

நீதிமன்றங்களின் தலையாய கடமை மக்களுக்குள் ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து நியாயம் வழங்குவதேயாகும். வளர்ச்சி யடைந்த அரசமைப்பு முறையிலே, மக்களுக்கும் அரசுக்கும் தோன்றும் வழக்குகளிலும் நீதிமன்றங்களே தீர்ப்பளிக்கின்றன. இந்த வழக்குகளை ஆராய்ந்து தீர்ப்பளிப்பதற்கு நீதிமன்றங் களுக்கு வழிகாட்டியாக நிற்பது, முக்கியமாக, இயற்றப்பட்ட சட்டங்கள்தாம் (Enacted Laws). முன்னர்க் கூறியபடி, சில வேளை களில் இயற்றப்பட்ட சட்டங்கள் நீதிமன்றங்களுக்கு வழி காட்டுவது இல்லை. பலதிறப்பட்ட வழக்குகளில் புதிது புதிதாக எழும் எண்ணற்ற இடர்ப்பாடுகள், புதிர்கள், அனைத்திற்கும் இயற்றப்பட்ட சட்டங்களில் விடைகள் இல்லாதிருப்பது இயல்பே யாகும். இப்பொழுது, நீதிமன்ற நடுவர்கள், தங்கள் நியாய உணர்வுக்கு உகந்த முறையில் ஒரு கொள்கையை வகுத்து, அந்தக் கொள்கையின் அடிப்படையில் தீர்ப்புக் கூறுகின்றனர். இந்தக் கொள்கைகளே தீர்ப்பு முறைமை (Precedent) ஆகின்றன எனக் கண்டோம். தொன்றுதொட்டு வரும் வழக்க நெறியையும் (Custom) நீதிமன்றங்கள் ஏற்று அதன்படி நியாயம் வழங்கு கின்றன என்றும் முன்னர்க் கூறப்பட்டது. இந்த முறையில், நீதி மன்றங்கள் நியாயம் வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளும் கொள்கை கள் மூன்று வகைப்படுவன: (1) இயற்றப்பட்ட சட்டங்கள், (2) தீர்ப்பு முறைமை, (3) வழக்க நெறி. ஆகவே, இந்த மூன்றையுமே "சட்டம்" என்ற சொல் குறிக்கின்றது என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

இயற்றப்பட்ட சட்டங்கள் (Enacted Laws), முன் தீர்ப்பு முறைமைகள் (Precedents), வழக்க நெறி (Custom) இவைகளே நீதிமன்றங்களால் நியாயம் வழங்கும்பொழுது ஏற்றுக்கொள்ளப் படுவதால், இவைகளை ஒட்டியே நியாயம் வழங்கப்படுவதால், இந்த மூன்றும் "சட்டத்தின்" மூலங்களாக இருக்கின்றன.

14. அரசியல் சட்டம்
(The Constitution of the State)

நாகரிகமுள்ள மனிதன் தனது வாழ்வில் நிகழ்த்தும் முக்கியமான செயல்கள் அனைத்திற்கும் இலக்கணம் அமைத்துக் கொள்ளுகின்றான். சமுதாயச் சடங்குகள், கலைகள், போர் இவைகளுக்கெல்லாம் விதிமுறைகள் வகுக்கப்பட்டுப் பின்பற்றப்படுகின்றன. தான் நெறியாக வாழ்வதற்கென்று வாழ்வின் இலக்கணமாக அறநூல்கள் பல இயற்றியிருக்கின்றான். விதிக்கப்பட்ட இலக்கணங்கள் வழியிலேயே வாழ்வையும், கலைகளையும், மற்றச் சடங்குகளையும் இயங்கச்செய்வது வளர்ச்சி அடைந்த நாகரிகத்தின் சின்னமாக விளங்குகிறது,

இலக்கணங்கள் தோன்றுவது எப்படி? ஒரு செயலுக்கான முறையை வகுப்பது இலக்கணம், ஒரு செயல் இன்ன முறையில் செய்யப்படவேண்டும் என்று இலக்கணம் கூறுகின்றது. அந்தச் செயல் பலமுறை செய்யப்பட்டு, அதன் பயனாய் ஏற்பட்ட அனுபவ ஞானத்திலிருந்து விளைவது அச்செயலுக்குரிய இலக்கணம் ஆகிறது.

ஒரு மொழி இவ்வாறுதான் பேச்சிலும், எழுத்திலும் கையாளப்படவேண்டும் என்று விதிப்பது அந்த மொழியின் இலக்கணம். ஆனால், இலக்கணம் மொழிக்கு முந்தியது அன்று. இயற்கையாகவே ஒரு மொழி வளர்ந்து, வளம்பெற்று, இலக்கியங்கள் ஓரளவு அதில் தோன்றிய பின்னரே, அந்த மொழியின் இலக்கணம் எழுகின்றது. அதன்பின், அந்த இலக்கண வழியில் மொழி வளர்ச்சி பெறுகிறது. இலக்கணப்படியே இலக்கியமும் பிற்காலத்தில் அமைகிறது. இப்படியேதான், எல்லாக் கலைகளின் இலக்கணங்களும் அந்தக் கலைகள் வளர்ச்சியுற்ற ஒரு நிலை அடைந்தபின் தோன்றுவன ஆகும். ஒரு மொழியிலே இலக்கியங்கள் பல மலர்ந்தபின் அந்த மொழியின் இலக்கணம் பிறப்பது போல், சிற்பம், ஓவியம், நாட்டியம், இசை முதலிய கலைகள் ஓரளவு வளர்ச்சி அடைந்த பின்னரே அந்தந்தக் கலைகளின் இலக்கணங்கள் இயற்றப்படுகின்றன. இம்மாதிரியேதான், மனிதன், அரசியல் வாழ்விலே முன்னேற்றம் அடைந்த பின் அரசியலுக்கு இலக்கணம் வகுக்கிறான். அரசின் அங்கங்கள் எவ்வாறு அமையவேண்டும், அந்தந்த உறுப்புக்களின் கடமைகள், அதிகாரங்கள் என்னென்ன, அரசின் அதிகார வரம்பு என்ன, அரசுக்கும் மக்களுக்கும் உள்ள உறவு என்ன, என்பவையெல்லாம் வகுத்து இலக்கணம் கூறு

கின்ருன். அந்த இலக்கணமே, "அரசியலமைப்புச் சட்டம்" (Constitution) ஆகிறது.[1]

ஆதியில், அரசு தோன்றியது படிப்படியான, இயற்கையான, வளர்ச்சியாகவே இருந்திருக்கவேண்டும். சிறு விதையிலிருந்து பெரிய மரம் வளர்வதுபோல் அரசும் வளர்ந்திருக்கிறது. விதையிலிருந்து வெளிப்பட்ட முளை இளங்கன்ருகி, செடியாகி, பிறகு மரமாக ஓங்கி வளர்கிறது. முளை எப்பொழுது செடியானது என்றோ அல்லது செடி எந்தக் குறிப்பிட்ட நேரத்தில் மரமாக மாறியது என்றோ கூறுவது இயலாது. இந்த முறையிலேயே, முன்பு கூறியபடி, சிறுமக்கள் கூட்டம் ஒரு தலைவனைக் கொண்டு இயங்கி, நாளடைவில் அது ஓர் அரசாக விரிந்தது. அரசு வளர்ந்துகொண்டிருக்கையில், இன்ன வகையில்தான் அது உருவெடுக்கப் போகிறது என்று நிச்சயிக்கமுடியாது. ஏதோ உறுதிசெய்யப்பட்ட விதிமுறைகளின்படி அரசுகள் வளர்ந்து அமைந்தன என்று கூறுவதற்கு இல்லை. ஆதலால், உலகின் பல பாகங்களிலும், நிலைபெற்ற அரசியல் முறைகள் பல மாறுபாடுகளுடன் விளங்குகின்றன. இவ்வாறு, அரசு வளர்ந்து நிலைத்த பின்னர், அந்த அரசின்கீழ் வாழும் மக்களுக்கும் அரசிற்கும் உள்ள உறவு முறைகளையும், அரசின் அங்கங்களையும், அவைகளின் அதிகாரங்களையும் வரையறுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த விதிமுறைகளையே அரசியல் சட்டம் என்று கூறுகிரோம். மேலும், அரசியல் சட்டம் அரசுக்கு முந்தியது அன்று; அரசு நீண்டநாள் நிலைத்து இயங்கியபின்தான் அரசியல் சட்டம் தோன்றியது.[2]

சட்டசபைகளும், நீதிமன்றங்களும், நிர்வாகமுறையும் சட்டத்தின் அடிப்படையில் இயங்குகின்றன. சட்டத்தை இயற்றுவது அரசு. அரசியல் அமைப்பு முறையும் ஒரு சட்டம்தான். அச்சட்டம் அரசுபற்றியதாக இருக்கிறது. இப்படி இருப்பதால், அரசியல் சட்டத்தை எந்த அதிகாரத்தின்படி யார் இயற்றுவது என்ற வினை எழுகின்றது. இதற்கு விடை சொல்லுவது எளிது. மக்களைக்

1. Constitutional law may be defined as the body of rules governing the relations between the sovereign and his subjects, and the different parts of the sovereign body.—Hibbert.

2. The constitution as a matter of fact is logically prior to the constitution as a matter of law. In other words, constitutional practice is logically prior to constitutional law......... Constitutional law followed hard upon the heels of constitutional fact.—Salmond.

கொண்டது அரசு; அவர்களுக்காக இயங்குவதுதான் அரசு. ஆதலால், அரசின் இலக்கணங்களைத் தீர்மானிப்பது மக்களின் உரிமை. எனவே, அரசியல் சட்டத்தை உருவாக்குபவர்கள் மக்கள்தாம். அவர்கள், தங்கள் அடிப்படை அதிகாரத்தின்படி, அரசியல் சட்டத்தை இயற்றிக் கொள்ளுகிறார்கள். ஒரு நாட்டின் மக்கள் தங்களுக்குத் தாங்களே அளித்துக் கொள்வது அரசியல் சட்டமாகும்.

புதிதாகத் தன்னுரிமை பெறும் நாடுகள் முதற்கடமையாகத் தங்கள் அரசியல் சட்டங்களை அமைத்துக்கொள்ளுகின்றன. நாம் விடுதலை அடைந்த பின், நம் நாட்டைக் குடியரசாக அமைத்து, அதற்கென அரசியல் சட்டத்தை நாம் வகுத்துக் கொண்டோம். "இந்திய மக்களாகிய நாம் நமக்கு நாமே அளித்துக் கொள்ளும் அரசியலமைப்பு........." என்ற தொடக்கத்துடன் கூடியதாகும் நமது அரசியல் சட்டம்.

சில நாடுகளில் அரசியல் அமைப்புமுறை எழுதப்படாமல் (Unwritten Constitution), நீண்டநாள் வழக்கங்களின் அடிப்படையிலேயே இயங்கிவருவதும் உண்டு. தொன்றுதொட்டு வரும் சம்பிரதாயங்களே (Conventions) அரசியலமைப்பின் விதிமுறைகளாகப் பின்பற்றப்படுகின்றன. இவ்வாறு, எழுதப்படாமல், வழிமுறைப் பழக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இயங்கும் அரசியலமைப்புமுறை சிறப்பாக இங்கிலாந்தில் திகழ்கின்றது.

சாதாரணச் சட்ட விதிகளை அரசின் அங்கங்களான சட்ட சபைகளும், நீதிமன்றங்களும் இயற்றுகின்றன. அரசின் அங்கங்களுக்கும் அதன் அதிகாரங்களுக்கும் வரம்பு கட்டுவது அரசியல் சட்டம். அது வகுத்த வழியில்தான் அரசின் அங்கங்கள் இயங்க வேண்டும். அரசின் உறுப்புக்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்த அதிகார எல்லையை அவை மீறமுடியாது.

அரசு இயங்குவது ஒரு சிலர் மூலமாகத்தான்; அவர்களையே அரசாங்கம் என்று கூறுகிறோம். அந்த அரசாங்கத்தினரிடம் அரசின் ஒப்பற்ற அதிகாரம், சக்தி ஒபபடைக்கப்படுகின்றன. அவற்றை அவர்கள் ஒழுங்காக, மக்களின் நலனுக்கு உகந்த முறையில், பயன்படுத்தவேண்டும். மக்களின் நலனைப் போற்றுவதே அரசின் அடிப்படைக் கடமை ஆகும். மக்களின் உரிமைகளை எந்த விதத்திலும் அரசாங்கம் தன் அதிகாரத்தினால் பறித்துவிடுவது கூடாது. அரசின் இணையற்ற வலிமைக்கு முன் தனிப்பட்ட குடிமக்களான நாம் சக்தியற்றவர்களாகி விடுகிறோம். ஆதலால், நாம் ஒவ்வொருவரும், நம் தனிப்பட்ட உரிமைகளைப் பறிக்கும் முறையில் அரசு இயங்கி அதனால் கொடுங்கோன்மை நாட்டில்

ஏற்படாதவாறு கண்காணிக்க விரும்புகிறோம். இந்தக் கண்காணிப்பைச் செய்வது அரசியல் சட்டம்.

நம் உயிருக்கும், உடலுக்கும், உடைமைக்கும் பிற மக்களால் மட்டுமின்றி அரசாங்கத்தாலும் ஊறு நேருவது கூடாது. நாம் செய்த குற்றத்திற்காக நீதிமன்றங்கள் தண்டனை அளிக்கலாம். ஆனால், நீதிமன்றங்களின் உத்தரவின்றி, அரசாங்கம் தனது விருப்பப்படி குடிகளின் உயிருக்கோ, உடலுக்கோ, உடைமைக்கோ ஊறுவிளைவித்தல் ஆகாது. நமது குடும்பவாழ்க்கை, நமது கொள்கைக்கேற்ற ஒரு மதத்தைப் பேணி நிற்றல், நம் விருப்பத்திற்கிசைந்த தொழிலைச் செய்தல், இவைபோன்ற நலன்கள் நம் பிறப்புரிமைகள். இவை அரசாலோ அல்லது மற்ற மக்களாலோ நமக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் அல்ல. இதுபோன்ற, நம் வாழ்விற்கு ஆதாரமாக உள்ள அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வழிசெய்கிறது அரசியல் சட்டம். "இந்த உரிமைகள் பிறரால் மனிதனுக்கு அளிக்கப்பட்டவை அல்ல; அவன் மனிதன் என்பதால் இந்த உரிமைகள் அவனுக்கு உண்டு," என்று அமெரிக்கநாட்டின் ஒன்பதாவது தலைவராகப் பதவிவகித்த வில்லியம் ஹென்றி ஹாரிஸன் தமது பதவி ஏற்பு நிகழ்ச்சியில் (1841 ஆம் ஆண்டில்) பறைசாற்றினர் என்று அமெரிக்கநாட்டின் சரித்திரம் பெருமைகொள்ளுகிறது.

அரசாங்கத்தை ஒரு வரம்பிற்குள் இயங்கச்செய்வதில்தான் மக்களின் அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பு இருக்கிறது. அந்த வரம்புகளை வகுத்து, குடிமக்களின் அடிப்படை உரிமைகளை (Fundamental Rights) எடுத்துச்சொல்லி, அந்த உரிமைகளைப் பாதிக்காதவாறு அரசின் அங்கங்களை இயங்கச்செய்கிறது அரசியல் சட்டம். (அடிப்படை உரிமைகள் பற்றி விரிவாகப் பின்னர்க் காண இருக்கிறோம்.) இவ்வாறு, மனிதனின் புனிதமான அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் அரணாக இருப்பதால் அரசியல் சட்டம் புனிதத்தன்மை வாய்ந்ததாகிறது. இதனாலேயே, சாதாரணச் சட்டங்களை மாற்றுவதுபோல், அரசியல் சட்டத்தைத் திருத்துவதோ, மாற்றுவதோ எளிதில் முடிவதில்லை.

நமது நாட்டிலே, மதிப்புமிக்க குடியரசுத் தலைவரிலிருந்து சாதாரண அரசாங்க ஊழியர் வரை, அவர்கள் பதவி ஏற்கும் பொழுது நமது அரசியல் சட்டத்தின்படி நடந்து கடமையைச் செய்வதாகவே உறுதிமொழி கூறுகின்றனர். ஜனநாயக ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அமெரிக்கநாட்டுத் தலைவர்கள், மக்கள் காணும் பேரவையிலே,

> "நான், எனது முழுச்சக்தியுடன், அமெரிக்கநாட்டின் அரசியலமைப்பைப் போற்றி, பேணி, பாதுகாத்துநின்று,

அமெரிக்க நாட்டுத் தலைவர் பதவியை உண்மையுடன் ஏற்று நடத்துவேன் என்று உறுதி கூறுகிறேன்; அதற்கு ஆண்டவன் அருள் புரிவாராக''

என்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். இந்த முறையிலேதான் நம் இந்திய நாட்டுத் தலைவரின் பதவியேற்பு உறுதிமொழியும் அமைந்திருக்கிறது.

''எனது முழுச் சக்தியுடன் அரசமைப்புச் சட்டத்தைப் பேணிப் பாதுகாத்து, இந்திய மக்களின் நலனுக்காகவும், சேவைக்காகவும் என்னை அர்ப்பணித்து, இந்தியக் குடியரசுத் தலைவர் பதவியையும் அதிகாரத்தையும் உண்மையுடன் ஏற்று நடத்துவேன் என (ஆண்டவன் பெயரால்) உறுதி கூறுகிறேன்'' என்று இந்தியக் குடியரசுத் தலைவர் பதவி ஏற்பு உறுதிமொழி எடுக்க வேண்டும் என நம்நாட்டு அரசமைப்புச் சட்டம் விதிக்கின்றது. (60-வது பிரிவு).

இந்திய நாட்டிலுள்ள எல்லா நீதிமன்றங்களும், மற்ற எல்லா அதிகாரிகளும் அரசமைப்புச் சட்டத்தின்படியே, அதற்கு உட்பட்டே, தங்கள் அலுவல்களையும் கடமைகளையும் செய்து இயங்க வேண்டும் என்றும் நமது அரசமைப்புச் சட்டம் விதிக்கின்றது. (375-வது பிரிவு.) இவ்வாறு, அரசியல்முறை வளர்ந்து நிற்கும் பல நாடுகளிலும் உள்ள அரசாங்கங்கள் அரசியல் சட்டத்தின் அடியொற்றி இயங்குகின்றன.

இவ்வளவு சீர்மைபெற்ற அரசியல் அமைப்புச் சட்டத்தைப் புனிதமாகப் போற்றிப் பேணுவது மக்களின் கடமையாகவும், மக்களைக் கொண்ட அரசின் தலையாய கடனாகவும் இருக்கிறது.

15. சர்வதேசச் சட்டம்
(International Law)

ஒரு சமூகத்திலுள்ள மக்கள் தங்களுக்குள் நடந்துகொள்ள வேண்டிய முறையை வகுப்பது சட்டம். உலகத்தை ஒரு சமுதாயம் எனக் கொண்டால், உலகத்து நாடுகள் எல்லாம் அந்தச் சமுதாயத்தின் உறுப்புக்கள் ஆகின்றன. வியாபாரம், போக்குவரத்துச் சாதனங்கள், தபால், தந்தி முதலிய செய்தித் தொடர்புகள் இவை மூலமாக உலக நாடுகளுக்குள் நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது. இந்நிலையில், இந்த நாடுகள் ஒன்றுக்கொன்று எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதைப்பற்றி வழி முறைப் பழக்கங்கள் உண்டு. இந்தச் சம்பிரதாயங்களையே - மரபு முறைகளையே - "சர்வதேசச் சட்டம்" என்று கூறுகிறோம்.

உலக நாடுகள் எல்லாம் முழு அதிகாரம் படைத்த நாடுகள் (Sovereign States). ஆகவே, இவைகளைக் கட்டுப்படுத்தும் முறையில் சட்டம் இயற்றுவதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை. ஆதலால், மரபுமுறைகளை ஒட்டியும், சம்பந்தப்பட்ட நாடுகளின் ஒப்பந்தங்களின் அடிப்படையிலும், சர்வதேசச் சட்ட விதிகள் அமைகின்றன. அந்தந்த நாடுகளின் சம்மதத்தைப்பெற்ற விதிகளே நாடுகளுறவு நிலை விதிகளாக ஏற்கப்படுகின்றன.

இந்த விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிலையான ஏற்பாடு இல்லை. உலக நீதிமன்றம் (International Court of Justice), உலக நாடுகளிடையே தோன்றும் விவகாரங்களை ஓரளவு தீர்த்துவைக்கிறது. ஆனால், அந்தத் தீர்ப்புக்களை நடைமுறைப் படுத்துவது, சம்பந்தப்பட்ட நாடுகளின் இணக்கத்தையும், நல்லெண்ணத்தையும் பொறுத்ததாகும்.

உலகநாடுகள் ஒப்புக்கொண்டு பின்பற்றும் விதிமுறைகளைச் "சர்வதேசச் சட்டவிதிகள்" என்று அழைப்பதைவிட "சர்வதேச வழக்காறுகள் (International Conventions) அல்லது நாடுகளுறவு ஒழுக்கமுறைகள்" என்று கூறுவது பொருந்தும்.[1] இந்த விதிகளின் தன்மைபற்றிச் சட்ட அறிஞர் பலரும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். ஆயினும், உலகநாடுகளின் உறவுகள் நெருங்கி வளரும் இந்தக்காலத்தில், "சர்வதேசச் சட்டம்" ஓர் வளர்ந்துவரும் அறிவியலாக இருக்கிறது.

---

1. "The law of nations is that collection of usages which civilised states have agreed to observe in their dealings with each other." – Lord Coleridge.

It is "the aggregate of the rules to which nations have agreed to conform in their conduct towards one another."—Lord Russel of Killowen.

இரண்டாவது பிரிவு

சட்டத்தின் அடிப்படைக் கருத்துக்கள்

1. உரிமைகள் (Legal rights)

"உரிமை" என்றால் என்ன? 'இன்றுமை', 'கடமை', என்பவை எதைக் குறிக்கின்றன? உரிமையும் கடமையும் ஒன்றி நிற்பன - ஒன்று இன்றி மற்றொன்று இல்லை - உரிமையின் கூறுகள் - உரிமைக்கு இலக்கான பொருள்கள்-'உரிமை', 'தன்னுரிமை,' 'அதிகாரம்', இவற்றிடையே உள்ள வேறுபாடுகள் - பலவித உரிமைகள் - அமுலிலுள்ள உரிமைகள், அமுலற்ற உரிமைகள்—முழு உரிமைகள், தனி உரிமைகள்—ஆதார உரிமைகள், பிரிக்கப்பட்ட உரிமைகள்—அடக்கும் உரிமைகள், அடங்கும் உரிமைகள்.

2. சொந்தம் (சொத்துரிமை) (Ownership)

'சொத்துரிமை' என்றால் என்ன - அதன் வகைகள்-பருப்பொருள் சொந்தம், நுண் பொருள் சொந்தம் - தனிச் சொந்தம், கூட்டுச் சொந்தம் - நம்பிக்கைப் பொறுப்பாளரின் (டிரஸ்டியின்) சொந்தம், பலனுக் குரியவரின் சொந்தம்—நிறைந்த சொந்தம், நிபந்தனையுள்ள சொந்தம்.

3. உடைமை (Possession)

'உடைமை' என்றால் என்ன?–பருப்பொருள் உடைமை-உடைமை எண்ணமும், உடைமைச் செயலும் பொருந்தியிருக்க வேண்டும் - உடைமை எண்ணம், உடைமைச் செயல் இவற்றின் தன்மை – நேரடி உடைமை, பகர உடைமை — இரட்டிப்பு உடைமைகள் — உடைமையை அடையும் வழிகள் - நுண் பொருள் உடைமை - சொத்துரிமையும் உடைமையும்—உடைமையின் முக்கியத்துவம்.

4. சொத்து (Property)

சொத்து என்பது என்ன? நுண் பொருட் செல்வம் - அதன் வகைகள் - பருப் பொருட் செல்வம் - சொத்தை அடையும் நான்கு வழிகள் - உடைமை, நீண்டகாலப் அனுபோக உரிமை, ஒப்பந்தம், வாரிசு உரிமை.

5. நபர்கள் (Persons)

சட்டத்தில் 'நபர்' என்று யாரை (எதை)ச் சொல்லு கிறோம்? சட்டப்படி விலங்குகளின் நிலை என்ன? இறந்தவர் கள், இனிப் பிறக்க விருப்பவர்கள் நிலை என்ன? நம்பிக்கைப் பொறுப்பமைப்பு (Trusteeship) கூட்டமைப்பு (Corporation) இவைகளின் தன்மை - கூட்டமைப்பிற்கும் (Company) பங்கமைப்பிற்கும் (Partnership) உள்ள வேறுபாடு-தொகுதிக் கூட்டமைப்பும் (Corporation aggregate) தனிக் கூட்ட மைப்பும் (Corporate sole). கூட்டமைப்பின் தோற்றமும், அழிவும்.

6. உரிமை மூலங்கள் (Titles)

'உரிமை மூலம்' என்றால் என்ன? முதல் உரிமை மூலம், மாற்றப்படும் உரிமை மூலம்—ஒரு தலைச் செயல்கள், உடன் பாட்டுச் செயல்கள்—உடன்பாடுகள்-'சம்மதத்தின்' அவசிய மும், தன்மையும்—ஒப்பந்தங்களின் வகைகள்-செல்லத் தக்க ஒப்பந்தங்கள், செலலுபடியாகாத ஒப்பந்தங்கள், தவிர்க்கத் தக்க ஒப்பந்தங்கள்—ஒப்பந்தத்தில் அடங்கும் "பிரதிபலனின்" அவசியமும், தன்மையும்.

7. பொறுப்பு (Liability)

பொறுப்பு என்பது என்ன? இருவகைப் பொறுப்புக்கள் - ஈடு செய்யும் பொறுப்பு, தண்டனை—குற்றம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது? செயல்கள் - செயலின் தன்மை இயங்கும் செயல், இயங்காச் செயல்—கருதிய செயல்கள் (Intentional acts) — கருத்தைக் காண்பது எவ்வாறு? கருத்தும், நோக்கமும் (Intention and motive)—குற்ற முயற்சி (Criminal attempts)-தவிர்க்க முடியாத செயல்கள் (Just necessitatis)—கவனமின்மை (Negligence)—சட்ட ஞான மின்மை (Mistake of law)—தவறுதலால் விளையும் தீமைகள் (Mistake of Facts)—எதிர்பாராச் செயல். (Accident)—பகரப் பொறுப்பு (Vicarious Liability).

8. தண்டனை (Punishment)

தண்டனை அளிப்பதன் நோக்கம்—அச்சுறுத்தல், பழி வாங்குதல், குற்றம் செய்யாதவாறு தடுத்தல், சீர்திருத்துதல் என்ற கொள்கைகள்—தண்டனையின் அளவு.

---

1. உரிமைகள் (Legal Rights)

நீதி வழங்குவதில் பின்பற்றப்படும் கொள்கைகளும், விதி முறைகளுமே "சட்டம்" என்றும், நீதி வழங்குதல் என்றால், ஒவ்வொருவருடைய உரிமைகளைப் பாதுகாத்து, அந்த உரிமைகளுக்கு ஊறுவிளைவிப்போரை அரசு தனது வலிமைகொண்டு ஒறுப்பது என்றும், முன்னர்க் கண்டோம். ஆகவே, சட்டவியலில் "உரிமை" என்ற சொல் சட்டவியலுக்கு ஆதாரமானதும், பொருள் செறிந்ததும் ஆகும்.

இனி, "உரிமை" என்றால் என்ன? அதன் உட்பொருள் என்ன? என்பதுபற்றி ஆராய்வோம்.

(i) உரிமை என்றால் என்ன?

நமது இன்பவாழ்விற்கு நம் நலன்களே அடிப்படையானவை. நமது சொத்து, தன்னுரிமை, புகழ், உடல்நலம் முதலிய நலன்களைப் (Interests) பொறுத்தே நம்முடைய இன்ப வாழ்வு அமைகின்றது. இந்த நலன்கள் பாதுகாக்கப்பட்டால் தான் வாழ்வாங்கு வாழமுடியும். ஆதலால், அரசு தனது அதிகாரத்தினால், நீதிமன்றங்கள் மூலம், நம் நலன்களைப் பேணிப் பாதுகாத்து நின்று, நமது வாழ்விற்கு வகைசெய்கிறது. இந்த நலன்களை அரசின் மூலமாகப் பாதுகாத்துக்கொள்வதற்கு நமக்கு அதிகாரம் வேண்டும். இந்த அதிகாரத்தை நமது உரிமை என்கிறோம்.[1] **ஆகவே, எந்தெந்த நலன்களை அரசு, நீதிமன்றங்கள் வாயிலாக, சட்டத்தின் மூலம், பாதுகாக்கின்றதோ அந்த நலன்களே நம் உரிமைகள் ஆகின்றன.** அதாவது, சட்டத்தினால் பாதுகாக்கப்படும் நலன்களை "**உரிமைகள்**" (Rights) என்று கூறுகிறோம். "Rights are legally protected interests."—Ihering.

உரிமை என்பதுபற்றி நாம் ஆராயும்பொழுது, இன்னாமை (தீங்கு-Wrong), கடமை (Duty) என்ற சொற்களின் உட்பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும். சட்டத்தில் இச் சொற்கள் என்ன பொருளில் கையாளப்படுகின்றன என்று பார்ப்போம்.

இன்னாமை என்பது என்ன?

இனிமை இல்லாதது 'இன்னாமை;' இன்பம் பயக்காத செயல் 'இன்னாத செயல்.' இன்பம் அளிக்காமல் துன்பம் தரும் செயலை— கேடு விளைவிக்கும் செயலை - தீங்கான செயலை - "இன்னாதசெயல்"

1. The right is not the interest itself; it is the means by which the enjoyment of the interest is secured.—Prof. Gray.

அல்லது "இன்னுமை" என்கிறோம். நமது நலனுக்குப் புறம்பான எல்லாச் செயல்களையும் நாம் "இன்னுமை" என்று பொதுவாகச் சொல்லுகிறோம்.

> "இன்னு எனத்தான் உணர்ந்தவை துன்னுமை
> வேண்டும் பிறன்கண் செயல்" (குறள் - 316)

நாம் நமக்கு இனியவை அல்ல என்று உணர்ந்த செயல்களைப் பிறர்பால் செய்யாமையே 'இன்னு செய்யாமை' என்பது. ஆனால், சட்டத்தில், இன்னுமை (Wrong) என்று குறிப்பிடுவது இன்னுச் செயல்கள் எல்லாவற்றையும் அல்ல. அழுக்காறுடைமை, அருள் இன்மை, அன்பு இன்மை, செய்ந்நன்றி அறியாமை, பொய்ம்மை இவை எல்லாமே அறநூலின்படி இன்னுமையின்பாற்படுவன. இவை அனைத்தையுமே சட்டம் தீங்காகக் கொள்வதில்லை. நடைமுறையில், பிறர் நலன்களுக்குக் கேடு விளைவிக்கும் தீய செயல்களையே இன்னுமை எனச் சட்டம் கருதுகிறது. ஆதலால், எந்தச் செயல்களைச் சட்டம், நியாயத்திற்குப் புறம்பானவாக, பிறருக்குத் தீமை விளைவிப்பனவாகக் கருதுகின்றதோ அந்தச் செயல்களனைத்தையும் இன்னுமை (Wrong) என்று நாம் கூறுகிறோம்.[1]

கடமை என்பது என்ன ?

நாம் எதைச் செய்யவேண்டுமோ, அதை நமது "கடமை" (Duty) என்கிறோம். கடமையில் தவறினால் இன்னுமை செய்தவர் ஆகிறோம்.[2] நமது வாழ்வில் பல காரியங்கள் நம் கடமைகளாக இருக்கின்றன. பெரியாரைப் பிழையாமை நமது கடமை; உண்மையே உரைத்தல் நம் கடமை: பெற்றோரைப் பேணலும் அதுவே. இவ்வாறு எத்தனையோ கடமைகள்.

> "கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
> சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு." (குறள் - 981)

நல்லவை எல்லாம் நமது இயல்பான கடமையாகும் என்பது இதன் பொருள். ஆனால், சட்டம் நற்பண்புகள் அனைத்தையும், நற்செயல்கள் எல்லாவற்றையும் ஒருவருடைய கடமைகளாகக் கருதுவதில்லை. நாம் எந்தெந்தச் செயல்களைச் செய்யத் தவறினால், அதனால், பிறருக்குக் கேடு விளைகின்றதோ, இன்னுமை ஆகின்றதோ, அந்தச் செயல்களே

1. A legal wrong "is an act which is authoritatively determined to be wrong by a rule of law, and is therefore treated as a wrong in and for the purposes of the administration of justice by the state."—Salmond.

2. "A duty is an obligatory act, that is to say, it is an act the opposite of which would be wrong."—Salmond.

சட்டப்படி நமது கடமைகள் ஆகின்றன. பிறருடைய நலன்களுக்காக எந்தச் செயல்களை நாம் செய்யவேண்டும் என்று சட்டம் விதிக்கின்றதோ அச் செயல்களே நம் கடமைகள்.

நாம் உண்மையே பேசவேண்டும் என்பது ஒழுக்கநெறி. அற, நூற்படி வாய்மை நமது கடமை. ஆனால், சட்டம், நாம் பிறரிடம் எப்பொழுதும் எங்கேயும் உண்மையே பேசவேண்டும் என்று விதிப்பது இல்லை. நீதிமன்றங்களில் வாக்கு மூலம் கொடுக்கும்பொழுது நாம் உண்மையையே உரைக்கவேண்டும் என்று சட்டம் விதிக்கின்றது. இதை மீறினால் குற்றம் எனக் கொள்கிறது. ஏனெனில், சான்று பகரும்பொழுது பொய் உரைத்தலால் நியாயம் வழங்கமுடியாமல், பிறரது நலனுக்குத் தீங்கு விளையலாம். ஆதலால், சட்டம் சாட்சியத்தில் உண்மையையே உரைக்கவேண்டும் என்று விதித்து அதை ஒவ்வொருவரின் கடமையாக்குகிறது.

"சட்டப்படியான உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, என்னென்ன செய்யவேண்டும் அல்லது செய்யக்கூடாது என்று அரசு விதிக்கிறதோ, அவைகளெல்லாம் சட்டப்படியுள்ள கடமைகள் ஆகின்றன" என்று பேராசிரியர் க்ரே கூறுகிறார்.[1]

ஆகவே, பிறர் நலனைப் பேணுவதற்காக, பிறர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென, சட்டம், நாம் எதைச் செய்யவேண்டும் என்று விதிக்கின்றதோ, அதைச் செய்தலும், நாம் எதைச் செய்தல் தகாது என்று தடுக்கின்றதோ, அதைச் செய்யாதிருத்தலும், சட்டப்படியுள்ள நமது கடமை (Legal duty) ஆகிறது. இந்தக் கடமையில் தவறும்பொழுது நாம் சட்டப்படியுள்ள இன்னமை (Legal wrong) செய்தவர்கள் ஆகிறோம்.

மனிதர்களின் நலன்களுக்குத் தொடர்பில்லாத செயல்களைப் பற்றி ஒழுக்கவியலோ, சட்டவியலோ அக்கறை கொள்வதில்லை. நம் வாழ்வின் நலன்களைச் சட்டத்தின் உதவிகொண்டு பாதுகாக்கும் அதிகாரமே நமது உரிமை எனக் கண்டோம். நம் நலன்களை அடிப்படையாய்க்கொண்டே நம் உரிமைகள் அமைகின்றன. ஒரு செயலில் நமக்கு உரிமை இருக்கிறது என்று சொன்னால், அதில் நமது நலன் இருக்கிறது என்பதே பொருளாகும். இவ்வாறு, நம் உரிமைகளெல்லாம் நம் நலன்கள் ஆகின்றன. ஆனால், நம் நலன்களெல்லாம் நம் உரிமைகளல்ல. சட்டம், நம் நலன்கள் சிலவற்றைத் தேர்ந்து, அவைகளைமட்டும் நம் உரிமைகளாக ஆக்குகின்றது.

1. "The acts or forbearances which an organised society commands in order to protect legal rights are the legal duties of the persons to whom those commands are directed."—Prof. Gray.

பிறரது நலனைப் பேணுவதற்காக ஒருவர் இன்ன செய்தல் வேண்டும், இன்ன செய்தல் கூடாது என்று சட்டம் விதிக்கிறது. அவ்வாறு செய்தலும், செய்யாது இருப்பதுமே ஒருவரது சட்டப் படியான கடமை எனக் கண்டோம். நமது, எந்தெந்த நலன்களைப் பேணுவதற்கென்று, சட்டம், பிறர்மீது கடமைகளை விதிக்கின்றதோ, அந்த நலன்களே நம் உரிமைகள் ஆகின்றன. ஆகவே, நமது நலனைச் சட்டம் உரிமையாகக் (Right) கொள்கிறதா இல்லையா எனக் காண்பதற்கு, அந்த நலனைக் காப்பாற்றப் பிறருக்குச் சட்டப்படி கடமை (Duty) இருக்கிறதா இல்லையா என நாம் பார்க்க வேண்டும். அந்த நலனுக்குப் புறம்பாகப் பிறர் நடப்பதை இன்னுமை(Wrong)யாகச் சட்டம் கொள்கிறதா என நோக்க வேண்டும்.

பருவமழை பெய்வதில் நம் நலன் இருக்கிறது. மழை பெய்தால்தான் நம் நிலம் விளையும். ஆனால், பருவமழை பெய்தல் நமது "உரிமை" என்று சொல்லமுடியுமா? முடியாது. ஏன்? மழை பெய்யச்செய்யும் கடமை எவருக்கும் இல்லை. ஆகவே, அதை நமது "உரிமை" என்று நாம் கொள்வதற்கு இல்லை. நமது வாணிபத்தைப் பெருக்குவதற்குப் பொருள் தேவைப்படுகிறது. இன்னொருவர் நமக்குக் கடன் கொடுத்து உதவிசெய்தால், நமக்கு நன்மை விளையும். கடன் பெறுவதில் நமது நலன் இருக்கிறது. ஆனால், கடன் பெறுவது நம் உரிமை என்று கொள்வது தவறு. ஏனெனில், நமக்குக் கடன் கொடுக்கவேண்டும் என்ற கடமை பிறருக்கு இல்லை.

நமது நிலத்தை அனுபவிப்பதில் நமது நலன் இருக்கிறது. நமது உடைமைக்கு ஊறு விளைவிக்காமல் இருக்கும் கடமை பிறருக்கு உண்டு. நமது அனுபோகத்தை இன்னொருவர் தடுத்தால், அது சட்டப்படி "இன்னுமை" ஆகிறது. இதனால், நம் நிலத்தின்மீதுள்ள நம் அனுபோகத்தை நமது "உரிமை" என்று சொல்லுகிறோம். இவ்வாறு, நமது நலனைப் பாதுகாக்கும், மதித்து நடக்கும், கடமை பிறருக்கு இருந்தால் அந்த நலனைப் பொறுத்து நமக்கு உரிமை இருக்கிறது.

என்னிடம் கடனாக வாங்கிய பணத்தை இன்னொருவர் எனக்குத் திருப்பித் தரவேண்டியிருக்கிறது. கடனைத் திரும்பப் பெறுவதே எனது நலன், இல்லாவிடில் நான் நட்டம் அடை கிறேன். கடன் திருப்பித் தரப்படவில்லையானால், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அவரிடமிருந்து கடனைத் திரும்பிப் பெறு கிறேன். சட்டம் எனக்குத் துணையாக நின்று, அந்தக் கடனைத் திரும்பப் பெறுவதற்கு உதவி செய்கின்றது. சட்டம் எனது நலனை ஒப்புக்கொண்டு பாதுகாக்கின்றது. இவ்வாறு, சட்டத்

தின் அங்கீகாரத்தையும், உதவியையும் பெறும் தகுதி, அதிகாரம், எனக்கிருப்பதால், கடனைத் திரும்பப் பெறுவது எனது "உரிமை" ஆகின்றது. கடன் வாங்கியவரைக் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி சட்டம் விதிக்கிறது, கட்டளை இடுகிறது. சட்டத்தின் உதவி கொண்டு, கடன் வாங்கியவரைக் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி செய்யும் அதிகாரமே எனது உரிமை எனப்படுகின்றது.

"அரசின் உடன்பாடும் உதவியும் கொண்டு, பிறரை, நம் நலன்களுக்கு ஏற்ற முறையில் நடக்கும்படி செய்யும் அதிகாரமே நமது உரிமை ஆகும்," என்று பேராசிரியர் ஹாலண்டு கூறுகிறார்.[1]

சட்டப்படியுள்ள தமது கடமைகளையே ஒருவர் செய்ய வேண்டியவர் ஆகிறார். நமது நலனைப் பொறுத்து மற்றொருவருக்குக் கடமை இருந்தால்தான் அந்த நலன் நமது உரிமை ஆகிறது. கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடமை கடன் பெற்றவருக்கு இருப்பதால்தான், அதன் மூலம் கடனைத் திரும்பப் பெறும் உரிமை எனக்கு ஏற்படுகிறது. அதாவது, கடன் பெற்றவருக்கு அதைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய கடமை, கடனைத் திரும்பப் பெறவேண்டிய எனது உரிமையாக இருக்கிறது. எனது உரிமை, கடன் பெற்றவரின் கடமை; அவரது கடமை, எனது உரிமை.

இவ்வாறாக கடமை என்றால் அதற்குச் சம்பந்தப்பட்ட உரிமை உண்டு; உரிமை என்றால் அதை ஒட்டிய கடமை உண்டு. உரிமை இன்றிக் கடமை இல்லை; கடமை இன்றி உரிமை இல்லை. பருந்தும் அதன் நிழலும்போல் உரிமையும் கடமையும் தொடர்ந்து நிற்பன. ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்போல் உரிமையும் கடமையும் அமைந்திருக்கின்றன.[2]

(ii) உரிமையில் உள்ள அம்சங்கள்

உரிமை என்றால் அதை உடையவர் ஒருவர் உண்டு. உடையவர் இல்லாத உரிமை இருக்கமுடியாது. ஒரு நபரை வைத்துத்தான் அவரது உரிமை பற்றிப் பேசுகிறோம். இந்த வீடு இராமனுக்குச் சொந்தம் என்று கூறுகிறோம். இராமனுக்கு இந்த வீட்டில் உரிமை இருக்கிறது என்பது இதன் பொருள். இராம

1. Legal right is "a capacity residing in one man of controlling with the assent and assistance of the state the actions of others."—Holland.

2. Rights and Duties are necessarily correlative. There can be no right without a corresponding duty, or duty without a corresponding right, any more than there can be a husband without wife, or a father without a child.—Salmond.

னுக்கும் வீட்டிற்கும் உள்ள தொடர்பைக் குறிப்பதுதான் உரிமை என்ற சொல். வீட்டின்மீது பாத்தியதை உள்ள ஒருவர் இருந்தால்தான், அவருக்கு உரிமையானது அந்த வீடு என்று சொல்ல முடிகிறது. ஆகவே, உரிமைக்கு உடையவர் இன்றி உரிமை என்று தனித்து எதையும் சொல்ல முடியாது. உரிமைக்கு உடையவர் ஒருவராக இருக்கலாம்; பலராக இருக்கலாம், பொதுமக்களாக இருக்கலாம், அல்லது இனிப் பிறக்க இருக்கும் குழந்தையாக இருக்கலாம். ஆனால், "உரிமை" என்றால் அதற்கு உடையவர் உண்டு.

உரிமை என்பதில் கீழ்க்கண்ட ஐந்து அம்சங்கள் உண்டு:

(1) உரிமையை உடைத்தான நபர்.

(2) உரிமையில் தோன்றும் கடமையைச் செய்ய வேண்டிய நபர்.

(3) உரிமையின் பயனாகச் செய்ய வேண்டிய செயல்.

(4) உரிமையைச் சார்ந்த பொருள்.

(5) உரிமை பெற்றவரது பாத்தியம்.

என்னிடம் கடன் வாங்கியவரிடமிருந்து, அந்தக் கடனைத் திரும்பப் பெறும் உரிமை எனக்கு உண்டு என்றால், அந்த உரிமையில் மேலே சொல்லப்பட்ட ஐந்து அம்சங்களும் இருக்கின்றன.

(1) கடன் கொடுத்த நான், உரிமைக்கு உடைத்தானவன்.

(2) கடன் பெற்றவர் கடனைத் திருப்பிக் கொடுக்கும் கடமையைச் செய்ய வேண்டியவர்.

(3) கடனைத் திருப்பிக் கொடுப்பது, உரிமையின் பயனாய்ச் செய்ய வேண்டிய செயல்.

(4) திரும்பப் பெறவேண்டிய பணம் உரிமையைச் சார்ந்த பொருள்.

(5) கடனைத் திரும்பப்பெறும் எனது பாத்தியம்.

உரிமைகள் ஒவ்வொன்றிற்கும் மேலே சொல்லப்பட்ட ஐந்து கூறுகள் உண்டு.

(iii) உரிமைக்கு இலக்கான பொருள்கள்

(1) பருப் பொருள்கள் (Material things): நிலம், வீடு, பணம், இவை போன்ற பல பருப் பொருள்கள் மீதுள்ள உரிமைகள் நமக்கு உண்டு. பெரும்பாலான நம் உரிமைகள் பருப் பொருள்களைப் பொறுத்தே இருக்கின்றன.

(2) உடலும் உயிரும்: நமது உடலுக்குப் பிறர் தீங்கிழைப்பதைத் தடுக்க நமக்கு உரிமையுண்டு. நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வது, சட்ட விரோதமாக நம்மைப் பிறர் சிறை வைப்பதைத் தடுப்பது இவைபோன்ற உரிமைகள் நமக்கு இன்றியமையாதவை.

(3) புகழ் (Reputation): பிறர் நம்மைப்பற்றிக் கொள்ளும் நல்ல எண்ணத்தைப் புகழ் என்கிறோம். நம் கையிலுள்ள பணத்தைப் பாதுகாப்பதற்கு நமக்கு உரிமை இருப்பது போலவே, நமது புகழுக்குக் கேடு வராமல் தடுப்பதற்கும் நமக்கு உரிமை உண்டு.

(4) குடும்ப வாழ்வு: மனைவி மக்களைப் பொறுத்து நமக்கு உரிமைகள் இல்லையெனில், இல்லற வாழ்வு இயலாததாகிவிடும். குழந்தைகளைப் பெற்றோரிடமிருந்து பிரிப்பது, பிறர் மனைவியை நயப்பது, இவைகளைச் சட்டம் தடுக்கிறது.

(5) நுண் பொருள்கள் (Immaterial property): புதிய முறையில் இயங்கும் இயந்திரத்தை ஒருவர் கண்டுபிடிக்கிறார். அவர் கண்ட புதிய முறையைப் பிறர் அப்படியே கையாளுவதைச் சட்டம் தடுக்கிறது. அதைக் கையாளும் உரிமை கண்டுபிடித்தவருக்கே உண்டு. இதை ஆங்கிலத்தில் "Patent rights" என்று கூறுவார்கள். இம்மாதிரியே, வாணிபத்திலும், ஒவ்வொரு வணிகரும் தாம் விற்கும் பொருளுக்கு என்று தனி அடையாளக் குறி (Trade mark) ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு, பிறர் அந்த அடையாளத்தைப் பயன்படுத்தாமல் தடுக்கலாம். நீண்ட நாள் நடந்து புகழ் பெற்ற வாணிபத்தின் விலாசத்திற்கு மதிப்பு உண்டு. அந்த விலாசத்தை எல்லோரும் பயன்படுத்த முடியாது. அந்த விலாசத்திற்கான உரிமையை Commercial Goodwill என்று கூறுவார்கள். வாணிபக் குறி, வாணிப விலாசம் முதலியவற்றையும் சட்டம் பொருள்களாகவே மதிக்கிறது. அவை பருப் பொருள்கள் அல்ல; நுண் பொருள்கள். இவைகளைப் பொறுத்துள்ள உரிமைகளை, நுண் பொருள்கள் மீதுள்ள உரிமைகள் (Rights over Immaterial property) என்று கூறுகிறோம்.

(6) உரிமைகள் மீதுள்ள உரிமைகள் (Rights in respect of other rights): தம் வீட்டை எனக்கு விற்பதாக என் நண்பர் என்னோடு ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார். அவர் அவ்வாறு விற்கும் வரை அவரது வீடு அவருக்கேதான் சொந்தமாகும். ஆனால், ஒப்பந்தத்தின் காரணமாக, அவரது வீட்டை எனக்கு விற்கும்படி செய்ய எனக்கு உரிமை உண்டு. வீட்டின்மேலுள்ள நண்பரின் உரிமையை நான் அடையும் உரிமை ஒப்பந்தத்தின் மூலம் எனக்கு ஏற்படுகிறது. ஆகவே, ஒப்பந்தத்தின் காரணமாக

நான் பெறும் உரிமை என் நண்பரின் உரிமை மீது இருப்ப தாகும். இது போன்று, ஒப்பந்தத்தின் காரணமாக எழும் உரிமைகள் பிறர் உரிமைகளைப் பொறுத்து இருப்பன.

இந்த வகையில், உரிமைக்கு இலக்கான பொருள்கள் பருப் பொருள்களாகவும், நுண் பொருள்களாகவும், உரிமைகளாகவும்? இன்னும் வாழ்வின் பல நலன்களாகவும் இருக்கின்றன.

(iv) உரிமை (Right), சுதந்திரம் (Liberty), அதிகாரம் (Power)

நமக்கு ஓர் உரிமை இருக்கிறது என்ருல், அது சம்பந்தமான கடமை இன்னொருவருக்கு உண்டு என்று பார்த்தோம். சில காரியங்களைப் பொறுத்து, நம் விருப்பப்படி நடப்பதற்குச் சட்டம் இடமளிக்கிறது. ஆனால், அவைகளைப் பொறுத்துப் பிறருக்குக் கடமை இல்லை. பொதுக் காரியங்கள் பற்றிப் பேசுவதற்கு நமக்குச் சுதந்திரம் இருக்கிறது. பொது வீதியில் விதிகளுக்கு உட்பட்டு நடந்து செல்லும் சுதந்திரம் எனக்கு இருக்கிறது. இவை களையும் உரிமைகள் என்று கூறினாலும் கூட இந்த உரிமைகள் சம்பந்தமான கடமைகள் பிறருக்கு இல்லை. இந்த உரிமைகளைப் பிறர் தடுக்கக் கூடாது என்பது தவிர, இந்த உரிமைகளைப் பொறுத்துப் பிறர் செய்யவேண்டிய குறிப்பிட்ட செயல்கள் (கடமைகள்) ஏதும் இல்லை. ஆகவே, இந்தவித உரிமையைச் சுதந்திரம் (Liberty) என்று கூறுகிறோம். சுதந்திரமும் உரிமையும் நம் நலன்களைப் பொறுத்தே இருக்கின்றன. **சுதந்திரம் என்பது நமக்கு நாமே செய்து கொள்ளும் காரியம்; உரிமை என்பது பிறர் நமக்குச் சட்டப்படி கட்டாயமாகச் செய்யவேண்டிய காரியம்.**[1] நமது நலனுக்காக நமக்கு நாமே எதைச் செய்து கொள்ளலாம் என்று சட்டம் இடந்தருகின்றதோ அது நம் **சுதந்திரம்**; நமது நலனைப் பேணும் வகையில் பிறர் ஒரு காரியத்தைக் கட்டாயமாக, கடமையாகச் செய்யவேண்டுமென்று சட்டம் விதித்தால் அது நமது **உரிமை**. நமது கருத்தை வெளியிடுவது நமது **சுதந்திரம்**; நமது கடனை மீட்பது நமது **உரிமை**.

சில வேளைகளில், மேலே சொன்ன **சுதந்திரம்**, **அதிகாரமாக** (Power) உருமாறுகிறது. என் சொத்தை விற்கும் உரிமை எனக்கிருக்கிறது. இந்த உரிமையைப் பொறுத்துப் பிறருக்குக்

1. Rights of the one class are concerned with those things which other persons *ought* to do for me; rights of the other class (Liberty) are concerned with those things which I *may* do for myself.—Salmond.

கடமை ஏதும் இல்லை. ஆனால், அந்த உரிமைகளை நாம் நடைமுறைப்படுத்தும் பொழுது, பிறர் உரிமைகள் உறுதி செய்யப் படுகின்றன. சுதந்திரங்கள் என்று சொல்லும் காரியங்களை என் விருப்பப்படி செய்யும் பொழுது, பிறர் உரிமைகள் ஏதும் பாதிக்கப்படவில்லை. இந்த நாட்டில் எங்கு வேண்டுமானாலும் தடையின்றிச் செல்ல எனக்குச் சுதந்திரம் உண்டு. அந்தச் சுதந்திரத்தை நுகரும் வகையில், நான் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குப் பிரயாணம் செய்கிறேன்; அதனால் பிறருடைய உரிமை ஒன்றும் பாதிக்கப்படுவது இல்லை. ஆனால், எனது வீட்டை இன்னொருவருக்கு விற்கும் பொழுது, அந்த வீட்டின்மீது உள்ள உரிமையை, வாங்குபவருக்கு நான் கொடுக்கிறேன். நான் வீட்டை விற்பதின் மூலம், வாங்குபவருக்கு வீட்டின்மீது உரிமை உண்டாகிறது; எனது உரிமை மறைகிறது. ஆகவே, பிரயாணம் செய்வதற்கு நமக்குள்ள உரிமையைச் சுதந்திரம் (Liberty) என்கிறோம்; நம் சொத்தை விற்பதற்கு நமக்குள்ள உரிமையை அதிகாரம் (Power) என்கிறோம்.

நம்முடைய அல்லது பிறருடைய, உரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள், இவற்றைச் சட்டப்படி உறுதி செய்யும் திறன்தான் "அதிகாரம்" எனப்படுகிறது.[1]

எனது நலனைப் பொறுத்து இன்னொருவர் செய்யவேண்டிய கடமை இருந்தால் அந்த நலன் எனது **உரிமையாகின்றது.** எனது நலனுக்காக என் விருப்பப்படி நான் செய்துகொள்ளும் காரியத்தைச் **சுதந்திரம்** என்கிறோம். இன்னொருவருடைய அல்லது நம்முடைய உரிமை, பொறுப்பு இவைகளை உறுதி செய்வதற்கு சட்டப்படி நம்மால் முடிந்தால், அந்தத் திறனை "**அதிகாரம்**" என்று அழைக்கிறோம்.

இதுவே **உரிமை, சுதந்திரம், அதிகாரம்** இம் மூன்றிற்கும் உள்ள வேறுபாடாகும்.

(v) பலவித உரிமைகள்

(அ) செயல்படும் உரிமைகள்; செயல்படா உரிமைகள் (Perfect and Imperfect Rights)

நம் உரிமைகள் அரசின் வலிமையால் பாதுகாக்கப்படுகின்றன. அதுவே நீதி செலுத்துவதாகும் என்று முன்னர்க்

1. A power may be defined as ability conferred upon a person by the law to determine, by his own will directed to that end, the rights, duties, liabilities or other legal relations, either of himself or other persons.—Salmond.

கண்டோம். எனது நிலத்தை இன்னொருவர் கவர்ந்துகொண்டால், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அந்த ஆக்கிரமிப்பை அகற்றும் உரிமை எனக்கு இருக்கின்றது. நீதிமன்றத்தின் உத்தரவைக் கவர்ந்துகொண்டவர் மீறமுடியாது. மீற முயன்றால் அரசு தனது வலிமைகொண்டு அவரை எனது நிலத்திலிருந்து அகற்றிவிடுகிறது. இவ்வாறு, நிலத்தின்மீது எனக்குள்ள உரிமை செயல்படுத்தப்படுகிறது.

ஆனால், சில உரிமைகள் செயல்படுத்தப்படுவதற்குத் தகுதியற்றவை ஆகிவிடுகின்றன. ஒருவர் ஒப்புச்சீட்டு (Pronote) எனக்கு எழுதிக்கொடுத்துக் கடன்பெறுகிறார். அந்தச் சீட்டு மூன்று வருடங்களுக்குத்தான் செல்லுபடியாக இருக்கிறது என்பது சட்டம். அல்லது, அந்த மூன்று ஆண்டுகளுக்குள், கடன் பெற்றவர் அந்தக் கடனைப் பொறுத்து மறுபடியும் ஒப்புதல் (Acknowledgement) செய்திருக்கவேண்டும். அவ்வாறு மறு ஒப்புதல் செய்த நாளிலிருந்து மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு அந்த ஒப்புதல் சீட்டு உயிர்பெறுகிறது. இத்தகைய மறு ஒப்புதல் இல்லையெனில் மூன்றாவது ஆண்டு முடிவில் சீட்டுக் காலாவதி ஆகிவிடுகிறது. அந்தக் காலம்கடந்த ஒப்புதல்சீட்டை வைத்து நான் வழக்குத் தொடரமுடியாது. அச்சீட்டுப் பயனற்றதாகி, வழக்குத் தொடர்வதற்குள்ள தகுதியை இழந்துவிடுகிறது. ஆகவே, கடனைத் திரும்பப்பெறும் எனது உரிமை செயல்படுத்தப் படமுடியாத உரிமை, செயல்படா உரிமை (Imperfect right) ஆகிவிடுகிறது.

ஒப்புதல்சீட்டுக் காலாவதி ஆகிவிட்ட காரணத்தால் கடனைத் திரும்பப்பெறும் உரிமையை நான் இழந்துவிடவில்லை. அந்த உரிமை அழிந்துபோகவில்லை. அந்த உரிமையை நீதிமன்றங்கள் மூலம் நடைமுறைப்படுத்த முடியாது என்பதுதான் ஒப்புச்சீட்டுக் காலாவதி ஆனதின் பலன். காலங்கடந்த ஒப்புதல்சீட்டுப் பாக்கிக்காகக் கடன்பெற்றவர் புதியதொரு ஒப்புதல்சீட்டு எழுதிக்கொடுத்தார் என்றால், இரண்டாவது ஒப்புதல்சீட்டு, சட்டப்படி செல்லத்தக்கதேயாகும். கடனாளியிடமிருந்து அந்தக் காலாவதியான ஒப்புச்சீட்டுக் கடனை வேறுவகையில் மீட்டுக்கொள்வதைச் சட்டம் தடுப்பதில்லை. பணத்தைத் திரும்பப்பெறும் உரிமையைச் சட்டம் ஒப்புக்கொள்ளுகின்றது. ஆனால், ஒப்புதல்சீட்டு காலம்கடந்துவிட்ட காரணத்தால் சட்டம் அதை நடைமுறைப்படுத்துவது இல்லை. இதுபோன்று, கால வரையறைச் சட்டத்தின்படி (Limitation Act) உரிமைகள் செயல்படுத்தப்படத் தகுதியற்றவை ஆகிவிடலாம்.

இந்த அடிப்படையில், நம் உரிமைகள் இருவகைப்படுவன. செயல்படுத்தப்படத் தகுதியுள்ள உரிமைகளைச் செயல்படும் உரிமைகள் (Perfect rights) என்றும், அதற்குத் தகுதியற்ற உரிமைகளைச் செயல்படா உரிமைகள் (Imperfect rights) என்றும், கூறுகிறோம்.

(ஆ) முழு உரிமைகள்; தனி உரிமைகள் (Real Rights and Personal Rights)

"முழு உரிமைகள், தனி உரிமைகள்" என உரிமைகளை இருவகையாகச் சொல்வதுண்டு.

எனது சொந்த வீட்டை அனுபவிப்பதற்கான எனது உரிமை "முழு உரிமை" என்று கூறப்படுகிறது. இந்த உரிமை உலகிலுள்ள அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடியது. எவரும் இந்த உரிமைக்கு எதிரான காரியத்தைச் செய்யக்கூடாது. எனது அனுபோகத்தை யாரும் எந்தவகையிலும் தடைசெய்வது முறையாகாது. இது "முழு உரிமை" (Rights *in rem*) எனப்படும்.

எனது வீட்டை இன்னொருவருக்கு வாடகைக்கு விடுகிறேன் எனில், வாடகையைப் பெறும் எனது உரிமை, குடியிருக்கும் நபரைப் பொறுத்துத்தான் எனக்கு உண்டு. வேறுயாரும் எனது வாடகைபெறும் உரிமைக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர். ஆகவே, இந்த இரண்டாவது உரிமை, "தனி உரிமை" (Rights *in personam*) என்று கூறப்படுகிறது,

இந்த முறையில் பார்த்தால், எனது பையிலுள்ள பணத்தை நான் செலவழிக்கும் உரிமை "முழு உரிமை"; கடன் வாங்கியவரிடமிருந்து பணத்தைத் திரும்பப்பெறும் உரிமை "தனிஉரிமை." எனது புகழைப் பாதுகாக்கும் உரிமை "முழு உரிமை"; எனது புகழுக்கு இழுக்கு நேரும்படி செய்தவரிடமிருந்து நட்டஈடு பெறும் உரிமை, "தனி உரிமை."

சாதாரணமாக, வீடு, நிலம், பணம் முதலிய பொருள்களைப் பொறுத்து நமக்குள்ள உரிமைகள், "முழு உரிமைகள்"; நபர்களைப் பொறுத்த உரிமைகள், "தனி உரிமைகள்."

ஏற்கெனவே சொல்லியபடி, ஒவ்வொரு உரிமையிலும் அந்த உரிமைக்குரிய பொருளும், அந்த உரிமைக்குக் கட்டுப்பட்ட நபரும் உண்டு. "முழு உரிமைகளை" குறிப்பிட்ட எந்த நபர் மீதும் நாம் நடைமுறைப்படுத்த முடியாது; எந்த நபர் நமது முழு உரிமைக்கு ஊறுவிளைவிக்கின்றாரோ, அவர்மீதுதான் நாம் நடவடிக்கை எடுக்கமுடியும். "முழு உரிமை"களைப் பொறுத்துக் குறிப்பிட்ட ஒரு கடமையைக் குறிப்பிட்ட ஒருவர் செய்யவேண்டும் என்பது இல்லை. இப்படியாக, "முழு உரிமை" குறிப்பிட்ட

நபர்கள்மீது இல்லாமல் ஒரு பொருளைப் பொறுத்தே இருக்கிறது. உரிமைக்கு இலக்கான பொருளே முழு உரிமையில் முக்கியத்துவம் பெறுகிறது. "தனி உரிமைகள்" குறிப்பிட்ட நபர்கள்மீது அமுல்நடத்தத் தக்கவை. அந்த உரிமைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள், அந்த உரிமைகளுக்கேற்ற கடமைகளைச் செய்யப் பொறுப்புள்ளவர்கள். இவ்வாறு, தனி நபர்களின் கடமையே தனி உரிமைகளில் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த அடிப்படையில், உரிமைகளை, முழு உரிமைகள் (Rights *in rem*), தனி உரிமைகள் (Rights *in personam*) என்று பாகுபடுத்தி இருக்கிறார்கள்.

(இ) ஆதார உரிமைகள்; பிரிக்கப்பட்ட உரிமைகள் (Rights *in re propria* and Rights *in re aliena*)

எனது நகையை இன்னொருவரிடம் அடகுவைக்கிறேன். இப்பொழுது, நகையை அடகாகப் பெற்றவருக்கும் எனக்கும் நகைமீது உரிமை இருக்கிறது. நான் கடனைத் தீர்க்கும் வரையில், நகையை ஈடாகத் தம்வசம் வைத்திருக்கவும், குறிப்பிட்ட கெடுவிற்குள் கடன் தீர்க்கப்படவில்லை எனில் நகையை விற்றுக் கடனை வரப்பற்றவும், ஈடுபெற்றவருக்கு உரிமை உண்டு. கடனைக் கொடுத்துவிட்டு நகையைத் திரும்பப்பெறும் உரிமை எனக்கு இருக்கிறது. இப்படி, ஒரே நகையைப் பொறுத்து இருவகையான உரிமைகள் இருக்கின்றன. நகையின் சொந்தக்காரனான நான் நகைமீதுள்ள எனது உரிமையை ஈடுவைத்து மாற்றியதாலேயே ஈடுபெற்றவருக்கு நகையைப் பொறுத்து உரிமை ஏற்பட்டது. ஈடுபெற்றவரது உரிமை எனது உரிமையிலிருந்து மாற்றப்பட்டது, அல்லது பிரிக்கப்பட்டது என்பது தெளிவாகும். ஆதலால், ஈடுபெற்றவருக்குள்ள உரிமை, "பிரிக்கப்பட்ட உரிமை" அல்லது "மாற்றப்பட்ட உரிமை" (Right *in re aliena*) என்று சொல்லப்படுகிறது.

ஈடுதாரரின் உரிமைக்குச் சொந்தக்காரரின் உரிமைதான் ஆதாரமானது. இந்த ஆதார உரிமையிலிருந்து மாற்றப்பட்ட உரிமையே ஈடுபெற்றவரின் உரிமையாக இருக்கிறது. நகையைப் பொறுத்து எனக்குள்ள அடிப்படை உரிமையை ஆதாரமாக வைத்தே பிரிக்கப்பட்ட உரிமை இயங்குகிறது. ஆக்வே, சொந்தக்காரனான எனக்கு நகைமீதுள்ள உரிமையை "ஆதார உரிமை" (Right *in re propria*) என்கிறோம்.

எனது வீட்டை இன்னொருவருக்கு வாடகைக்கு விடுகிறேன். வாடகைதாரருக்கு வீட்டில் குடியிருந்து அனுபவிக்கும் உரிமை இருக்கிறது. குடியிருப்பவரின் உரிமை, நான் எனது ஆதார

உரிமையில் ஒரு பகுதியை மாற்றியதாலேயே ஏற்பட்டதாகும். இப்பொழுது வாடகைதாரரின் உரிமை என்ஞல் மாற்றப்பட்ட அல்லது பிரிக்கப்பட்ட உரிமை ; எனது உரிமை ஆதார உரிமை.

(ஈ) அனுபோக வசதி உரிமை; அடங்கும் உரிமை (Dominant Right and Servient Right)

சில தறுவாய்களில், நமது சொத்தை அனுபவிப்பதற்கு இன்னெருவர் சொத்தின்மீது சில பாத்தியங்கள் அவசியமாகின்றன. எனது நிலத்திற்குப் போவதற்கு, இன்னெருவர் நிலத்தின் வழியாக நடந்து செல்லவேண்டிய அவசியம் இருக்கலாம். நான் அவரது நிலத்தின்மீது நடந்துசெல்லுவதை அவர் தடுக்கமுடியாது. அவ்வாறு நடந்துசெல்லும் உரிமை எனக்கு இருந்தால்தான் எனது நிலத்தை நான் அனுபவிக்க இயலும். ஆகவே, சட்டம் அந்த உரிமையை ஏற்றுப் பாதுகாக்கின்றது. இவ்வாறு, இன்னெருவரின் நிலத்தின்மீது நடந்து செல்லும் எனது உரிமை, எனது நிலத்தின் அனுபோக வசதிக்கு அவசியமாக இருக்கிறது. ஆதலால் இதை அனுபோக வசதி உரிமை (Dominant right or Easement) என்கிறேம். இன்னெருவருக்கு அவர் நிலத்தின்மீதுள்ள ஆதார உரிமை எனது அனுபோக வசதி உரிமைக்கு அடங்கியதேயாகும். ஆகவே, அவரது உரிமை அடங்கும் உரிமை அல்லது கட்டுப்பட்ட உரிமை (Servient right) என்று கூறப்படுகிறது.

இந்த முறையில், உரிமைகளின் தன்மையை நுணுகி ஆராய்ந்து, உரிமைகளைப் பலவகைகளாகப் பிரித்திருக்கின்றனர் சட்ட வல்லுநர்கள்.

2. சொந்தம், (சொத்துரிமை)
(Ownership)

"இந்த வீடு எனக்குச் சொந்தம்; இந்த நிலம் எனக்குச் சொந்தமானது," என்று சொல்லுகிறோம். இவ்வாறு கூறும்பொழுது, "சொந்தம்" என்ற சொல் என்ன பொருளில் பயன்படுகிறது? அந்தச் சொல்லின் உட்பொருள் என்ன?

"இராமனுக்கு முருகன் சொந்தம்," என்று கூறும்பொழுது 'சொந்தம்' என்ற சொல் 'உறவு' என்ற பொருளில் வருகின்றது. அதாவது, "இராமனும் முருகனும் உறவினர்கள்" என்று கூறுவதற்குப்பதிலாக, "இராமனுக்கு முருகன் சொந்தம்" என்கின்றோம். ஆகவே, "சொந்தம்" என்ற சொல் உறவை, சம்பந்தத்தைக் குறிக்கும் சொல் ஆகிறது. இந்த முறையிலேயே "இந்த வீடு எனக்குச் சொந்தம்" என்றால், "இந்த வீட்டிற்கும் எனக்கும் சம்பந்தம், உறவு இருக்கிறது" என்பதே பொருளாகும்.

உயிரற்ற பொருளான வீட்டிற்கும் எனக்கும் உறவு எப்படி இருக்க முடியும்? 'உறவு' என்றால் 'சம்பந்தம்', 'தொடர்பு' என்று பொருள். இரத்தக் கலப்புள்ளவர்களையே நாம் 'உறவினர்கள்' என்கிறோம். இவ்வாறிருக்க, ஆறறிவு படைத்த மனிதனுக்கும், நிலம், வீடு, பணம் முதலிய உயிரற்ற பருப்பொருள்களுக்கும் என்ன உறவு, சொந்தம் இருக்கமுடியும்? **பருப்பொருள்களுக்கும் நமக்கும் உள்ள 'சொந்தம்' உடலை ஒட்டிய உறவல்ல; அது எண்ணத்தில் எழும் உறவுதான்.**

நமது எண்ணத்திற்கும் பருப்பொருளுக்கும் உறவு எப்படி ஏற்படுகிறது? எண்ணம் என்பது மன நிகழ்ச்சி. அந்த மன நிகழ்ச்சி எவ்வாறு ஒரு திடப்பொருளுடன் தொடர்பு அல்லது உறவு கொள்ள முடியும்? எண்ணத்தின் தொடர்பு அந்தப் பொருளோடு இருக்கமுடியாது; அந்தப் பொருளைப் பயன்படுத்தும் உரிமையோடு உறவுகொள்ளும் எண்ணத்தையே "எண்ண உறவு" என்கிறோம். **'இந்தப் பொருள் எனக்குச் சொந்தமானது' என்று நாம் சொல்லும்பொழுது, 'இந்தப் பொருளைப் பயன்படுத்தும் உரிமை என்னுடையது' என்ற எண்ணத்தையே, நாது எண்ணத்திற்கும் அந்தப் பொருளைப் பயன்படுத்தும் உரிமைக்கும் உள்ள உறவையே, குறிப்பிடுகின்றோம்.** அதாவது, 'ஒரு பொருள் எனக்குச் சொந்தம்' என்றால் 'அந்தப் பொருளைப் பொறுத்த உரிமை என்னுடையது என்று எண்ணுகிறேன்' என்பதுதான் கருத்து. **ஒரு பொருளைப் பொறுத்த உரிமைக்கும் எனது எண்ணத்திற்கும் உள்ள சம்பந்தத்தையே, "இந்தப் பொருள் எனக்குச் சொந்தம்" என்பதில் உள்ள 'சொந்தம்' என்ற சொல் உணர்த்துகிறது.**

வீட்டின்மீதுள்ள உரிமை என்னுடையது; நிலத்தைப் பொறுத்த உரிமை என்னைச் சேர்ந்தது. எனக்கு அந்த வீட்டையும் நிலத்தையும் பொறுத்து உரிமைகள் இருப்பதால், அந்த வீட்டையும் நிலத்தையும் எனக்குச் சொந்தமானவை என்கிறேன். அந்த வீட்டை விற்கும் உரிமை, ஒத்தியோ ஈடோ வைக்கும் உரிமை, நானே குடியிருந்து அனுபவிக்கும் உரிமை, பிறருக்கு வாடகைக்கு விடும் உரிமை, இதுபோன்ற உரிமைகள் எனக்குச் சொந்தமானவை. வீட்டைப் பொறுத்த உரிமைகள் எனக்குச் சொந்தமாக இருப்பதால், அந்த வீடு எனக்குச் சொந்தமானது என்று கூறுகிறேன். வீட்டின் மீதுள்ள உரிமைகள் எனக்குச் சொந்தம் என்று சொல்லுவதற்குப் பதிலாக, அந்த வீடு எனக்குச் சொந்தம் என்கிறேன். ஆகவே, "வீடு எனக்குச் சொந்தம்" என்றால், அதன்மீதுள்ள உரிமைகள் எனக்குச் சொந்தம் என்பதே பொருள். இதிலிருந்து, சொந்தத்திற்கு உரிய பொருள் வீடாகிய பருப்பொருள் அல்ல, அதைப் பொறுத்துள்ள உரிமைகள்தான் என்பது தெளிவாகிறது.

'எனது நிலத்தை விற்றேன்' என்றால், அந்த நிலத்தின் மீது எனக்கிருந்த உரிமைகளை விற்றேன் என்பதுதான் பொருள். ஒரு பொருளின்மீதுள்ள உரிமைகளைக் குறிப்பதற்கு, அந்த உரிமைகளுக்கு இலக்கான பொருளையே குறிப்பிட்டுப் பேசுகிறோம். இவ்வாறு கூறுவதால், கருத்தைப் புரிந்துகொள்வது எளிதாகிறது. 'உரிமை' காணமுடியாத நுண்பொருள்; உரிமைக்கு இலக்கான பொருள், கண்ணால் பார்க்கும்படியான பருப்பொருள். ஆதலால், 'நிலத்தின்மீதுள்ள உரிமை' என்பதற்குப் பதிலாக, 'நிலம்' என்றும், 'வீட்டைப் பொறுத்த உரிமை' என்பதற்குப் பதிலாக, 'வீடு' என்றும் புரியும்படி கூறுகிறோம். இப்படியாக, உரிமைகளைக் குறிக்கும் நோக்கத்துடன், அந்த உரிமைகளுக்கு இலக்கான பொருள்களைச் சுட்டிப் பேசுகிறோம். இவ்வாறு, ஒன்றைக் குறிக்கும் சொல்லை மற்றொன்றிற்குத் தந்துரைப்பது "இலக்கணை" (Metonymy) என்ற மரபாகும்.[1]

ஆகவே, சொந்தத்திற்கு உரியவை உரிமைகள்தாம் (Rights) என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சட்டத்தில், உரிமைகளைத்

1. ....We identify by way of metonymy the right with the material thing which is its object. This figure of speech is no less convenient than familiar. The concrete reference to the material object relieves us from the strain of abstract thought ....So we speak of owning, acquiring, or transferring, not rights in land or chattels, but the land or chattels themselves. —Salmond.

தவிர வேறு எதையும் சொந்தத்திற்கு இலக்கான பொருளாகச் சொல்லமுடியாது. ஒவ்வொரு மனிதனின் உரிமைகளும் அவனுக்குச் சொந்தமானவை. ஒருவருக்குச் சொந்தமானது என்று சொன்னால், அந்தச் சொந்தம் ஓர் உரிமையைப் பொறுத்தே இருப்பதாகும்.[1]

'சொந்தம்' என்ற சொல்லின் விளக்கத்தை நாம் தெரிந்து கொண்டோம். ஒரு நபருக்கும் அவருடைய உரிமைகளுக்கும் உள்ள தொடர்பைக் குறிப்பதற்குத்தான் 'சொந்தம்' என்ற சொல் பயன்படுகிறது.[2]

சொந்தத்தின் (சொத்துரிமையின்) வகைகள்

(அ) பருப்பொருள் சொந்தம்; நுண்பொருள் சொந்தம் (Corporeal and Incorporeal Ownership)

ஒரு பருப்பொருளைப் பொறுத்துப் பல உரிமைகள் இருக்கலாம். அந்த உரிமைகள், ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்குப் பாத்தியமுடையவையாகவும் இருக்கலாம். ஒரு பொருளின் மாற்றப்பட்ட உரிமை (Rights *in re aliena*) ஒருவரிடமும், அதன் அடிப்படை அல்லது ஆதார உரிமை (Rights *in re propria*) இன்னொருவரிடமும் இருப்பது இயல்பு.

எனக்குச் சொந்தமான வீட்டை ஒருவருக்கு வாடகைக்கு விட்டிருக்கிறேன். அதை ஈடாக வைத்துக் கடனும் பெற்றிருக்கிறேன். இப்பொழுது அந்த வீட்டைப் பொறுத்து என்னைத் தவிர இன்னும் இருவருக்கு உரிமைகள் இருக்கின்றன. வாடகைக்குக் குடி இருப்பவருக்கு அந்த வீட்டில் குடி இருந்து அனுபவிக்கும் உரிமையும், ஈடுபெற்றவருக்கு அந்த வீட்டின்மீது ஈடு உரிமையும் (Mortgage Right) உண்டு. இந்த உரிமைகள் அவர்களுக்கு இருப்பதை வைத்து வாடகைதாரரையோ, ஈடுபெற்றவரையோ வீட்டின் சொந்தக்காரராக நாம் கொள்வதில்லை. வீட்டில் குடி இருக்கும் உரிமை வாடகைதாரருக்கு இருப்பதால் வீடு அவருக்குச் சொந்தமாகிவிடுவதில்லை; வீடு எனக்கேதான் சொந்தமாக இருக்கிறது. வாடகைதாரரின் உரிமைக்கும், ஈடு பெற்றவரின் உரிமைக்கும், வீட்டைப்பொறுத்து எனக்குள்ள உரிமைக்கும் உள்ள வேறுபாடு என்ன? நாம் முன்னரே கூறியபடி, முதல் இரு உரிமைகளும் பிரிக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட

1. Every right is owned; and nothing can be owned except a right.—Salmond.

2. Ownership, in its most comprehensive signification, denotes the relation between a person and any right that is vested in him. That which a man owns is in all cases a right. —Salmond.

உரிமைகள் (Rights *in re aliena*). சொந்தக்காரனுடைய எனது உரிமை அடிப்படை அல்லது ஆதார உரிமை (Rights *in re propria*).

வீட்டின் ஆதார உரிமை என்னுடையதாக இல்லையெனில், என்னால், வீட்டை வாடகைக்கு விடவோ, ஈடுவைக்கவோ முடியாது. எனது உரிமையை ஆதாரமாக வைத்துத்தான் வாடகைதாரரின் உரிமையும், ஈடுபெற்றவரின் உரிமையும் இயங்குகின்றன. அந்த வீட்டை விற்பது, அல்லது இன்னொருவருக்கு அந்த வீட்டைப்பொறுத்து மாற்றப்பட்ட உரிமைகளை ஏற்படச் செய்வது, இதற்கான அதிகாரம், ஆதார உரிமைதாரருக்கே உண்டு. இந்த ஆதார உரிமையை அடிப்படையாகக் கொண்டே, அதன் பாகங்களாகவே, மற்ற மாற்றப்பட்ட உரிமைகள் விளங்குகின்றன. ஆகவே, இந்த ஆதார உரிமையை, அந்த உரிமைக்கு இலக்கான பருப்பொருளாகவே, (வீட்டைப் பொறுத்த ஆதார உரிமையை வீடாகவே) பாவிக்கிறோம். **ஆதலால், வீட்டின் ஆதார உரிமை அல்லது அடிப்படை உரிமை யாருக்குச் சொந்தமாக இருக்கின்றதோ, அவருக்கு வீடு சொந்தம் என்கிறோம்.**[1]

[Rights *in re propria* என்ற லத்தீன் மொழியிலுள்ள சொற்றொடருக்கு ஏற்ற சொல் ஆங்கிலத்தில் கிடையாது. ஆதலால், அதை Ownership (சொந்தம்) என்றே ஆங்கிலத்தில் கூறுகிறார்கள். தமிழிலே நாம் அதை **ஆதார உரிமை** அல்லது **சொத்துரிமை** என்று கூறுவது பொருந்தும்.[2]]

ஆகவே, ஒரு பொருளைப் பொறுத்து ஆதார உரிமை அல்லது சொத்துரிமை யாருக்கு இருக்கிறதோ, அவரை அந்தப் பொருளின் சொந்தக்காரர் என்கிறோம். **ஒரு பருப்பொருள் எனக்குச் சொந்தம் என்றால், அந்தப் பொருளைப் பொறுத்த ஆதார உரிமை-சொத்துரிமை என்னுடையது என்பதே பொருள்.**[3] **இதுவே, "சொந்தம்" அல்லது "சொத்துரிமை" என்ற சொல்லின் உட்பொருளாகும்.**

இதுவரை கூறப்பட்டது பருப்பொருள் சொந்தத்திற்குப் (Corporeal Ownership) பொருந்துவதாகும்.

1. Ownership may be described as the entirety of the powers of use and disposal allowed by law.—Pollock.

2. Unfortunately for the lucidity of legal nomenclature, there is, unless we are prepared to use the somewhat awkward Latin term *jus in re propria*, no other name for it than *ownership* itself..............—Salmond.

3. He, then, is the owner of a material object, who owns a right to the general or residuary uses of it.—Salmond.

ஒரு பருப்பொருள் மீதுள்ள ஆதார உரிமை யாருடையதாக இருக்கிறதோ, அவருக்கே அந்தப் பொருள்மீது சொந்தம்—சொத்துரிமை—இருக்கிறது எனப் பார்த்தோம். பருப்பொருளைப் பொறுத்த ஆதார உரிமை ஒருவருக்குச் சொந்தமாக இருப்பது போலவே, அதைப்பொறுத்த மாற்றப்பட்ட உரிமைகள் இன்னொருவருக்குச் சொந்தமாக இருக்கலாம். வீட்டின் ஆதார உரிமை அதன் சொந்தக்காரரிடத்திலும், அதன்மீதுள்ள ஈடு உரிமை அந்த வீட்டை ஈடாகப் பெற்றவரிடமும் இருக்கலாம். இவ்வாறே, இன்னொருவரிடமிருந்து கடனைத் திரும்பப்பெறும் உரிமையும் ஒருவருக்கு இருக்கிறது. மாற்றப்பட்ட உரிமையான ஈடு உரிமை போன்றவைகளும் ஒருவருக்குச் சொந்தமான உரிமைகளே. இம்மாதிரியான மாற்றப்பட்ட உரிமைகள் ஒருவருக்குச் சொந்தமாக இருக்கும்போது, அந்த உரிமைகளை அவைகளுக்கு இலக்கான பருப்பொருள்களோடு ஒன்றுக்கி நாம் பேசுவதில்லை. அந்த உரிமைகள் மட்டுமே தனித்துச் சொந்தத்திற்கு இலக்காக இருக்கின்றன. இவ்வாறு, உரிமைகளை மட்டும் பொறுத்த சொந்தத்தை **நுண்பொருள் சொந்தம்** (Incorporeal Ownership) என்கிறேம். ஆதார உரிமையே ஒருவருக்குச் சொந்தமாக இருந்தால் அதைப் பருப்பொருள் சொந்தம் என்று கூறுகிறேம். ஏனெனில், ஆதார உரிமையின் சொந்தம் அதற்குரிய பருப்பொருள்மீதுள்ள சொந்தமாகவே பாவிக்கப்படுகிறது.

நுண்பொருள் சொந்தத்திலும், பருப்பொருள் சொந்தத்திலும் சொந்தத்திற்கு இலக்காக இருப்பது உரிமையேதான்; முன்னதிலுள்ள உரிமை, மாற்றப்பட்ட உரிமை; பின்னதில் அடங்கிய உரிமை, ஆதார உரிமை—சொத்துரிமை. ஒரு பொருள்மீது சொத்துரிமை உடையவர் அந்தப் பொருளுக்கே சொந்தக்காரர் ஆகிவிடுகிருர்; அந்தப் பொருளைப் பொறுத்த மாற்றப்பட்ட உரிமைகளை உடையவர்கள் அந்த உரிமைகளுக்கு மட்டுமே சொந்தக்காரர்கள் ஆகிருர்கள். **சொத்துரிமையின் சொந்தம் பருப்பொருள் சொந்தமாகவே கருதப்படுவதால் அது பருப்பொருள் சொந்தம் (Corporeal Ownership) என்றும், மாற்றப்பட்ட உரிமைகளின் சொந்தம், அந்த உரிமைகளை மட்டும் பொறுந்த சொந்தமாகக் கருதப்படுவதால், அது நுண்பொருள் சொந்தம் (Incorporeal Ownership) என்றும் கூறப்படுகிறது.**

இதுவே, நுண்பொருள் சொந்தத்திற்கும், பருப்பொருள் சொந்தத்திற்கும் உள்ள வேறுபாடாகும்.

(ஆ) தனிச்சொந்தம்; கூட்டுச்சொந்தம் (Sole ownership and Co - ownership)

சாதாரணமாக ஒரு பொருளைப் பொறுத்த சொத்துரிமை ஒருவருக்கே இருக்கும். சில வேளைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட

நபர்களுக்கு ஒரே பொருளின்மீது சொத்துரிமை இருக்கலாம். மூன்று பேர்கள் சேர்ந்து பணம் போட்டு ஒரு நிலத்தை வாங்குகிறார்கள். இவ்வாறு வாங்கப்பட்ட நிலம் அந்த மூன்றுபேர்களுக்கும் சொந்தமாக இருக்கிறது. அந்த நிலத்தை மூன்றாகப் பங்கிட்டு நிலத்தை வாங்கியவர்கள் தனித்தனியாகத் தங்கள் பாகங்களைப் பிரித்துக்கொள்ளலாம். ஆனால் அவ்வாறு பிரிப்பதற்கு முன், அந்த நிலத்தின் இன்ன பாகத்தின்மீதுள்ள தனி உரிமை இன்னாருக்கு இருக்கிறது என்று சொல்லமுடியாது. முழு நிலத்தின்மீதுள்ள உரிமை மூவருக்கும் பொதுவாக இருக்கிறது. மூவரும் கூட்டாக அந்த உரிமைக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு, அந்த மூவருக்கும் கூட்டாக அந்த நிலத்தின் மீதுள்ள சொத்துரிமையைக் கூட்டுச்சொந்தம் (Co-ownership) என்கிறோம்.

அதாவது, பிரிக்கப்படாத சொத்துரிமை, ஒன்றுக்கு மேற்பட்ட பேர்களைச் சேர்ந்ததாக இருந்தால் அது கூட்டுச்சொந்தம் என்று கூறப்படுகிறது.[1] அந்த உரிமை, ஒருவரை மட்டுமே சேர்ந்ததாக இருந்தால், அதைத் தனிச்சொந்தம் (Sole Ownership) என்று கூறுகிறோம்.

(இ) டிரஸ்டியின் சொந்தம்; பலனுக்கு உரியவரின் சொந்தம் (Trust and Beneficial Ownership)

நான் எனது சொத்தை என் தம்பியின் பெயருக்கு எழுதி வைத்து, அந்தப் பத்திரத்திலேயே என் தம்பி அந்தச் சொத்தின் வருமானத்தை, வயதுவராத (minor) என் மகனின் கல்விக்காகச் செலவழிக்கவேண்டும் என்றும் எழுதிவைக்கிறேன். இப்பொழுது, என்னால் எழுதிவைக்கப்பட்ட சொத்திற்கு இரண்டு சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவர் என் தம்பி; மற்றொருவர் என் மகன். என் தம்பி அந்தச் சொத்தின் பலனை என் மகனுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார். தம்பி அந்தச் சொத்தின் டிரஸ்டி (பொறுப்பாளர்) ஆகிறார். என் மகன் அச் சொத்தின் பலனுக்கு உரியவராக, நலன் பெறுபவராக இருக்கிறார். என் தம்பிக்கு டிரஸ்டி என்ற முறையில் சொத்தின்மீது சொந்தம் (Trust Ownership) இருக்கிறது. என் மகனுக்கு அந்தச் சொத்தின் பலனுக்கு உரியவன் என்ற முறையில் சொந்தம் (Beneficial Ownership) இருக்கிறது.

என் தம்பி அச் சொத்தைத் தனது நலனுக்காக அனுபவிக்க முடியாது; அதன் வருமானத்தை அவர் எடுத்துக்கொள்ள

1. Co-ownership involves the undivided integrity of the right owned.—Salmond.

முடியாது. ஆகவே, அவருக்கு அச் சொத்தின்மீதுள்ள சொந்தம் பெயரளவில்தான் இருக்கிறது. என் மகனின் பிரதிநிதியாகவே அவர் சொத்தை ஆளுகிறார். என் தம்பியையும் மகனையும் எடுத்துக்கொண்டால், என் மகனே சொத்தின் உண்மையான சொந்தக்காரன், அதன் பலனுக்கு உரியவன் (Beneficiary). என் தம்பிக்குச் சொத்தின்மீதுள்ள சொந்தம் பெயரளவில்தான். ஏன் மகனுக்காக, என் மகனின் நலனுக்காக, அச்சொத்தை ஆளும் கடமை டிரஸ்டியாகிய என் தம்பிக்கு இருக்கிறது. ஆனால், உலகத்தில் வேறு எவரைப் பொறுத்தும் டிரஸ்டிக்குக் கடமை கிடையாது. மற்றவர்கள் டிரஸ்டியையேதான் சொத்தின் சொந்தக் காரராகக் கொள்ளவேண்டும். டிரஸ்டுச் சொத்தைப் பொறுத்த விவகாரங்களில் பிறருடன் ஈடுபடும்பொழுது, டிரஸ்டி, தனக்காக மட்டும் இன்றிப் பலனுக்குரியவரின் சார்பாகவும் ஒப்பந்தம் முதலியன செய்துகொள்ளுகிறார். பலனுக்கு உரியவர் மூன்றாவது ஆட்களிடம் டிரஸ்டுச் சொத்தைப் பொறுத்து எந்தச் செயல்க ளிலும் நேரிடையாக ஈடுபட முடியாது. அந்த உரிமை டிரஸ்டிக்கே உண்டு. உலகத்தைப் பொறுத்தவரை, டிரஸ்டுச் சொத்துக்கு உரியவர்—சொந்தக்காரர்—டிரஸ்டிதான். டிரஸ்டியையும் பலனுக் குரியவரையும் பொறுத்தவரை, அச் சொத்தின் சொந்தக்காரர் பலனுக்குரியவர்தான். இவ்வாறு டிரஸ்டு சொத்தில், டிரஸ்டி, பலனுக் குரியவர், இருவருக்கும் சொந்தம் இருக்கிறது. இதுதான் டிரஸ்டு ஏற்பாட்டிலுள்ள தனி அம்சம்.[1]

தனது நலனைக் கவனிக்க இயலாதவர்கள், வயதுவராத சிறுவர்கள். இனிப் பிறக்க இருக்கும் குழந்தைகள், இவர்களின் நலனுக்காக டிரஸ்டுகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஒரு சொத்தின் பலனைப் பலர் அனுபவிக்க வேண்டுமெனில், அவர்கள் அனைவரும் அச் சொத்தை ஆண்டு அனுபவிக்க முடியாதாகையால் அச் சொத்திற்கு டிரஸ்டிகளை நியமிப்பது உண்டு.

டிரஸ்டி தனது உரிமையை இன்னொருவருக்கு மாற்றலாம். அதுபோலவே, பலனுக்கு உரியவர் தனது உரிமையைப் பிறருக்கு மாற்றலாம். இவ்வாறு இரண்டுவிதச் சொந்தங்களும் மாற்றப் படலாம்.

1. "Trust property is that which is owned by two persons at the same time, the relation between the two owners being such that one of them is under an obligation to use his ownership for the benefit of the other. The former is called the trustee, and his ownership is trust-ownership; the latter is called the beneficiary, and his is beneficial ownership."—Salmond.

ஒரே சொத்தின்மீது இருவித சொந்தங்கள் இருப்பதற்கு டிரஸ்டு ஏற்பாடு ஓர் உதாரணமாகும்.

(ச) நிறைவுள்ள சொந்தம்; நிபந்தனையுள்ள சொந்தம் (Vested and Contingent Ownership)

• நிறைவுள்ள சொந்தம் (Vested Ownership), நிபந்தனையுள்ள சொந்தம் (Contingent Ownership) என்று சொந்தம் இரண்டு வகைப்படும்.

ஒருவருக்கு ஒரு பொருள்மீதுள்ள சொந்தம், பாத்தியதை, குறைவின்றி நிறைந்ததாக இருந்தால், அதை "நிறைவுள்ள சொந்தம்" என்பார்கள். அந்தப் பாத்தியதை இப்போது குறைவுள்ளதாகவும் இனி நடக்கவிருக்கும் நிகழ்ச்சிக்குப்பின் குறைவற்றதாகவும் ஆகலாமெனில், அதை "நிபந்தனை உடைய சொந்தம்" என்பார்கள். நிறைவுள்ள சொந்தம் குறைவற்றது, முழுமையானது (Perfect). நிபந்தனையுள்ள சொந்தம் குறையுள்ளது, நிபந்தனைக்கு உட்பட்டது (Conditional).[1]

ஒருவர் தனது சொத்தைத் தன் மனைவிக்கும், அவள் ஆயுளுக்குப் பின் தன் மூத்த மகனுக்கும் சேரவேண்டுமென்று எழுதிவைக்கிறார். மனைவிக்கு முன்னாலேயே, ஒருவேளை, தன் மூத்தமகன் இறந்துவிட்டால், சொத்து தன் இளைய மகனுக்குச் சேரவேண்டுமென்று எழுதிவைக்கிறார். இப்பொழுது அவர் மனைவிக்கு அச் சொத்தின்மீதுள்ள சொந்தம் நிறைந்த, குறைவற்ற சொந்தமாகும். மூத்தமகனுக்கும் இளையமகனுக்கும் சொத்தைப் பொறுத்துச் சொந்தம் உண்டு. ஆனால், அது நிபந்தனை உடைய சொந்தம். தன் தாயார் இறந்தபிறகு மூத்தமகன் உயிரோடு இருந்தால்தான், மூத்தமகனுக்கு அச் சொத்தைப்பொறுத்த சொந்தம் ஏற்படுகிறது. இவ்வாறே, மூத்த மகன் தன் தாயாரின் ஆயுட்காலத்திலேயே காலமாகி, அதன்பின் தாயும் இறந்தபின்தான் இளையமகனுக்குச் சொத்தின்மீது சொந்தம் ஏற்படுகிறது. இம்மாதிரியான நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருப்பதால்தான், மகன்களுக்குள்ள சொந்தம் "நிபந்தனையுள்ள சொந்தம்" எனப்படுகிறது.

ஒருவருக்கு நான் வாரிசாக இருக்கிறேன். அவர் இறந்த பிறகு அவரது சொத்து எனக்குச் சொந்தமாகப்போகிறது.

1. Ownership is either vested or contingent. It is vested when the owner's title is already perfect; it is contingent when his title is as yet imperfect, but is capable of becoming perfect on the fulfilment of some condition.—Salmond.

இதை வைத்துக்கொண்டு, அவர் இறப்பதற்கு முன்பே அவரது சொத்தில் "நிபந்தனையுள்ள சொந்தம்" எனக்கிருக்கிறது என்று சொல்லமுடியாது. இது "எதிர்பார்க்கும் வாரிசு பாத்தியம்" என்றே (Spes successionis) கருதப்படுகின்றது. இதை ஓர் உரிமையாகச் சட்டம் கருதுவதில்லை.

"நிபந்தனையுடைய சொந்தம்" என்றால், இன்று இருக்கும் சொந்தம் குறைவுள்ளது, ஆனால் எதிர்காலத்தில் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி நடந்தபின், நிபந்தனை நிறைவேறிய பின், அந்தச் சொந்தம் நிறைவுள்ளதாகிறது என்பதே பொருள்.[1]

இவ்விதமாக, சொந்தம், நிறைவுள்ள (Vested) சொந்தம், நிபந்தனைக்குட்பட்ட (Contingent) சொந்தம் என இருவகைப்பட்டதாக இருக்கின்றது.

"சொந்தம்" என்றால் என்ன என்பது பற்றியும், அச் சொல்லின் உட்பொருள் பற்றியும், "பருப்பொருள் சொந்தம்," "நுண்பொருள் சொந்தம்" இவை குறித்தும், சொந்தங்களின் வகைகளைப் பற்றியும் இந்த அத்தியாயத்தில் ஆராய்ந்தோம்.

---

1. Contingent ownership is based not upon the mere possibility of future acquisition, but upon the present existence of an inchoate or incomplete title.—Salmond.

3. உடைமை (Possession)

அன்புடைமை, அருளுடைமை, பண்புடைமை, இவைபோன்ற உடைமைகளை ஒழுக்க நூல்கள் உயர்வாகப் பேசுகின்றன. சட்ட நூலிலே, நாம், 'உடைமை' என்று கூறும்பொழுது பொருளுடைமையையே குறிக்கின்றோம். "பொருள்" என்றால் இவ்வுலகவாழ்விற்கு வேண்டிய பணம், வீடு, நிலம் முதலிய செல்வங்களேயாகும். இந்தப் பொருள்களைப் பொறுத்த உடைமை நம் இன்பவாழ்விற்கு இன்றியமையாதது. ஆகவே, சட்டநூலில் "உடைமை" என்ற சொல் மிகவும் முக்கியமானது. அச் சொல்லின் உட்கருத்தைப் புலப்படுத்துவது சட்டநூலில் ஒரு சிக்கலான பகுதியாகும்.[1] இருப்பினும், இதை ஊக்கத்துடன் உணர்ந்து கொள்ள முற்படும்பொழுது, அது எளிதான கருத்தாக மாறுவதை நாம் காணலாம்.

நமது அனுபோகத்திலுள்ள பொருளை நம் உடைமையில் இருக்கிறது என்று கூறுகிறோம். எந்தச் சொத்தும் நமது உடைமையில் இருந்தால்தான் நேரிடையாக அதை நாம் அனுபவிக்க முடிகிறது. ஒரு பொருளின் உடைமை நம்மிடம் இருந்தால் அந்தப் பொருள் நமக்குச் சொந்தம் என்று கொள்வதற்கு ஏதுவாகிறது. சொந்தத்தின் அறிகுறியாக உடைமை அமைகின்றது. எனக்குச் சொந்தமில்லாத பொருள்கூட, எனது உடைமையில் இருக்கலாம்; ஆனால், அந்தப் பொருளை எனது உடைமையிலிருந்து அகற்றுவதற்கு அந்தப் பொருளின் சொந்தக்காரருக்குத்தான் அதிகாரம் உண்டு; வேறு எவருக்கும் அந்த அதிகாரம் கிடையாது. இன்னொருவரது பொருள் நீண்டநாள் எனது உடைமையில் இருந்துவிட்டால், நாளடைவில் அந்தப் பொருள்மீது எனக்குச் சொந்தம் ஏற்பட்டுவிடுகிறது. பொதுவாக, ஒரு பொருளின்மீதுள்ள சொந்தம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாறும்பொழுது, அந்தப் பொருளின் உடைமையும் மாற்றப்படுகிறது. எவருக்கும் சொந்தமில்லாத பொருள் முதன் முதலாக யாருடைய உடைமையில் வருகின்றதோ, அவருக்கே அது சொந்தமாகிவிடுகின்றது. இவ்வாறு, ஒரு பொருளின் மீதுள்ள உரிமையை வரையறுப்பதற்கு உடைமை அடிப்படையாக இருக்கிறது. ஆகவே, சட்டத்தில் "உடைமை" என்ற சொல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் பொதிந்து இருக்கும் நுண்ணிய கருத்துக்களை இனி ஆராய்வோம்.

1. In the whole range of legal theory there is no conception more difficult than that of possession.—Salmond.

பருப்பொருள் உடைமை (Corporeal possession), நுண்பொருள் உடைமை (Incorporeal possession) என்று "உடைமை" இருவகைப் படும். நமது அனுபவத்திலுள்ள வீடு, நிலம் இவற்றின் உடைமையை "பருப்பொருள் உடைமை" என்கிறோம். இன்னொருவர் நிலத்தின்மீது நடந்து செல்லுவதற்கு நமக்குள்ள உரிமை, நாம் கொடுத்த கடனைத் திரும்பப்பெறும் உரிமை, ஒரு பதவியைப் பொறுத்த நமது உரிமை இவைபோன்ற உரிமைகளை நாம் உடைத்தாயிருந்தால் அதை "உரிமை உடைமை" அல்லது "நுண்பொருள் உடைமை" என்று கூறுகிறோம். முன்னது கண்ணால் பார்க்க முடிவது; பின்னது பார்க்க முடியாதது. பருப்பொருள் உடைமையில் உடைமைக்குரிய பொருள்கள் காணக் கூடிய பருப்பொருள்கள்; நுண்பொருள் உடைமைக்கு இலக்கானவை காணமுடியாத நுண்பொருள், அதாவது உரிமைகள்.

இனி, பருப்பொருள் உடைமையின் முக்கிய இயல்புகள் பற்றிப் பார்ப்போம்.

பருப்பொருள் உடைமை (Corporeal Possession)

ஓர் நபருக்கும், ஒரு பருப்பொருளுக்கும் உள்ள இணைப்பை அல்லது தொடர்பை "பருப்பொருள் உடைமை" என்ற சொற்றொடர் குறிக்கிறது.[1]

அந்த உடைமைக்குரியவை காணக்கூடிய பொருள்களாக இருப்பதால், அந்த உடைமை இயங்குவதை நாம் புலன்களால் உணரமுடிகிறது. வீடு ஒன்று ஒருவரது உடைமையில் இருக்கிறதென்றால், அவர் அந்த வீட்டில் குடி இருப்பதையோ, அல்லது இன்னொருவருக்கு வாடகைக்கு விட்டுப் பிறர்மூலம் அனுபவிப்பதையோ நாம் கண்ணால் பார்க்கிறோம். எனது கையில் வைத்திருக்கும், எனது உடைமையிலிருக்கும் புத்தகத்தை, அந்த உடைமையை, பிறர் காணமுடிகின்றது. இவ்வாறு, பருப்பொருள் உடைமை இயங்குவதை நாம் தெளிவாகக் காணுகின்றோம்.

ஓர் நபருக்கும் ஒரு பருப்பொருளுக்குமுள்ள இணைப்பே உடைமை எனப் படுகிறது என்று கண்டோம். உடைமையில் அடங்கியுள்ள இந்த இணைப்பின் தன்மை என்ன? அந்த இணைப்பு வெறும் வெளித்தொடர்பு மட்டும் கொண்டதா? அல்லது, அந்த வெளித்தொடர்புடன் கூடிய எண்ணமும் கொண்டதா என்பதுபற்றி இனிக் காண்போம்.

நகைக்கடையிலுள்ள ஒரு குறிப்பிட்ட நகையை விலைக்கு வாங்க நான் விரும்புகிறேன். அதன் விலையைக் கடைக்காரருக்கு நான் அனுப்பிவிட்டேன். கடைக்காரர் நகையை எடுத்து எனக்கு

1. Corporeal possession is clearly some form of continuing relation between a person and a material object.—Salmond.

அனுப்புவதற்கென்று தனியாக வைத்திருக்கிருர். ஆனல், என் கைக்கு நகை இன்னும் வந்து சேரவில்லை. இப்பொழுது அந்த நகையின் உடைமை யாரிடம் இருக்கிறது? அதன் உடைமை என்னிடம் இல்லை; அது கடைக்காரரிடமே இருக்கிறது. நகையை எனது உடைமையாக்கவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அதை வாங்கியிருக்கிறேன். ஆனல், அந்த எண்ணத்தின்படி, நகையின் உடைமை எனக்கு இன்னும் வரவில்லை. உடைமையாக்கவேண்டும் என்ற எனது எண்ணம், எண்ணத்தின் அளவிலேயே இருக்கிறது; காரியத்தில் இன்னும் நடைபெறவில்லை. இதனல், நகையின் உடைமை எனக்கு இன்னும் வரவில்லை என்பதுதான் உண்மை. நகையை எனது உடைமையாக்கவேண்டும் என்ற எண்ணம் மட்டும் உடைமையை ஏற்படுத்துவதற்குப் போதாது. அந்த எண்ணத்தின் பயனாக நகை என் வசம் வந்திருந்தால் தான், நகையின் உடைமை என்னிடம் இருக்கிறது என்று கூறமுடியும்.

என் வீட்டிற்கு விருந்தினராக வந்திருக்கும் நண்பர், அவரது பெட்டியை எனது வீட்டில் வைத்துவிட்டு வெளியே சென்றிருக்கிருர். அவருடைய பெட்டி, என் வீட்டில்—என் வசத்தில் இருக்கிறது. இப்பொழுது அந்தப் பெட்டி எனது உடைமையில் இருக்கிறது என்று கூறுவது சரியா? இல்லை. ஏன்? பெட்டி எனது வசத்தில் (Custody) இருப்பது உண்மைதான். ஆனல், "அந்தப் பெட்டி என்னைச் சேர்ந்தது, என்னைத்தவிர வேறு எவருக்கும் அதன்மீது உரிமை இல்லை," என்ற எண்ணம் எனக்கு இல்லை. பெட்டி நண்பருக்குச் சொந்தமானதால், அதை என்னுடையதாக நான் எண்ணவில்லை. ஆகையால், அந்தப் பெட்டி எனது வசத்தில் இருப்பினும் அதன் உடைமை என்னிடம் இருக்கிறது என்று கூறுவதற்கில்லை.

முதல் உதாரணத்தில், நகை என்னுடையது என்ற எண்ணம் எனக்கு இருந்தும் நகை என் வசத்தில் இல்லாததால், உடைமை இல்லை என்றேம்; இரண்டாவது உதாரணத்தில் பெட்டி என் வசம் இருந்தும், அது என்னுடையது என்ற எண்ணம் எனக்கு இல்லாததால், பெட்டியின் உடைமை என்னிடம் இல்லை என்றேம். என்னல் வாங்கப்பட்ட நகை என்வசம் வந்த உடன் அந்த நகையின் உடைமை என்னிடம் இருக்கிறது. ஏன்? அந்த நகை என்னுடையது என்ற எண்ணம், அந்த நகை எனது வசமாகி இருப்பது, இவை இரண்டும் சேர்ந்த காரணத்தால், நகையைப் பொறுத்து எனது உடைமை உண்டாகிறது.

"பருப்பொருள் உடைமை" என்பதில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. முதலாவதாக, எனது எண்ணம்; அதாவது, அந்தப் பொருள் எனது உடைமை

யில் உள்ளது என்ற எண்ணம் (Animus). இரண்டாவதாக, அந்தப் பொருள் எனது வசத்தில் இருப்பது (Corpus). இந்த இரண்டும் பொருந்தினல்தான், "உடைமை" ஏற்படுகிறது. ஒருபொருளைப் பொறுத்த நமது எண்ணம், அந்த எண்ணம் கைகூடும் வகையில் பொருளை நம் வசத்தில் வைத்திருப்பது, இவை இரண்டும் பொருந்தி நிற்கும்பொழுது தான் உடைமை பிறக்கின்றது. இந்த இரண்டில் ஒன்று இல்லா விட்டாலும் உடைமை இல்லை. ஒன்று, பொருளைப்பற்றிய ஒருவரது மனநிலை அல்லது எண்ணம்-"உடைமை எண்ணம்;" மற்ருென்று, அந்த மனநிலை கைகூடும் வகையில் அவருக்கும் பொருளுக்கும் உள்ள" வெளிப் பிணைப்பு, அதாவது, "உடைமைச் செயல்." "உடைமை" என்ற கருத்தில் உள்ள இந்த இரண்டு அடிப்படைக் கூறுகளை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு பருப்பொருளின் அனுபோகம் நமக்கே உரியது என்ற எண்ணத்துடன், அந்தப் பொருளை நாம் தனித்து அனுபவிக்கும்பொழுது, அந்தப் பொருளின் "உடைமை" நம்மிடம் இருக்கிறது எனலாம்.[1]

உடைமை எண்ணமும், உடைமைச் செயலும் ஒன்றி நிற்கும்பொழுதுதான் சட்டப்படியுள்ள "பருப்பொருள் உடைமை" பிறக்கிறது என்ற உண்மை கூறப்பட்டது. இனி, "உடைமை எண்ணம்," "உடைமைச் செயல்" இவை இரண்டின் தன்மைபற்றிப் பார்ப்போம்.

உடைமை எண்ணம் (The Animus Possidendi)

ஒருவர் தமது உடைமையிலுள்ள பொருளை, தாம் மட்டும் தனித்து அனுபவிக்கவேண்டும் என்று எண்ணுகிருர். தமது தனித்த அனுபவத்தைப் பிறர் தடைசெய்யவோ, அல்லது பிறர் அந்தப் பொருளை அனுபவிக்கவோ அவர் இணங்குவதில்லை. இவ்வாறு, அவர் எண்ணத்தில், அந்தப் பருப்பொருளின்மீது தனித்த பாத்தியதை கொண்டாடப்படுகிறது. இதைத்தான், "உடைமை எண்ணம்" (The Animus Possidendi) என்று கூறுகிருேம்.[2]

1. The possession of a material object is the continuing exercise of a claim to the exclusive use of it.

It involves, therefore, two distinct elements, one of which is mental or subjective, the other, physical or objective. The one consists in the intention of the possessor with respect to the thing possessed, while the other consists in the external facts in which this intention has realised, embodied or fulfilled itself.

—Salmond.

Possession "is the determination to exercise physical control over a thing on one's own behalf coupled with the capacity of doing so."—Markby.

2 The intent necessary to constitute possession is the intent to appropriate to oneself the exclusive use of the thing possessed.—Salmond.

உடைமை எண்ணம் நியாயமான, சட்டப்படியுள்ள உரிமையை அடிப்படையாகக் கொண்டுதான் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. தான் திருடியபொருள் தன்வசம் இருக்கும்பொழுது, திருடன், உடைமை எண்ணத்துடன்தான் அந்தப்பொருளை வைத்திருக்கின்றான். தனக்கு அந்தப் பொருள்மீது சட்டப்படி உரிமை இல்லை என்று தெரிந்திருந் தாலும், தனக்கு உரிமை இருப்பது போலவே நடந்துகொள்ளு கின்றான். ஆதலால், அந்தப் பொருள், அவனது உடைமையில் உள்ளதாகவே சட்டம் கருதுகிறது.

ஒரு பொருளின் சொந்தக்காரருக்குத்தான் உடைமை எண்ணம் இருக்கவேண்டும் என்பது இல்லை. ஒரு வீட்டின் சொந்தக்காரர் ஒருவராகவும், குடியிருப்பவர் இன்னொருவராகவும் இருக்கலாம். குடியிருப்பவருக்கு வீட்டைப் பொறுத்து உடைமை எண்ணம் உண்டு. அவர் அந்த வீட்டில் குடியிருந்து தனித்து அனுபவிக்கும் பாத்தியதை, அவரது வாடகை ஒப்பந்தகாலம் வரையில்தான் உண்டு என்றாலும், அந்தக் குறுகியகாலத்துக்கு வீடு அவரது உடைமையிலேயே இருக்கிறது. இவ்வாறே, ஒரு நகையை ஈடுபெற்றவருக்கும், அதை இரவலாக வாங்கிவைத் திருப்பவருக்கும் நகையின் உடைமை உண்டு. இதனால், ஒரு பருப்பொருளின் உடைமை எண்ணம் அதன் சொந்தக்காரரிடம் தான் இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை என்று அறிகிறோம். ஒரு பொருளைப் பொறுத்த "உடைமை எண்ணம்" ஒருவர் சார்பில் இன்னொருவருக்கு இருக்கலாம். தன் முதலாளியின் சார்பில், ஒரு வேலையாள் முதலாளிக்குச் சொந்தமான பொருள் மீது உடைமை எண்ணம் கொண்டாடலாம்.

"உடைமை எண்ணம்" ஒரு குறிப்பிட்ட பொருளைப்பற்றித் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கவேண்டும் என்பது இல்லை. நமது வசத்திலுள்ள பொருள்களைப் பொறுத்துப் பொது வான முறையில் உடைமை எண்ணம் இருந்தாலே போதுமானது. எனது அலமாரியிலுள்ள எல்லாப் புத்தகங்களும் எனது உடைமையில் இருக்கின்றன. ஆனால், அதில் உள்ள ஒவ்வொரு புத்தகத்தைப் பொறுத்தும் தனித்தனியே உடைமை எண்ணம் எனக்கு இருக்கமுடியாது. ஏனெனில், அதில் உள்ள புத்தகங் களில் பலவற்றை நான் மறந்திருக்கலாம். இருப்பினும், புத்தகங் கள் அனைத்தும்—ஒவ்வொன்றும்—எனது உடைமையில்தான் இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. புத்தகங்கள் அனைத்தை யும் பொறுத்த பொதுவான உடைமை எண்ணம் எனக்கு இருக்கிறது. ஆற்றிலே வலையைப் போட்டுவிட்டு வேறொரு இடத்தில் காத்திருக்கிறான் மீன்பிடிப்பவன். அவனுக்கு வலையில்

அகப்பட்ட மீன்கள் எத்தனை, அவைகளின் விதங்கள் என்ன, என்பவைபற்றித் தெரியாது. இருப்பினும், வலையில் விழுந்திருக்கும் மீன்கள் பற்றிய பொதுவாக உடைமை எண்ணம் அவனுக்கு இருப்பதால், வலையில் அகப்பட்ட மீன்கள் அனைத்தும் அவனது உடைமையில் உள்ளதாகவே கொள்ளுகிறோம். என் வசத்திலிருக்கும் மந்தையிலுள்ள ஆடுகளின் எண்ணிக்கை எனக்குத் தெரியாமலே பெருகியிருக்கலாம். இருந்தாலும், மந்தையிலுள்ள ஆடு ஒவ்வொன்றும் எனது உடைமையில்தான் இருக்கின்றது. காரணம், மந்தையைப் பொறுத்த பொதுவான உடைமை எண்ணம் எனக்கு இருக்கிறது.

இதுவரை, "உடைமை எண்ணத்தின்" தன்மைபற்றிப் பார்த்தோம். இனி, "உடைமைச் செயலின்" அம்சங்கள் என்னென்ன என்று கவனிப்போம்.

உடைமைச் செயல் (The Corpus of Possession)

எண்ணம் செயலுக்கு அடிப்படை. உடைமை எண்ணம் உடைமைச்செயலாக உருவெடுக்கிறது; அப்படி எண்ணமும் செயலும் ஒன்றும்பொழுதுதான் "உடைமை" பிறக்கிறது என்று கண்டோம். உடைமைச்செயல் எவ்வாறு இருக்கவேண்டும்? உடைமை எண்ணம் கைகூடியது என்று காட்டும் வகையில், உடைமைச்செயல் எப்படி அமையவேண்டும்? அந்தச் செயலின் தன்மை என்ன? இந்த வினாக்கள் எழுகின்றன.

உடைமைச்செயலின் தன்மை இரு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இருக்கிறது. அதாவது, உடைமைச்செயல் இருக்கிறதா என்று அறிவதற்கு இரு காரியங்களை நாம் பார்க்கிறோம். ஒன்று, பொருளின் உடைமையைப் பெற்றவருக்கும் பிறருக்கு முள்ள தொடர்பு, இரண்டு, உடைமைதாரருக்கும் அந்தப் பொருளுக்கும் உள்ள தொடர்பு. இந்த இரு கூறுகளைப்பற்றி இனி ஆராய்வோம்.

உடைமைதாரருக்கும் பிற நபர்களுக்கும் உள்ள தொடர்பு:

ஒரு பொருளின் உடைமை பெற்றவரை "உடைமைதாரர்" என்று நாம் அழைக்கலாம்.

["உடையவர்" என்றால், சொந்தக்காரர் என்ற பொருள் ஏற்பட ஏதுவிருக்கிறது. "உடைமைக்கு உரியவர்" என்றால், உண்மையில் "உடைமை" செயலில் கைகூடாத நிலையில் இருப்பவரையும் குறிக்கும். ஆதலால், "உடைமைதாரர்" அல்லது "உடைமைக்காரர்" என்ற சொல் பொருத்தமுடையதாகும்.]

தனது உடைமையிலுள்ள பொருள்கள் அனைத்தையும் உடைமைதாரர் தமது கைக்குள் அடக்கிவைத்திருக்க முடியாது;

அல்லது அந்தப்பொருளின் அருகிலேயே இருந்துகொண்டிருக்கவும்முடியாது. இவை இயலுவதும் அல்ல. என்வசம் பல வீடுகள் இருந்தால் ஒரு வீட்டில்தான் நான் குடியிருக்கிறேன். ஆனாலும், மற்ற வீடுகளும் எனது உடைமையில்தான் இருக்கின்றன. மதுரையில் உள்ள என் வீடு, சென்னையிலிருக்கும் எனது உடைமையில் இருக்கலாம். இதுபோல, என் உடைமையிலுள்ள பல பருப்பொருள்கள், நான் இருக்குமிடத்திலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கமுடியும். அந்தப் பொருள்கள் எனது உடைமையில் இருக்கின்றன என்பதற்கு அடையாளம் என்ன?

அந்தப் பொருள்களின்மீதுள்ள எனது உடைமையை பிறர் தடுக்கமாட்டார்கள், எனது உடைமைக்கு ஊறு செய்யமாட்டார்கள், என்ற உறுதி உணர்ச்சி எனக்கு இருக்கவேண்டும். உடைமைதாரருக்கு, தம் உடைமையைப் பிறர் மதித்து நடப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கவேண்டும். பிறரால் தனது உடைமைக்குத் தடை ஏற்படாது என்ற உறுதி உடைமைதாரருக்கு உண்டாகும்வகையில், உடைமைதாரருக்கும் மற்ற நபர்களுக்குமுள்ள தொடர்பு அமையவேண்டும். மேற்சொன்னபடி நம்பிக்கையும் பாதுகாப்புணர்ச்சியும் இருக்கும் முறையில், உடைமைதாரருக்கும் பிறருக்குமுள்ள தொடர்பு இருந்தால், அது உடைமைச்செயலின் அடையாளமாக இருக்கிறது.[1]

இந்தப் பாதுகாப்பு (உறுதி) உணர்ச்சி பலவகைகளில் ஏற்படலாம்:

(1) சில பொருள்களை எனது தனித்த ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு, பிறர் எந்தவகையிலும் என் அனுபோகத்திலுள்ள அந்தப் பொருளை நெருங்காமல் பார்த்துக்கொள்ளலாம். எனது பணப்பையை இரும்புப்பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டேன் என்றால், உறுதியாகப் பிறர் அதைத் தொடக்கூடமுடியாது. பணப்பை இப்பொழுது எனது தனித்த ஆதிக்கத்தில் (exclusive possession) இருக்கிறது. இம்மாதிரியே, என்னால் பூட்டிவைக்கப்பட்டிருக்கும் எனது வீடு என் உடைமையில் இருக்கிறது. இவ்வாறு, எனது ஆதிக்கத்திறனால் (Physical power of exclusion), பிறர் என் உடைமைக்கு ஊறுவிளைவிக்காமல் தடுக்கப்படுகிறார்கள். இதனால், எனது உடைமைபற்றிய பாதுகாப்பு உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது.

1. A thing is possessed, when it stands with respect to other persons in such a position that the possessor, having a reasonable confidence that his claim to it will be respected, is content to leave it where it is.—Salmond.

(2) மேற்சொன்னபடி ஆதிக்கத்திறன் ஒருவரிடம் இல்லாதிருப்பினும், உடைமைப்பொருளின் அருகில் உடைமைதாரர் இருக்கும்பொழுது, உடைமை பற்றிய பாதுகாப்பு உணர்ச்சி ஏற்படுகின்றது. எனது தோட்டத்தில் நான் குடியிருக்கிறேன். இன்னொருவர் அந்தத் தோட்டத்தில் என் ஒப்புதலின்றி நுழைவது முடியாத காரியமல்ல. யாருமே நுழையாதவாறு என்னால் தடுக்க முடியாது. இருப்பினும், நான் எனது உடைமைப்பொருளின் அருகிலேயே — உடைமைப்பொருளாகிய தோட்டத்தின் ஒரு பகுதியிலேயே—குடியிருப்பதால், எனது உடைமை கைகூடிய செயல் ஆகிறது. தன் கையிலுள்ள பணத்தை வயதுவந்த இன்னொருவர் தட்டிப்பறிப்பதை ஒரு சிறுவனால் தடுக்கமுடியாது. ஆயினும், சிறுவனின் கையிலுள்ள பணம் அவனது உடைமையில் தான் இருக்கிறது. இப்படி, உடைமைப்பொருளின் அருகிலேயே, அதை நெருங்கி, உடைமைதாரர் இருக்கையில் (Personal presence), உடைமை பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.

(3) ஒருவர், தமது உடைமையிலுள்ள பொருளை இரகசியமாக ஒளித்துவைத்திருக்கலாம். அந்தப் பொருளின் இருப்பிடம் வேறு எவருக்கும் தெரியாது. இவ்வாறு, மறைவாகப் பொருள் ஒளிக்கப்பட்டிருப்பதால், உடைமையைப் பொறுத்த பாதுகாப்புணர்ச்சி தோன்றலாம்.

(4) இந்தப் பாதுகாப்பு உணர்ச்சிக்கு வழக்கம் ஒரு ஆதாரமாகும். போன ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டுகளிலும், ஒரு நிலத்தில் நானே வேளாண்மை செய்தேன். ஆதலால், இந்த ஆண்டும், எனக்கு அந்த உரிமை உண்டு என எதிர்பார்க்கிறேன். வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, எனது உடைமை பற்றிய நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆதலால் அந்த நிலம் எனது உடைமையில் இருக்கின்றது.

(5) நியாயமான பாத்தியங்களுக்கு மக்கள் அளிக்கும் மதிப்பும் உடைமைச்செயலின் ஒரு அம்சமாகும். ஒரு பொருளின்மீது நான் கொண்டாடும் பாத்தியம் சட்டப்படியானது எனில் பிறர் எனது உடைமையை மதித்து நடக்கிறார்கள். திருடனுக்கு, திருடப்பட்ட பொருள்மீதுள்ள உடைமையைப் பிறர் நோக்குவதற்கும், சொந்தக்காரனுக்குத் தனது பொருள்மீதுள்ள உடைமையை மற்றவர்கள் மதிப்பதற்கும் வேறுபாடு உண்டு. உடைமை நியாயமானது என்றால், பிறர் அதை மதிப்பார்கள் என்ற நம்பிக்கை ஏற்படுவது இயல்பு.

(6) சில வேளைகளில் ஒரு பொருளின் உடைமை நம்மிடம் இருப்பதால், அப்பொருளைச் சேர்ந்த, அல்லது அதில் அடங்கிய, மற்றப் பொருள்களின் உடைமையும் நம்மைச் சேர்ந்ததாகிறது.

ஒரு வீட்டின் உடைமை என்னிடம் இருந்தால், அந்த வீட்டினுள் இருக்கும் மற்றப்பொருள்களின் உடைமையும் பொதுவாக என்னுடையதுதான். ஒரு பெட்டி எனது உடைமையில் இருக்கிறது என்றால், அந்தப் பெட்டிக்குள் இருக்கும் சாமான்களும் எனது உடைமையில் இருப்பதாகவே பொதுவாகக் கருதப்படுகிறது.

இந்தப் பொது விதிக்குச் சில விலக்குகள் உண்டு. ஒரு பொருளின் உடைமை, அதைச் சேர்ந்த பொருள்களின் உடைமைக்கும் ஆதாரமாக இருக்கிறதா என்பது அந்தந்தச் சூழ்நிலையைப் பொறுத்தது.

எனது உடைமையிலுள்ள நிலத்தின்மீது ஒரு பொருள் இருக்கலாம். ஆனால், அந்தப் பொருளைப் பொறுத்து எனக்கு உடைமை எண்ணமும் உடைமைச் செயலும் பொருந்தி இல்லையெனில் அந்தப் பொருளின் உடைமை என்னிடம் இருக்கிறது என்று கூறமுடியாது. இன்னொருவரின் ஆடு, எனது நிலத்தில் நுழைந்து மேய்ந்துகொண்டிருந்தாலும் அந்த ஆட்டின் உடைமை என்னிடம் இல்லை. ஏனெனில், அந்த ஆட்டைப் பொறுத்த உடைமை எண்ணம் எனக்கு இல்லை. என் மோதிரம் எனது தோட்டத்தில் எங்கேயோ விழுந்து தவறிவிட்டது. அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்பொழுது மோதிரத்தைப் பொறுத்து எனக்கு உடைமைச்செயல் இல்லையாதலால், காணமற்போன மோதிரம் எனது தோட்டத்திற்குள்ளேயே கிடந்தாலும் கூட அது எனது உடைமையில் இருக்கிறது என்று சொல்ல முடியாது. எனது தோட்டத்தில் ஒரு புதையல் இருக்கிறது. ஆனால், அவ்வாறு அது இருப்பது எனக்குத் தெரியாது. இப்பொழுது அந்தப் புதையலைப் பொறுத்து, உடைமை எண்ணம், உடைமைச் செயல், இரண்டுமே எனக்கு இல்லை. எனவே, அதன் உடைமை என்னிடம் இல்லை,

நான் ஒரு காலிப்பெட்டியை விலைக்கு வாங்குகிறேன். அப்பெட்டியிலுள்ள, மறைவான அறை ஒன்றில் பணம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது எனக்குத் தெரியாது. இப்பொழுது அந்தப் பணம் எனது உடைமையில் இல்லை; ஏனெனில், உடைமைச்செயல் இருந்தும் அந்தப் பணத்தின்மீது உடைமை எண்ணம் எனக்கு இல்லை. எனது உடைமை எண்ணம் பெட்டியைப்பற்றியதுதான்; அந்தப் பெட்டியில் மறைந்திருக்கும் பணத்தைப்பற்றியது இல்லை. ஆனால், அந்த மறைவு அறையைத் திறந்து பணம் இருப்பதைப் பார்த்து, அதை எனது உடைமையாக்கிக்கொள்ள எண்ணம் கொண்டேன் என்றால், பணம் எனது உடைமையில் வந்துவிடுகின்றது. பணத்தைப் பார்த்த

பிறகு, அதைப் பொறுத்த உடைமை எண்ணம் என் மனதில் உண்டாகிவிடுவதால், பணம் என் உடைமை ஆகிவிடுகிறது.

இன்னும் ஓர் உதாரணம்: யாரோ ஒருவர் தவறவிட்ட பணப்பை ஒன்று ஒரு கடையில் கிடக்கிறது. அந்தப் பணப்பை அவ்வாறு கிடப்பது கடைக்காரருக்குத் தெரியாது. அந்தக் கடைக்கு வந்த மற்றொருவர் அந்தப் பையை எடுக்கிறார். இப்பொழுது அந்தப் பணப்பை எடுத்தவருக்கே உடைமையாகிறது; கடைக்காரருக்கு அல்ல. ஏனெனில், அந்தப் பையை இன்னொருவர் எடுக்கும்வரை, அது கடையில் இருந்தது கடைக்காரருக்குத் தெரியாது. ஆகையால், அவருக்கு உடைமை எண்ணம் இல்லை; எனவே, அவருக்கு உடைமையும் இல்லை.

உடைமைதாரருக்கும் உடைமைப் பொருளுக்கும் உள்ள தொடர்பு:

உடைமைதாரர் தம்வசமுள்ள பொருளை, அந்தப்பொருளின் தன்மைக்கேற்றவாறு—அதை எவ்வாறு வழக்கமாக, இயல்பாக, அனுபவிக்கமுடியுமோ அந்த முறையில்—அனுபவிக்கும் நிலையில் இருக்கவேண்டும். இவ்வாறு அனுபவிப்பதற்குத் தடை ஏதும் இருக்கக்கூடாது. இத்தகைய தொடர்பு உடைமைதாரருக்கும் உடைமைப்பொருளுக்கும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான், உடைமைச்செயல் இயங்குகிறது என்று கூறமுடியும்.

ஏற்கனவே சொல்லியபடி, உடைமைதாரர் உடைமைப் பொருளின் அருகிலேயே இருக்கவேண்டும் என்பதோ, அல்லது அதை நேரடியாகத் தமதுவசத்தில் வைத்திருக்கவேண்டும் என்பதோ அவசியமில்லை. டில்லியிலுள்ள வீடு சென்னையிலுள்ள எனது உடைமையில் இருக்கலாம். உடைமைப்பொருளின் அருகிலேயே உடைமைதாரர் இல்லை என்பதால் உடைமை அழிந்து போகவில்லை.

எனது மாடு காணமற் போய்விடுகிறது. ஒருவேளை அது வீட்டிற்குத் திரும்பி வந்துவிடலாம். ஆனால், காணமற்போன காலத்தில் எனக்கு மாட்டின்மீதிருந்த "உடைமைச்செயல்" மறைந்துவிட்டது என்று சொல்லமுடியாது. எனது புத்தகத்தை என்வீட்டில் எங்கேயோ கைதவறி வைத்துவிட்டேன். அதை உடனே தேடி எடுக்கமுடியவில்லை. இதனால், புத்தகத்தின்மீதுள்ள எனது உடைமைச்செயல் அழிந்துபோகவில்லை. ஏனெனில், அந்தப் புத்தகத்தை மீண்டும் கண்டுபிடித்து எடுத்துவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஆனால், நான் கூட்டில் அடைத்துவைத்திருந்த புறா ஒன்று கூட்டிலிருந்து தப்பிப் பறந்துபோய்விட்ட பின், அந்தப் புறா எனது உடைமையில் இருக்கிறது என்று சொல்லமுடியாது.

ஏனெனில், அந்தப் புரு மீண்டும் என்னிடம் திரும்பப்போவதில்லை. அம்மாதிரியே, தெருவில் நான் கைதவறிக் கீழே போட்டுவிட்ட பணம் எனக்குக் கிடைக்காமலே போகலாம்; அல்லது இன்னொருவர் அதைக் கண்டெடுத்துத் தமது உடைமையாக்கிக் கொண்டிருக்கலாம். ஆதலால், அந்தப் பணம் எனது உடைமையில் இருக்கிறது என்று கூறுவது பொருந்தாது.

தமது உடைமைப்பொருளை, அந்தப் பொருளின் தன்மைக்கேற்ற முறையில் அனுபவிப்பதற்கான தொடர்பு, இணைப்பு, உடைமைதாரருக்குப் பொருள் மீது இருக்கவேண்டும்.[1] அவ்வாறு இருக்கும்பொழுதுதான், உடைமைச்செயல் இயங்குவதை நாம் உணர்வது எளிதாகின்றது.

"பருப்பொருள் உடைமை" என்றால் என்ன என்றும், அந்த உடைமையில், "உடைமை எண்ணம்", "உடைமைச் செயல்" என்ற இரண்டும் ஒன்றியிருக்க வேண்டுமென்றும், உடைமை எண்ணத்தின் தன்மை பற்றியும், உடைமைச்செயல் எவ்வாறு இயங்குகிறது என்றும், இதுவரை விரிவாகக் கண்டோம்.

(ii) உடைமையின் இருவகைகள்

"உடைமை" என்ற சொல்லின் உட்பொருள், "பருப்பொருள் உடைமை"யின் தன்மை இவைபற்றி ஆராய்ந்தோம். இனி, உடைமையின் தன்மைக்கேற்ப மாறுபட்டு நிற்கும் பருப்பொருள் உடைமையின் இருவகைகள் பற்றிப் பார்ப்போம்.

நேரடி உடைமை; பகர உடைமை (Immediate and Mediate Possession)

ஒரு பொருளுக்கு உரியவர், அதன் சொந்தக்காரர், அந்தப் பொருளைத் தம்முடைய உடைமையில் வைத்திருக்கலாம்; அல்லது இன்னொருவரின் உடைமையில் விட்டுவைத்திருக்கலாம். உடைமையைத் தாமே நேரடியாக வைத்துக்கொள்வது ஒன்று; அதை இன்னொருவர் மூலமாக வைத்துக்கொள்வது மற்றொன்று. ஒரு பொருளுக்கு உரியவர், அந்தப் பொருளின் உடைமையைத் தாமே நேரடியாக வைத்திருந்தால் அவரது உடைமை "நேரடி உடைமை" (Immediate possession) என்றும், அவர் அதை (உடைமையை) இன்னொருவர் மூலமாக வைத்திருந்தால், அப்பொழுது சொந்தக்காரரின் உடைமை "பகர உடைமை" (Mediate possession) என்றும்

1. The necessary relation between the possessor and the thing possessed is such as to admit of his making such use of it as accords with the nature of the thing and of his claim to it.
—Salmond.

கூறப்படுகிறது. இரண்டு நிலைகளிலும் பொருளின் சொந்தக்காரருக்கு உடைமை இருக்கிறது; முதலாவதில் உடைமை அவரிடமே நேரடியாக இருப்பதால் அது நேரடி உடைமை; இரண்டாவதில், அவரது உடைமை பிறர் மூலமாக இருப்பதால் அது பகரஉடைமை ஆகின்றது.

நான் கடைக்குச்சென்று ஒரு புத்தகத்தை நேரில் வாங்குகிறேன். வாங்கிய உடன் புத்தகம் எனது நேரடி உடைமைக்கு வருகிறது. என் வேலையாளைக் கடைக்கு அனுப்பிப் புத்தகத்தை வாங்குகிறேன். வாங்கிய புத்தகத்தை வேலையாள் வைத்திருக்கும் பொழுது அந்தப் புத்தகம் எனது பகர உடைமையில் இருக்கிறது. வேலையாள் புத்தகத்தை என்னிடம் கொடுத்தபிறகு, எனது பகர உடைமை நேரடி உடைமையாக மாறுகிறது.

ஒருவர் தமக்குச் சொந்தமான பருப்பொருள்கள் எல்லாவற்றின் உடைமையையும் நேரடியாகத் தம்மிடமே வைத்திருப்பது இயலாது. எனக்குச் சொந்தமான பல வீடுகளில் ஒரு வீட்டில்தான் நான குடியிருக்கிறேன், மற்ற வீடுகளை வாடகைக்கு விடுகிறேன். குடியிருப்பவரின் வசத்தில் என்வீடு இருப்பதால், அந்த வீட்டைப்பொறுத்த எனது உடைமை மறைந்துவிடுவதில்லை. வாடகைதாரரின் வசத்திலிருக்கும் என் வீட்டின்மீதுள்ள எனது உடைமை நேரடி உடைமையாக இல்லாமல் "பகர உடைமை" ஆகிவிடுகிறது. நானே குடியிருக்கும் எனது வீட்டில் எனக்குள்ள உடைமை "நேரடி உடைமையாக" இருக்கிறது.

எனது புத்தகம் வேலையாள்வசம் இருக்கும்பொழுதும், என் வீடு வாடகைதாரர்வசம் இருக்கும்பொழுதும், உடைமை எண்ணம் எனக்கு இருக்கிறது; உடைமைச்செயல் மட்டும் என்னிடம் இருப்பதற்குப் பதிலாக, என்சார்பாக அவர்களிடம் இருக்கிறது. நேரடி உடைமையில், உடைமை எண்ணமும் உடைமைச் செயலும் என்னிடமே இருக்கின்றன. பகர உடைமையில், உடைமை எண்ணம் என்னிடம் இருக்கிறது; உடைமைச்செயல் என்சார்பில் இன்னொருவரிடம் இருக்கிறது. இதுவே நேரடி உடைமைக்கும் பகர உடைமைக்கும் உள்ள வேறுபாடு.[1]

"பகர உடைமை" என்று கூறும்பொழுது, ஒரு பொருள்மீது ஒரேசமயத்தில் இருவருக்கு உடைமை இருக்கிறது என்பது தெளிவாகும். என் வேலையாளிடம் என் பொருளை ஒப்புவித்திருக்கிறேன் என்றால், அந்தப்

1. The possession thus held by one man through another may be termed *mediate*, while that which is acquired or retained directly or personally may be distinguished as *immediate* or *direct*.
—Salmond.

பொருளைப் பொறுத்து எனக்கும் எனது வேலையாளுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுகிறது. அதாவது, வேலையாள், அந்தப் பொருளை என் சார்பில் வைத்திருக்கிறார்; நான் அவர் மூலமாக வைத்திருக்கிறேன். வேலையாளுக்கு அந்தப் பொருளைப்பொறுத்து நேரடி உடைமை இருக்கிறது; அவரது நேரடி உடைமை எனது பகர உடைமை ஆகிறது. ஆக, ஒரே பொருள்மீது, என் வேலையாளுக்கு இருப்பது நேரடி உடைமை; எனக்கிருப்பது பகர உடைமை. இப்படியாக, இரட்டிப்பு உடைமை தோன்றுகிறது. இந்த இரட்டிப்பு உடைமை (Concurrent possession), வீட்டிற்கு உரியவருக்கும் வாடகைதாரருக்கும், ஈடு வைப்பவருக்கும் ஈடு பெற்றுக்கொள்பவருக்கும், தலைவனுக்கும் வேலையாளுக்கும், அந்தந்தப் பொருளைப்பற்றி ஏற்படுகிறது.

என் வாடகைதாரரின் "நேரடி உடைமை" என்னுடைய "பகர உடைமை" ஆகிறது என்று பார்த்தோம். ஆனால், நேரடி உடைமை உள்ள வாடகைதாரரைப் பொறுத்தவரை எனது பகர உடைமை இல்லாததுபோல்தான். எனது பகர உடைமை உலகத்திலுள்ள மற்றவர்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது; அந்தப் பொருள்மீது நேரடி உடைமை உள்ளவர்களை எனது பகர உடைமை பாதிப்பது இல்லை. இன்னும் விளங்கக்கூறுவோம்.

எனது நகையை அடகுவைக்கிறேன். அடகு பெற்றவரிடம் எனது நகையின் "நேரடி உடைமை" இருக்கிறது; என்னிடம் அதன் "பகர உடைமை" இருக்கிறது. உலகத்தைப் பொறுத்தவரை, அந்த நகை என் உடைமையில் இருப்பதுபோல்தான். ஆனால், ஈடுபெற்றவரையும் என்னையும் பொறுத்தவரையில், உடைமை ஈடுபெற்றவரிடமே இருக்கிறது, என்னிடம் இல்லை. ஏன்? என்னையும் ஈடுபெற்றவரையும் பொறுத்தவரையில், உடைமைச்செயல் நேரடி உடைமை உள்ள ஈடுபெற்றவரிடமே இருப்பதால், உடைமை என்னிடம் இருக்கிறது என்று சொல்ல முடியாது.[1]

கீழ்வரும் உதாரணம் இக்கருத்தைத் தெளிவாக்கும்:

திருட்டுக்குற்றம் உடைமைக்கு எதிரான குற்றம். ஒருவரது வசத்திலிருக்கும் அசையும்பொருளை அவரது சம்மதமின்றி எடுப்பதே திருட்டுக்குற்றமாகும். எனது நகையை என் வேலையாளிடம் கொடுத்து இன்னொரு நண்பரிடம் கொடுக்கச்சொல்லி

1. Mediate possession exists as against third persons only, and not as against the immediate possessor Immediate possession, on the other hand, is valid as against all the world, including the mediate possessor himself.—Salmond.

அனுப்புகிறேன். இப்பொழுது, அந்த நகையின்மீதுள்ள பகர உடைமை என்னிடமும், நேரடி உடைமை வேலையாளிடமும் இருக்கிறது. வேலையாள், நண்பரிடம் நகையைக் கொடுக்காமல் அதை எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறான். இப்பொழுது வேலை யாள்மீது திருட்டுக்குற்றம் சாட்டமுடியாது. ஏனெனில், வேலை யாள் நகையுடன் ஓடிவிட்டபோது நகையின் நேரடி உடைமை அவனிடமே இருந்தது. ஆகவே, நகையை அவன் கவர்ந்த குற்றம் எனது உடைமைக்கு எதிரான திருட்டுக்குற்றமல்ல; அவனிடம் ஒப்புவிக்கப்பட்ட பொருளைக் கவர்ந்த குற்றமேயாகும்; தனது நேரடி உடைமையில் இருந்த பொருளை உரிமையின்றி அபகரித்துக் கொண்ட குற்றமேயாகும். அதாவது, நம்பிக்கைத்துரோகக் குற்றத் திற்கே (Criminal Breach of Trust) அவன் ஆளாகின்றான்.

இன்னும் ஓர் உதாரணம்: எனது கைக்கடிகாரத்தைச் செப்பனிடுவதற்காக ஒருவரிடம் கொடுக்கிறேன். இப்பொழுது, எனது கடிகாரத்தின் பகர உடைமை என்னிடமும், நேரடி உடைமை செப்பனிடுபவரிடமும் இருக்கின்றன. செப்பனிடுப வருக்குக் கூலியைக் கொடுக்காமலும், அவரது சம்மதத்தைப் பெறாமலும், எனது கடிகாரத்தை அவரது நேரடி உடைமையி லிருந்து எடுத்துவந்துவிடுகிறேன். செப்பனிடுபவரின் நேரடி உடைமையிலிருந்து இவ்வாறு எனது கடிகாரத்தை அவரது சம்மதமின்றி நான் எடுத்துவந்தது குற்றமா இல்லையா? குற்றம் தான். அதுவும் திருட்டுக்குற்றமாகிறது. அதாவது, செப்பனிடு பவரின் உடைமைக்கு எதிராகச் செய்யப்பட்ட திருட்டுக்குற்றம். எனது பகர உடைமைதானே எனது நேரடி உடைமையாக மாறியது எனது செயலால், அப்படி இருந்தும் குற்றமா, என்பது கேள்வி. உலகத் தைப் பொறுத்தவரை எனக்குப் பகர உடைமை இருந்தது. ஆனால், நேரடி உடைமைபெற்ற செப்பனிடுபவரையும் என்னையும் பொறுத்தவரை, எனக்குப் பகர உடைமை இல்லை; அவரது நேரடி உடைமையே மிஞ்சிநிற்கிறது. ஆகவே, அவரது சம்மதமில்லாமல் நான் எனது கடிகாரத்தை எடுத்து வந்த செயல், எனக்குச் சொந்தமான கடிகாரத்தை நானே திருடிய குற்றத்திற்கு என்னை ஆளாக்கிவிடுகிறது!

மேலே சொல்லப்பட்ட உதாரணங்களிலிருந்து, பகர உடைமை, நேரடி உடைமை இவைகளின் தன்மை நன்கு விளங்கும்.

(iii) கூட்டு உடைமைகள் (Concurrent Possession)

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரே பொருளின்மீது ஒரே சமயத்தில் உடைமை கொண்டாடுவது "கூட்டு உடைமை"

எனப்படுகிறது. அது கீழே சொல்லப்படும் சூழ்நிலைகளில் ஏற்படுகின்றது.

(1) மேலே கூறியபடி, நேரடி உடைமையும், பகர உடைமையும் ஒரே பொருளைப் பொறுத்து வெவ்வேறு நபர்களிடம் ஒரே சமயத்தில் இருக்கலாம்.

(2) ஒரு பொருளின் கூட்டுச்சொந்தம் பலரிடம் இருந்தால், அவர்கள் அனைவருக்கும் அந்தப் பொருளின்மீது கூட்டு உடைமை ஒரேசமயத்தில் இருக்கிறது.

(3) ஒரு பருப்பொருளைப் பொறுத்து, பருப்பொருள் உடைமை (Corporeal possession) ஒருவரிடமும், நுண்பொருள் உடைமை (Incorporeal possession) இன்னொருவரிடமும் இருக்கலாம். நிலம் ஒருவரது உடைமையில் இருக்கிறது, அந்த நிலத்தின்மீது நடந்துசெல்லும் உரிமை இன்னொருவரிடம் இருக்கிறது. இதிலும், ஒரேபொருளின்மீது ஒரேசமயத்தில் இருவருக்கு உடைமை இருக்கிறது.

(iv) உடைமையை அடையும் வழிகள் (The acquisition of possession)

உடைமை எண்ணமும் உடைமைச் செயலும் ஒன்றி இயங்கும் பொழுதே உடைமை பிறக்கின்றது; இவைகளில் ஏதாவது ஒன்று இல்லாவிடினும் உடைமை தோன்றுவதில்லை எனக் கண்டோம். இனி, நாம் ஒரு பொருளின் உடைமையை அடையும் வழிகள் என்னென்ன என்று பார்ப்போம்.

"எடுத்தல்" (Taking), "ஒப்படைத்தல்" (Delivery) என்ற இரு முறைகளிலும் நாம் உடைமையை அடையலாம்.

"எடுத்தல்" (Taking) என்பது எவருடைய சம்மதமும் இன்றி ஒரு பொருளை நாம் நமது உடைமையாக்கிக்கொள்ளுதல். அப்பொருள் ஒருவருடைய உடைமையில் இருந்திருக்கலாம்; அல்லது எவருடைய உடைமையிலும் இல்லாமல் இருந்திருக்கலாம். நாம் எடுத்துக்கொள்ளும் செயல், நியாயமானதாகவோ அல்லது நியாய விரோதமாகவோ இருக்கலாம். எந்தவகையிலும், பிறருடைய சம்மதமின்றி ஒரு பொருளை நமது உடைமையாக்கிக் கொண்டால், அது "எடுத்தல்" எனப்படுகிறது.

முன்னரே உடைமையில் இருப்பவரின் சம்மதத்துடனும், ஒத்துழைப்புடனும், ஒரு பொருளின் உடைமையை நாம் பெற்றால், அது ஒப்படைத்தல் (Delivery) எனப்படுகிறது. ஒருவர், தனது உடைமையில் உள்ள பொருளை இன்னொருவரிடம் ஒப்படைப்பதன் மூலம் அப் பொருளின் உடைமையை மாற்றுகிறார்.

ஒப்படைப்பு (1) நேர் ஒப்படைப்பு (Actual delivery), (2) நிமித்த ஒப்படைப்பு (Constructive delivery) என இருவகைப் படும்.

ஒரு பொருள் ஒருவர் கையிலிருந்து இன்னொருவர் கைக்கு நேரடியாக மாறும்பொழுது, ஒருவரது நேரடி உடைமையில் (Immediate possession) இருந்து இன்னொருவரின் நேரடி உடைமைக்கு அந்தப் பொருள் மாறும்பொழுது, அதை "நேரடி ஒப்படைப்பு" என்கிறோம். எனது புத்தகத்தை இன்னொருவரிடம் நேரில் கொடுக்கிறேன்; எனது வீட்டைப் பூட்டி, அதன் திறவு கோலை இன்னொருவரிடம் கொடுத்து அதன்மூலம் வீட்டின் உடைமையை நேராக ஒப்புவிக்கிறேன். இவ்வாறு உடைமை நேரடியாக ஒப்படைக்கப்படுவது, "நேர் ஒப்படைப்பு" என்று அழைக்கப்படுகிறது.

இவ்வாறு, ஒப்படைப்பு நேரடியாக மாறவில்லையெனில், அது "நிமித்த ஒப்படைப்பு" என்று சொல்லப்படுகிறது. எனது வீட்டில் ஒருவர் வாடகைக்குக் குடியிருக்கிறார். நான் அந்த வீட்டை இன்னொருவருக்கு விற்றுவிடுகிறேன். வீட்டை வாங்கியவருக்கு வீட்டின் உடைமை என்னிடமிருந்து மாறவேண்டும். வீட்டின் நேரடி உடைமை வாடகைக்குக் குடி இருப்பவரிடம் இருபபதால், வீட்டை, வாங்கியவரிடம் நேரடியாக ஒப்படைத்தல் முடியாது. என்னிடமுள்ள பகர உடைமையையே (Mediate Possession) என்றால் மாற்றமுடியும். வாடகைதாரர், வீட்டை வாங்கியவர் பேருக்கு வாடகைப் பத்திரம் எழுதிக் கொடுக்கிறார். இதன் மூலம் வீட்டின் பகர உடைமை வீட்டை வாங்கியவருக்கு வருகிறது. இந்த முறையில், பகர உடைமை மட்டும் மாறுவது "நிமித்த ஒப்படைப்பு" எனப்படும்.

இவ்வாறு பகர உடைமை மாறிய பின், அந்த வீட்டைப் பொறுத்த உடைமை எண்ணம் எனக்கு இருப்பதில்லை; ஆனால், அந்த உடைமை எண்ணம், பகர உடைமையை என்னிடமிருந்து பெற்றதனால், வீட்டை வாங்கியவருக்கு வந்துவிடுகிறது. உடைமைச் செயல் மட்டும் மாறாமல் வாடகைக்குக் குடியிருப்பவரிடமே இருக்கிறது. இப்படியாக, நிமித்த ஒப்படைப்பில், உடைமை எண்ணம் மட்டும் (பகர உடைமை மாத்திரம்) ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாறி, உடமைச் செயல் மாறாமலேயே இருக்கிறது.

உடைமை எண்ணமும், உடைமைச் செயலும், (நேரடி உடைமை) ஒரே நேரத்தில் மாறும்பொழுது, அதை "நேரடி ஒப்படைப்பு" என்றும், உடைமை எண்ணம் (பகர உடைமை)

மட்டும் மாறும்பொழுது அதை "நிமித்த ஒப்படைப்பு" என்றும் கூறுகின்றோம்.

இதுவே, நேர் ஒப்படைப்பிற்கும், நிமித்த ஒப்படைப்பிற்கு முள்ள வேறுபாடு.

இவ்வாறு, எடுத்தலும், ஒப்படைத்தலும், உடைமையை அடையும் வழிகளாக அமைகின்றன.

(v) நுண்பொருள் உடைமை (Incorporeal Possession)

இதுவரை, பருப் பொருள் உடைமையின் தன்மைகள், அதன் வகைகள், அதை அடையும் வழிகள், இவைபற்றி ஆராய்ந்தோம்.

எனக்கு இன்னொருவர் நிலத்தின் மீது நடந்து செல்லும் உரிமை இருக்கலாம்; எனது வீட்டிற்கு, இன்னொருவரின் நிலத்தின் வழியாக வரும் வெளிச்சத்திற்கான உரிமை எனக்கு இருக்கலாம். ஒரு பதவியைப் பொறுத்து எனக்குள்ள உரிமை, எனது புகழ், எனக்குள்ள சலுகைகள் இவைகளைப் பொறுத்த உரிமைகள் எனக்கு இருக்கின்றன. இந்த உரிமைகள் அனைத்தும் உடைமைப் பொருள்கள்தாம்; அதாவது, உடைமைக்கு உரித்தான நுண் பொருள்கள். இவைகளைக் குறித்து நாம் பாத்தியதை கொண்டாடி, அவைகளை அனுபவிப்பதை "நுண் பொருள் உடைமை" என்று கூறுகிறோம்.

பருப் பொருள்கள் மீது நாம் கொண்டாடும் தனித்த அனுபவத்தைப் "பருப் பொருள் உடைமை" என்கிறோம். நுண் பொருள்கள் (உரிமைகள்) மீது நாம் பாத்தியதை கொண்டாடி அவைகளை அனுபவிப்பதை "நுண் பொருள் உடைமை', என்று சொல்லுகிறோம். உரிமையை அனுபவிப்பது நுண் பொருள் உடைமை, பருப் பொருள்களைத் தனித்த அனுபவத்தில் வைத்திருப்பது பருப் பொருள் உடைமை.[1]

இருவித உடைமைகளிலும், உடைமைச் செயலும் உடைமை எண்ணமும் இருக்கவேண்டும். உடைமைச் செயலைப் பொறுத்த வரை, இரு உடைமைகளிடையே ஒரு வேறுபாடு உண்டு.

எனது கடிகாரத்தை எனது பெட்டியில் பூட்டி வைத்திருக்கிறேன் என்றால், அந்தக் கடிகாரம் எனது உடைமையில் இருக்கிறது என்பது தெளிவு. நான் அதை பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால், நுண் பொருள் உடைமையில், எந்த உரிமை நம் உடைமையில் இருக்

1 Incorporeal possession is commonly called the possession of a *right*, and a corporeal possession is distinguished from it as the possession of a thing.—Salmond.

கிறதோ, அதை நாம் அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும். இன்னொருவர் நிலத்தின்மீது நடந்து செல்லும் உரிமையை, நான் நடந்து அனுபவித்துக்கொண்டே இருந்தால் தான் அந்த உரிமையின் உடைமை என்னிடம் நிலைத்து இருப்ப தாகும். உரிமையை அனுபவிக்கும் செயலே "உடைமைச் செயல்" ஆகிறது. பருப் பொருள் உடைமையில், இன்னொருவர் அந்தப் பருப் பொருளை அணுகாமல் வைக்கும் வாய்ப்பு நமக்கு இருக் கிறது; ஒரு உரிமையை அவ்வாறு வைப்பது இயலாது. **ஒரு பருப் பொருளை நம் வசம் வைத்திருந்தாலே—அதை நாம் அனுபவித்தாலும் அனுப விக்கா விட்டாலும்—அது உடைமைச் செயல் ஆகிவிடுகின்றது. ஆனால், நுண் பொருள்களான உரிமைகளைப் பொறுத்தவரை நமது அனுபோகம் ஒன்றே உடை மைச் செயலாகும்.**[1] உரிமைகளைப் பொறுத்த உடைமைச் செயல், அனுபோகம் ஒன்றுதான். இந்த முறையில், பருப் பொருள்களுக் கும், நுண் பொருள்களுக்கும் உள்ள உடைமைச் செயல்கள் வேறுபடுகின்றன.

நுணுகி ஆராயுமிடத்து, "உடைமை" என்ற சொல் நமது பாத்தியதையே (உரிமையையே) குறிக்கிறது. ஒரு பருப் பொருள் மீது நமக்குள்ள உரிமையைத்தான் உடைமை என்று கூறுகிறோம். "சொந்தம்" (சொத்துரிமை) என்ற அத்தியாயத்தில் கூறியபடி, நமது சொத்தில் உள்ள உரிமையை விளக்கும் பொழுது, உரிமைக்கு பதிலாக அந்த உரிமைக்கு இலக்கான பருப் பொருளையே குறிப்பிட்டுப் பேசுகிறோம். ஒரு பருப்பொருளின் மீதுள்ள சொத்துரிமை ஒருவருக்குச் சொந்தம் என்றால், அப் பொருளே அவருக்குச் சொந்தம் என்று கூறுதல் இலக்கண மரபு. இந்த முறைப்படியேதான், உடைமை, ஒரு பருப் பொருளின் உரிமையைப் பொறுத்தே இருந்தாலும், அந்த பருப் பொருளே உடைமையில் இருப்பதாக இலக்கண மரபில் கூறுகிறோம். "இந்தப் புத்தகம் எனது உடைமையில் இருக்கிறது" என்று கூறினால், அதன் உட்பொருள், "இந்தப் புத்தகத்தைப் பொறுத்த உரிமை என் உடைமையில் இருக்கிறது" என்பதேயாகும். "புத்த கத்தைப் பொறுத்த உரிமை என் உடமையில் இருக்கிறது," என்று கூறுவதற்குப் பதிலாக "புத்தகம் எனது உடைமையில் இருக் கிறது" என்று இலக்கண மரபில் கூறுகிறோம். ஆகவே, பருப் பொருள் உடைமையிலும் சரி, நுண்பொருள் உடைமையிலும் சரி, **உடைமைப் பொருளாக இருப்பது உரிமைதான்.** இதனால், இந்த இருவித உடைமைகளும் அடிப்படையில் வேறுபட்டவை அல்ல.

1. In the case of incorporeal things continuing non-user is inconsistent with possession, though in the case of corporeal things it is consistent with it.—Salmond.

பொதுவாக, முழுக்கருத்தும் புலப்படும் வகையில் கூறினல், "உடைமை" என்பது கொண்டாடப்படும் பாத்தியதையை அல்லது உரிமையைத் தொடர்ந்து அனுபவிப்பதே ஆகும். (Possession in its full compass and generic application means the continuing exercise of any claim or right. —Salmond.)

(vi) சொந்தமும் (சொத்துரிமையும்) உடைமையும்

ஒரு பொருள் மீது நமக்குள்ள சொந்தமும், (சொத்துரிமையும்), அதன் உடைமையும், எவ்வாறு தொடர்புடையன என்று பார்ப்போம்.

"சொந்தம்" என்பது, ஒரு பொருள் மீது எனக்குள்ள உரிமை; "உடைமை" என்பது, அந்தப் பொருளை நான் அனுபவிக்கும் செயல். சொந்தம் எனது உரிமை; உடைமை அந்த உரிமை செயல் படும் முறை. ஒரு பொருள் மீது, நமக்கு உள்ள சொந்தம் என்ற உரிமை, உடைமை என்ற செயலாக உருவெடுக்கின்றது.[1]

எனக்குச் சொந்தமான பொருள், பொதுவாக எனது உடைமையில் இருக்கிறது. எனக்கு ஒரு பொருள் மீதுள்ள சொந்தம் (சொத்துரிமை) எனது உடைமையாகிய புறச்செயல் மூலம் காணப்படுகிறது. முன்னது உரிமை; பின்னது செயல். சொந்தம் என்ற உரிமை, உடைமையாகிய செயலில் வெளிப்பட்டு இயங்குகிறது. சட்டத்தின் அடிப்படையில் தோன்றுவது சொத்துரிமை; செயலின் அடிப்படையில் இயங்குவது உடைமை. சட்டத்தின்படி எனக்குள்ள சொத்துரிமையை, எனது உடைமையாகிய செயல் மூலம் பேணுகிறேன்.[2]

சொத்துரிமையும் உடைமையும் ஒருவரிடமே இருக்கும் பொழுது, சொந்தம் என்ற உயிர் உடைமை என்ற உடலோடு இயங்குவதாகும். பொதுவாக, சொந்தமும் உடைமையும் ஒன்றி நிற்பன. இரண்டும் பிரிந்திருந்தால், அதற்குக் காரணங்கள் இருக்கும். ஒரு பொருள் எனக்குச் சொந்தம் என்ருல், அந்தப் பொருளை எனது உடைமையிலேயே வைத்திருக்கிறேன், அல்லது எனது உடைமையில் வைத்திருக்கப் பாடுபடுகிறேன். ஒருபொருள் நீண்ட நாள் எனது உடைமை

1. Possession is the objective realisation of ownership. —Ihering.

2. Possession is the *de-facto* excercise of a claim; ownership is the *de jure* recognition of one.
........Ownership is the guarantee of the law; possession is the guarantee of the facts.—Salmond.

யில் இருந்தால், அதைவைத்து, அந்தப் பொருள் மீது சொந்தம் கொண்டாடுகிறேன், அல்லது, அந்தச் சொந்தத்தைப் பெற முயல்கிறேன். இவ்வாறு சொத்துரிமை, உடைமையாகச் செயல்பட முயலுகிறது; உடைமை, சொத்துரிமையாக மலர்ந்து நிலைப்பதற்கு முயல்கின்றது. சொத்துரிமை இல்லாத உடைமை நாளடைவில் அந்த உரிமைக்கு அடிகோலுகிறது; உடைமையோடு கூடி இராத சொத்துரிமை நாளடைவில், காலப்போக்கில், மங்கி மறைகிறது.[1]

இவ்வாறு, ஒரு பொருள் மீதுள்ள சொந்தமும் (சொத்துரிமையும்), உடைமையும் தொடர்ந்து நிற்பனவாகும்.

(vii) உடைமையின் முக்கியத்துவம்

சட்டத்தில், "உடைமை" என்பது மிகவும் முக்கியமான கருத்தாகும். ஒரு பொருள்மீது ஒருவருக்கு இருக்கும் உடைமையைச் சட்டம் உன்னிப்பாகப் பாதுகாக்கின்றது. ஒரு பொருளின் உடைமையை வைத்திருப்பவர் யாராக இருந்தாலும்—அப் பொருள் மீது சொத்துரிமை உள்ளவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும்,—அவரது உடைமையைச் சட்டம் காப்பாற்றுகிறது.

ஒரு பொருள், அதன் மீது எவ்வித உரிமையும் இல்லாத ஒருவரது உடைமையில் இருந்தாலும், அந்த உடைமையை எதிர்க்கும் உரிமை, அந்தப்பொருளின் சொந்தக்காரருக்கே உண்டு; வேறு எவருக்கும் அந்த அதிகாரம் கிடையாது. ஆகவே, உரிமைஇல்லாத உடைமைதாரர், அந்தப் பொருளின் சொந்தக் காரரைத் தவிர, மற்றவர்களைப் பொறுத்த வரையிலும், அந்தப் பொருளின் உடைமைக்கு உரியவராகவே கருதப்படுகிறார். ஒரு பொருள் மீது உரிமை இல்லாது, அதன் உடைமை மட்டும் உள்ளவர், தனது உடைமையை அதன் சொந்தக்காரரைத்தவிர மற்ற எல்லோரிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம். அவரது உடைமயைப் பிறர் பறித்துக் கொண்டால், இழந்த உடைமயைத் திரும்பப் பெறும் அதிகாரம் அவருக்கு உண்டு. பொருளின் சொந்தக்காரர் கூட, அந்தப்பொருள் மீது உரிமை இல்லாதவரின் உடைமையை வன்முறையால் அகற்றிவிட முடியாது; நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, அதன் மூலமாகவே அப்பொருளைத் தனது உடைமைக்குக் கொண்டு வரமுடியும்.

1. The two things (ownership and possession) tend mutually to coincide. Ownership strives to realise itself in possession, and possession endeavours to justify itself as ownership. The law of prescription determines the process by which, through the influence of time, possession without title ripens into ownership, and ownership without possession withers away and dies.—Salmond.

எனது வீட்டில் குடியிருப்பவர், வீட்டைக் காலி செய்து என்னுடைய உடைமையில் வீட்டை விடுவதற்கு மறுத்தால் நானுகை வீட்டின் உடைமையை வன்முறையில் கைப்பற்ற முடியாது. சட்டம் அதை ஒப்புவது இல்லை. நியாய மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அந்த வழியிலேதான் வீட்டை எனது உடைமைக்குக் கொண்டுவர வேண்டும். இந்த விதியை மீறி, பலவந்தமாக நான் என் வீட்டின் உடைமையைக் கைப்பற்றிக் கொண்டேன் எனில், வாடகைகாரர் என் மீது வழக்குத் தொடர்ந்து, வீட்டின் உடைமையை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். அந்த அதிகாரம் அவருக்கு உண்டு. இந்த முறையில், ஒவ்வொரு உடைமைதாரருக்கும் தமது உடைமையைக் காப்பாற்றிக் கொள்ளும் உரிமை இருக்கிறது.[1]

இவ்வாறு, ஒவ்வொருவரின் உடைமையும் சட்டப்படிப் பாதுகாக்கப் படவில்லை எனில், வன்முறையாக ஒருவர் உடைமையை இன்னொருவர் பறிப்பது வழக்க மாகிவிடும். நல்லவர் உடைமை வல்லவர் செயலால் பறிபோய் விடலாம். ஆதலால், எவருடைய உடைமையும் சட்டப்படி பாதுகாக்கப் படுகிறது.

ஆகவே, "உடைமை" எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெளிவாகும்.

---

1. The intention of the law is that every possessor shall be entitled to retain and recover his possession, until deprived of it by a judgment according to law.—Salmond.

"........Possession was nine points of the law"—Salmond.

4. சொத்து (Property)

"அருளில்லாருக்கு அவ்வுலக மில்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு." (குறள். 247)

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை போல், பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகம் இல்லை. பொருள் "இல்லாரை எல்லாரும் எள்ளுவர், செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு." ஒன்றுக்கும் பயன் இல்லாதவர்களுக்கும், இவ்வுலகில் உயர்வைக் கொடுக்கும் வல்லமை உடையது; "பொருளல்ல வரைப் பொரு ளாகச் செய்வது," அவர்களிடமுள்ள பொருளேயாகும். நல்வழி யில் ஈட்டிய செல்வம், "தீதின்றி வந்த பொருள்", அறத்தையும் இன்பத்தையும் அளிக்கின்றது. இந்த முறையிலே, எல்லாருக்கும், எஞ்ஞான்றும், இன்றியமையாத தாயிருப்பதால், "பொருள் என் னும் பொய்யா விளக்கம்" என்று பொருளைச் சிறப்பித்துக் கூறு கின்றார் வாழ்வின் வழி வகுத்த வள்ளுவ நாயனார்.

அறத்திற்கும் இன்பத்திற்கும் ஆதாரமாக இருக்கும் பொருள் நம் வாழ்விலே முக்கிய பங்கு கொள்ளுகிறது. உரிமை, உடைமை சொந்தம் முதலிய சட்டக்கருத்துக்கள் எல்லாம் பொருளுக்கும் நமக்குமுள்ள தொடர்பைக் குறிப்பனவே யாகும். நிலையாத இயல் புடையது தான் செல்வம், "அற்கா இயல்பிற்றுச் செல்வம்" என்று அறுதியிட்டு அறநூல்கள் கூறினாலும், மக்கள் வாழ்வது செல் வத்தை நாடியேதான். செல்வத்தைச் சீந்தாத சீரிய துறவுள்ளம் படைத்தவர்களுக்கு, உரிமை, உடைமை என்று உள்ளது ஒன்றும் இல்லை. பற்றற்ற துறவுநிலை எய்தியவர்களுக்கு உற்றாரும், உற வினரும், உறு பொருளும் இல்லை. சட்டமோ நியாயமன்றமோ அவர்களுக்குத் தேவையில்லாதவை. ஆனால், சாதாரண மக்களின் வாழ்க்கைச் சக்கரம் பொருளை மையமாக வைத்தே சுழல்கின்றது.

ஒரு மனிதனின் இன்ப வாழ்விற்கு, அவனிடமுள்ள பொருள் மட்டுமின்றி அவனுக்குச் சமூகத்திலுள்ள நன்மதிப்பும் (Status), சுதந்திரமும் (Liberty) அவசியமானவை. எனக்குச் சொந்தமான பணம், நிலம், வீடு, எனது உழைப்பினால் நான் தேடும் பொருள்கள் எல்லாம் எனது பொருட் செல்வம் ஆகின்றன. ஒரு தொழிலில் வல்லவன் என்ற முறையில் எனக்குப் புகழ் இருக்கலாம்; ஒரு பதவியில் நான் இருப்பதால் எனக்கு மதிப்பு இருக்கலாம். வசையின்றி இசை பட வாழ்வதில் தான் எனது நன் மதிப்பு இருக்கிறது. இந்த மதிப்பும் எனது செல்வமேயாகும். நமது உட லுக்கும் உயிருக்கும் பிறர் ஊறு செய்யாமல், நாம் தன்னுரிமை

யோடு வாழ வேண்டும். இந்தத் தன்னுரிமையும் நமது செல்வமே யாகும். இவ்வாறு, பொருள், புகழ், தன்னுரிமை, இம் மூன்றும் நம் வாழ்விற்கு இனிமை பயக்கும் செல்வங்கள் ஆகின்றன [1]

இந்தச் செல்வங்கள் அனைத்தையுமே, பொதுவாக, "சொத்து" என்று குறிப்பிடுகிறோம். நமது உடல், உயிர், சுதந்திரம், பொருள், புகழ் எல்லாம் நம் சொத்துக்கள் தாம். சட்டப்படி, நமக்குச் சொந்தமானவை அனைத்தும் நம் சொத்துக்கள் ஆகின்றன.[2]

ஆங்கிலத்தில், Property என்ற சொல்லைத் தமிழில் 'சொத்து' எனக் கூறுகிறோம். ஆனால், அந்த ஆங்கிலச் சொல் பொருட் செல்வம் ஒன்றையே குறித்து நிற்கின்றது. சட்ட வியலின் இந்தப் பகுதியில், பொருட் செல்வம் (பொருள்கள்) பற்றியே ஆராய்கின்றோம்.

பொருள்கள், பருப்பொருள்கள் (Corporeal property) என்றும், நுண் பொருள்கள் (Incorporeal property) என்றும் இருவகைப் படுவன.

நிலம், வீடு போன்ற அசையாப் பொருள்களும் (Immovables), பணம், பொன், கால்நடைகள் போன்ற அசையும் பொருள்களும் (movables) பருப் பொருள்கள்.

(i) நுண் பொருள் செல்வம் (Ownership in immaterial things).

மனிதர்கள், தங்கள் உழைப்பாலும், உத்தியாலும், திறனாலும் கலைஉணர்வாலும், கற்பனையாலும், எத்தனையோ நுண் பொருள் களைப் படைக்கின்றனர்.

கற்பனையில் எழுந்த காவியம், ஓவியம், சிற்பம், கருத்துக்கள் மிகுந்த நூல்கள், மதிநுட்பத்தால் கண்டு பிடிக்கப்பட்ட புதிய இயந்திரங்கள் போன்ற புதுப் புனைவுச் செயல்கள், வெற்றிகரமாக நடக்கும் வாணிப முத்திரை, இவைகளெல்லாம் நுண்பொருட் செல்வங்கள். அவை அனைத்தும், அவைகளை ஆக்கியோரின் செல்வங்கள். பிறரால் கண்டுபிடிக்கப் பட்ட புதுப்புனைவு களையோ, பிறரது கலை உணர்வில் தோன்றிய காவியத்தையோ, ஓவியத்தையோ நாம் நமதாக்கிக் கொள்ள முடியாது. இம் மாதிரி யேதான் ஒருவர் எழுதிய நூல் அவரது சொத்தாக இருக்கிறது. வாணிப முத்திரையும் அத்தன்மையதே.

நான் வரைந்த ஓவியம் அல்லது நான் வனைந்த சிற்பம் எனது சொத்து என்றால், அந்தத் தனிப்பட்ட ஓவியமும் சிற்பமும் எனது

1. Every man has a right to preserve "his property, that is, his life, liberty and estate."Locke.

2. A man's property is all that is *his in law.*—Salmond.

சொத்து என்பது மட்டுமன்று. அந்தப் படைப்பின் அழகு உருவ நுண் அமைப்பை (abstract sense of the artistic form) பிறர் அவ்வாறே நகலெடுத்து வரைதலோ, வனைதலோ கூடாது. அந்தக் கலை நுண் அமைப்பு உரிமை (Artistic copyright) எனக்கே உரியதாகிறது இந்த உரிமை நுண்பொருட்செல்வம்.

இது போன்றே, நான் எழுதிய நூலின் புதிய கருத்துக்களை அப்படியே இன்னொருவர் எடுத்துக் கையாளுவதையும், நான் கற்பனையில் படைத்த கதையிலோ நாடகத்திலோ உள்ள கதை நிகழ்ச்சிகளை அப்படியே ஏற்று இன்னொருவர் எழுதுவதையும் சட்டம் தடுக்கிறது. நான் எழுதிய நூல்களில் உள்ள என் புதுக் கருத்துக்களும், கதை அமைப்பும், நாடக இயலும், எனது தனிப்பட்ட சொத்தாகும். இவ்வாறே, நான் இயற்றிய கவிதைகளிலும், உரைநடை நூல்களிலுமுள்ள சொற்கோவையும் கருத்தமைவும் எனது உயரிய சொத்தாகின்றன. இதை ஆங்கிலத்தில் Literary and Dramatic Copyright என்று கூறுவார்கள். இந்த முறையிலேயே, என்னால் தொகுக்கப்பட்ட இன்னிசை மெட்டமைப்பும் (Musical Copyright) சட்டத்தினால் எனது தனிப்பட்ட சொத்தாக்கப்படுகிறது.

ஒருவர் தமது ஆராய்ச்சி மதித்திறனால் புதியதோர் இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கலாம்; அல்லது ஒரு புதிய மருந்து செய்யும் முறையை அறியலாம். இத்தகைய புதுப்புனைவுச் செயல்களை (Inventions), அவைகளைக் கண்டுபிடித்தவர்களின் நுண்பொருட் செல்வங்களாகக் கருதிச் சட்டம் பாதுகாக்கிறது. இந்த உரிமையை ஆங்கிலத்தில் (patent-right) என்பார்கள்.

புகழ் பெற்ற ஒரு வாணிபப் பெயரால் (Trade mark or commercial good-will) புதிதாக இன்னொருவர் வாணிபம் செய்வதற்குச் சட்டம் இடந்தருவதில்லை. ஒருவர் ஒரு பெயரில் வாணிபத்தை நீண்ட நாள் நடத்தி அதனால் அதற்குப் புகழ் தேடியிருக்கிறார். அந்தப் பெயரையோ, வாணிபக்குறியையோ, மற்றொருவர் பயன்படுத்தி வாணிபம் செய்தால் பழைய வணிகனுக்குக் கேடு விளைகின்றது. ஆதலால், சட்டம், பெயர் பெற்ற வாணிபக் குறிகளையும், வாணிபப் பெயர்களையும் பாதுகாக்கின்றது.

உண்மையில், மேலே சொல்லப்பட்ட நுண் பொருட் செல்வங்களே ஒரு மனிதனின் உற்ற அறிவாலும், ஊக்கத்தாலும், உழைப்பாலும், உயர்கலை உணர்வாலும் பெறும் அரிய செல்வங்கள். அவைகளின் பலனை அவைகளை ஆக்கியோர் நுகர்வது முறையே ஆகும்.

எனவே, பருப் பொருட் செல்வங்களைவிட, உலகத்தார்க்கு உயர்நலம் அளிக்கும் உண்மைச் செல்வங்களான இந்த நுண்

பொருட் செல்வங்கள் சட்டத்தால் போற்றிப் பாதுகாக்கப் படுகின்றன.[1]

இதர நுண்பொருட் செல்வங்கள்

ஒரு பருப்பொருளைப் பொறுத்த சொத்துரிமை, ஒருவரிடமும், மற்றப்பட்ட உரிமை (Rights *in re aliena*) மற்றவரிடமும் இருக்கலாம் என்று முன்பு கூறப்பட்டது. ஒருவருக்குச் சொந்தமான நிலத்தை மற்றொருவர் குத்தகையாகவோ ஈடாகவோ பெற்றிருக்கலாம். ஒருவருக்குச் சொந்தமான பருப்பொருளை, இன்னொருவர் தமது உடைமையில் வைத்து அனுபவிக்கும் உரிமை பெற்று இருந்தால், அது குத்தகை உரிமை (Lease right) எனப்படுகிறது. நாம் ஓர் உரிமையை அடைவதற்குப் பிணையமாக இருக்கும் சொத்தின் மீதுள்ள உரிமையை ஈடு உரிமை (Security) என்கிறோம். நமக்கு வரவேண்டிய கடனுக்குப் பிணையமாகக் கடன் வாங்கியவரின் நிலத்தைப் பெறுகிறோம். இப்பொழுது அந்த நிலத்தின்மீதுள்ள நமது உரிமை ஈடு உரிமை ஆகிறது. ஒருவரது நிலத்தின்மீது நடந்து நமது நிலத்துக்குச் செல்லும் உரிமை, அவர் நிலத்தின் வழியாக நமது நிலத்திற்கு நீர் பாய்ச்சும் உரிமை (Servitudes) நமக்கு இருக்கலாம். இவ்வாறு, குத்தகை, ஈடு முதலியவற்றில் நமக்குள்ள சொந்தம் உரிமைகள் பற்றியனவேயாகும். இவை பருப்பொருள்களைப் பொறுத்த பிரிக்கப்பட்ட உரிமைகளாக இருப்பதால், இவைகளும் நுண் பொருள்களே யாகும். இது போன்ற உரிமைகள் நமது நுண் பொருட் சொத்துக்களாக ஆகின்றன,

(ii) பருப்பொருள்கள் (Material Things)

பருப்பொருள்களில் நமக்குள்ள ஆதார உரிமையே "சொத்துரிமை" எனப்படுகிறது என முன்பு கண்டோம்.

பருப்பொருள்களின் ஆதார உரிமைகள் நம்மிடம் இருந்தால் தான் அவை நமக்குச் சொந்தமாகின்றன. எனக்குச் சொந்தமான வீட்டை நான் இன்னொருவருக்கு ஈடாகவோ ஒத்தியாகவோ வைத்திருக்கலாம். இருப்பினும் எனது சொந்தம் மறைந்து விடுவதில்லை. அதன் அடிப்படை உரிமை (சொத்துரிமை) என்னுடையதாகவே இருக்கிறது. என்னுடைய பொருளைப்

1. The immaterial product of a man's brains may be as valuable as his land or his goods. The law, therefore, gives him a proprietary right in it, and the unauthorised use of it by other persons is a violation of his ownership, no less than theft or trespass is.—Salmond.

பொறுத்துப் பிரிக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட உரிமைகள் பலருக்கு இருந்தாலும், அச்சொத்தின் உடைமைக்கான உரிமை இன்னொருவரிடம் இருந்தாலும், சொத்துரிமை என்னிடம் இருக்கும்வரை நான் பிறருக்கு அதன் மேலுள்ள மாற்றப்பட்ட உரிமைகள் அனைத்தையும் போக்கி அச் சொத்தை என்வசம் ஆக்கிக்கொள்ளும் தகுதி உடையவனாக இருக்கிறேன். இவ்வாறு மாற்றப்பட்ட உரிமைகள் மறைந்து போகக் கூடியவை. ஆனால் சொத்துரிமை நிலைத்து நிற்பது.

சொத்துரிமை உடையவர் இறந்த பின்னும், அந்த உரிமை அவரின் வாரிசுகளுக்குப் போகின்றது; அது மறைந்துவிடுவதில்லை. இவ்வாறு, பருப்பொருளைப் பொறுத்த சொத்துரிமை, நிலைத்து நிற்பதாகவும், வழிவழி வரத்தக்கதாகவும் உள்ள உரிமையாகும்.

(iii) சொத்தை ஈட்டும் முறைகள்

ஒரு சொத்தை ஒருவர் அடைவதற்கு முக்கியமான வழிகள் நான்கு. அவையாவன: உடைமை (Possession), நீண்டகால அனுபோக உரிமை (Prescription), ஒப்பந்தம் (Agreements), வாரிசு உரிமை (Inheritance).

(அ) உடைமை (Possession)

ஆதியில் மனிதனுக்கு உடைமைச் செயலிலிருந்துதான் உரிமை எண்ணம் பிறந்தது. கடலிலுள்ள மீன்களும், வானில் பறக்கும் பறவைகளும் அவற்றைப் பிடித்தவர்களுக்கே சொந்தமாகின்றன.

> *" மரங்களை வெட்டி நிலத்தைச் சீர்ப்படுத்தியவனுக்கு நிலம் சொந்தமாகிறது; அம்பினால் ஒருமானை அடித்தவன் மானின் சொந்தக்காரனாகிறான் " —மனு. அத்-9: விதி: 44*

இவ்வாறு உடைமையால் சொத்துரிமை பிறக்கின்றது என்ற கொள்கையை நம்முடைய ஆதிகால அறநூல்களிலும் காணுகிறோம். நாம் முன்னர்க் கூறியபடி, ஒருவரது உடைமையைச் சட்டம் உன்னிப்பாகப் பாதுகாக்கிறது. ஒரு பொருளின்மீது உரிமை இல்லாதவரின் உடைமைகூடச் சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு ஒருபொருளின் உடைமையைப் பாதுகாத்து அப் பொருளை நமது சொத்தாக ஆக்கிக்கொள்ளுகிறோம்.

(ஆ) நீண்டகால அனுபோக உரிமை (Prescription)

காலம் மிகவும் சக்தி வாய்ந்தது. மனித வாழ்வும், தோன்றி மறையும் மகத்தான பேரரசுகளும் காலவெள்ளத்திலே சிதறி மறையும் திவலைகள்தாம். குறுகிய மனித வாழ்விலே தோன்றும்

உரிமைகளையும் கடமைகளையும் காலத்திற்குக் கட்டுப்பட்டவை களாகவே சட்டம் கருதுகிறது. நிலையில்லாத வாழ்விலே ஒரு சிறிதாவது உறுதித் தன்மை இருக்கவேண்டும். ஆதலால் காலத்திற்கு உரிமைகளை ஆக்கும் ஆற்றலும், அழிக்கும் சக்தியும் இருப்பதாகச் சட்டம் கொள்கிறது[1]. இன்றையச் சட்டத்தின்படி, பன்னிரண்டு வருடங்கள், ஒரு நிலத்தின் சொந்தக்காரரது உரிமையை மறுத்து நான் அந்த நிலத்தை அனுபவித்து வந்தால், பன்னிரண்டாவது ஆண்டு முடிவில் சட்டப்படியாக அந்த நிலம் எனக்குச் சொந்தமாகிவிடுகிறது. முடிவில் அதன் முந்திய சொந்தக்காரர் தனது சொத்துரிமையை இழந்து விடுகின்றார்.

" ஒருவன், தனது சொத்தை இன்னொருவன் அனுபவித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தும் பத்து ஆண்டுகள் வரை வாளாவிருந்து விட்டால், அதன்பின் அச்சொத்தைப் பெறும் உரிமை அவனுக்கு இல்லை." —மனு. அத்-8: விதி. 147

" ஒருவருக்கு ஒரு பொருள் விலைக்கோ கொடையாகவோ கிடைத்ததில்லை என்றாலும், அந்தப் பொருளை அவர், எவ்விதத் தடையுமின்றி அறுபது ஆண்டுகள் வரை அனுபவித்து விட்டால், அப் பொருளில் அவருக்கன்றி வேறு எவருக்கும் உரிமை இல்லை." —சுக்கிர நீதி

" ஒரு பொருள்மீது நியாயமான உரிமையைப் பெற்றவன், அப்பொருளை ஒரு சிறிதும் அனுபவியாமல் இருந்து விட்டால், அப்பொருளைப் பற்றிய அவனது உரிமை வலியிழந்து அழிந்து விடுகிறது." —சுக்கிரநீதி

" தனக்குச் சொந்தமான நிலத்தை இன்னொருவன் அனுபவிப்பதைப் பார்த்தும், அதை இருபது ஆண்டுகள் வரை தடை செய்யாது இருந்தவனும், தனது இதர பொருள்களைப் பிறர் அனுபவிப்பதைக் கண்டும் பத்து ஆண்டுகள் வரை வாளா விருந்தவனும். அந்தப் பொருள்களைப் பொறுத்த தன் உரிமைகளை இழந்து விடுகின்றான்."
—யாக்ஞ்ய வல்கியர். 2-2-24

இவ்வாறு நீண்டகால அனுபோகத்தின் வாயிலாக, உடைமை உள்ளவருக்கு உரிமை உதிப்பதையும், உடைமை அற்ற சொந்தக்காரரின் உரிமை மறைவதையும், நம் நாட்டு ஆதிகால நீதிவல்லுநர்கள் தெளிந்து கூறியிருப்பது தற்காலச் சட்டவியலுக்கும் பொருந்தும் சிறப்புடையது!

1. Prescription may be defined as the effect of lapse of time in creating or destroying rights—Salmond.

உரிமையும் உடைமையும், பொதுவாக, ஒன்றியிருப்பதாகவே சட்டம் கருதுகின்றது. ஒரு வீட்டை நான் எனது தனி உரிமையில் அனுபவித்துக்கொண்டு இருந்தேன் எனில், அந்த வீடு எனக்குச் சொந்தம் என்பதே முடிபு. ஒரு பொருளின் அனுபவத்தில் இல்லாதவர் அந்தப் பொருளுக்கு உடையவர் அல்லர் என்றும், அதன் அனுபவத்தை உடையவர் அந்தப் பொருளுக்குச் சொந்தக்காரர் என்றும், சட்டம் கருதுகின்றது.

ஆகவே, எனக்கு உரிமையில்லாத பொருள் எனது உடைமையில் இருந்தால், அந்த உடைமையை எனது உரிமைக்குச் சான்றுகச் (evidence of title) சட்டம் கொள்கிறது. காலப்போக்கிலே, எனது ஓழிவில்லாத உடைமை ஆகிய சான்று வலிவுற்று, எனது உரிமையை நிலை நாட்டும் "உரிமை மூலமாக" (source of title) அமைகின்றது. ஆதலால், நீண்டநாள் ஒரு சொத்தைத் தனது அனுபோகத்தில் வைத்திருப்பவரை, அச்சொத்திற்கு உரியவர், சொந்தக்காரர் - என்று சட்டம் முடிவாகத் தீர்மானிக்கிறது. **இவ்வாறு நீண்டநாள் அனுபோகத்தின் பயனுகச் சொத்துரிமை தோன்றுகிறது**[1].

இம்மாதிரியே, கடமைகளும் காலவெள்ளத்திலே கரைந்து விடுகின்றன. நமக்கு ஒப்புதல் சீட்டு (Pronote) எழுதிக் கொடுத்தவர்மீது, ஒப்புதல் தேதியிலிருந்து மூன்றுண்டுகளுக்குள் வழக்குத் தொடரவில்லை யெனில், வழக்காடும் உரிமையை நாம் இழந்து விடுகிறோம். நமக்கு வரவேண்டிய கடன் மறைந்துவிட வில்லை. ஆனல், நீதி மன்றங்கள் மூலம் அதை மீட்டும் உரிமை மறைந்து விடுகின்றது.

" உரிமையை அசட்டை செய்கின்றவன் அதை இழந்து விடுகின்றுன். ஊக்கத்தோடு உரிமையைப் பேணுபவனுக்கே உதவி செய்கின்றது சட்டம் " என்ற லத்தீன் மொழியின் விதியை ஒட்டி ஆங்கிலச் சட்டம் உரிமையை மறந்து உறங்குபவனுக்கு உதவி செய்வதில்லை.

இவ்வாறு சட்டம் இல்லையெனில் நம்முடைய சொத்துரிமைகள் அனைத்தும் நிலையற்றதாகிவிடும். எவருடைய உரிமை பற்றியும் உறுதிப்பாடு இருக்க முடியாது. நீங்களும் உங்கள் முன்னேர்களும் நூறு வருடங்களுக்கு மேலாகத், தொடர்ந்து அனுபவித்து வரும் நிலத்தின்மீது, சம்பந்தமில்லாத ஓருவர் நூற்றைம்பது வருடங்களுக்கு முந்திய பாத்தியதையைக் குறிக்கும் ஒரு பத்திரத்தைக் காட்டி உரிமை கொண்டாட முன்வந்தால், நீங்கள் அவர் கொண்

1. Lapse of time is recognised as creative and destructive of rights, instead of merely as evidence for and against their existence.—Salmond.

டாடும் பாத்தியதையை மறுக்கவோ ஏற்கவோ முடியாது. அவரது பத்திரத்தில் உள்ள உரிமையை ஓர்ந்து நிச்சயிப்பது நீதி மன்றங்களாலும் இயலாது. ஆதலால் தான், ஒரு சொத்தின்மீது உடைமை இல்லாத ஒருவர் உரிமை கொண்டாடினால், உடைமை இழந்த பின் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் தனது உரிமை பற்றிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; இல்லாவிடில், அந்த உரிமை உயிரற்றதாகி விடுகிறது எனச் சட்டம் விதிக்கின்றது. ஆகவே, அனுபோகத்திலில்லாத சொத்துப் பற்றிய உரிமை காலவெள்ளத்திலே அழிந்து விடுகின்றது என்றும், தொடர்ந்து இயங்கும் உடைமை காலப்போக்கிலே உரிமை உதிப்பதற்கு உதவி ஆகிறது என்றும் சட்டம் சொல்கிறது.

உடைமை என்ற வேரில் இருந்தே உரிமை என்ற செடி தழைக்க வேண்டும். உடைமையாகிய வேரை அழியவிட்டபின் உரிமையும் நாளடைவில் அழிந்துவிடுகிறது.

இவ்வாறு, காலதேவனின் கைத் திறனால் உடைமை இழந்தவர் உரிமை இழக்கின்றனர்; உடைமை பெற்றவர் உரிமை பெறுகின்றனர்.

(இ) ஒப்பந்தம் (Agreement)

உரிமைகளின் மூலங்களாக ஒப்பந்தங்கள் அமைகின்றன. ஒரு வீட்டின் சொந்தக்காரரிடமிருந்து நான் அதை விலைக்கு வாங்கினால் அந்த வீடு எனக்குச் சொந்தமாகிறது; அஃதாவது அந்த வீட்டின் சொத்துரிமை எனக்கு வருகிறது. விற்றவருக்கும் எனக்கும் ஏற்பட்ட விலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வந்ததாகும் எனது சொத்துரிமை. இந்த முறையில், சொத்துரிமையை அடையும் வழியாக ஒப்பந்தங்கள் அமைகின்றன.

(ஈ) வாரிசு உரிமை (Inheritance)

பெருஞ்செல்வம் உடையவர்களும், "கூடு விட்டு இங்கு ஆவிதான் போனபின்," தங்கள் சொத்தை எடுத்துச் செல்ல முடிவதில்லை. "ஈத்துவக்கும் இன்பம்" அறியாதவர்களின் இவறன்மையை இறந்த பின்னும் அவர்கள் பேணுவது முடியாது. தான் அரும்பாடு பட்டுத் தேடிய பொன்னைத் தன்னுடைய உடலோடு புதைத்துவிட வேண்டுமென்றோ, தன் ஆயுளுக்குப்பின், தனது நிலம் பலனளிக்காது பாழாகவே கிடக்கவேண்டுமென்றோ ஒருவர் தமது இறுதி விருப்பப் பத்திரத்தில் (Will) எழுதிவைத்திருந்தாரெனில், அது சட்டப்படி செல்லாததாகும்.[1]

1. The dead hand will not be suffered to withdraw property from the uses of the living. No man can validly direct that his lands shall lie waste, or that his money shall be buried with him or thrown into the sea.—Brown vs. Burdett.

இறந்தவர்கள் சொத்தை இருப்பவர்கள் பெற்றேதீருகின்றனர். இறந்தவரின் சந்ததிகளான அவரது வழியுரிமையுடையவர்களுக்கு அச் சொத்துக் கிடைக்கின்றது. தமது வாரிசாக, தாம் இவ்வுலகில் விட்டுச் செல்லும் சொத்தை, யார் பெற வேண்டும் என்று உறுதிசெய்யும் அதிகாரம் ஒருவருக்கு உண்டு. இறந்தவர் எழுதிவைத்த இறுதி விருப்பப் பத்திரப் (Will) படி அவர் சொத்துக்கள் அனுபவிக்கப்படுகின்றன. இறந்தவரின் சொத்துரிமை மறைந்துபோவதில்லை; அது, மாறி நிற்கின்றது. இந்த முறையிலே, இறந்தவர்களின் சொத்துக்களை, இருப்பவர்கள் மரபுரிமையாகப் பெறுகின்றனர். இவ்வாறு வழியு(வாரிசு) ரிமைப்படி, சொத்துரிமை தோன்றுகிறது.

மேலே சொன்னபடி, உடைமை, நீண்டநாள் அனுபோகம், ஒப்பந்தம், வாரிசுரிமை இவைகள் மூலம் சொத்துக்கள் ஈட்டப்படுகின்றன.

5. நபர்கள் (Persons)

ஆங்கிலத்திலுள்ள Person என்ற சொல்லை, தமிழில் 'மனிதன்' அல்லது "ஆள்" என்று கூறலாம். ஆனால், சட்டத்தில் அந்த ஆங்கிலச்சொல் உயிருள்ள ஒரு மனிதரை மட்டும் குறிப்பது அன்று. சட்டப்படியுள்ள செயல்களைச் செய்யும் தகுதி வாய்ந்த மனிதர்கள், கூட்டமைப்புக்கள், கோயில் திருவுருவங்கள், முதலிய உயர்திணை அஃறிணைப் பொருள்களையும் சேர்த்தே ஆங்கிலத்தில் Person என்ற சொல் சட்டவியலில் குறிப்பிடுகின்றது. இயற்றப்பட்ட சட்டங்களில், Person என்ற சொல் வரும் பொழுதெல்லாம் சாதாரணமாக 'நபர்' என்றே குறிப்பிட்டு வருகிறோம். "நபர்" என்பது அரபிச் சொல்லாக இருப்பினும், பழக்கத்தில் உள்ள சொல்லாகும். ஆதலால், இங்கு Person என்பதற்கு 'நபர்' என்ற சொல்லை ஏற்றுக்கொண்டு, அந்தச் சொல் எவ்வாறு சட்டத்தில் பயன்படுகிறது என்று பார்ப்போம்.

சட்டத்தில் 'நபர்' என்று குறிப்பிடுவது யாரை ?

சட்டப்படி, எவருக்கு உரிமைகளும், கடமைகளும் இருக்கின்றனவோ, அவரை 'நபர்' என்று சட்டம் குறிக்கிறது.[1]

அந்த நபர் மனிதராக இருக்க வேண்டும் என்பதன்று, கூட்டமைப்புகளும் (Company) சட்டத்தின் கண்ணோட்டத்தில் நபர்கள்தாம். பழைய ரோமர்களின் சட்டத்தில் (Roman Law) அடிமை மக்களுக்கு எந்தவித உரிமைகளும் கிடையாது. அவர்கள் மனிதர்களாக இருந்தாலும், அச் சட்டத்தின்படி "நபர்கள்" அல்லர். **எதற்குச் சட்டப்படி உரிமைகளும் கடமைகளும் இருப்பனவாகக் கருதப்படுகின்றதோ, அதையே நாம் "நபர்" என்று அழைக்கிறோம்.** இந்தத் தன்மையை அடிப்படையாக வைத்தே ஒரு மனிதரையோ அல்லது ஒரு பொருளையோ "நபர்" என்று சட்டம் அங்கீகரிக்கிறது.

உரிமைகளுக்கு அடிப்படையானவை நலன்கள் என முன்பு கண்டோம். கடமைகளை நிறைவேற்றச் செயல்திறன் வேண்டும். உரிமைகளும் கடமைகளும் ஒருவருக்கு—ஒரு பொருளுக்கு—இருக்கிறது என்றால், அவருக்கு—அதற்கு - நலன்களும் செயல் திறனும் இருந்தே ஆகவேண்டும்.

1. **Person is an entity to which rights and duties may be attributed—Prof. Gray.**

So far as legal theory is concerned, a person is any being whom the law regards as capable of rights and duties—Salmond.

எவருக்கு (எதற்கு), நலன்களும் அதைப் பொறுத்த உரிமைகளும், செயல் திறனும் அதனுல் கடமைகளும், இருப்பதாகச் சட்டம் கருதுகிறதோ, அவரை (அதை) "நபர்" என்று சட்டம் அழைக்கிறது.

ஒரு "கம்பெனியை" எடுத்துக் கொண்டால், அதைச் சட்டம் நபராகவே கருதுகிறது. கம்பெனியின் பெயரால் அதன் செயலாளரோ அல்லது ஆட்சிப் பொறுப்பாளரோ பிறர் மீது வழக்குத்தொடர உரிமையுண்டு. சொத்துக்கள் ஒரு கம்பெனிக்குச் சொந்தமானவையாக இருக்கலாம். கம்பெனி கடன்வாங்கலாம். வாங்கிய கடனைத் திரும்பக் கொடுக்கும் கடமை அதற்கு உண்டு. ஆகவே, "கம்பெனியை" ஓர் நபராகச் சட்டம் கருதுகிறது. கம்பெனிச்சட்டப்படி (Companies Act) இந்த உரிமைகளையும் கடமைகளையும் "கம்பெனி" என்ற நபர் பெறுகின்றது. இவ்வாறு, சட்டத்தால் ஆக்கப்பட்ட நபர் தான் "கம்பெனி." ஆகவே, கம்பெனியைச் சட்டத்தால் ஆக்கப்பட்ட நபர் (Legal Persons) என்பார்கள். மனிதர்கள் இயற்கை நபர்கள். (Natural Persons).[1]

சட்டத்தின்படி விலங்குகளின் நிலை என்ன ?

விலங்குகளை "நபர்களாக"ச் சட்டம் கருதுவதில்லை. ஒருவர் ஒரு விலங்கிற்குக் கொடுமை செய்தாரெனில், அதைத் துன்புறுத்தினுரெனில், சட்டம் அவரைத் தண்டிக்கலாம். இதைவைத்து விலங்குகளுக்கு உரிமை இருக்கிறதென்று கூறிவிட முடியாது. ஒரு விலங்கிற்குத் துன்பம் இழைக்கப்பட்டால் அது சமூகத்திற்கெதிரான இன்னுமையாகச் சடடம் கருதுகிறதே தவிர, உயிரினத்தின் உரிமைக்கு எதிரான செயலாகச் சட்டம் கொள்வதில்லை. விலங்கினத்திற்குத் துன்பம் விளைவிக்காமலிருப்பது, சமூகத்திற்கு உரிய கடமையேயாகும். விலங்குகளுக்கு உரிமையோ கடமையோ கிடையாது. ஆதலால், விலங்குகளை 'நபர்'களாகச் சட்டம் ஏற்பதில்லை.

இறந்தவர்களின் நிலை ?

இறந்தவர்களுக்கு இவ்வுலகைப் பற்றிய கவலை இல்லை. அவர்களுடைய நலனே உரிமையோ இவ்வுலகில் இல்லை. ஆகவே, இறந்தவர்களைச் சட்டம் 'நபர்'களாகக் கருதுவதில்லை.

ஆனுல், இறந்தவர்கள் வாழ்ந்த காலத்தில், அவர்களுக்கிருந்த விருப்புக்களையும் நலன்களையும் சட்டம் ஏற்றுக்கொள்ளுகிறது. ஒருவரது உடல், புகழ், சொத்து, இவைகளைப் பொறுத்து,

1. Natural persons are persons in fact as well as in law; legal persons are persons in law but not in fact.—Salmond.

அவருக்கிருந்த உரிமை அவர் இறந்தபின்னும் ஓரளவு நீடிப்பதாகவே சட்டம் கருதுகிறது. உயிர் பிரிந்த உடல் அவமதிக்கப்படுவதைச் சட்டம் அனுமதிப்பதில்லை. இறந்தவரின் புகழைப் பாதிக்கும் படியாகவும், அவரது வழிவந்து இப்பொழுது உள்ளவர்களின் நலன்களுக்கு எதிராகவும் செய்யப்படும் காரியங்களைச் சட்டம் தடுக்கிறது. ஆனால், இறந்தவரின் புகழுக்கு எதிரான செயல்களைத் தடுப்பது,அவர் வழிவந்தவர்களின் நலன்களைப்பாதுகாப்பதற்கு அவசியமாக இருந்தால் மட்டுமே, சட்டம் அவ்வாறு தடுக்கிறது. இறந்தவர் வெளியிட்டுப்போன இறுதி விருப்பப் படியே அவருடைய சொத்துக்களைச் சட்டம் பகிர்ந்து அளிக்கிறது. ஒருவர் இறந்தபின், அவர் சொத்துக்களை யார் அனுபவிப்பது என்பது அவர் இறுதி விருப்பப்படியே ஆகிறது. இவ்வாறு, இறந்தவரின் விருப்பங்களையும் நலன்களையும் ஓரளவு சட்டம் ஏற்றுக்கொண்டாலும், அவரை ஓர் 'நபரா'கச் சட்டம் ஏற்பதில்லை.

இனிப் பிறக்க இருப்பவர்களின் நிலை என்ன? (Unborn Persons)

இனிப் பிறக்க இருக்கும் ஒருவருக்கு ஒரு சொத்து சொந்தமாக இருக்கலாம். இதைச் சட்டம் ஒப்புகிறது. ஒருவர் தனது சொத்தைத் தனது மனைவிக்கும், இனிப் பிறக்கப்போகும் தனது பிள்ளைகளுக்கும் சேரவேண்டும் என்று எழுதிவைக்கலாம்.

ஒருவர் இறக்கும்போது அவரது மனைவி கருவுற்றிருந்தால், கருவில் இருந்த பிள்ளை பிறந்தபின் தனது தகப்பனாரின் சொத்தை அடைகின்றது. கருவில் வளரும் பிள்ளையைச் சட்டம் ஏற்கனவே உலகத்தில் வாழும் பிள்ளையாகவே ஓரளவு கருதுகிறது. மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண் கருவுற்றிருந்தால், பிள்ளை பிறந்த பின்னரே மரணதண்டனை நிறைவேற்றப்படுகின்றது. கருவைச் சிதைப்பதைத் தண்டனைக்குரிய செயலாகச் சட்டம் விதிக்கிறது.

கருவில் வளரும் குழந்தைக்குச் சட்டம் அளிக்கும் உரிமைகள் அந்தக் குழந்தை பிறந்த பின்தான் உறுதியாகின்றன. கருவிலிருக்கும் குழந்தைக்குள்ள உரிமைகள் நிபந்தனைக்குட்பட்ட உரிமைகள். அஃதாவது, அது உயிருடன் பிறக்கவேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்ட உரிமைகள். ஒரு வேளை பிறப்பதற்கு முன்னமேயே அது இறந்துவிட்டால், உரிமைகளில் ஏதும் அந்தக் கருவிலிருந்த குழந்தைக்குச் சேர்ந்ததாகச் சட்டம் கருதுவதில்லை. தன் தகப்பனது சொத்தை, தகப்பன் இறந்த பின் பிறக்கும் குழந்தை அடைகிறது. பிறந்த பின் ஒரு மணிநேரமே உயிருடன் இருந்து, பிறகு அது இறந்தாலும், அச்சொத்து

அந்தப் பிள்ளைக்கு யார் மரபுவழியினரோ அவரையே சேரும். ஆனால், கருவில் வளரும் குழந்தை கருவிலேயே இறந்து விட்டால், அக்குழந்தை மூலமாக யாரும் அச்சொத்திற்கு உரிமை கொண்டாட முடியாது. அந்தக் குழந்தை கருவில் உதித்திரா விடில், சொத்து யாருக்குச் சேருமோ, அவருக்கே அது சேருகிறது.

கருவில் உருவாகும் குழந்தை சாதாரணமாக உயிருடன் பிறப்பது உறுதி; அது ஏற்கெனவே உலகில் உதித்துவிட்ட உயிர். எனவே, சட்டம் அதைப் புறக்கணிப்பதற்கு இல்லை. ஆதலால்தான், கருவில் வளரும் குழந்தையையும் கருத்திற்கொண்டு இயங்குகிறது சட்டம்.

(அ) சட்டம் தோற்றுவிக்கும் நபர்கள் (Legal Persons)

நம் ஒவ்வொருவரின் நலன்களைப் பாதுகாப்பதே சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தனித்த ஒருவரின் உரிமைகளைக் காப்பாற்றுவது எளிது. ஆனால், பலரைச் சேர்ந்த பொதுவான நலன்கள் கூட்டாக நிர்வகிக்கப்படும் பொழுது, அந்தப் பொது நலன்களில் ஒவ்வொருவருக்குமுள்ள உரிமையைத் திட்டப்படுத்துவதும், பாதுகாப்பதும் கடினமான காரியம்.

இரண்டு பேர்கள் சேர்ந்து ஒரு சொத்தைக் கூட்டாக வைத்திருந்தாலோ, அல்லது கூட்டாக வாணிபம் செய்தாலோ, அவர்களது உரிமையைத் திட்டப்படுத்த முற்படும் பொழுது பல சிக்கல்கள் தோன்றுகின்றன. நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு கூட்டு முயற்சியில் ஈடுபட்டு, ஒரு தொழிலையோ, வாணிபத்தையோ நடத்தும் பொழுது எத்தனையோ இடைபாடுகள் எழுவது இயல்பு. அவர்களுக்குப் பொதுவான நலன்களையும் செயல்களையும் இந்த நூற்றுக்கணக்கான கூட்டாளிகள் சேர்ந்து எவ்வாறு நிர்வகிப்பது? அவர்களது சொத்தை விற்பது எப்படி? பிறருடன் ஒப்பந்தம் எவ்வாறு செய்து கொள்வது? இவர்களில் பருவமடையாத சிறுவர்களும், தங்கள் நலனைப் பேண முடியாத நிலையிலுள்ளவர்களும் இருந்தால் அவர்களது நலனைப் பேணுவது யார்? கூட்டாளிகளில் ஒருவர் இறந்துவிட்டால் அதன் விளைவு என்ன? கூட்டாளிகளில் ஒருவர் விலகவேண்டுமெனில் அதற்கான ஏற்பாடு என்ன? இதுபோன்ற எத்தனையோ சிக்கல்கள், இடர்ப்பாடுகள் எழுகின்றன. அதிலும், சொத்துக்களும் உரிமைகளும் தீர்மானமாகக் குறிப்பிடப்பட முடியாத பலருக்கோ அல்லது பொதுமக்களுக்கோ சேர்ந்ததாக இருக்கும் பொழுது தோன்றும் இடர்ப்பாடுகள் பலப் பல. நம் வாழ்வில் கூட்டு முயற்சிகள் இன்றியமையாததாகின்றன.

இத்தனை சிக்கல்களையும் சட்டம் எவ்வாறு சமாளிக்கிறது? எந்த முறையில் இந்த இடர்ப்பாடுகளைத் தீர்க்கச் சட்டம் வழிவகுக்கிறது? சட்டம் கண்டவிடை, வகுக்கும் வழி, இதுதான்.

சிக்கல்கள் நிறைந்த பொது உரிமைகளை, கூட்டுச் சொந்தத்தை, (Collective Ownership) எளிய, தனிப்பட்ட சொந்தமாக (Individual Ownership) மாற்றி, அதன் மூலம் கூட்டு உரிமைகளையும் நலன்களையும் சட்டம் காக்க முற்படுகிறது. பலருக்குச் சொந்தமான உரிமைகளை ஒரே நபருக்குச் சொந்தமானதாகச் சட்டம் பாவிக்கிறது. ஒரு "நபரை"ச் சட்டம் கற்பனையில் உருவாக்கி அவரை (Fictitious Person) அந்தப் பொதுச் சொத்துக்களை நிர்வகிக்கும்படிசெய்கிறது. இவ்வாறு ஏற்று நடத்தும் பொறுப்பையும், உரிமையையும் அந்தக் கற்பனை நபருக்குச் சட்டம் அளிப்பதன் மூலம் பலருடைய உரிமைகளையும் நலன்களையும் செயற்படுத்திப் பாதுகாப்பதிலுள்ள சிக்கல்கள் தீர்க்கப்படுகின்றன.[1]

சட்டத்தால், கற்பனையாகத் தோற்றுவிக்கப்பட்ட இந்த "நபர்", சட்டம் தோற்றுவிக்கும் 'நபர்' (Legal person) என்று கூறப்படுகிறது. இந்தக் கற்பனை நபர்களை முக்கியமாக இரண்டு வித ஏற்பாடுகளால் சட்டம் தோற்றுவிக்கிறது; ஒன்று, "நம்பிக்கைப் பொறுப்பமைப்பு" (Trusteeship): இரண்டு, கூட்டமைப்பு (Corporation: Company). இந்த இருவகை முறைமைகளைப் பற்றி இனிப் பார்ப்போம்.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பமைப்பு (டிரஸ்டு) (Trusteeship)

[டிரஸ்டிஷிப் (Trusteeship) என்ற ஆங்கிலச் சொல்லை முழுப்பொருளுடன் தமிழில் கூற வேண்டுமெனில், "நம்பிக்கைப் பொறுப்பமைப்பு" என்றும், Trustee என்பதை "நம்பிக்கைப் பொறுப்பாளர்" என்றும், Beneficiary என்பதை "நலனுக்குரியவர்" என்றும் சொல்லலாம். ஆயினும் 'டிரஸ்டு', 'டிரஸ்டி' என்ற சொற்கள் தமிழில் வழக்கிலிருப்பதால், அச் சொற்களே ஆங்காங்குக் கருத்துத் தெளிவிற்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.]

ஒருவர் தமது சொத்து அனைத்தைப் பிள்ளைகளின் வளர்ப்புக்கும் கல்விக்கும் பயன்படவேண்டுமென்று விரும்புகிறார். அவ்வாறே எழுதிவைக்கிறார். இப்பொழுது அச் சொத்தை யார்

1. In view of these difficulties the aim of the law has been to reduce, so far as may be, the complex form of collective ownership and action to the simple and typical form of individual ownership and action—Salmond.

ஏற்று நடத்தி, அதன் வருமானத்தை அனாதைப் பிள்ளைகளின் நலனுக்குப் பயன் படுத்துவது? சொத்தின் வருமானத்தில் உரிமையுள்ள அனாதைக் குழந்தைகள் யார், யார் என்று இப்பொழுதே தீர்மானிக்க முடியாது. ஆனால், அக்குழந்தைகளின் நலன்களுக்காகவே அச் சொத்து இருக்கிறது. அந்த நலன்களைப் பாதுகாப்பது எப்படி? சொத்தை ஏற்று நடத்தும்படி ஒருவரை ஏற்பாடு செய்துவிட்டால், அப்படி அதை நிர்வகிப்பவருக்குள்ள அதிகாரம் என்ன? அவருக்கும் சொத்திற்கும் உள்ள சம்பந்தம் எப்படிப் பட்டது? ஏற்று நடத்துபவருக்கும் அனாதைப் பிள்ளைகளுக்கும் உள்ள உறவு என்ன? இதுபோன்ற பல சிக்கல்களைச் சட்டம் தீர்க்கவேண்டி யிருக்கிறது. இந்த நிலையில், அனாதைக் குழந்தைகளின் நலனுக்காகவே அச் சொத்துப் பயன்படுமாறு செய்யும் கடனைச் சட்டம் ஏற்று, அதை, "நம்பிக்கைப் பொறுப்பமைப்பு" (Trusteeship) என்ற ஏற்பாட்டினால் செய்து முடிக்கிறது. இந்த ஏற்பாடு எவ்வாறு இத்தனை சிக்கல்களையும் தீர்க்கின்றது எனக் காண்போம்.

முதலாவதாக, அச்சொத்தை நிர்வகிப்பதற்கு ஓர் "நபரைச்" சட்டம் தோற்றுவிக்கிறது. அந்த நபரின் பெயர் "நம்பிக்கைப் பொறுப்பாளர்" (Trustee) என்பதாகும். அந்த நபர் உண்மையான மனிதர், நபர் அல்லர். சட்டத்தால் கற்பனை செய்யப்பட்ட "போலி நபர்" (Fictitious Person) கற்பனையில் வருவித்து, உருவகப்படுத்தி, "டிரஸ்டி" என்ற நபரைச் சட்டம் உருவாக்குகிறது. இவ்வாறு, 'டிரஸ்டி' என்ற "நபர்" சட்டத்தின் படைப்பாகும் (Legal person).

சட்டப்படி உரிமைகளும் கடமைகளும் எவருக்கு இருக்கின்றனவோ, அவரையே 'நபர்' என்று சட்டம் குறிக்கிறது என முன்பு கண்டோம். செயல் திறனும் அந்த நபருக்கு இருக்கவேண்டும். சட்டத்தின் படைப்பான 'டிரஸ்டி' என்ற போலி நபருக்கு உயிரோ உடலோ கிடையாது. ஆனால், அந்த நபர் இயங்கவேண்டும்; நம்பிக்கைப்பொறுப்பு (டிரஸ்டு) சம்பந்தமான காரியங்களைச் செய்யும் செயல் திறனும் பெற்றிருக்க வேண்டும். இதற்கு வழி என்ன? உண்மையான நபர் ஒருவர் நம்பிக்கைப் பொறுப்பாளராக (டிரஸ்டியாக) நியமிக்கப்படுகிறார். நியமிக்கப்பட்ட அந்த நபர் நம்பிக்கைப் பொறுப்பாளரின் (டிரஸ்டியின்) பொறுப்புக்களை ஏற்று நடத்துகிறார். இவ்வாறு 'டிரஸ்டி' என்ற "போலி நபர்" உண்மையான மனிதர்மூலம் இயங்குகிறது, 'டிரஸ்டியாக' இயங்கும் மனிதரின் பெயர் இராமலிங்கம் என்று வைத்துக்கொள்வோம். அவரை "டிரஸ்டி இராமலிங்கம்" என்று அழைக்கிறோம். சட்டத்தின்

தோன்றலான 'டிரஸ்டி' என்ற 'போலி நபரும்,' இராமலிங்கம் என்ற உண்மையான நபரும் ஒன்றி இப்பொழுது இயங்குகிறார்கள். சட்டத்தின் படைப்பான, கற்பனை நபரான 'டிரஸ்டி'க்கு இப்பொழுது உயிரும் உடலும், அதன் மூலம் செயல் திறனும் கிடைத்துவிட்டது!

டிரஸ்டி இராமலிங்கம் டிரஸ்டு சொத்துக்களை ஏற்று நிர்வகிக்கிறார். அச் சொத்துக்களைப் பொறுத்த ஒப்பந்தங்களைச் செய்வது, வருமானத்தைப் பெறுவது எல்லாம் அவர்தாம். உலகத்தைப் பொறுத்த வரையில், டிரஸ்டுச் சொத்துக்கு உரிமையாளர், சொந்தக்காரர், டிரஸ்டி இராமலிங்கம்தான். ஆனால், அந்தச் சொத்தின் வருமானத்தை டிரஸ்டி அனுபவிக்க முடியுமா? முடியாது. வருமானத்திற்கு உரியவர்கள், டிரஸ்டின் நோக்கத்தின்படி, அனாதைக் குழந்தைகள் தாம்; அவர்களே டிரஸ்டுச் சொத்தின் நலனுக்கு உரியவர்கள் (Beneficiaries). அந்த வருமானம் குழந்தைகளின் நலனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். டிரஸ்டுச்சொத்தின் வருமானத்தை அனுபவிக்கும் உரிமையுள்ளவர்கள், சொத்தின் உண்மையான சொந்தக்காரர்கள், அக் குழந்தைகள்தாம். இப்படியாக, உலகத்தைப் பொறுத்தவரை, டிரஸ்டுச் சொத்துக்களுக்கு "டிரஸ்டி" சொந்தக்காரராகவும், டிரஸ்டியையும் "நலனுக்குரியவர்களை"யும் பொறுத்தவரை, நலனுக்குரியவர்கள் சொந்தக்காரர்களாகவும் இருக்கிறார்கள்.

ஏன்? நலனுக்குரிய குழந்தைகளால் சொத்துக்களை ஏற்று நடத்த முடியாது. ஆண்டுகள்தோறும் நலனுக்குரிய அக் குழந்தைகள் மாறுவார்கள். ஆதலால், நலனுக்கு உரியவர்களின் சார்பில், அவர்களின் நலனுக்காக, டிரஸ்டி டிரஸ்டு சொத்துக்களை ஏற்று நடத்துகின்றார். இதனால், டிரஸ்டிக்கு, உண்மையில் அச் சொத்திலிருந்து நலன் ஏதும் கிடைப்பதில்லை என்பது புலனாகும். இருந்தாலும், அவரே சொத்தை நிர்வகிக்கின்றார். அந்த உரிமை அவருக்கே உண்டு. நலனுக்குரிய குழந்தைகள் பலர்; அவர்கள் காலப்போக்கிலே மாறிக் கொண்டிருப்பவர்கள்; அதுவும் வயது வராதவர்கள். ஆகவே, அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, டிரஸ்டுச் சொத்துக்களை ஏற்று நடத்துவது இயலாததாகும். ஆனால், அவர்களே அச் சொத்துக்கு உண்மையில் உரியவர்கள். ஆதலால், அச் சொத்துக்களின் நலனுக்கு உரிமையாளர்களான குழந்தைகளின் சார்பில், டிரஸ்டி ஒருவரை அச் சொத்துக்களை நிர்வகிக்கும்படி, சட்டம் விதிக்கிறது. அச்சொத்துக்களை நிர்வகிக்கும் டிரஸ்டிக்கு அச்சொத்துக்களின் வருமானத்தில் உரிமை இல்லை; வருமானத்தின்மீது உரிமையுள்ள குழந்தைகளுக்குச் சொத்தை நிர்வகிக்கும் உரிமை கிடையாது. இந்த வகையில், சட்டத்தின்

படைப்பான 'டிரஸ்டி' என்ற நபர், இராமலிங்கத்தின் மூலம் இயங்கி, நிர்வகிக்கும் உரிமை மட்டும் பெற்று, டிரஸ்டுச் சொத்துக்களை ஏற்று நடத்துகிறது.

சில ஆண்டுகள் கழிந்தபின், இராமலிங்கம் டிரஸ்டு பதவி யிலிருந்து விலகிக் கொள்ளலாம். இவ்வாறு விலகிக்கொண்ட பின், இராமலிங்கத்துக்கு டிரஸ்டி என்ற முறையில் எந்த அதிகார மும் கிடையாது. புதிதாக டிரஸ்டி பதவிக்கு யார் நியமிக்கப் படுகிறாரோ, அவருக்கு டிரஸ்டியின் அதிகாரங்கள் வந்துவிடு கின்றன. இவ்வாறு, டிரஸ்டி என்ற கற்பனை நபரின் பாகத்தை யார், யார் ஏற்று இயங்குகிறார்களோ, அவர்கள் டிரஸ்டிக்குள்ள அதிகாரங்களைப் பெறுகின்றனர். டிரஸ்டியாக இருக்கும் பொழுதே, இராமலிங்கம் இறந்து விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இப்பொழுது உண்மை நபரான இராமலிங்கம் இறந்துவிட்டார்; ஆனால், சட்டத்தின் கற்பனை நபரான 'டிரஸ்டி' இறக்கவில்லை. அதற்கு உயிரும் உடலும் இல்லாததால் இறப்பும் கிடையாது. மீண்டும் ஒரு மனிதர் டிரஸ்டியாக நியமிக்கப் படும் வரை, 'டிரஸ்டி' என்ற 'போலி நபர்' செய்திறன் இல்லாமல் இருக்கலாம்; ஆனால், அது அழிந்து விடுவதில்லை. அடுத்து டிரஸ்டி யாக வரும் மனிதர் வழியாக, 'டிரஸ்டி' என்ற போலி நபர் மீண்டும் இயங்குகிறது. இவ்வாறு டிரஸ்டிகளாக மனிதர்கள் எத்தனையோ பேர் வந்து, வந்துபோன பின்பும் அழிவின்றி, நீண்டகாலம் "டிரஸ்டி" என்ற கற்பனை நபர் இருந்து வருகிறது. இந்த வழியைச் சட்டம் கையாண்டு, டிரஸ்டுச் சொத்துக்களை நீண்ட காலம் காப்பாற்றி வருகின்றது. சொத்தின் பலனுக்குரிய குழந்தை களின் நலன்களைப் பாதுகாக்கிறது. டிரஸ்டுச் சொத்தின் வருமா னத்தை டிரஸ்டின் நோக்கத்திற்குப் பயன்படுமாறு டிரஸ்டியின் வாயிலாகச் செய்கிறது.

இப்படியாகப், பலருக்குச் சொந்தமான உரிமைகள் (Collective ownership), ஒருமை (Unity) பெற்று, ஒருவர் மூலம் இயங்கவும், அந்த உரிமைகள் அழியாமல் நிலைத்து இருக்கவும், சட்டம், "நம்பிக்கைப் பொறுப்பமைப்பு" (Trusteeship) என்ற ஏற்பாட்டின் மூலம் வகை செய்கின்றது.

கோவில்களின் சொத்துக்கள், அந்தந்தக்கோவில்களில் இலங் கும் தெய்வங்களின் திருவுருவங்களைச் (Idols) சேர்ந்தவை எனச் சட்டம் கருதுகிறது. உண்மையில், அந்தக் கோவில்களில் வழிபடு வோரின் நலன்களுக்காகவே, அச் சொத்துக்கள் இருக்கின்றன. கோவிலில் உள்ள திரு வுருவத்தால் சொத்துக்களை ஏற்று நடத்த முடியாது. இருப்பினும், சட்டத்தின் கற்பனையில் அந்தத் திரு உருவங்களும் 'நபர்'கள்தாம். இந்த "நபர்கள்", டிரஸ்டி என்ற பெயருடன் வரும் மனிதர்கள் மூலம் செயல்படுகின்றன. இந்த

அடிப்படையில்தான், கோவில் சொத்துக்களையும், அறநிலையச் செல்வங்களையும், டிரஸ்டிகள் என்ற முறையில் ஒரு சிலர் நிர்வகித்து வருகிறார்கள்.

இவ்வாறு, சட்டம், டிரஸ்டி என்ற "நபரை"த் தோற்றுவித்து, அந்த "நபரை" உண்மை மனிதர் மூலம் இயங்கவைத்து, அந்த டிரஸ்டிக்குச் சொத்துக்களை நிர்வகிக்கும் உரிமையை மட்டும் அளித்து, அவருக்கு, வருமானத்தில் எவ்வித உரிமையும் இல்லாமல் ஆக்கி, சொத்தின் நலன்களை நலனுக்கு உரியவர்களுக்கே சேரும்படியாகச் செய்து, "நம்பிக்கைப் பொறுப்பமைப்பை" இயக்குகிறது. கூட்டுச்சொந்தம், தனி நபரின் சொந்தமாக ஓரளவு கருதப்பட்டு, கூட்டுச்சொந்த முறையில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப் படுகின்றன; இவ்வாறு கூட்டு உரிமைகளுக்கு, ஒருமைப்பாடும், நிலைத்த தன்மையும் அளிக்கப்படுகின்றன.[1]

இந்த 'நம்பிக்கைப் பொறுப்பமைப்பு' ஏற்பாடு சட்டத்தின் உன்னதப் படைப்பாகும். மனிதன் தனது கூரிய அறிவினால் வகை செய்த சீரிய சட்டக் கருத்தாகும். இத்தகைய ஏற்பாடு இல்லையெனில், அறநிலையங்களும் கோவில்களும் நிலைத்திருப்பது இயலாததாகிவிடலாம். ஆகவே, இது வாழ்வுக்கு அவசியமானதோர் ஏற்பாடாகிறது.

(இ) கூட்டமைப்பு : (Corporation or Company)

[Corporation அல்லது Company என்ற ஆங்கிலச் சொற்களைத் தமிழில் "கூட்டமைப்பு" என்று கூறலாம். "தொழிற்கூட்டு" "கூட்டுச் சங்கம்" என்று வழக்கத்திலுள்ள சொற்றொடர்களைவிட, "கூட்டமைப்பு" என்பது Company என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளை நன்கு புலப்படுத்துவதாகும். "கம்பெனி" என்ற சொல் அதிகப் பழக்கத்தில் இருப்பதால் அந்தச் சொல்லே ஆங்காங்கு கையாளப்பட்டிருக்கிறது.]

"நம்பிக்கைப் பொறுப்பமை"ப்பில் கூறப்பட்ட கருத்துக்கள் கூட்டமைப்பு ஏற்பாட்டிற்கும் பொருந்துவனவாகும். கூட்டுச் சொந்தத்தைத் தனிச் சொந்தமாகப்பாவித்து கூட்டுரிமைகளைக் காப்பாற்றுவதிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பது என்பதே இந்த இரண்டு ஏற்பாடுகளிலுமுள்ள அடிப்படைக் கொள்கையாகும்.

1. The fictitious trustee......embodies and expresses, therefore, to a degree impossible in the case of natural trustees, the two elements of *unity* and *permanence* which call for recognition in the case of collective interests.—Salmond.

பெரியதொரு தொழில் முயற்சிக்கு, அதிகப் பண முதலீடு செய்யவேண்டி இருக்கிறது. ஒருவராக அவ்வளவு பணம் திரட்டுவது இயலாது. ஆதலால், நூற்றுக்கணக்கானவர்களிடம் பங்குப் பணம் சேகரித்து, ஒரு தொழில் துவக்கப்படுகிறது. இவ்வாறு பணம் கொடுத்திருப்பவர்கள் ஏறத்தாழ ஆயிரம்பேர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தத் தொழிலை ஆயிரம் பேரும் சேர்ந்து ஒரே சமயத்தில் ஏற்று நடத்த முடியாது. ஆதலால், "கூட்டமைப்பு" (Corporation or Company) என்ற ஒரு "நபரை"ச் சட்டம் தோற்றுவிக்கிறது. பங்குதாரர்களான ஆயிரம் பேர்களின் நலன்களையும் ஏற்றுநடத்தும் அதிகாரமும் பொறுப்பும் இந்தக் கம்பெனிக்கு உண்டு. கம்பெனி என்ற நபரும் சட்டத்தால் படைக்கப்பட்ட, உயிரும் உடலுமற்ற, "போலி நபரே" (Fictitious person) ஆகும்.

பங்குதாரர்கள் (Shareholders) அனைவரும் ஒன்று சேர்ந்தாலும், கம்பெனி என்ற நபராக ஆகிவிட முடியாது. பங்குதாரர்கள் வேறு, கம்பெனி வேறு.[1] கம்பெனியின் சொத்துக்கள் சட்டப்படி பங்குதாரர்களின் சொத்துக்கள் அல்ல. கம்பெனியின் பொறுப்புக்களும், கடமைகளும் பங்குதாரர்களைக் கட்டுப்படுத்துபவை அல்ல. ஒரு பங்குதாரர் கம்பெனியுடனேயே ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஏனெனில், இருவரும் சட்டப்படி தனித்தனி நபர்கள். பங்குதாரர்களின் எண்ணிக்கை கூடலாம் அல்லது குறையலாம்; அதனால் கம்பெனியின் நிலை மாறுவதில்லை. பங்குதாரர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போய், ஒரே ஒருவர் மாத்திரம் பங்குதாரராக இருக்கலாம். அப்பொழுதும் அந்தக் கம்பெனி தனித்து இயங்கும் நபராகவே இருக்கிறது. மிஞ்சிய அந்தப் பங்குதாரர் வேறு, கம்பெனி வேறு என்ற நிலை அப்பொழுதும் உண்டு. இவ்வாறு, "கம்பெனி" என்ற ஒரு கற்பனை நபரைச் சட்டம் தோற்றுவித்து, அந்தக் கம்பெனியைப் பங்குதாரர்களிடமிருந்து பிரித்துத் தனிப்பட்ட நபராக ஆக்கி, அதை இயங்கச் செய்கிறது.

கற்பனை நபராக இருக்கும் கம்பெனி இயங்குவது எப்படி? கூட்டுத் தொழிலை ஏற்றுநடத்தத் தொழிற்றிறன் அவசியமாகிறது. ஆதலால், உயிரும் உடலும் இல்லாத போலி நபரான கம்பெனி உண்மையான மனிதர்கள் மூலமாகவே தொழிற்படவேண்டியிருக்கிறது. அந்த உண்மையான நபர்களைக் கம்பெனியின் இயக்குநர்கள் (டைரக்டர்கள்) என்றும், செயலாளர் என்றும் அழைக்கிறோம். கம்பெனியின் பேராட்களாக (Agents) அவர்கள்

1. The aggregate of the members who compose a corporation differs essentially from the corporation itself.—Savigny.

இயங்குகின்றனர். கம்பெனியின் தொழில்களை அவர்களே ஏற்று நடத்துகின்றனர்.[1]

ஒரு மனிதன் இன்னொரு மனிதரின் பிரதிநிதியாக இயங்கும்போது, பிரதிநிதியின் வேலைகளைத் தலைவர் கண்காணிக்க முடியும். தன் தலைவரின் கட்டளைப்படியும், தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியுமே, பிரதிநிதி காரியங்களைச் செய்கிறார். ஆனால், கற்பனை நபரான கம்பெனி, தன் பிரதிநிதிகளின் வேலைகளைக் கண்காணிப்பது எப்படி? சாதாரணமாக, சட்டப்படி ஒரு "ஏஜண்டின்" செயல் தலைவரை எந்த முறையில் கட்டுப்படுத்தும் என்பது அந்த ஏஜண்டுக்குள்ள அதிகாரத்தைப் பொறுத்தது. ஆனால், கற்பனை நபரான கம்பெனி தன் பிரதிநிதிகளான இயக்குநர்களுக்கும் (டைரக்டர்களுக்கும்) செயலாளருக்கும் அதிகாரங்களை எப்படி வழங்குகிறது? சட்டமே, யார் கம்பெனியின் பிரதிநிதியாக இருப்பது என்பதை உறுதிசெய்து, அந்தப் பிரதிநிதியின் அதிகாரத்தை வரையறுக்கிறது. ஒரு கம்பெனி ஆரம்பமாகும்பொழுது, அந்தக் கம்பெனியின் நோக்கங்கள், அது செயல்படும்முறை முதலியன அடங்கிய கூட்டமைப்பு விதிகள் (Articles or Memorandum of Associations) உறுதி செய்யப்படுகின்றன. அந்த விதிகளுக்கும் நோக்கங்களுக்கும் அடங்கியே கம்பெனியின் பிரதிநிதிக்குள்ள அதிகாரம் அமைகிறது. அந்த வரையறைக்கு, அதிகாரத்திற்கு, அப்பாற்பட்ட செயல் கம்பெனியின் பெயரால் செய்யப்பட்டாலும் அது கம்பெனியைக் கட்டுப்படுத்தாது. இவ்வாறு, கூட்டமைப்பு விதிகள் மூலமாக, கம்பெனியின் பிரதிநிதிகளான இயக்குநர்கள் (டைரக்டர்கள்) செயலாளர் இவர்களின் அதிகாரங்கள் வரையறுக்கப்படுகின்றன.

ஒரு கம்பெனி தன் 'ஏஜண்டு' மூலமாக வழக்காடலாம். அதன்மீதும் பிறர் வழக்குத் தொடரலாம். விதிமுறைகளை மீறினால் கம்பெனிக்கு அபராதம் விதிக்கப்படலாம். கம்பெனியின் வேலையாட்கள் சட்ட விதிகளை மீறினால், கம்பெனியே மீறியதாகத்தான் கருதப்படுகிறது. இவ்வாறு வேலையாட்களின் செய்கைகளால் கம்பெனிக்குப் பொறுப்புக்கள் வருகின்றன. இதற்காகக் கம்பெனியைப் பொறுப்பாக்கினால், உண்மையில் நட்டப்படுகிற

1. A corporation, having neither soul nor body, cannot act save through the agency of some representative in the world of real men.—Salmond.

Whatever a company is reputed to do in law is done in fact by the directors or the shareholders as its agents and representatives.—Salmond.

வர்கள் பங்குதாரர்களல்லவா என்ற கேள்வி எழுகிறது. கம்பெனியின் பிரதிநிதிகளான இயக்குநர்கள் (டைரக்டர்கள்) உண்மையில் பங்குதாரர்களின் பிரதிநிதிகள்தாம். தங்கள் 'ஏஜண்டு'களின், செய்கைக்குப் பங்குதாரர்கள் பொறுப்பாக்கப்படுவது இயல்பேயாகும்.

ஒரு கம்பெனி தன் பிரதிநிதியான இயக்குநர் (டைரக்டர்) மூலம் இயங்கும்போது, தண்டனைக்குரிய குற்றங்களுக்கு (offences) இலக்காக முடியுமா என்பது ஒரு பிரச்சினை. ஒரு கம்பெனி, கொலைக் குற்றத்திற்கோ, திருட்டுக் குற்றத்திற்கோ என்றும் பொறுப்பாக முடியாது. ஏனெனில், கொலை திருட்டு முதலியவற்றை நோக்கமாகக் கொண்டு எந்தக் கம்பெனியும் ஆரம்பிக்கப்படுவதில்லை. அவ்வாறு செய்வதற்கும் சட்டம் இடங்கொடுப்பதில்லை. ஆதலால், கம்பெனியின் பிரதிநிதிகள் இத்தகைய குற்றங்களைச் செய்தால், அவை கூட்டமைப்பு விதிகளுக்கு முரண்பட்டதாகவே இருக்கும். அதனால், கம்பெனி இச் செயல்களுக்குப் பொறுப்பாளி ஆவதில்லை. அக் குற்றங்களைச் செய்தவர்களே தண்டிக்கப்படுவார்கள். ஆயினும், குற்றத்திற்குப் பொறுப்பாக எப்பொழுதுமே கம்பெனி ஆக முடியாது என்று சொல்வதற்கில்லை. விதிக்கப்பட்ட காரியங்களைச் செய்யாததால் (omission) குற்றங்கள் ஏற்படுவது உண்டு. ஒவ்வொரு ஆண்டிலும், கம்பெனி தன் கணக்குகளைத் தணிக்கை செய்யவேண்டும் என்று சட்டம் இருந்து, அவ்வாறு இயக்குநர் (டைரக்டர்) செய்யவில்லையெனில், கம்பெனி குற்றவாளி ஆகலாம். அதற்காகக் கம்பெனிக்கு அபராதம் விதிக்கப்படலாம்.

மேலும், கம்பெனியின் நியாயமான அலுவல்களைச் செய்யும் பொழுது, அதன் வேலையாட்கள் கவனக் குறைவாகச் செய்யலாம். அதனால், பிறருக்குக் கேடுவிளைந்து, அதற்கான ஈடு கொடுக்கும்படி நேரிட்டால் அந்தப் பொறுப்புக் கம்பெனியையே சேருகிறது.

கம்பெனி என்பது தனிநபராக இருப்பதால், தொழிலில் ஏற்படும் இலாபமோ, நட்டமோ கம்பெனியையே சேரும். கம்பெனியின் முதலீட்டிற்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டாலும், அ[illegible] பங்குதாரர்களைத் தனிப்பட்ட முறையில் பாதிப்பது இலலை.

இந்த முறையில் "கம்பெனி" ஒரு தனி நபராக இருந்து, தன் ஏஜண்டுகள் வழியாக, கூட்டுத் தொழிலை நடத்தி, அந்த ஏஜண்டுகளின் அதிகாரத்திற்குட்பட்ட செயல்களுக்குத் தானே பொறுப்பாகி, தொழிலில் நட்டம் வந்தால் அதற்குத் தன்வசமுள்ள முதலீட்டை மட்டும் பொறுப்பாக்கி, கூட்டுத் தொழிலின் பங்குதாரர்களுடன் தொடர்பு இன்றித் தனித்து இயங்குகிறது.

சட்டத்தின் மூலமாகக் கலைக்கப்படும்பொழுதுதான் கம்பெனி என்ற நபர் அழிந்து போகிறது.

ஒவ்வோர் ஊராட்சி மன்றமும் (நகரசபையும்) இதே முறையில் ஒரு கூட்டமைப்பாகும். ஊராட்சிமன்றத்தை அதனால்தான் முனிசிபல் கார்ப்பரேஷன் (Municipal Corporation) என்று அழைக்கிறார்கள். 'கார்ப்பரேஷன்' என்பது சட்டத்தால் படைக்கப்பட்ட அழிவில்லாத ஒரு 'நபர்' ஆகும். ஊராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும், தலைவருக்கும் அப்பாற்பட்ட, அவர்களிலிருந்து தனிப்பட்ட, ஒரு நபராகவே கார்ப்பரேஷன் விளங்குகிறது. உயிரும் உடலுமற்ற இந்தக் கார்ப்பரேஷன் ஆணையாளர் (Commissioner) மூலமாக இயங்குகிறது. ஆணையாளரும் மற்ற அலுவலரும் கார்ப்பரேஷனின் ஊழியர்கள்; ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் ஊழியர்கள் அல்ல. உறுப்பினர்களும் தலைவர்களும் மாறுகிறார்கள். ஆணையாளர்களும் புதிது புதிதாக நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், கார்ப்பரேஷன் தொடர்ந்து நிலையாக இருக்கிறது. இதனால்தான், ஊராட்சிமன்றத்தின் சொத்துக்களை ஏற்றுநடத்துவதும், மற்ற அலுவல்கள் இடையூறின்றி நடைபெறுவதும் ஏதுவாகிறது. இவ்வாறு, நகர மக்கள் அனைவருக்கும் பொதுவான நலன்களையும், உரிமைகளையும், சொத்துக்களையும், சட்டத்தின் படைப்பான "கார்ப்பரேஷன்" என்ற ஒரே நபருக்குச் சட்டம் சொந்தமாக்கி, அதன் ஆட்சிப் பொறுப்பை இயக்குகிறது.

(ஈ) கூட்டமைப்பிற்கும் (Company) பங்கமைப்பிற்கும் (Partnership) உள்ள வேறுபாடுகள்:

ஒரு சிலர் ஒன்று சேர்ந்து, பங்குரிமையுடன் வாணிபம் செய்யலாம். அதை, பங்குவாணிபம் அல்லது பங்கமைப்பு (Partnership) என்பார்கள். இந்தப் பங்கமைப்பிற்கும் கூட்டமைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் முக்கியமானவை.

கூட்டமைப்பு (கம்பெனி) ஒரு தனி நபராக இயங்குகிறது. ஆனால், பங்கமைப்பு தனிப்பட்ட நபர் அன்று. பங்குதாரர்களின் சேர்க்கையையே "பங்கமைப்பு" என்று அழைக்கின்றோம்.

கம்பெனியின் பங்குதாரர்களில் மாறுதல் ஏற்பட்டாலும் கம்பெனி மாறுவதில்லை. ஆனால், பங்கமைப்பிலே உள்ள பங்காளிகளில் ஒருவர் விலகிவிட்டாலும், இறந்தாலும் பங்கமைப்புத் தானாக கலைந்து விடுகிறது.

கம்பெனியின் கடன்களுக்குக் கம்பெனிதான் பொறுப்பாகிறது; பங்குதாரர்களல்லர். ஆனால், பங்கமைப்பில் ஏற்படும் கடன் பங்காளிகளையே கட்டுப்படுத்துகிறது.

கம்பெனிக்குப் பெருத்த நட்டம் ஏற்பட்டால், அந்த நட்டம் கம்பெனிக்குச் சொந்தமான முதலை மட்டுமே பாதிப்பதாகும்;

பங்குதாரர்கள் அதற்குத் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவது இல்லை. பங்கமைப்பில் ஏற்படும் நட்டத்திற்குப் பங்காளிகள் ஒவ்வொருவரும் பொறுப்பாகிறுர்கள். அந்தப் பொறுப்பு, அவர்கள் தொழிலில் போட்ட முதலளவோடு நிற்பதில்லை. ஒவ்வொரு பங்காளியும், பங்கமைப்பின் முழுக்கடனையும் தம் சொந்தப் பொறுப்பிலும் தீர்க்கக் கடமைப் பட்டிருக்கின்றுர்.

ஒரு பங்காளி மட்டுமுள்ள பங்கமைப்பு இருக்கமுடியாது. ஆனல் ஒரே ஒரு பங்குதாரர் மட்டும் மிஞ்சினலும் கம்பெனி தனித்து இயங்கிக் கொண்டே இருக்கும்.

இவ்வாருகக், கூட்டமைப்பும் பங்கமைப்பும் அடிப்படை வேறுபாடுகள் கொண்டவை.

(உ) கூட்டமைப்பு ஏற்பாட்டின் முக்கியத்துவம்

பெரிய அளவில் வாணிபம் செய்யவோ, தொழில் நடத்தவோ, ஒரே மனிதரால் சாதாரணமாக இயலுவது இல்லை. பலர் ஒன்ருகச் சேர்ந்து, ஒவ்வொருவரும் சிறிது முதல் போட்டாலும், பெரிய அளவில் பணம் சேருகிறது. அதனல் வாணிபத்தையோ, தொழிலையோ பெருமளவில் நடத்த ஏதுவாகிறது. அந்தத் தொழிலில் நட்டம் ஏற்பட்டால், பணம் போட்ட ஒவ்வொருவரும் அந்த நட்டத்திற்குப் பொறுப்பானவர்கள் என்று சட்டம் விதித்தால், இம்மாதிரியான கூட்டு முயற்சியில் ஈடுபட எவரும் இசைய மாட்டார்கள். ஏனெனில், அந்தக் கூட்டுத்தொழிலில் நட்டம் ஏற்பட்டால், அவர்கள் தங்கள் சொத்து அனைத்தையுமே இழக்க நேரிடலாம். ஆதலால், பலரிடமிருந்து பொருள் பெற்று, பெரிய தொழிற்சாலைகள் முதலியன நிறுவமுடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. "கம்பெனி" முறையில் இந்த ஆபத்து இல்லை. கம்பெனியின் நட்டத்திற்கு கம்பெனியின் சொத்துக்கள் மட்டுமே பொறுப்பானவை என்று சட்டம் விதிக்கிறது. பங்குதாரர்களின் முதலீடு மட்டுமே கம்பெனியின் சொத்தாக இருக்கிறது. அந்த முதலீடு தான் கம்பெனியின் நட்டத்திற்குப் பொறுப்பானது. மற்றவகையில், பங்குதாரர்களைக் கம்பெனியின் கடனே நட்டமோ பாதிப்பது இல்லை. பங்குதாரர்களின் பொறுப்பு இவ்வாறு வரையறுக்கப்பட்ட பொறுப்புத்தான் (Limited Liability). அஃதாவது, பங்குதாரர்களின் முதலீட்டின் அளவிற்கே அவர்களது வரையறுக்கப்பட்ட பொறுப்பு அமைகிறது என்பதாகும். இவ்வாறு, கம்பெனியின் பங்குதாரர்களுடைய தனிப்பட்ட சொத்துக்கள், கம்பெனிப் பொறுப்புக்களிலிருந்து காப்பாற்றப்படுகின்றன. கம்பெனியை, ஒரு தனி நபராகச் சட்டம் கருதி விதிமுறைகளை இவ்வாறு வகுத்ததால், மக்கள் கூட்டாகப், பெரிய அளவில்

வாணிபம், உற்பத்திப் பெருக்கம் முதலிய முயற்சிகளில் ஈடுபடு வது இயலுவதாகிறது. இதன் விளைவாக, நாட்டின் கைத் தொழில், உற்பத்தித் திறன் முதலியவை பெருகுகின்றன.

பெரு நிதியுடன் இயங்கும் கம்பெனியின் சக்தி மிகவும் அதிகமானது. இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் இந்திய நாட்டைச் சிறிது சிறிதாகக் கைவசப்படுத்தி, ஆங்கிலேயரின் ஆட்சிக்குக் கொண்டுவந்தது கிழக்கிந்தியக் கம்பெனி (East India Company) என்ற ஆங்கிலேய வாணிபக் கம்பெனிதான். இதி லிருந்து, இந்தக் கம்பெனி எவ்வளவு வல்லமையுடன் இயங்கி வந்திருக்கிறது என்பது புலனாகும். இப்பொழுதும், பாங்குகள், பெரிய வாணிப நிலையங்கள், இயந்திரத் தொழிற்சாலைகள் பல வும், கம்பெனிகளாகவே நம் நாட்டிலும் பிறநாடுகளிலும் இயங்கு கின்றன.

இந்த வகையில், உயிரும் உடலும் இல்லாமல், சட்டத்தின் கண்களுக்கு மட்டும் புலப்பட்டு, 'கற்பனை நபராக' இயங்கும் கம்பெனி (கூட்டமைப்பு) என்ற 'நபர்' வலிமை மிக்கதாகி, நாட் டின் நலனை விருத்தி செய்வதில் பெரும்பங்கு கொள்ளுகிறது. தொழில் வளம் பெருகவேண்டிய இந்நாளிலே, இதன் முக்கியத் துவம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

(ஊ) தனிக் கூட்டமைப்பு (Corporation Sole)

கூட்டமைப்பின் முக்கிய தன்மை, அது அழியாமல் இருப்பது என்று கண்டோம். அரசு இயங்க வேண்டுமெனில், சில பெரிய பதவிகள் இடையின்றி நிலைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உதாரணமாக, நமது இந்தியக் குடியரசுத் தலைமைப் பதவியை எடுத்துக் கொள்வோம். குடியரசுத் தலைவர் பெயராலேயே சட்டங்கள் இயற்றப்படுகின்றன. எல்லா முக்கிய அலுவல்களிலும், நம்நாட்டு அரசு, அதன் தலைவர் பெயரிலேயே இயங்குகிறது. ஆதலால் அந்தப் பதவியை அழியாத ஒரு "நபரா"கக் கருதவேண்டிய அவசியம் நேருகிறது. ஒருவர், தலைவர் பதவியிலிருந்து விலகி, இன்னொருவர் பதவி ஏற்கும்வரை உள்ள இடைக்காலத்தில் அந்தப் பதவி மறைந்துவிடுகிறது என்றால், பல சிக்கல்கள் எழலாம். ஆதலால், குடியரசுத் தலைமைப் பதவியைக் கூட்டமைப்பில் எழும் "கற்பனை நபராக"ச் சட்டம் கருதுகிறது. இடையின்றித் தொடர்ந்து நிலைத்திருக்கும் "நபராக" அப் பதவியைச் சட்டம் கொள்கிறது. இதைத், தனிக் கூட்டமைப்பு (Corporation Sole) என்பார்கள்.

தலைமைப் பதவிக்கு ஒருவர்பின் ஒருவராகத் தொடர்ந்து வரும் அனைவரை யும் கூட்டாக இணைத்து, சட்டம் 'தனிக் கூட்டமைப்பு' என்ற கற்பனை நபரை,

நிலையான, சட்டத்தின் படைப்பான நபராக ஆக்கி விடுகின்றது. தலைமைப் பதவிக்கு வருபவர்கள் எல்லாம் இந்த நபரின் பாகத்தை ஏற்று இயங்குகிறார்கள். சில காலத்திற்கு அந்தப் பதவியில் யாரும் அமர்த்தப்படாவிட்டாலும், அந்தப் பதவி 'தனிக் கூட்டமைப்பு நபராக' நிலைத்து நிற்கிறது.[1]

இந்தமாதிரியேதான், மாகாணத் தலைவர்(Governor)பதவியும் அமைகிறது. "கவர்னர்" என்றால், அதில் இரு நபர்கள் இருக்கிறார்கள். ஒருநபர், அந்தப் பதவியை வகித்து, அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் மனிதர். அவரையே எல்லோரும் கண்ணால் பார்க்கிறோம்; மாகாணத் தலைவர் என்று அழைக்கிறோம். அந்தப் பதவியில் அடங்கியிருக்கும் மற்றொரு நபர் சட்டத்தின் கற்பனையிலுள்ளவர், சட்டத்தின் கண்களுக்கு மட்டும் காணப்படுவர். அந்த நபருக்கு அழிவே கிடையாது. 'மாகாணத் தலைவர்' என்ற இந்தக் கற்பனை நபரின் பாகத்தை ஏற்று நடப்பவரே, அதிகாரத்தை வகிக்கும் உண்மை நபர் ஆகிறார். அந்தக் கற்பனை நபர், உத்தியோகத்தை அப்போதைக்கப்போது வகிக்கும் மனிதர்கள் மூலம் இயங்குகிறார்.

இவ்வாறு, "தனிக் கூட்டமைப்பு" என்ற ஏற்பாட்டில், சட்டம் கற்பனையாக ஒரு நபரை உருவாக்கிச் சில முக்கிய பதவிகளை இடையின்றி நிலைத்து நிற்கச் செய்கிறது. இவ்வாறு செய்வதால், அந்தப் பதவியின் பெயரால் இயற்றப்பட்ட சட்டங்களும், செய்யப்பட்ட ஒப்பந்தம் முதலிய காரியங்களும், சட்டப்படியாக, இடையின்றி இயங்க ஏதுவாகிறது.

ஒரே சமயத்தில் கூடி இயங்கும் பலரைக், கூட்டி அமைத்து, அதில் கற்பனை நபரைத் தோற்றுவிக்கும் ஏற்பாட்டைத், "தொகுதிக் கூட்டமைப்பு" (Corporation Aggregate) என்று சட்டம் கூறுகிறது. கம்பெனி, நகராட்சிமன்றம் முதலியவை இதற்கு உதாரணங்கள். ஒருவர் பின் ஒருவராக ஒரு பதவிக்கு வரும் பலரை இணைத்து அதில் ஒரு கற்பனை நபரைத் தோற்றுவிக்கும் முறைமையைத் 'தனிக் கூட்டமைப்பு' (Corporation sole) என்று கூறுகிறோம். உதாரணம் இந்தியக் குடியரசுத் தலைவர், மாகாணத் தலைவர், முதலிய பதவிகள்.[2]

1. Corporations sole are found only when the successive holders of some public office are incorporated so as to constitute a single permanent and legal person.—Salmond.

2. A corporation aggregate is an incorporated *group of co-existing persons*, and a corporation sole is an incorporated *series of successive persons*.—Salmond.

(ஏ) கூட்டமைப்புக்களின் தோற்றமும் அழிவும்

கூட்டமைப்பு (Corporation) என்பது சட்டத்தின் கற்பனை நபர் என்று கண்டோம். அதற்கு, உயிரோ உடலோ இல்லை. ஆகவே, இயற்கையான இறப்பு, அழிவு அதற்கு இல்லை. அதைத் தோன்றச் செய்த சட்டமே அதை அழிக்க முடியும். சட்டம், கூட்டமைப்பு என்ற நபரை அழிப்பதை, "கலைத்தல்" (Dissolution) என்று கூறுகிறோம். சட்டத்தால் அமைக்கப்பட்ட கூட்டமைப்பு, சட்டத்தாலேயே கலைக்கப்படுகிறது. இவ்வாறு, கலைக்கப்பட்ட பின் கூட்டமைப்பிலுள்ள உறுப்பினர்களிடையே இருந்த சட்டத் தொடர்பு அறுந்து விடுகின்றது.

"நபர்" என்றால் உரிமைகளும் கடமைகளும் யாருக்கு (எதற்கு) இருப்பதாகச் சட்டம் கருதுகிறதோ, அதுதான் என்றும்,

"நம்பிக்கைப் பொறுப்பமைப்பு," "கூட்டமைப்பு," முறைகளில், சட்டம், கற்பனையாக ஒரு நபரைப் படைத்துப், பலருக்குச் சொந்தமான உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க வகை செய்கிறது என்றும்,

இந்தக் கற்பனை நபரைச் சட்டம் தோற்றுவிப்பதால் நன்மைகள் உண்டு என்றும்

அந்தக் கற்பனை நபருக்குச் சட்டத்தின் மூலமாகவே அழிவு ஏற்படமுடியும் என்றும், இது வரை கண்டோம்.

6. உரிமை மூலம் (Title)

நமக்கு ஓர் உரிமை இருக்கிறது என்றால், அந்த உரிமை நமக்கு வந்த வழி ஒன்று இருக்கவேண்டும். உரிமை வந்த வழியை, "உரிமை மூலம்" (Title) என்று கூறுகிறோம்.

ஒரு பொருளை, நான் இன்னொருவரிடமிருந்து விலைக்கு வாங்கி இருக்கிறேன். இப்பொழுது, அந்தப் பொருள் எனக்குச் சொந்தமாகிவிட்டது. எனக்கு அப்பொருளின்மீது உரிமை வந்த வழி, அதை நான் விலைக்கு வாங்கிய செயலாகும். நான் அதை வாங்கிய செயல், எனக்கு அதன்மீதுள்ள உரிமைக்கு மூலமாக—காரணமாக—இருக்கிறது. ஆகவே, பொருளை வாங்கிய செயல், "உரிமை மூலம்." அச் செயலிலிருந்து பிறந்தது எனக்குள்ள உரிமை. "உரிமை மூலம்" முந்திய செயல்; அதில் விளைவது உரிமை.[1]

உரிமை மூலங்கள் இருவகைப்படுவன: (1) முதல் உரிமை மூலம், (Original title), (2) மாறிய உரிமை மூலம் (Derivative title)

கடலிலிருந்து பிடித்த மீன் எனக்குச் சொந்தமாகிறது. மீனைப்பிடித்த செயல், அதைப் பொறுத்து எனக்கு வந்த உரிமைக்கு மூலமாக இருக்கிறது. இந்தச் செயல் "முதல் உரிமை மூலம்" (Original title) என்று சொல்லப்படுகிறது. ஏனெனில், முதன் முதலில் அந்த மீன்மீது எழும் உரிமை அதைப் பிடித்த எனக்கே ஏற்படுகிறது. அதற்கு முன் அந்த உரிமை எவரிடமும் இருந்ததில்லை. ஆதலால், கடலிலிருந்து மீனைப் பிடித்த செயல் "முதல் உரிமை மூலம்" ஆகும். என்னிடமிருந்து மீனை இன்னொருவர் விலைக்கு வாங்கினால், அவ்வாறு வாங்கும் செயல் "மாறிய உரிமை மூலம்" (Derivative title) ஆகிறது. ஏற்கெனவே மீனைப் பிடித்த எனக்கு மீன்மீது உரிமை ஏற்பட்டு விட்டது; அந்த உரிமையே என்னிடமிருந்து அந்த மீனை வாங்குபவருக்கு மாறுகிறது. ஆதலால், வாங்கும் செயலை "மாறும் உரிமை மூலம்" என்று கூறுகிறோம்.

நமது செயலால் உரிமைகளை நாம் பிறர்க்கு மாற்றுகிறோம். எனது பொருளை இன்னொருவருக்கு நான் விற்கும் பொழுது, அந்தப் பொருள்மேல் எனக்குள்ள உரிமை வாங்குபவருக்கு

1. ....Every right involves a title or source from which it is derived. The title is the *de facto* antecedent of which the right is the *de jure* consequent.—Salmond.

மாறுகிறது. நான் எனது உரிமையை இழந்து விடுகிறேன். வாங்கியவருக்கு, வாங்கிய செயலிலிருந்து, அந்தப் பொருள்மீது உரிமை பிறக்கின்றது. இவ்வாறாக, ஒரு செயல், உரிமையை உண்டாக்கவும், மாற்றவும், அழிக்கவும் செய்கிறது.

உரிமையைத் தோற்றுவிக்கும், மாற்றும், அல்லது அழிக்கும் செயல்களை இருவகையாகப் பிரிக்கலாம்.

ஒருவராகவே, தமது விருப்பப்படி செய்யும் செயல் ஒருவகை. தாம் விரும்பியபடியே ஒருவர் தமது சொத்தைப் பிறருக்கு எழுதி வைப்பது, தாம் எழுதிவைத்ததை மாற்றுவது போன்ற செயல்கள், ஒருவரது தனிப்பட்ட செயல்களாகவே அமைகின்றன இதை 'ஒருதலைச்செயல்' (Unilateral act) என்பார்கள். ஒருவருக்கு மேற்பட்ட நபர்கள் தங்களுக்குள் சம்மதித்து, உடன்பட்டுச் செய்யும் செயல்களை "உடன்பாட்டுச் செயல்கள்" (Bi-lateral acts) என்று கூறுவதுண்டு. இது இரண்டாவது வகை. ஒருவர் தமது பொருளை இன்னொருவருக்கு விற்கும்பொழுது, விற்பவர் வாங்குபவர் இருவருடைய கருத்துக்களும் ஒன்றி நிற்கின்றன. இந்த இருவரின் கருத்து ஒற்றுமையின் பயனாய் எழுதுவது விற்பனைப் பத்திரம். இந்த விற்பனையை, "உடன்பாட்டுச் செயல்" என்று சட்டம் கூறும்.

"உடன்பாடு" அல்லது "ஒப்பந்தம்" என்பது (Agreement or Contract) ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் தங்களுக்குள் உடன்பட்டுச் செய்யும் செயலே ஆகும். தனித்து ஒருவர்மட்டும் "உடன்பாடு" செய்துகொள்ள முடியாது.

(அ) உடன்படிக்கைகள் (ஒப்பந்தங்கள்) (Agreements)

இரண்டு பேர்களுடைய கருத்து ஒன்றினால், அவர்களுடைய மனம் ஒரு காரியத்தைக் குறித்து ஒன்றுபட்டால், அப்பொழுது உடன்பாடு (Agreement) பிறக்கிறது. அந்த உடன்பாட்டின் பயனாக, யாருக்காவது உரிமையோ, கடமையோ ஏற்பட்டால், அதை "ஒப்பந்தம்" (Contract) என்று சொல்லுகிறோம்.

நாம் வாக்களிப்பதெல்லாம் "ஒப்பந்தம்" ஆகிவிடுவதில்லை. என் நண்பரின் வீட்டிற்கு விருந்துண்ண வருவதாக வாக்களிக்கிறேன். இதை வைத்து, எனக்கும் நண்பருக்கும் ஓர் "ஒப்பந்தம்" ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஏனெனில், விருந்துண்ண வருவதாக நான் சொல்லும்போது, சட்டப்படியான உரிமையோ கடமையோ அந்த வாக்குறுதியின் பயனாக யாருக்காவது ஏற்பட வேண்டும் என நண்பரோ நானோ கருதவில்லை. என் நண்பரிடமிருந்து வாங்கிய கடனைத்

திருப்பித் தருவதாக நான் வாக்களிக்கும் பொழுது, அந்தக் கடனைத் திரும்பப்பெறும் உரிமையை நண்பருக்கு ஏற்படுத்துவதாக நாங்கள் இருவரும் சம்மதிக்கிறோம். அதனால், கடனைத் திருப்பித்தரும் கடமை எனக்குப் பிறக்கிறது. இவ்வாறு, உரிமையையும் கடமையையும் தோற்றுவிக்கும் உடன்பாடுகளே, சட்டப்படியான ஒப்பந்தங்கள் ஆகின்றன. நண்பரின் உரிமைக்குக் கட்டுப்பட்டவனாக நான் இருக்கிறேன். எனது கடமையை ஏற்றுக்கொள்பவராக நண்பர் இருக்கிறார். எனக்கு நண்பரைப் பொறுத்து இருக்கும் கடமை, அவருக்கு என்னைப் பொறுத்துள்ள உரிமை, இதனால், நாங்கள் இருவரும் பிணைக்கப்பட்டு இருக்கிறோம். இவ்வாறு, ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஒரு காரியத்தைக் குறித்து ஒப்புக்கொண்டு, ஒரு பிணைப்பை (பந்தத்தை)த் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளும்பொழுது பிறப்பது "ஒப்பந்தம்."[1] இந்தப் பந்தத்தை (பிணைப்பை) லத்தீன் மொழியில் (Vinculum Juris) சட்டப் பிணைப்பு—என்பார்கள். ஓர் உடன்பாட்டில், ஒப்புதலும் (Consent) பந்தமும் (Vinculum Juris) அடங்கி இருப்பதை "ஒப்பந்தம்" என்ற சொல்லே அழகாக எடுத்துக்காட்டுகிறது. இதுவே, சட்டத்தில், "உடன்பாடு" அல்லது "ஒப்பந்தம்" என்று சொல்லுவதின் சாரமாகும்.

நம் வாழ்வில் ஒப்பந்தங்கள் மிக முக்கியப் பங்கு பெறுகின்றன. உடன்பாடுகளிலிருந்து பிறந்தவையே நமக்குள்ள பல உரிமைகளும், சலுகைகளும். நான் குடி இருக்கும் வீடு, விலைக்கு வாங்கிய ஒப்பந்தத்தால் எனக்குக் கிடைத்தது. பாங்கியில் நான் போட்ட பணத்திற்கு ஒப்பந்தப்படி வட்டி கிடைக்கிறது. என்னிடம் கடன் வாங்கியவர் ஒப்பந்தப்படி எனக்குத் திருப்பித்தரக் கடமைப்பட்டிருக்கிறார். எனது வீட்டை ஈடுவைத்து வாங்கியிருக்கும் கடனை நான் ஒப்பந்தப்படி திருப்பிக்கொடுக்க வேண்டும். இப்படியாக, பல உரிமைகளும் கடமைகளும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் தோன்றுகின்றன. இவ்வாறு உரிமைகளுக்கு மூலமாக உடன்பாடுகள் அமைகின்றன. ஆதலால், உடன்பாடுகளை, "உரிமைகளின் மூலங்கள்" (Titles) எனக் கொள்ளுகிறோம்.

நீதி செலுத்துவதன் மூலம் அரசு குடிகளின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கிறது என்று கண்டோம். அந்த "உரிமைகள்" "உடன்பாடுகளி"லிருந்தும் தோன்றுகின்றன. நியாய மன்றங்

1. No agreement is a contract unless its effect is to bind the parties to each other by the *vinculum juris* of a newly created personal right......To constitute a contract there must be not merely a promise to do a certain act, but a promise, express or implied, to do this act as a legal duty.—Salmond.

களில் பாதுகாக்கப்படும் உரிமைகள் பலவற்றின் மூலங்களாக உடன்பாடுகள் அமைகின்றன. ஆதலால், உடன்பாடுகளை அமுல் நடத்தி, அதன் வாயிலாக, அவைகளிலிருந்து எழும் உரிமைகளைப் பாதுகாக்கிறது நீதி முறைமை.

உடன்பாடுகளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப் படுவதற்குக் காரணங்கள் உண்டு. நாம் ஒவ்வொருவரும் நம் முடைய நலன்களைப் பேணுவதில் அக்கறை கொண்டவர்களாகவே இருக்கிறோம். நாம் இன்னொருவருடன் உடன்பாடு செய்து கொண்டால், அது சாதாரணமாக, நமது நலனுக்காகத்தான் என்பது தெளிவு. ஆதலால், நாம் செய்துகொள்ளும் உடன்பாடு களில் நம் நலன்கள் அடங்கி இருப்பதாகச் சட்டம் கருதுகிறது. உடன்பாடுகள் மீறப்படும்பொழுது, நலன்கள், உரிமைகள் பாதிக் கப்படுகின்றன. இதனால், உடன்பாடுகளை நிறைவேற்றும்படி, அந் தந்த நபர்களைச் சட்டம் கட்டாயப்படுத்துகிறது. நாமே செய்து கொண்ட உடன்பாடுகளிலிருந்து நாம் விலகி நடப்பதைச் சட்டம் அனுமதிப்ப தில்லை.

ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட நபர்களின் உரிமைகளுக்குச் சான்றாக அந்த ஒப்பந்தங்கள் அமைகின்றன. அந்தச் சான்று களில் தோன்றும் உரிமைகளைப் பாதுகாப்பது சட்டத்தின் தலையாய கடமையாகிறது.

நம் உரிமைகள், நலன்கள், நம் சம்மதத்தில் தோன்றிய உடன்பாடுகளில் அடங்கி இருக்கின்றன. எதை நன்மையாகக் கருதுகின்றோமோ, எதில் நமது நலன் இருக்கிறது என்று எண்ணுகிறோமோ, அதைப் பொறுத்தே நாம் நமது சம்மதத்தை அளிக்கிறோம். உடன்பாடுகளில் அடங்கும் உரிமைகளும், கடமைகளும் சம் பந்தப்பட்டவர்களின் சம்மதத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றுவன. ஒருவர் ஒப்புக்கொண்டபடி நடக்கவேண்டும் என்று நாம் எதிர் பார்க்கிறோம். இது இயல்புதான். அவ்வாறு, எதிர்பார்க்கப் படுவது நடக்கவேண்டும் என்று சட்டமும் கருதுகிறது. ஒவ் வொருவரும் தங்கள் சம்மதத்தின்பேரில், ஏற்றுக்கொண்ட கடமை களைச் செய்தே ஆகவேண்டும் என்ற கொள்கை நீதி முறையில் வற்புறுத்தப்படுகின்றது. ஆதலால், உடன்பாடுகளுக்கு நீதிமன்றங்கள் முக்கியத்துவம் அளிக்கின்றன.[1]

இந்த வகையில் நோக்கினால், சட்டசபையில் இயற்றப்படும் சட்டங்களையும், பொதுமக்களின் சம்மதத்தில் தோன்றிய உடன்

1. The state says to its subjects: "Agree among yourselves as to what is just in your individual concerns, and I shall enforce your agreement as a rule of right".—Salmond.

பாடுகளாகக் கருத இடமுண்டு. நாட்டின் பொதுநலனைக் கருத்திற்கொண்டு, மக்களின் பிரதிநிதிகள் தங்களுக்குள் சம்மதித்து, பொது உடன்பாடாகச் சட்டங்களை இயற்றுகிறார்கள். சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்தை அடிப்படையாகக்கொண்ட உடன்பாட்டுக் கொள்கையே, சட்டமியற்றும் செயலில் அடங்கி இருக்கிறது.

(ஆ) ஒப்பந்தங்களின் வகைகள்

ஒப்பந்தங்களுக்கு அடிப்படையாக இருப்பது அதைச் செய்து கொண்டவர்களின் "சம்மதம்" என்று கண்டோம். அந்தச் சம்மதம் உண்மையானதாக இருக்கவேண்டும். 'சம்மதம்' அளிப்பவர்கள் வயதுவந்தவர்களாகவும், தாங்கள் சம்மதிக்கும் பொருள்—காரியம்-பற்றி உண்மைநிலை தெரிந்தவர்களாகவும் இருப்பது அவசியம். உடன்பாடுகள் சட்டத்திற்கு விரோதமான காரியங்களைக் குறிக்கோளாகக்கொண்டு இருக்கக்கூடாது. மேலே சொல்லப்பட்ட முறையில் உள்ள ஒப்பந்தங்கள் "செல்லத்தக்க உடன்பாடுகள்" (Valid Agreements) என்று கூறப்படுகின்றன. இவ்வாறு இல்லாத ஒப்பந்தங்களைச் "செல்லுபடியாகாத உடன்பாடுகள்" (Invalid Agreements) என்கிறோம்.

வயது வராத சிறுவர்கள் (Minors), பைத்தியம் பிடித்தவர்கள் இவர்களால் "செல்லத்தக்க ஒப்பந்தங்களை"ச் செய்து கொள்ள முடியாது. ஏனெனில், இவர்கள் ஒரு காரியத்தைக் குறித்து அளிக்கும் "சம்மதம்", சரியானதாக இருப்பது இல்லை. ஆதலால், உடன்பாடு செய்துகொண்டவர்களில் ஒருவர், சிறுவராகவோ அல்லது இயல்பறிவு இல்லாதவராகவோ இருந்தால், அந்த உடன்பாட்டைச் சட்டம் ஏற்றுக்கொள்வதில்லை. இவ்வாறு, உடன்பாடு செய்துகொள்பவர்களின் அறிவுத்திறமை அல்லது தகுதி (Capacity)யின் அடிப்படையில் ஒப்பந்தங்களின் தன்மை உறுதி செய்யப்படுகிறது.

ஒப்பந்தங்களில் அடங்கிய ஒப்புதல்—சம்மதம்—தன்னிச்சையாகக் கொடுக்கப்பட்டிருப்பது அவசியமாகும். கட்டாயப்படுத்தி ஒருவரது சம்மதத்தைப் பெற்று, அதில் பிறந்த ஓர் உடன்பாட்டைச் செயல்படுத்த முடியாது. ஏமாற்றப்பட்டவர், தமது விருப்பப்படி ஒப்பந்தத்தை நிராகரித்துவிடலாம். சில வேளைகளில் சம்மதம், தவறாக ஒப்பந்தத்தின் தன்மையைப் புரிந்துகொண்ட காரணத்தால் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஒருவர் தமது வீட்டை விற்பதற்கு ஒப்புக்கொண்டு, இன்னொருவருடன் உடன்பாடு செய்துகொள்ளுகிறார். வீட்டை வாங்குவதற்குச் சம்மதம் அளித்தவர், மூன்றாவது மனிதரின் வீட்டைத்தான் வாங்கப் போவதாக

நினைத்துச் சம்மதம் அளித்திருக்கிறார். இப்பொழுது வாங்க ஒப்புக் கொண்டவரின் சம்மதம் தவறாகக் கொடுக்கப்பட்டதாகும். ஆகவே அந்த ஒப்பந்தம் செல்லுபடியாவதில்லை. இவ்வாறே, ஒருவர் இன்னொருவரை ஏமாற்றி, மோசடியாக, உடன்பாட்டில் பிணைத்தார் என்றாலும், அந்த ஒப்பந்தம் பயனற்றதுதான்.

ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட ஒருவரால், நிராகரிக்கத்தக்க ஒப்பந்தங்களை, "தவிர்க்கத்தக்க ஒப்பந்தங்கள்" (Voidable Contracts) என்று கூறுவர்.

சட்டத்திற் கெதிரான காரியங்களைக் குறிக்கோளாகக் கொண்டு ஒப்பந்தங்கள் செய்யப்படுவதற்குச் சட்டம் இடந்தருவதில்லை. நீதி மன்றத்தில் பொய்ச்சாட்சியம் கூற ஒப்புக்கொண்ட ஒருவருக்கு இன்னொருவர் பணம் கொடுப்பதாக வாக்களிக்கிறார். இந்த ஒப்பந்தம் சட்டத்திற் கெதிரான காரியத்தை நோக்கமாகக் கொண்டதால் "செல்லுபடி ஆகாத ஒப்பந்தம்" (Void Contracts) ஆகிறது.

சில ஒப்பந்தங்களை, இன்ன முறையில்தான் செய்யப்பட வேண்டுமென்று சட்டம் விதிக்கிறது. உதாரணமாக, ஒரு ஸ்தாவர சொத்தை ஈடாகவோ ஒத்தியாகவோ வைக்க வேண்டுமெனில், அதற்கான ஒப்பந்தம் எழுதப்பட்டு, இரு சாட்சிகளின் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டு 'பதிவும்' (Register) செய்யப்பட வேண்டும் எனச் சட்டம் விதிக்கிறது. யாரும், சரியானபடி, தீர எண்ணாமல் எந்த முக்கியமான ஒப்பந்தமும் செய்துவிடக் கூடாது என்பதற்காகச் சட்டம், அவைகுறித்து சில ஒழுங்கு முறைகளை விதிக்கிறது. அந்த ஒழுங்கு முறைகளின்படி இல்லாத ஒப்பந்தங்கள் சட்டப்படி பயனற்ற தாகின்றன.

(இ) எதிர்பயன் (பிரதிபலன்) அற்ற உடன்பாடு

கைம்மாறு கருதாத செய்ந்நன்றி, எதிர்பய(பிரதிபல)னைப் பார்க்காத உதவி, போற்றப்படுகிறது. ஆனால், சட்டம் ஓர் உடன்பாட்டைச் செயல்படுத்துவதற்குமுன், அந்த ஒப்பந்தத்தில் எதிர்பயன் (பிரதிபலன்) (Consideration) அடங்கி இருக்கிறதா எனப் பார்க்கிறது. எதிர்பயன் (பிரதிபலன்) இல்லாத ஒப்பந்தங்களைச் சட்டம் ஏற்றுக்கொள்வதில்லை.

உடன்பாட்டின் மூலம் ஒருவர் தம்மைப் பிணைத்துக் கொள்வதற்குத் தகுந்த காரணமோ, நோக்கமோ இருப்பது இயல்பு. எவ்வித காரணமும், நோக்கமும் இன்றி எவரும் ஒரு பொறுப்பை ஏற்றுக்கொள்ளவோ, அல்லது தமது உரிமையை மாற்றவோ, விட்டுக்கொடுக்கவோ, செய்வது இல்லை. ஆகவே, ஒப்பந்தம்

செய்து கொள்ளுவதற்கு ஏதாவது ஒரு காரணம் அல்லது நோக்கம் இருக்கத்தான் செய்யும். இந்த நோக்கத்தை, காரணத்தை, அல்லது தூண்டுதலை "எதிர்பயன்" (பிரதிபலன்) (Consideration) என்று சட்டம் கூறுகிறது.[1]

நான் எனது பொருளைப் பத்து ரூபாய்க்கு விற்கிறேனே என்றால், நான் விற்பதற்குத் தூண்டுதலாக, எதிர்பயனாக, நான் பெற்றுக் கொள்ளும் பத்து ரூபாய் இருக்கிறது. எனது சொத்தை என் மகனுக்கு (அன்பளிப்பாக) எழுதிவைக்கிறேன் என்றால், அவ்வாறு நான் கொடுப்பதற்குக் காரணம் (தூண்டுதல்) என் மகன் மீதுள்ள அன்பு. இவ்வாறு, ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் காரணமான எதிர்பயன் (பிரதிபலன்) இருக்கிறதா என்று சட்டம் கவனிக்கிறது.

ஒப்பந்தத்தில் அடங்கி இருக்கும் எதிர்பயன் (பிரதிபலன்) மதிப்புள்ளதாக இருக்க வேண்டும். உடன்பாட்டில் சம்மதத்தை அளிப்பவர்க்குக் கிடைக்கும் எதிர்பயன் (பிரதிபலன்), அவருக்கு ஆதாயத்தையோ அல்லது நன்மையையோ அளிக்கவேண்டும். "உடன்பாடு" என்றால் அதில் வாக்களிப்பவர் (Promisor), வாக்குப் பெறுபவர் (Promisee) என்று இருவர் இருப்பார்கள். வாக்களிப்பவர், தமக்குக் கிடைக்கும் பயன் காரணமாக வாக்களித்திருக்க வேண்டும்; அல்லது வாக்களிப்பவரின் நலனுக்காக வாக்கைப் பெறுபவர் நட்டத்தையோ, இடைஞ்சலையோ ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும். இந்த வகையில், அந்த ஒப்பந்தத்தில் எதிர்பயன் அமைந்திருக்கவேண்டும். இவ்வாறு இல்லாத வெறும் ஒப்பந்தத்தைச் சட்டம் ஏற்றுக் கொள்வதில்லை.

ஒருவர் இன்னொருவருக்கு ஆயிரம் ரூபாய் தருவதாக, எவ்வித எதிர்பயனும் இன்றி வாக்களிக்கிறார். இந்த உடன்பாடு செல்லுபடி ஆகாதது. ஏனெனில், ரூபாய் ஆயிரம் கொடுப்பதாக வாக்களித்ததற்கு எதிர்பயன் ஏதும் இல்லை. அவரே தனது மகனுக்கு அன்பளிப்பாக ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொல்லி ஒரு பத்திரம் எழுதிவைக்கிறார். இந்த ஒப்பந்தம் நிறைவேற்றத் தக்கது. மகன்மீதுள்ள அன்பு அந்த ஒப்பந்தத்தைத் தூண்டியதால், அதுவே போதுமான "எதிர்பயன்" (பிரதிபலன்) என்று சட்டம் கருதுகிறது. நான் ரூபாய் 500 பெறுமான பொருளை இன்னொருவருக்கு ரூபாய் ஐந்துக்கு விற்பதாய் வாக்களித்து ஒப்பந்தம் செய்கிறேன். நான் தன்னிச்சையாக இவ்வாறு ஒப்புக்

1. A consideration in its widest sense is the reason, motive or inducement, by which a man is moved to bind himself by an agreement.—Salmond.

கொண்டிருந்தால், அந்த ஒப்பந்தம் செல்லத்தக்கதுதான். எதிர் பயன் (பிரதிபலன்) போதுமானதாக இல்லை என்ற காரணத்தை மட்டும் வைத்து, ஒப்பந்தத்தைச் சட்டம் செல்லாததாக ஆக்குவது இல்லை.

• இவ்வாறு, ஒவ்வொரு ஒப்பந்தமும் எதிர்பயனை (பிரதிபலனை) — சட்டப்படியுள்ள போதுமான எதிர்பயனை — காரணமாகக் கொண்டு இருக்கிறதா எனச் சட்டம் பார்த்து, அவ்வாறு எதிர் பயன்(பிரதிபலன்)கள் உள்ள ஒப்பந்தங்களைமட்டும் செயல் படுத்துகிறது.[1]

இந்த முறையில், ஒப்பந்தங்கள் மூன்று வகைப்படுவன :— (1) சட்டப்படியான செல்லத்தக்க ஒப்பந்தங்கள் (Valid Contracts); (2) செல்லாத ஒப்பந்தங்கள் (Void Contracts;) (3) தவிர்க்கத்தக்க ஒப்பந்தங்கள் (Voidable Contracts).

இந்தப் பிரிவில், உரிமையின் மூலங்கள் (Titles) என்ன என்பது பற்றியும், அவைகள் பெரும்பாலும் உடன்பாடுகளில் (ஒப்பந்தங்களில்) அடங்கி இருக்கின்றன என்பதையும், அந்த உடன்பாடுகளின் தன்மைகள், விதங்கள் பற்றியும் கண்டோம்

---

1. In English law no promise is binding unless the promisor receives a *quid pro quo* from the promisee.—Salmond.

7. பொறுப்பு (Liability)

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும். —குறள். 319.

நாம் செய்யும் செயல்கள் அனைத்திற்கும் நாமே பொறுப்பாளி ஆகிறோம். நமது செயலின் பொறுப்பு நம்முடையதாகிறது. நமது செயலினால் விளையும் பயனை நாமேதாம் அடையவேண்டும்; அந்தப் பயன் நம்மையே சாருகின்றது. இது நம்முடைய சமயக்கொள்கை மட்டுமன்று, சட்டத்தின் கோட்பாடும் ஆகும்.

"வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்ற நீதிக் கொள்கையைச் சட்டம் நெறியாகக் கொள்கிறது. ஒருவர், இன்னொருவருக்குத் தீமை—இன்னாமை—செய்தால், அந்தத் தீமையின் விளைவை மாற்றும்—அதற்கு ஈடுசெய்யும்—பொறுப்பு, தீமை செய்தவருக்கு ஏற்படுகிறது. நான் பிறருக்குச் செய்த இன்னாமைக்குக் கழுவாய் (பரிகாரம்) நானேதான் செய்யவேண்டும். தீமை புரிந்தவர் அதற்கான கழுவாயை (பரிகாரத்தை)ச் செய்யவேண்டிய அவசியத்தை, அவரது "பொறுப்பு" (Liability) என்று சட்டத்தில் கூறப்படுகிறது. கழுவாயை (பரிகாரத்தை)ச் செய்யும்படி, தீமை இழைத்தவர்களைச் சட்டம் கட்டாயப் படுத்துகிறது.[1]

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு. —குறள் : 204.

மறந்தும், பிறருக்குக் கேடு எண்ணியவருக்குக் கேடு விளையுமாறு அறம் எண்ணுகிறது என்ற பொதுமறையின் வழியிலே, சட்டமும், பிறருக்குக் கேடு விளைவித்தவருக்கு அந்தக் கேட்டினால் வந்த தீமையைத் தீர்க்கும் பொறுப்பை ஏற்படுத்துகிறது.

இந்தப் பொறுப்பு இருவகைப்படும்; ஒருவகை, உரிமை—(Civil)-சிவில் - வழக்குகளில் ஏற்படுவது. மற்றொருவகை, குற்ற —(Criminal)-கிரிமினல் - வழக்குகளில் தோன்றுவது. குற்ற வழக்குகளில், குற்றத்திற்குப் பொறுப்பானவர் தண்டிக்கப்படுகிறார்; தண்டனை பெறுவதே குற்றவழக்குகளில் ஏற்படும் பொறுப்பாகும். உரிமை வழக்குகளில், இன்னாமை செய்தவரின் பொறுப்பு இன்னாமைக்குப் பரிகாரமாகவே, இன்னாமையின் விளைவுகளுக்கு ஈடு செய்வ

1. Liability or responsibility is the bond of necessity that exists between the wrong doer and the remedy of the wrong. —Salmond.

தாகவே, அமைகிறது. சில வேளைகளில், தண்டனை அடைவ் தாகவும் இருக்கலாம்.

(அ) பரிகாரப் (ஈடுசெய்யும்) பொறுப்பு: (Remedial Liability)

ஒருவருக்கு இன்னொருவரைப் பொறுத்துக் கடமை இருந்தால், அந்தக் கடமையை நிறைவேற்றவேண்டும் என்பது விதி. அந்த விதியின்படி கடமையைச் செய்யாதவர்களைக், கடமையைச் செய்யும்படி, சட்டம் கட்டாயப் படுத்துகிறது; தனது வலிமையினால் கடமையைச் செய்யும்படி வற்புறுத்துகிறது.

நான் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டியது எனது கடமை. அதில் நான் தவறினால், எனது சொத்தை விற்று, கடன் தொகையைப் பெறும் அதிகாரத்தைக் கடன் கொடுத்தவருக்குச் சட்டம் அளிக்கிறது. நான் வேண்டுமென்றே, கடனைத் தீர்க்க மறுப்பதாகக் கருதினால், என்னைக் குறிப்பிட்ட காலத்திற்குச் சிறையில் வைத்துக், கடனைத் திருப்பிக் கொடுக்குமாறு வற்புறுத்துகிறது. இவ்வாறு, நான் கடனைக் கொடுக்கத் தவறிய இன்னுமைக்கு ஈடு செய்யும் பொறுப்பு என்மீது சுமத்தப் படுகிறது.

நான் இன்னொருவருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி, அதனால் இன்னொருவருக்கு நட்டம் நேர்ந்தால், அந்த நட்டத்தை ஈடு செய்வதற்கு நானே பொறுப்பாளி ஆகிறேன். இந்த முறையில், நான் செய்த இன்னுமையின் விளைவுகளை நீக்கும் பொறுப்பு என்னையே சாருகிறது.

உரிமையை நிலை நாட்டும் 'சிவில்' வழக்குகளில், பொதுவாக, இன்னுமையின் விளைவுகளை ஈடுசெய்யும் வகையிலேயே, "பொறுப்பு" அமைகிறது. இன்னுமைக்குத் தீர்திற (பரிகார)மாகவே "பொறுப்பு" ஏற்படுகிறது. ஆதலால், இதை 'பரிகாரப் பொறுப்பு' அல்லது ஈடு செய்யும் பொறுப்பு (Remedial Liability) என்று கூறுகிறோம்.

(ஆ) தண்டனை (Penal Liability)

உரிமை வழக்குகளில் உரிமைகள் நிலைநாட்டப்படுகின்றன என்றும், குற்ற வழக்குகளில் குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை அளிக்கப் படுகிறது என்றும் முன்னர்க் கண்டோம். ஒருவருடைய உரிமை பாதிக்கப் படுவதால்தான், இருவகை வழக்குகளுமே தோன்றுகின்றன. ஆனால், உரிமை வழக்குகளில் பாதிக்கப்பட்டவரின் உரிமை காப்பாற்றப்படுவதே முக்கிய நோக்கமாக இருக்கிறது. குற்ற வழக்குகளில், உரிமையைப் பாதித்த செயலைக் குற்றம் (Offence) எனச் சட்டம் கருதி, அச் செயலைச் செய்தவருக்குத் தண்டனை அளிக்கிறது.

"குற்றம்" எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

பிறருக்குக் கேடு விளைவிக்கும் செயல்களைத் தீமையான செயல்களாகக் கொள்கிறோம். அந்த இன்னாமைச் செயல்களைச் சட்டமும் அனுமதிப்பதில்லை. பிறருடைய உரிமையைப் பாதிக்கும் செயல், பொது அமைதிக்குக் கேடு விளைவிப்பதாக இருந்தால், அதைத் தண்டனைக்குரிய குற்றமாகச் சட்டம் கருதுகிறது.

ஒரு செயலைத், தண்டிக்கத் தக்க குற்றம் என்று எவ்வாறு சட்டம் தீர்மானிக்கிறது என்று பார்ப்போம். எண்ணம், சொல், செயல், இம் மூன்றிலும் தூய்மையுடன் ஒருவர் இருக்கவேண்டும் என்பது அறநெறி. மனம், மொழி, மெய், மூன்றினாலும் பிறருக்கு இன்னாமை செய்தல் ஆகாது என்பதே தருமம். நம் மனதில் நிகழ்வது நினைவு, எண்ணம், சிந்தனை; வாயால் உரைப்பது சொல்; உடம்பினால் செய்வது செயல். பேசுவதும் உடம்பின் செய்கைதான்; ஆதலால், உரையாடுவதையும், உடம்பின் செயலாகவே கருதுவது பொருந்தும். இப்பொழுது சிந்தனை, செயல், என்ற இரண்டும் மிஞ்சி நிற்கின்றன.

நினைவாக, எண்ணமாக, முதலில், மனதில் தோன்றுவது செயலாக வெளியில் நிகழ்கிறது. அகத்திலே கருவாகத் தோன்றும் எண்ணம், புறத்திலே செயலாக உருவெடுக்கிறது. வினை விளைவுகளுக்கு நினைவுதான் மூலம். எண்ணரிய எண்ண அலைகள் நம் மனத்தில் எழுகின்றன; அவைகளில் சில இயக்க அலைகளாக உருவெடுக்கின்றன. செயலின் மூலர்—காரணம்—கருத்தில் இருப்பதால் கருத்தே செயலைவிட முக்கியமாகிறது.

காரணத்திலிருந்து காரியம்; சிந்தனையிலிருத்து செயல்; கருத்திலிருந்து கருமம். எண்ணம் இன்றி இயக்கம் இல்லை; சிந்தனை இன்றிச் செயல் இல்லை; கருத்தில் முளைப்பதே கருமம் ஆகிறது. நல்ல எண்ணங்கள் நற்செயல்களாகவும், தீய எண்ணங்கள் தீச்செயல்களாகவும் உருவெடுக்கின்றன.

இவ்வாறு, தீய எண்ணங்களே, தீமையான செயல்களுக்கு வித்துக்கள் ஆகின்றன. கள்ளாமையை அறிவுறுத்தும்போது வள்ளுவர் கூறுகிறார்:

> "உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
> கள்ளத்தால் கள்வேம் எனல்" (குறள்: 282)

"உள்ளத்தால் உள்ளுதலே," அந்த எண்ணமே, தீயதாகிறது என்பதில் எவ்வளவு பொருள் இருக்கிறது! உள்ளுதல் இல்லையெனில் செயல் இல்லை. ஆதலால் 'கள்வேம்' என்ற எண்ணமே தீயது என்று அறிவுறுத்துகிறார் ஆசிரியர். எண்ணம் இனியதானால், மனிதன் புனிதனாகிறான். அது தீயதானால், அவன் செயல்

தீயதாகிறது, அவனும் தீயனாய் உழல்கிறான். "உள்ளத்தால் பொய்யாது ஒழுக" வேண்டும், "மனத்துக்கண் மாசிலன்ஆதல்" வேண்டும், என்று அறநூல்கள் அறிவுறுத்துவது, வினைகளுக்கு மூலமாக நினைவுகள் இருப்பதால்தான், கருமங்களுக்குக் காரணமாகக் கருத்துக்கள் அமைவதால்தான்.

தீமையான செயல்களுக்கு எண்ணமே மூலம் என்பதைச் சட்டம் நன்கு உணர்ந்திருக்கிறது. செயல்களைவிட அவைகளைத் தூண்டிய எண்ணங்கள்தாம் முக்கியமானவை என்பதே சட்டத்தின் கொள்கை. ஆதலால், ஒரு செயலைத் தண்டனைக்குரிய குற்றம் என்று நிச்சயிப்பதற்கு முன், அச் செயல் குற்றமான எண்ணத்திலிருந்து எழுந்ததா, குற்றமான தீய கருத்தோடு செய்யப்பட்டதா, என்பதைச் சட்டம் உன்னிப்பாய் ஆராய்கின்றது.[1]

அறுவை மருத்துவம் (ரண சிகிச்சை) செய்யும் வைத்தியர், நோயாளியின் கையை அறுத்து அகற்றிவிடுகிறார். ஒருவரது கையை இன்னொருவர் பகையின் காரணமாக அரிவாளால் வெட்டிவிடுகிறார். இப்பொழுது, ஒருவனது கையை வெட்டி அகற்றிய செயலை வைத்தியரும் செய்திருக்கிறார், பகையால் வெட்டியவரும் செய்திருக்கிறார். இருவரின் செயல்களாலும் ஏற்பட்ட விளைவு ஒன்றுதான். ஆனால், வைத்தியரைக் குற்றவாளி என நாம் கருதுவதில்லை. பகையால் வெட்டியவர், தண்டனைக்குரிய குற்றவாளியாகிறார். ஏன்? நோயைக் குணப்படுத்தும் நல்ல கருத்தோடு வைத்தியர் நோயாளியின் கையை அறுத்தகற்றினார்; ஆனால் குற்றவாளியோ, விரோதத்தின் காரணமாக, தீங்கிழைக்க வேண்டும், துன்பம் விளைவிக்க வேண்டும் என்ற தீய கருத்துடன் தன் எதிரியின் கையை வெட்டினார். பின்னவரின் செய்கை தீய எண்ணத்திலிருந்து பிறந்ததால் அவரது செயல் தண்டிக்கத் தகுந்த குற்றமாகிறது. வைத்தியரின் செயல் நல்ல எண்ணத்தில் பிறந்ததால் அது போற்றப்படுகிறது.

இரு நண்பர்கள் காட்டில் வேட்டையாடுகின்றனர். தனித் தனியே பிரிந்து சென்று விலங்குகளைச் சுடுகின்றனர். ஒரு புதரிலிருந்து "சல சலப்பு" ஒலி கேட்கவே, அப்புதரினுள் விலங்குதான் இருக்கிறது எனக் கருதி, வேட்டையாடுபவர்களில் ஒருவர் புதரை நோக்கிச் சுடுகின்றார். ஆனால், புதரினுள் மறைந்திருந்தவர் மற்ற நண்பர்! குண்டுபட்டு அவர் இறந்து விடுகிறார்! இப்

1. The act alone does not amount to guilt; it must be accompanied by a guilty mind.—Salmond.

Intention or negligence is a necessary condition precedent to the existence of that plight or predicament which is styled guilt. —Austin.

பொழுது, புதரை நோக்கிச் சுட்டுத், தம் நண்பருக்கு மரணத்தை விளைவித்தவரைக் கொலைக் குற்றம் செய்தவராகச் சட்டம் கருதுகிறதா? இல்லை. அவரது செய்கையால்தான் மரணம் விளைந்தது என்பதில் ஐயமில்லை. ஆனாலும், அவரைக் குற்றவாளி எனக் கருதாமல் இருப்பது ஏன்? அவர் புதரை நோக்கிச் சுட்டது நண்பரைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தால் அன்று. அவரது செயல் தான் இன்னொருவரின் மரணத்திற்குக் காரணமாக இருந்தது என்றாலும், அவரது கருத்து அந்த மரணத்தை நாடவில்லை. ஒருவர் தம் பகைவனைச் சுட்டுக் கொன்றுவிட்டால், அவர் கொலைக் குற்றத்திற்கு ஆளாகித் தண்டிக்கப்படுகிறார். பகைவனுக்கு மரணத்தை விளைவித்த செயல், வேண்டுமென்றே, கொல்ல வேண்டும் என்ற தீய எண்ணத்தோடு செய்யப்பட்டது. ஆதலால், அது கொலைக் குற்றமாகிவிடுகிறது,

இரு செய்கைகளின் பயனாய் மரணமே நேர்ந்தாலும், ஒரு செய்கை கொலைக் குற்றமாகவும், மற்றொன்று குற்றமற்றதாகவும் கருதப்படுகிறது. ஏனெனில், செயல்கள் இரண்டின் விளைவும் ஒன்றாக இருந்தாலும், எண்ணங்கள்—கருத்துக்கள்—வேறுபட்டிருக்கின்றன. ஒன்று மரணத்தை விளைவிக்கவேண்டும் என்ற தீய எண்ணத்துடன் செய்யப்பட்டது; மற்றது அந்தத் தீய எண்ணம் சிறிதுமின்றிச் செய்யப்பட்டது.

தீய எண்ணத்தோடு கூடிய செயல் தண்டிக்கத்தக்கதாகவும், தீய எண்ணமில்லாத அதே போன்ற செயல் குற்றமற்றதாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

ஆகவே, செய்யப்படும் செயலைவிட, அச் செயலைத் தூண்டும் எண்ணமே முக்கியமானதாக இருக்கிறது என்பது தெளிவாகும்.

ஒரு செயல் தீமையை விளைவித்தாலும், அது தீய எண்ணத்துடன் செய்யப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல், அச் செயல் குற்றமாவதில்லை. விருப்புடன் கூடிய வினையாக, கருத்துடன் ஒன்றிய கருமமாக, அந்தத் தீய செயல் இருந்தால்தான் அது தண்டிக்கத்தக்க குற்றமாகிறது; அதைச் செய்தவரும் தண்டிக்கப்படுகிறார். இவ்வாறு, உடலின் அசைவைவிட உள்ளத்தின் நிகழ்ச்சியே முக்கியமாகிறது.

எனவே, ஒரு செயலைக் குற்றமானதா இல்லையா என்பதை உறுதிசெய்யுமுன், அதைச் செய்தவரின் மனநிலை ஆராயப்பட வேண்டியிருக்கிறது. வேண்டுமென்றே குற்றம் செய்தவரைத் தண்டிப்பதுதான் முறையாகும்; தண்டிப்பதால் பயனும் உண்டு. எதுவும் அறியாத சிறு குழந்தை ஒன்று, கீழே கிடந்த கத்தியை எடுத்து எறிந்ததால், இன்னொருவருக்குக் காயம் ஏற்பட்டது என்றால், அக் குழந்தையைத் தண்டிப்பது முறையாகாது தான் செய்வது என்ன என்றே தெரியாத மன நிலையில் உள்ளது

குழந்தை. இம்மாதிரி நிலையில் உள்ளவர்கள்தாம் பைத்தியம் பிடித்தவர்களும்.[1]

மனத்தில் எத்தனை எத்தனையோ எண்ணங்கள் தோன்றி மறைகின்றன. பிறர் அவைகளை அறிய முடிவதில்லை. ஒருசில எண்ணங்கள் செயல்களாக உருவெடுக்கின்றன. அந்தச் செயல்களிலிருந்து அவைகளைத் தூண்டிய கருத்துக்கள் நல்லவையா தீமையானவையா என்று நாம் காணமுடிகிறது. தீய எண்ணம் கருத்தளவிலேயே இருந்துவிட்டால் சட்டம் ஏதும் செய்வதற்கில்லை. ஆனால், அந்தத் தீய கருத்துச் செயலாக வெளிப்பட்டவுடன், அந்தத் தீய செயலிலிருந்து அதைத் தூண்டிய தீய எண்ணத்தை அறிந்து, அச் செயலைச் செய்தவரைச் சட்டம் தண்டிக்கிறது. தீய எண்ணத்திலிருந்து பிறக்காத எந்தச் செயலையும் சட்டம் குற்றமாகக் கொள்வதில்லை. தீயவெண்ணம், மனத்தின்றிச் செய்யப்பட்ட செயல் குற்றமாகாது. தூய்மையான உள்ளத்தில் பிறந்த செயலும் தூய்மையானதாகவே கருதப்படுகிறது. இவ்வாறு, மனத் தூய்மையிலிருந்து வினைத்தூய்மை நிச்சயிக்கப்படுகிறது.

தீமையான வினையைத் தூண்டும் தீய எண்ணத்தை லத்தீன் மொழியில் "Mens Rea" என்பார்கள். ஒருவரது தீய எண்ணத்தை வைத்தே, அவருடைய செயலுக்கான பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை குற்றவியல் சட்டத்தின் அடிப்படையானதாகும்.

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணாசெய் யாமை தலை. (குறள் - 317)

என்பது 'இன்னா செய்யாமை' என்ற அதிகாரத்திலே. வள்ளுவர் வகுத்திருக்கும் நெறியாகும். 'மனத்தானும் மாணா' என்பதற்கு, 'மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல்களை,' என்று உரை தருகின்றார் பேராசிரியர் பரிமேலழகர். மேலும், "ஈண்டு மனத்தான் ஆகாதவழிப் பாவம் இல்லை என்பது பெற்றாம்," என்று திறம்பட விளக்கி இருக்கிறார். தீய மனத்தோடு கூடிய தீய செயலே பாவம் ஆகிறது என்ற உண்மை நம் அற நூலிலே உறைந்து ஒளிர்வது உணரத்தக்கது. இதுவே இன்றைய சட்டத்திலும் இலங்குகிறது.

(இ) செயல்கள் (Acts)

நம் செயல்களில் விளையும் பொறுப்புக்கள் நம்மைச் சேருகின்றன என்று பார்த்தோம்.

1. "...........before the law can justly punish the act, an enquiry must be made into the *mental attitude of the doer.*" —Salmond

"செயல்" (act) என்று நாம் கூறும்போது, அச் சொல்லில் அடங்கி நிற்கும் பொருள் என்ன என்பது பற்றி இங்கு ஆராய்வோம்.

கருமம், வினை, செய்கை என்ற சொற்களும் 'செயல்' என்ற பொருளில் பயன்படுகின்றன. நான் இதை எழுதுவது எனது செயல்; இதை நீங்கள் படித்துக் கொண்டிருப்பது உங்கள் செயல். மழை பெய்வதையோ, காற்றடிப்பதையோ நாம் "செயல்" என்று சொல்லுவதில்லை. இயற்கையில் நடப்பவைகளை "நிகழ்ச்சிகள்" (events) என்கிறோம். அவைகளைச் செயல் என்று குறிப்பிடுவது இல்லை. எழுதுவதும் படிப்பதும் நிகழ்ச்சிகள்தாம்; ஆனால், அவை நமது இச்சைப்படி நம்மால் விளைவிக்கப்பட்டவை. நமது இச்சைப்படி நாம் விளைவிக்கும் நிகழ்ச்சிகளே, "செயல்கள்" ஆகின்றன.

மனித இச்சைக்கு அடங்கும் நிகழ்ச்சியைச் செயல் என்று கூறலாம்[1].

நடக்கவேண்டும் என்று விரும்புகிறேன்; அவ்வாறே நடந்து செல்லுகிறேன். நடப்பது எனது செயல். என் கைகளையோ கால்களையோ ஆட்டுவது எனது செயல்; எனது இருதயத்துடிப்பு எனது செயல் அன்று; ஏனெனில், அது எனது இச்சைக்கு உட்பட்டதன்று. கையை அசைக்காமல் இருப்பதும் என் செயல் தான். ஆனால் காதுகளை அசைக்காமலிருப்பது என் செயலன்று. ஏனெனில், காதை அசைப்பது, நான் விரும்பினாலும் முடியாத காரியம். சிந்திப்பது எனது செயல்; கனவு காண்பது எனது செயலன்று[2]. **ஆகவே, நமது இச்சையில் விளையும் நிகழ்ச்சிகளையே "செயல்கள்" என்று கூறுகிறோம்.**

"செயல்கள்" என்பதில் இயங்கும் அல்லது தொழிற்படும் நிகழ்ச்சிகள்தாம் அடங்குவன என்று கொள்வது கூடாது. நமது இச்சைக்குட்பட்ட நிகழ்ச்சிகளே நம் செயல்கள் ஆகின்றன என்று கண்டோம். அந்த நிகழ்ச்சி, நிகழ்ந்தாலும் நிகழாவிட்டாலும், அது செயலேயாகும். **நமது இச்சைப்படி ஒன்றை நிகழ்த்தலாம் அல்லது நிகழ்த்தாமல் இருக்கலாம். அவ்வாறு நிகழ்த்தாமலிருப்பதும் செயலே ஆகும்.** ஆதலால்தான், நமது கையை ஆட்டுவது நமது செயல் என்றால், அதை ஆட்டாமல் இருப்பதும் நமது செயல் தான். இந்த முறையிலே, ஒன்றை நிகழ்த்துதலும் நிகழ்த்தாமல் இருத்தலும் நமது இச்சைப்படி என்றால் இரண்டுமே நம்

1. We mean by it (act) any event which is subject to the control of the human will.—Salmond.

2. The movements of a man's limbs are acts; those of his heart are not. Not to move his arms is an act; not to move his ears is not. To meditate is an act; to dream is not.—Salmond.

செயல்கள்தாம். நான் தெருவில் நடந்து செல்லும்போது, பின்னால் ஒரு வண்டி வருகிறது. உடனே நான் தெருவின் ஓரத்திற்கு விலகுகிறேன். இப்படி நான் விலகியது "இயங்கும் செயல்" (positive act or act of commission). நான் விலகிச் செல்லவில்லையானால், அப்படி விலகாமல் இருப்பதும் செயல்தான். அது "இயங்காச் செயல்" (negative act or act of omission). நான் ஒருவரை அடித்தேன் என்றால் அது இன்னுமை (Wrong) ஆகிறது. அடித்தல் என்பது "இயங்கும் செயல்". நான் எனது கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருப்பதும் இன்னுமைதான். ஆனால், இது இயங்காச் செயல். ஆகவே, செய்யக் கூடாததைச் செய்வதும், செய்யவேண்டியதைச் செய்யாமல் இருப்பதும் இன்னுச் செயல்கள் ஆகின்றன.

> " செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
> செய்யாமை யானும் கெடும்." (குறள் - 466)

செய்யத்தக்க செய்கைகளைச் செய்யாமல் விடுவதினாலும் கேடு விளைகின்றது என்பதை உணர்த்தி நிற்பது இக்குறள். "செய்தக்க செய்யாமையாலும்" உரிமைகள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் "செய்யாமை"யும் "செயலா"கவே கருதப்படுகின்றது. ஆகவே நமது இச்சைக் கடங்கும் செயல் அல்லது செயலின்மை இரண்டுமே சட்டப்படி உள்ள "செயல்" என்ற சொல்லில் அடங்குவன ஆகும்.

செயலின் தன்மை என்ன?

சட்டத்தில் " செயல் " என்று கூறும்பொழுது, அதில் மூன்று பகுதிகள் அடங்கி இருக்கின்றன. (1) நினைவின் பயனாக உடல் அசைவது அல்லது அசையாமல் இருப்பது, (2) அப்பொழுதுள்ள சூழ்நிலை, (3) அதன் விளைவுகள். முதலாவது, எண்ணமும் அதனால் உடலுறுப்புக்கள் அசைவதும், இரண்டாவது, அப்பொழுதுள்ள சூழ்நிலை, மூன்றாவது, அதனால் நிகழ்ந்த விளைவுகள். இவை அனைத்தும் சேர்ந்தே "செயல்" ஆகிறது[1].

ஒருவர் இன்னொருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிடுகிறார் என்றால், இதை ஒரு " செயல் " என்கிறோம். இது கொலைச் செயல் என்று கூறப்படுகிறது. இச்செயலில் என்னென்ன அடங்கி இருக்கின்றன என்று பார்ப்போம். மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்துடன், துப்பாக்கியால்

1. Every act is made up of three distinct factors or constituent parts. These are (1) its origin in some mental or bodily activity or passivity of the doer, (2) its circumstances, and (3) its consequences.—Salmond.

குறிபார்த்து அதன் விசையை விரலால் இழுக்கிறார் சுடுபவர். இவ்வாறு, தீய எண்ணத்துடன் குறிபார்த்துத் துப்பாக்கியின் விசையை இழுத்தது குற்றவாளியின் மனநிலையையும், அதை அடுத்துத் தோன்றிய அங்க அசைவையும் பொறுத்த நிகழ்ச்சிகள். இது முதல் நிலை. துப்பாக்கி தொழிற்படும் நிலையிலிருந்து அதில் தோட்டாவும் இருக்கவேண்டும். அதன் குறிக்கு நேராகச் சுடப் பட்டவர் இருந்திருக்க வேண்டும், இது இரண்டாவதாக உள்ள சூழ்நிலை. குண்டு வெடித்து, அதன் பயனாகச் சுடப்பட்டவர் இறக்கிறார். இது விளைவு. இவை எல்லாம் சேர்ந்தே "கொலைச் செயல்" ஆகிறது.

ஆகவே, ஒன்றைச் செய்ய முற்படுபவரின் எண்ணமும் அவருடைய அங்க அசைவுகளும், அதைச் செய்வதற்கு ஏதுவாக அப்பொழுது இருக்கும் இதர சூழ்நிலைகளும், முடிவில் தோன்றும் விளைவும், இந்த மூன்று கூறுகளும் அமைந்து நிகழ்ந்ததையே "செயல்" என்ற சொல் குறிக்கின்றது.

நான் எனக்குச் சொந்தமில்லாத ஒரு பொருளை எடுத்து வைத்துக் கொள்ளுகிறேன். அதை மட்டும் வைத்து அதைத் திருட்டுக் குற்றம் என்று கூற முடியாது. அப்பொருள் இன்னொரு வரின் உடைமையில் இருந்திருக்க வேண்டும். அவர் உடைமையி லிருந்து, அவர் சம்மதமின்றி நான் எடுத்தாலே, அது திருட்டுக் குற்றமாகும். இன்னொருவரின் உடைமையில் அந்தப் பொருள் இருந்ததும், அவர் சம்மதத்தை நான் பெருததும், சூழ்நிலை. நான் தீய எண்ணத்துடன் பொருளை எடுத்த நிகழ்ச்சி (ஒன்று), அது இன்னொருவருடைய உடைமையில் இருந்ததும், அவர் சம்மதத்தை நான் பெருததுமான சூழ்நிலை (இரண்டு), நான் எடுத்ததால் பொருள் எனது உடைமைக்கு மாறிய விளைவு (மூன்று), இவை எல்லாம் சேர்ந்தே "திருட்டுக் குற்றம்" என்ற "செயல்" ஆகிறது.

ஆதலால், உள்ளத்தில் தோன்றும் எண்ணத்தின் பயனாக, உறுப்புக்கள் அசைவதை மட்டும் செயல் என்று கூறுவது பொருந்தாது. அதனோடு, சூழ்நிலை, விளைவு இரண்டும் சேர்ந்ததே "செயல்" ஆகிறது.

(ஈ) கருதிய செயல்கள் (Intentional Acts)

கருதிச் செய்வது கருமமாகிறது; விரும்பிச் செய்வது வினை யாகிறது. எந்தச் செயலை, நான் எனது இச்சைப்படி செய் கின்றேனே, அதையே எனது "செயல்" என்று கூறமுடியும்.

மன நிகழ்ச்சிகளை, நினைவு, எண்ணம், விருப்பம், என்று பகுப்பது உண்டு. நினைவின் முதிர்ச்சி எண்ணம், எண்ணம் முதிர்ந்தால் விருப்பம்.

நாம் இங்கு எடுத்துக் கொள்வது 'எண்ணம்' (thought) என்பதைத்தான். நம் எண்ணமே செயலாக வெளியே உரு வெடுக்கிறது எனப் பார்த்தோம். எண்ணம் விருப்பாக (desire) மாறும்பொழுது, எண்ணத்தைச் செயலாக மாற்ற வேண்டும் என்று கருதுகிறோம். செயல் பற்றிய எண்ணமும் விருப்பமும் நமது இச்சை (will) மூலம் இயங்கிச், செயலின் காரணங்களாக அமைகின்றன. அதன் பயனாகச் செயல் உருவெடுக்கிறது. செயலைப்பற்றிய எண்ணமும், விருப்பமும் (desire) என் மனத்தில் தோன்றிய காரணத்தால்—செயலைச் செய்ய வேண்டுமென்று நான் கருதியதால் (intention)—செயல் நிகழ்கிறது. ஆதலால், அந்தச் செயல், நான் "கருதிய செயல்" ஆகிறது[1]. இவ்வாறு, கருதிச் செய்யும் செயலை—"கருதிய செயல்" அல்லது "கருதப் பட்ட செயல்" (Intentional act) என்று அழைக்கிறோம்.

நம் ஒரு செயலில், உடலசைவு, சூழ்நிலை, விளைவு என்ற மூன்று பகுதிகள் உண்டு எனக் கண்டோம். எண்ணத்தில் விளைந்த ஒரு செயலைக் கருதிய செயல் என்று கூறுவதற்கு முன் அச் செயலில் உள்ள இம்மூன்று பகுதிகளும்—ஒவ்வொரு பகுதியும்—கருதப்பட்டனவா என்று நாம் பார்க்கவேண்டும். மூன்று பகுதிகளும கருதப்பட்டிருந்தால்தான், அந்தச் செயலை நாம் "கருதிய செயல்" என்று கூறமுடியும்.

ஒரு திருமண வீட்டிலிருந்து புறப்பட்டுப் போகும்போது, அங்கிருந்த பல குடைகளில் ஒன்றை, எனது குடை போன்று அது இருந்ததால், என்னுடையது என நினைத்து எடுத்துக்கொண்டு செல்கிறேன். ஆனால், உண்மையில் அந்தக் குடை இன்னொருவ ருடையது. இப்பொழுது, நான் திருட்டுக் குற்றத்திற்கு ஆளாவ தில்லை. ஏன்? குடையை எடுத்துச் சென்ற செயல் நான் கருதிச் செய்த செயல்தான். ஆனால், அது இன்னொருவருடைய குடை என்ற எண்ணம் என் கருத்தில் இல்லை. இன்னொருவர் உடைமை யில் உள்ள பொருள் என்று தெரிந்தும், அதை எனது உடைமை யாக்கினால்தான், அது திருட்டுக் குற்றமாகிறது. மேலே சொன்ன உதாரணத்தில், திருட்டுக் குற்றத்திற்கு வேண்டிய சூழ்நிலை, அஃதாவது, குடை இன்னொருவருக்குச் சொந்தமாக அவரது உடைமையில் இருந்த சூழ்நிலை பற்றி எனக்குத் தெரியாதாகையால் குடையை எடுத்த செயலை மட்டும் "கருதிய செயல்" என்று சொல்லலாமே தவிர, இன்னொருவரின் உடைமையிலுள்ளது அந்தக் குடை என்று தெரிந்தும் எடுத்தேன் என்று சொல்ல

1. An act is intentional if, and in so far as, it exists in idea before it exists in fact, the idea realising itself in the fact because of the desire by which it is accompanied.—Salmond.

முடியாது. இவ்வாறு, திருட்டுக் குற்றத்திற்கான செயலின் கூறுகள் எல்லாவற்றையும் பொறுத்து என் கருத்துச் செல்ல வில்லை. இதனால், திருட்டுக் குற்றமும் என்னைச் சார்வது இல்லை. ஆதலால், "கருதிய செயல்" என்றால் செயலின் பகுதிகள் ஒவ்வொன்றும் கருதப்பட்டதாக இருக்கவேண்டும்.

ஒருவர் கருதிச் செய்யும் செயலின் விளைவு அவசியம் நேரும் என்று அவர் எதிர்பார்க்காமலும் இருக்கலாம். விளைவைப் பற்றிய நம்பிக்கை இல்லாமல் இருந்தாலும், அந்த விளைவை அவர் விரும்பினால், அந்தச் செயல் கருதிய செயலாகவே ஆகிறது[1]. ஒருவரது சட்டைப்பையினுள் பணம் ஒருவேளை இருக்கலாம் என நினைத்துத், திருடன் அவரது சட்டைப்பைக்குள் கையை விடுகிறான். பையில் பணம் அவசியம் இருக்கும் என்று திருடன் நம்பவில்லை. ஒருவேளை பணம் இருக்கலாம், அப்படி இருந்தால் அதை எடுக்க வேண்டும் என்ற விருப்பத்தோடுதான், கையைப் பையினுள் விடுகிறான். இப்பொழுது, பையினுள் பணம் இருக்கவேண்டும் என்று திருடனின் விருப்பத்தைப் பற்றிச் சந்தேகம் இல்லை. ஆனால், பணம் அவசியம் இருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் அது "கருதிச் செய்த செயல்" ஆகிறது. ஆதலால், விரும்பிய விளைவு ஒருவேளை நிகழலாம், அல்லது நிகழாமல் இருக்கலாம் என்ற எண்ணத்தோடு, அந்த விளைவை உறுதியுடன் எதிர்பார்க்காமலே, செய்யப்படும் செயலும் "கருதிய செயலாகவே" கொள்ளப்படுகிறது[2].

சிலவேளைகளில், செயல்களின் பயனாக, விரும்பாத விளைவுகள் எதிர்பார்க்கப்படலாம். ஆபத்தான நிலையில் இருக்கும் ஒருவருக்கு வைத்தியர் அறுவை மருத்துவம் செய்கிறார். நோயாளி ஒருவேளை அறுவை மருத்துவத்தைத் தாங்க முடியாமல் இறந்துவிடலாம் என்று வைத்தியருக்குத் தெரிகிறது. ஆகவே, நோயாளியின் மரணம் நேரலாம் என்பது வைத்தியருக்குத் தெரியும்; நோயாளி யின் மரணத்தை வைத்தியர் எதிர்பார்க்காமலில்லை. இருப்பினும், நோயாளியைக் குணப்படுத்தும் ஆர்வத்துடனேயே அறுவை சிகிச்சையை வைத்தியர் செய்கிறார். மரணம் ஒருவேளை நேரலாம் என்று எதிர்பார்த்தாலும், நோயைக் குணப்படுத்த வேண்டு மென்ற ஆர்வமே அறுவை வைத்தியம் செய்வதற்குக் காரண

1. Intention does not necessarily involve *expectation*. I may intend a result which I well know to be extremely improbable.—Salmond.

2. Intention is the foresight of a desired issue, however improbable - not the foresight of an undesired issue, however probable.—Salmond.

மாக இருக்கிறது. இப்பொழுது, அறுவை வைத்தியத்தைச் செய்வதை, நோயாளிக்கு மரணத்தை விளைவிக்க வேண்டும் என்று கருதிச் செய்யப்படும் செயல் என்று கூறுவது தகாது முடிவில் நோயாளி இறந்தாலும், வைத்தியர் வேண்டுமென்று மரணத்தை விளைவித்தார் என்று சொல்ல முடியாது. ஏனெனில், நோயாளியின் மரணம் வைத்தியர் எதிர்பார்த்ததுதான்; எனினும், அவர் அறுவை மருத்துவம் செய்தது நோயைக் குணப் படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தால்தான். விரும்பாத விளைவை நாம் எதிர்பார்த்து ஒரு செயலைச் செய்தாலும், அந்த விளைவை "நாம் கருதியதாகச்" சட்டம்கொள்வதில்லை.

ஒரு செயலை நாம் விரும்பினால், அச்செயல் கைகூடுவதற்கான வழியையும் நாம் விரும்பியவர்கள் ஆகிறோம். ஒருவரிடமிருக்கும் பணத்தை எடுத்துக்கொள்வதற்காக, அவரைக் கொலை செய்கின்றான் கொள்ளைக்காரன். கொள்ளைக்காரனுக்குக் கொலை செய்ய வேண்டுமென்று நேரடி விருப்பம் இல்லை; பணத்தைக் கவர்ந்து கொள்ளவேண்டுமென்பதே அவன் விருப்பம். பணத்தை எடுப்ப தற்காகக் கொலை கூடச் செய்ய வேண்டியிருக்கிறதே என்று மனம் வருந்தி அவன் கொலையைச் செய்யலாம். இருப்பினும், அந்தக் கொலையும் அவன் "கருதிச் செய்த செயலாகவே" ஆகிறது[1].

சில விளைவுகள், நிச்சயமாக எதிர்பார்க்கப்படலாம்; ஆயினும் அவை "கருதிய செயல்கள்" ஆவதில்லை. படைத் தலைவன் தன் வீரர்களை எதிரிகள் சுட்டுக்கொண்டிருக்கும்போதே முன்னேறிச் செல்ல உத்திரவிடுகிறான். நிச்சயமாக, வீரர்களில் பலர் எதிரிகளின் குண்டுகளுக்கு இரையாகி இறப்பார்கள் என்று தலைவன் அறிவான். ஆனால் போரின் வெற்றிக்கு அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்பொழுது, படை வீரர்களுக்கு மரணம் நேருவதை அவன் உறுதியாகத் தெரிந்திருந்தும் கூட அவர்களை முன்னேறும்படி உத்திரவிட்டாலும், படை வீரர்களின் மரணத்தை வேண்டுமென்றே, விரும்பி, அவன் விளைவித்தான் என்று சொல்ல முடியாது. ஆகவே, வீரர்களின் மரணத்தைப் படைத் தலைவனின் "கருதிய செயலாக"க் கொள்வதற்கில்லை[2].

1. If I desire and intend a certain end, I also desire and intend the means by which it is to be obtained though in themselves those means may be indifferent or even objects of aversion. —Salmond.

2. A military commander orders his troops into action, well knowing that many of them will lose their lives. Does he intentionally cause their deaths? ....Such consequences, though foreseen as certain, are not desired, and therefore not intended. —Salmond.

ஆகவே, ஒருவன் எந்த விளைவை விரும்பி ஒரு செயலைச் செய்கின்றானோ, அந்த விளைவை அவன் கருதிச் செய்ததாகவே சட்டம் கொள்ளுகிறது. அச்செயல் அவனது "கருதிய செயல்" ஆகிறது.

கருத்தைக் காண்பது எவ்வாறு?

ஒருவர் மனதிலுள்ள கருத்தை நம் கண்களால் காண முடிவதில்லை; புலன்களால் உணரமுடிவதில்லை. அதனால், அவர் செயலிலிருந்தும், அதன் விளைவுகளிலிருந்துமே அவரது கருத்தை ஊகித்து அறிய வேண்டியிருக்கிறது.

ஒரு குச்சியினால் ஒருவர் இன்னொருவரை அடிக்கிறார். அடிபட்டவருக்குச் சிறு காயங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு அடித்ததன் கருத்துக் கொலை செய்யவேண்டும் என்பதுதான் என்று நாம் ஊகித்துவிட முடியாது; அவ்வாறு ஊகிப்பதும் பொருந்தாது. ஆனால், ஒரு பெரிய வலுவான தடியினால் ஒருவர் இன்னொருவரின் மண்டையில் ஓங்கி அடித்து, அதனால் அடிபட்டவரின் மண்டையே சிதறிவிட்டால், அடித்தவரின் கருத்து மரணத்தை விளைவிக்க வேண்டும் என்பதுதான் என்று ஊகிப்பது பொருந்தும். கூரிய அரிவாளால் ஒருவர் இன்னொருவரின் காலை வெட்டினால், அச் செயலிலிருந்து நாம் ஊகிப்பது காலை வெட்டித் துன்பத்தை விளைவிக்கும் கருத்து வெட்டியவருக்கு உண்டு என்பதுதான். ஆனால், அரிவாளினால் இன்னொருவரின் கழுத்தை வெட்டினாரெனில், வெட்டப்பட்டவர் இறக்கவில்லையானாலும், வெட்டியவரின் கருத்து மரணத்தை விளைவிக்க வேண்டும் என்பதுதான்—கொலை செய்யவேண்டும் என்பதுதான் — என்று நாம் ஊகிப்பது சரியானதே ஆகும்.

இப்படியாகச், செயல்களை ஆராய்ந்து, அச் செயல்களின் இயற்கையான விளைவுகளைக் கருத்திற்கொண்டே, அவைகளைக் கருதியே, செயல்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று சட்டம் ஊகிக்கிறது. பெரும்பாலான செயல்கள் செய்யப்படுவதின் கருத்துக்களைக் கண்டு தீர்மானிப்பதற்கு இதுவே வழியாகிறது.

செயல் புரிவோர் விரும்பிய விளைவு நேராமல் போகலாம். இருந்தாலும், அவரது செயலின் ஒரு பகுதியிலிருந்து, அவர் விரும்பிய விளைவு என்ன, கருதிய முழுச் செயல் என்ன, என்பதை ஊகிக்க முடிகிறது. தூரத்திலிருக்கும் ஒருவரை நோக்கித் துப்பாக்கியால் இன்னொருவர் சுடுகின்றார்; குறி தவறிவிடுகிறது, குறிக்கு இலக்கானவரின் மரணம் நேரவில்லை. காயங்கூட அவருக்கு ஏற்படவில்லை. இப்பொழுது, சுட்டவரின் கருத்தைத் தீர்மானிப்பது எப்படி? துப்பாக்கியால் சுடுவதின் இயற்கையான

விளைவு மரணம். ஒருவரை நோக்கிச் சுட்டதின் மூலம், அவரது மரணத்தையே சுட்டவர் விரும்பியிருக்க — கருதியிருக்க — வேண்டும். சுட்ட செயலின் இயற்கை விளைவான மரணத்தையே, சுட்டவர் கருத்திற்கொண்டு சுட்டார் என்று உறுதி செய்வது நியாயமேயாகும். ஆதலால், சுட்டவரின் கருத்து மரணம் விளைவிப்பதுதான் என்று சட்டம் தீர்மானிக்கிறது. இதன் விளைவாகச், சுட்டவர் கொலை செய்வதற்கு முயன்ற குற்றத்திற்கு ஆளாகிருர்.

இவ்வாறு, செயலிலிருந்தும், செயலால் நேரக்கூடிய இயற்கையான விளைவுகளிலிருந்தும், அந்தச் செயலைப் புரிந்தோரின் கருத்துத் (Intention) தீர்மானிக்கப்படுகிறது.

ஒரு செயலுக்கு ஒருவரைப் பொறுப்பாக்குவதற்குமுன், அச் செயல் எந்த எண்ணத்தோடு செய்யப்பட்டது, செய்தவரின் மனநிலை என்ன, என்று சட்டம் ஆராய்கின்றது என முன்பு கண்டோம். ஆதலால், செயலைச் செய்தவரின் கருத்தைத் (Intention) தீர்மானிப்பது சட்டத்தின் முக்கிய வேலையாகிறது.

(உ) கருத்தும் நோக்கமும் (Intention and Motive)

பெரும்பாலும் மனிதர்கள் தங்கள் நலனைக் கருதியே செயல்கள் புரிகின்றனர். பிறருக்கு இன்னுமை விளைவிப்பதும், குற்றங்கள் செய்வதுங்கூடத் தங்கள் நலனைக் கருத்திற் கொண்டுதான்.

தனக்குப் பணம் வேண்டும் என்ற ஆசையால், பிறர் பொருள் தனக்குக் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தால், ஒருவன் திருடுகிருன். திருடுபவனின் எண்ணம் திருடவேண்டும், அதன் மூலம் பணத்தை அடைய வேண்டும் என்பதுதான். பணம் கிடைக்க வேண்டும் என்ற ஆசை, திருடவேண்டும் என்ற கருத்தைத் தோற்றுவிக்கிறது. திருடவேண்டும் என்ற கருத்திற்குக் காரணமாகத், தூண்டுகோலாக, அந்த ஆசை அமைகிறது. அந்த ஆசையையே திருடிய செயலின் நோக்கம் (motive) என்கிருேம்.

எண்ணத்தின் முதல்நிலை பணத்தின்மீதுள்ள ஆசை; அடுத்த நிலை திருடவேண்டும் என்ற முடிவு. முதல் நிலையைத் திருடியதன் நோக்கம் என்கிருேம்; அடுத்த நிலையைத் திருடவேண்டும் என்ற கருத்து என்கிருேம். கருத்து (intention)த் திருடும் செயலைப்பற்றியதாக மட்டும் இருக்கிறது; நோக்கம் (motive) அச் செயலுக்கு அப்பாற்பட்டு நிற்கிறது; திருடிய செயலுக்குக் காரணமாக இருக்கிறது.

பகைமையின் விளைவாக கொலைக் குற்றம் செய்யப்படுகிறது. பகைமையே கொலைச் செயலின் காரணமாக இருக்கிறது.

இப்பொழுது, பகைமையைக் கொலைக் குற்றத்திற்கான நோக்கம் என்று கூறுகிறோம்.

இந்த "நோக்கம்" செயலுக்கான தூண்டுகோலாக இருக்கிறது. செயலுக்கான காரணமாக "நோக்கம்" அமைகிறது. ஒருவர், என்ன செய்தார், எவ்வாறு செய்தார் என்பதை விளக்குவது கருத்து; ஏன் செய்தார் என்பதைக் குறிப்பது நோக்கம். செயலின் தன்மையைக் காட்டுவது கருத்து; செயலின் காரணத்தைக் காட்டுவது நோக்கம்[1].

பெரும்பாலும், ஒவ்வொரு செயல் செய்யப்படுவதற்கும் நோக்கம் இருக்கலாம். ஒரு குழந்தைமீதுள்ள நகையைத் திருட வேண்டும் என்ற ஆசையோடு, குழந்தையைக் கொன்றுவிடுகிறான் ஒருவன். நகையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை, கொலைச் செயலின் நோக்கமாக இருக்கிறது. புண்ணியம் கிடைக்குமெனக் கருதி ஒருவர் தருமம் செய்கிறார்; புகழ் கிட்டுமெனக் கருதி ஒருவர் வீரச்செயல் புரிகிறார். அவர்களது செயலுக்குப் புண்ணியமும், புகழும் நோக்கமாக அமைகின்றன.

எது கைகூடவேண்டும் என்று எதிர்பார்த்து ஒரு செயலைச் செய்கிறோமோ, எதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல் செய்யப்படுகிறதோ, அது, அந்தச் செயல் செய்வதற்கான நோக்கமாக இருக்கிறது.

ஒரு செயலின் தன்மையைத் தீர்மானிக்கும்பொழுது, அது எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது என்று சட்டம் கவனிப்பது இல்லை. குற்றமில்லாத செயல் தீயநோக்குடன் செய்யப்படலாம். தீமையான செயல் நல்ல நோக்கத்தோடு செய்யப்படலாம்.

என் விரோதி ஒருவர் துணி வாணிபத்தைப் பெருமளவு செய்து ஆதாயம் பெறுகிறார். அவரது வாணிபத்தைக் கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, நானும் அவர் கடைக்கு எதிர்ப்பக்கமாய்ப் பெரியதொரு துணி வாணிபத்தைத் தொடங்கி நடத்துகிறேன். எனக்கு நட்டம் நேர்ந்தாலும் நேரட்டும் எனக் கருதித், துணிகளை மிகக்குறைந்த விலைக்கு விற்கிறேன். இதன் விளைவாக என் எதிரியின் வாணிபம் நலிகிறது; அவர் நட்டமடைகிறார். இப்பொழுது, நான் துணி வாணிபம் நடத்துவது எதிரிக்குக் கேடு விளைவிக்க வேண்டுமே என்ற தீய நோக்குடன்தான். ஆனால், எனக்கு வாணிபம் செய்ய உரிமையுண்டு. வாணிபம் செய்யும் எனது செயல், சட்டத்திற்குப் புறம்பானதன்று; குற்றமான செயல்

1. The ulterior intent is called the *motive* of the act. —Salmond.

அன்று. அதைச் செய்வதன் நோக்கம் தீயதுதான். இருந்தாலும், சட்டப்படியான எனது வாணிபச் செயலைக் குற்றமானது என்று எவரும் சொல்லமுடியாது. ஆகவே, சட்டப்படியான செயல், தீய நோக்கத்துடன் செய்யப்பட்டாலும், குற்றமற்றதாகவே இருக்கிறது என்பது புலனாகும்.[1]

ஏழையான ஒருவனின் தாயார் மிகவும் நோய்வாய்ப்பட்டு இருக்கிறாள். அவளுக்கு மருந்து வாங்குவதற்கும், அவளுடைய பசியைப் போக்குவதற்கும், அவனிடம் பணமில்லை. தாய்மீதுள்ள பாசம் அவனை வருத்துகிறது. அருகிலுள்ள ரயில் நிலையத்திற்குச் சென்று, கூட்டத்தில் நிற்கும் ஒருவரது பணப்பையைத் திருடுகிறான். அதில் பிடிபட்டும் விடுகிறான். இப்பொழுது அவன் திருடியதன் நோக்கம் தன் தாயின் நோயையும் பசியையும் போக்குவதுதான். அது நல்ல நோக்கம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், நோக்கம் நல்லதாக இருப்பதால் செய்த திருட்டுச் செயல் குற்றமற்றதாகிவிடுமா? ஆகாது. திருடிய குற்றம் குற்றமேதான். திருடிய செயல் எந்த நோக்கத்தோடு செய்யப்பட்டதென்று சட்டத்திற்கு அக்கறை இல்லை.

> "ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை." (குறள்: 656)

என்ற குறளின் வழியே, வினைத்தூய்மையில்லாத அவனது திருட்டுச் செயலைக் குற்றமாகவே சட்டம் கொள்ளுகிறது.

செய்யப்படும் செயல் குற்றமானதா, இல்லையா? என்பது பற்றித்தான் சட்டம் கவனிக்கிறது. அந்தச் செயல் ஏன் செய்யப்பட்டது? அதன் நோக்கம் என்ன? என்பது செயலின் தன்மையைத் தீர்மானிப்பதற்குச் சம்பந்தமில்லாததாகும். வினைத்தூய்மை இல்லாத செயல், உள்ளத்தூய்மையுடன் செய்யப்பட்டதாகக் கருத முடியாது. உயர் நோக்குடன் செய்யப்படும் செயல்களும் உள்ளத்தூய்மையுடன், வினைத்தூய்மையுடன் செய்யப்பட வேண்டும். உள்ளத்தூய்மையற்ற குற்றமான செயல், உயர் நோக்குடன் செய்யப்பட்டது என்பதற்காகச் சட்டம் அதை மன்னித்து விடுவதில்லை.

நோக்கமும், அதற்கான செயலும், குற்றமற்றனவாக இருக்க வேண்டும்; குறிக்கோளும் அதையடையும் வழியும் தூய்மை

1. It is certainly a general rule of our law that an act *prima facie* lawful is not unlawful and actionable on account of the motives which dictated it.—Lord Herschell in Allen Vs. Flood.

யுள்ளனவாக அமைய வேண்டும் என்ற அறநெறியின் அடிப்படையிலேயே சட்டமும் இயங்குகிறது.[1]

(ஊ) குற்ற முயற்சி (Criminal Attempts)

"முயற்சி திருவினையாக்கும்" என்பது பொன்மொழி. ஆனால், அந்த முயற்சி நற்காரியங்களைக் குறித்து இருக்க வேண்டும். தீய முயற்சிகளைச் சட்டம் ஒப்புவது இல்லை. குற்றம் செய்ய முயற்சி செய்பவர்களைச் சட்டம் தண்டிக்கின்றது. குற்றம் செய்ய முயலுவதே குற்றமாகிவிடுகின்றது. குற்றமான செயலுக்கு அடிகோலாக குற்றமுயற்சி இருப்பதால், அந்த முயற்சியைச் சட்டம் தடுக்கிறது.

குற்றமான செயல் ஒன்று செய்யப்படும்பொழுது, தோன்றும் நிலைகள் என்னென்ன என்று பார்ப்போம்.

முதலாவதாகத் தீங்கு இழைக்க வேண்டும் என்ற கருத்து (intention) மனதில் உருவாகிறது. பிறகு, அந்தக் கருத்து செயலாக வெளிப்படுகிறது. அந்தச் செயல் மூன்று நிலைகள் கொண்டதாகும். முன்னேற்பாடு (Preparation), முயற்சி (Attempt), முடிவு (Completion) என்ற மூன்று நிலைகள் செயலில் அடங்குவன. தீங்கிழைக்கும் செயலில் ஈடுபடுவதற்குமுன், அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது, அதையடுத்துச் செயலைச் செய்ய ஆரம்பம் அல்லது முயற்சி, பிறகு செயலின் முடிவு. இப்படியாகக் கருதுதல், முன்னேற்பாடு, முயற்சி, முடிவு என்ற நான்கு நிலைகள் குற்றமான செயலில் அடங்கி நிற்கின்றன. கருதுதலையும், முன்னேற்பாட்டையும் சட்டம் குற்றங்களாகக் கொள்வது இல்லை; ஆனால் முயற்சியும், முடிந்த செயலும் சட்டப்படி குற்றங்கள் ஆகின்றன.

குற்றமான செயல் நிறைவேருமல், முடிவுபெருமல் இருந்தால் அந்த முயற்சியைச் சட்டம் எவ்வாறு கொள்ளுகிறது என்பதை ஆராய்வது முக்கியமானதாகும். குற்றம் புரிவதற்குச் செய்யப்படும் முயற்சியைச் சட்டம் தண்டிக்கிறது. அந்த முயற்சியே தண்டிக்கத்தக்க குற்றம் ஆகிறது. ஒருவரைக் கொல்ல வேண்டும் எனக் கருதிக் குறிபார்த்துச் சுட்டதில் குறி தவறிவிடுகிறது. சுட்டவரின் செயலால் அவர் கருதிய விளைவு கைகூட வில்லை. அஃதாவது, சுடப்பட்டவர்க்கு மரணம் நேரவில்லை. சுட்டவர் கொல்லுவதற்கான செயலைத்தான் செய்தார். ஆனால், அச்செயலில், முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. இப்பொழுது, நாம் சுட்டவரைக் கொலைக்குற்றம் செய்தாரென்று கூறுவதில்லை; கொலை செய்ய முயன்றுர் என்று கூறுகிறோம். இந்த முயற்சியைக்

1. The law will judge a man by what he does, not by the reasons for which he does it. —Salmond.

குற்றமாகக் கருதிச் சுட்டவரைத் தண்டிக்காமல் விட்டுவிட்டால், அவர் மேலும் இம்மாதிரி முயற்சி செய்ய ஏதுவாகும். தங்கள் முயற்சிகளில் வெற்றி பெருத குற்றவாளிகளைத் தண்டிக்க வில்லை யானுல், அவர்களின் தீய முயற்சிகளைச் சட்டம் ஊக்குவிப்பதாக அமைந்துவிடும்! ஆகவே, அத்தகைய தீமையான முயற்சிகளே குற்றங் களாகக் கருதப்பட்டு, அவைகளில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படு கிறது. குற்ற முயற்சி (Criminal Attempt) தண்டிக்கத்தக்க குற்றமாகிறது.

இவ்வாறு செயல் முழுதும் செய்யப்பட்டாலும், கருதிய விளைவு கைகூடாததால், செய்த செயல் முயற்சியாகக் கருதப்படு கிறது. வெற்றி பெருத குற்றச் செயல்களைக் "குற்றமுயற்சி" என்று தீர்மானிப்பது எளிதாகிறது. இதில் சிக்கல் ஏதும் இல்லை.

முன்னேற்பாடும், முயற்சியும்

சில வேளைகளில், குற்றமான செயல் முழுவதும் முடிவடைவ தில்லை. குற்றத்தை, தீங்கைச் செய்வதற்கான முன்னேற்பாடுகள் ஆகிவிடுகின்றன. குற்றத்தைச் செய்வதற்கு ஆயத்தமாக ஒருவர் இருக்கிறுர். இந்நிலையில் அவரது செயலைக் 'குற்றமுயற்சி' எனக் கருதமுடியுமா என்பது கேள்வி. தீங்கு இழைக்கவேண்டும் என்று ஒருவர் கருதினுல், அவ்வாறு கருதிய உடனேயே, கருத்து கருத்தாக இருக்கும் பொழுதே, அவரைத் தண்டிப்பது இயலாது. ஏனெனில், அவர் கருத்தை நாம் அறிந்து கொள்ள முடிவதே செயலில் இருந்துதான். செயலாக வெளிப்படுவதற்குமுன், மனதில் நிகழும் கருத்துப் பிறருக்குப் புலப்படுவதில்லை. செயலுக்கு ஆயத்தமான முன்னேற்பாடுகளை அவர் செய்கின்றுர். அந்த முன்னேற்பாடுகளிலிருந்தும் குற்றமான செயல் நிகழப்போகிறது என்று நாம் அறிந்துகொள்ள முடியாது. அஃதாவது, அவரது தீய கருத்து அவரது ஆயத்தத்திலிருந்து வெளிப்படுவதில்லை. இந்த உதாரணம் இதை விளக்கும்;

ஒருவர் தம் எதிரியைக் கத்தியால் குத்திக் கொலை செய்யக் கருதுகிறுர். பிறகு, எதிரியைக் குத்துவதற்கென்று ஒரு கத்தியை விலைக்கு வாங்குகிறுர். இது முன்னேற்பாடான செயல். கத்தியை அவர் வாங்கிய செயலை மட்டும் வைத்து, இன்னெருவரைக் கொலை செய்யத்தான் கத்தியை விலைக்கு வாங்கியிருக்கிறுர் என்று உறுதி செய்ய முடியாது. கத்தியால் கனியையும் அறுக்கலாம்; கழுத்தை யும் வெட்டலாம். ஆதலால், கத்தியை வாங்கிய செயல், கொலை செய்ய வேண்டும் என்ற அவரது தீய கருத்தைக் காட்டுவதாக இல்லை. பிறகு, அவர் தம் எதிரியின் வீட்டிற்குக் கத்தியோடு செல்கிறுர். வீட்டுவாசலில் கத்தியுடன் அவரைப் பிடித்துவிடுகிறுர் கள். இப்பொழுதும் அவரைக் கொலை செய்ய முயற்சி செய்தார் என்று கூறமுடியுமா? முடியாது. ஏனெனில், அவர் கொலைச்

செயலில் ஈடுபடாமல் இருப்பதற்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறது. ஒருவேளை அவர் எதிரியைக் குத்தாமலேயே, அங்கிருந்து திரும்பி விடலாம். தீய செயலைச் செய்ய வேண்டாம் என்று மனம் திருந்தி அதைச் செய்யாமலிருப்பதற்கு இன்னும் இடம் இருக்கிறது.

கத்தியைக் கையில் பிடித்து ஓங்கிக்கொண்டு எதிரியை நோக்கி ஓடிவருகிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். இப்பொழுது, அவர் தடுத்து நிறுத்தப்பட்டால், அவரது செய்கையைக் "கொலைக் குற்ற முயற்சி" என்று கூறமுடியும். கையில் ஓங்கிய கத்தியுடன் எதிரியை நோக்கி வருவதிலிருந்து, அவரது தீமையான கருத்து, கொலை செய்யவேண்டும் என்ற அவரது எண்ணம் நன்கு வெளிப்படுகிறது.

ஆதலால், ஓங்கிய கத்தியுடன் அவர் வரும்வரை, அவரின் செயல்கள் குற்றம் செய்வதற்கான முன்னேற்பாட்டு நிலையிலேயே (Preparation) தான் இருக்கின்றன.[1]

குற்றம், முன்னேற்பாட்டு நிலையில் நிற்கும்வரை, சட்டம் அதைத் தண்டிப்பதில்லை. ஏனெனில், முன்னேற்பாடுகளிலிருந்து அதைச் செய்பவரின் தீய கருத்தைத் திட்டமாக அறிய முடிவதில்லை.

இன்னுமோர் உதாரணம்:

ஒரு வேலையாள், தன் முதலாளியை நஞ்சிட்டுக் கொல்ல வேண்டும் என்று கருதுகிறான். மருந்துக் கடைக்குச் சென்று நஞ்சை வாங்கிக் கொண்டு, திரும்பி முதலாளியின் வீட்டிற்கு வருகிறான். இந்நிலையில், அவனைக் கொலை செய்ய முயன்றவன் என்று கூறமுடியாது. ஏனெனில், அவன் நஞ்சை வாங்கியது வீட்டிலுள்ள எலியைக் கொல்லுவதற்கு மிருக்கலாம்; மனிதரைக் கொல்லுவதற்கு மிருக்கலாம். இன்னொருவரை, அதை வைத்துக் கொல்லப்போகிறான் என்று உறுதியாக ஊகிப்பதற்குப் போதிய ஆதாரம் இல்லை. ஆதலால். நஞ்சை வாங்கி வைத்திருக்கும் செயல் இன்னும் முயற்சி நிலையை அடையவில்லை. அடுத்து முதலாளிக்குக் கொடுக்க இருக்கும் பாலில் அந்த நஞ்சைக் கலந்து பாலைத் தன்னிடமே வைத்திருக்கிறான். இப்பொழுதும் அவன் செயல், முயற்சிநிலை யடையவில்லை; ஆயத்த நிலையிலேயே இருக்கிறது. ஏனென்றில், ஒருவேளை அவன் மனம் மாறி, அந்தப் பாலை முதலாளிக்குக் கொடுக்காமல் விட்டுவிடலாம். அம்மாதிரி,

1. An attempt to commit a crime is an act done with intent to commit that crime, and forming part of series of acts which would constitute its actual commission, if it were not interrupted. —Sir James Stephen.

அவனுக்கு மனம் மாறுது என்று சொல்லுதற்கில்லை. ஆதலால், இந்த நிலையிலும்கூட அந்த வேலைக்காரனைக் கொலை முயற்சி செய்தவனுகச் சட்டம் கருதுவது இல்லை. இதுவரை நடந்த செயல்கள் அனைத்தையும், கொலைக்குற்றத்திற்கான முன்னேற்பாடுகளாகவே, ஆயத்தங்களாகவே சட்டம் கொள்கிறது. கொலை செய்யும் முயற்சியாக அச்செயல்களில் எதையும் சட்டம் கருதவில்லை.

இனி, நஞ்சு கலந்த பாலை எடுத்துக்கொண்டுபோய், முதலாளியின் முன் இருக்கும் மேசைமீது வைத்து விடுகிருன். இப்பொழுது, அவனது செயலிலிருந்து, அவனது தீய கருத்து ஐயந்திரிபற நன்கு தெரிகிறது. நஞ்சு கலந்த பாலை முதலாளியின் முன்வைத்தவுடன், வேலையாளின் நஞ்சு எண்ணமும் தெளிவாகிவிடுகிறது. இனி, அந்த வேலையாள், அவனது எண்ணத்தை நிறைவு செய்து கொள்வதற்கு வேறு எந்தச் செயலும் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆதலால், வேலையாள் அந்த நஞ்சு கலந்த பாலை முதலாளி முன்வைத்த செயலை 'கொலைமுயற்சி' என்று சட்டம் கருதுகிறது. முதலாளி அதைக் குடித்து இறந்துவிட்டால் வேலையாள் கொலைக்குற்றத்திற்கே பொறுப்பாகி விடுகிருன். நஞ்சு பாலில் இருப்பதைத் தெரிந்து, அதைக் குடிக்காமல், முதலாளி கொட்டிவிட்டாலோ, அல்லது அதைக் குடித்த பின்னும் பிழைத்துக்கொண்டாலோ, வேலையாள் கொலைக்கான முயற்சி செய்த குற்றத்திற்கு ஆளாகிருன்.

இப்படியாக, ஒரு குற்றமான செயலைச் செய்து முடிப்பதற்குமுன், பல செயல்களைச் செய்யவேண்டியிருக்கலாம். இதில், எந்தச் செயலை முன்னேற்பாட்டுச் செயல் என்றும், எதைக் குற்ற முயற்சிச் செயல் என்றும் தீர்மானிப்பது என்ற கேள்வி, குற்றவியலில் ஒரு நுட்பமான சிக்கலாகும். தீங்கு செய்வதைக் கருத்திற்கொண்டு செய்யப்படும், சங்கிலி போன்று தொடர்ந்து நிகழும் செயல்களில், எந்தச் செயல்வரை "முன்னேற்பாட்டு" நிலை இருக்கிறது, எந்தச் செயலிலிருந்து 'முயற்சி' நிலை தொடங்குகிறது என்பவற்றை உறுதி செய்வது கடினமானதுதான். அந்தந்தக் காரியங்களின் சூழ்நிலைகளைப் பொறுத்தே அதைத் தீர்மானிக்க வேண்டும்.

சட்டவல்லுநர்கள் பல வழிகளை இந்தச் சிக்கலுக்கு விடைகளாகச் சொல்லியிருக்கிருர்கள். ஆனல், சாதாரணமாக நாம் கையாள வேண்டிய வழி இதுவேயாகும். குற்றம் இழைக்கும் கருத்தோடு செய்யப்படும் பல செயல்களில், எந்தச் செயலிலிருந்து, தீமை செய்யவேண்டும் என்ற தீயகருத்து வெளியாகிறது என்று நாம் பார்க்க வேண்டும். எந்தச் செயல் அந்தத் தீயகருத்தை வெளிக்காட்டுகிறதோ, நன்கு தெளிவாகப் புலப்படுத்து

கிறதோ, அந்தச் செயலையே "குற்றமுயற்சி" (Criminal Attempt) என்று சொல்லவேண்டும்.[1]

நாம் முன்பே பார்த்தோம், தண்டனை அளிப்பதில், செய்யும் செயலைவிட எண்ணும் எண்ணமே, தீயகருத்தே, முக்கிய இடம் பெறுகிறது என்று. ஒருவரது தீய கருத்திற்காகத்தான் அவருக்குத் தண்டனை கிடைக்கிறது. கருத்து கருத்தளவிலேயே நின்றுவிடில், சட்டம் அதைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால், கருத்துச் செயலில் உருவெடுத்துவிட்டால், உடனே சட்டம் தண்டிக்க முற்படுகிறது. அந்தச் செயலினால் பிறருக்குத் தீங்கு விளைந்தாலும் விளையாவிட்டாலும், அது குற்றமான செயல்தான். பிறருக்கு அந்தச் செயலினால் தீங்கு விளைந்தால், அது முழுமையடைந்த குற்றமாகிறது. தீங்கு விளையாவிட்டால், அது "குற்றமுயற்சி"யாகிறது. செய்பவரின் நோக்கம் நிறைவேறாவிடினும், அச்செயலால் பிறருக்குத் தீங்கு நேராவிட்டாலும், தீயகருத்தைப் புலப்படுத்தும் செயலை "குற்றமுயற்சி" எனச் சட்டம் கொள்கிறது. அந்த முயற்சி செய்தவரையும் ஒறுக்கிறது.

திருடவேண்டும் என்ற தீய கருத்துடன் ஒருவர் இன்னொருவரின் பையினுள் கையை விடுகிறார். ஆனால் பையில் பணமில்லை. இப்பொழுது பையில் கையைவிட்டவர் திருட முயற்சி செய்த குற்றம் செய்தவரா இல்லையா? "பையில் தான் பணமில்லையே, எந்த வகையிலும் என்னால் திருடியிருக்க முடியாதே" என்று கூறி அவர் தப்பிக்க முடியாது. பையில் பணம் இருந்ததா இல்லையா என்பது முக்கியமன்று. சட்டத்தின் கேள்வி இதுதான். "பைக்குள் கையை விட்டதன் கருத்து என்ன? திருடவேண்டும் என்ற தீய கருத்துடன்தானே?" ஆதலால், பையில் பணம் இருக்கவில்லை என்றாலும்கூட, தீய எண்ணத்தோடு பையில் கை விடப்பட்டதால், திருடுவதற்கான அச்செய்கை "குற்ற முயற்சி" என்று கருதப்படுகிறது.

ஒரு செயல் 'குற்ற முயற்சி' ஆகிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு, உரைகல்லாக இருக்கும் விதி இதுதான். அஃதாவது, அச் செயல், செய்தவரின் தீய கருத்தை வெளிப்படுத்துகிறதா? என்பதுதான். தீய எண்ணத்தின் சின்னம், எந்தச் செயலிலே பொறிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தச் செயல் "குற்ற முயற்சி" ஆகிறது. குற்ற முயற்சியான செயலே அச் செயலைச் செய்தவரின் தீய கருத்துக்குச் சான்றாக இருக்கிறது. ஆகவே, இன்ன குற்றம் செய்யும் கருத்தோடுதான் இந்தச் செயல் செய்யப்படுகிறது என்று எந்தச் செயலில் நாம் தெளி

1. "A criminal attempt bears criminal intent upon its face. *Res ipsa loquitur.*"—Salmond.

வாகக் காண்கிறோமோ, அந்தச் செயலைக் "குற்ற முயற்சி" என்று கூறுகிறோம்.[1]

இவ்வாறு, ஒருசெயல் செய்பவரின் கருத்தையே அடிப்படையாகக்கொண்டு, அவர் செய்யும் செயலைக் குற்றமான செயலா இல்லையா என்று சட்டம் தீர்மானிக்கிறது. பிறருக்கு அச் செயலினால் கேடு விளையாவிட்டாலும், செய்தவரின் தீய கருத்தை வெளிப்படுத்தி அச் செயல் நிற்பதால், அந்தச் செயலைக் "குற்ற முயற்சி" என்ற குற்றமாகக் கொண்டு அதனைச் செய்தவனையும் சட்டம் தண்டிக்கிறது.

(ஏ) தவிர்க்க முடியாத செயல்கள் (Jus necessitatis)

"ஆபத்திற்குப் பாபம் இல்லை" என்பது பழமொழி. இது நடைமுறைப்பட்ட அறிவை அடிப்படையாய்க் கொண்டது.

நமது வாழ்க்கையில் சிக்கலான சூழ்நிலைகள் சில வேளைகளில் ஏற்படுவதுண்டு. அந்த வேளைகளில் நாம், ஒரு நன்மையைப் பெறுவதற்கு இன்னொரு தீமையைச் செய்யவேண்டிய கட்டாயம் நேருகிறது; அல்லது, நமது உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தான நிலைமையில், தீமையான காரியத்தைச் செய்வதைத் தவிர்க்க வழியில்லாமல் போகிறது. இந்த இக்கட்டான நிலைமையில், தீமை செய்யப்பட்டால், அதைக் குற்றமான செயலாகச் சட்டம் கருதுவதில்லை. இச் செயல்கள், "தவிர்க்க முடியாத செயல்கள்" (Jus necessitatis) என்று கூறப்படுகின்றன.

கருப்பவதியான பெண்ணின் பேறு காலவேளையில் அவளது உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படுகிறது. பிறக்க விருக்கும் குழந்தையின் உயிரைப் பொருட்படுத்தாமல், அதை அகற்றி எடுத்து விட்டால், தாய் உயிர் பிழைத்துவிடலாம் என்று மருத்துவர் காண்கிறார். எனவே, குழந்தை கொல்லப்பட்டு எடுக்கப்படுகிறது. இப்பொழுது, குழந்தையை மருத்துவர் கொன்றது தெரிந்தேதான். தாயைக் காப்பாற்றுவதற்காகக் குழந்தையைக் கொல்ல வேண்டிய இக்கட்டான தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டது. ஆதலால், குழந்தையைக் கொன்ற செயல் கொலைக்குற்றமாகக் கொள்ளப்படுவது இல்லை.

மேலே சொன்ன உதாரணத்தில், குழந்தையை மருத்துவர் கொன்றது கருதிச் செய்த செயல்தான்; இருப்பினும், அது விரும்பிச்செய்த செயலன்று, வேண்டுமென்று செய்த செயலுமன்று; தீய எண்ணத்துடன் செய்த

1. No man can be safely punished for his guilty purposes, save so far as they have manifested themselves in overt acts which themselves proclaim his guilt.—Salmond.

செயலுமன்று. அதைச் செய்யவேண்டிய தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டதால், தாயின் உயிரைக் காப்பாற்றக் குழந்தையைக் கொன்றுதான் ஆகவேண்டும் என்ற அவசியம் நேர்ந்ததால், செய்யப்பட்டதே குழந்தையைக் கொன்ற செயல். எனவே, அது கருதிய செயலானாலும், தீய எண்ணம் சிறிதும் இல்லாத செயல்; தவிர்க்க முடியாத செயல். ஆதலால், அது குற்றம் ஆவதில்லை.

உயிருக்குப் போராடும் நிலையில் இருவர் கடலில் நீந்திக் கொண்டிருக்கிறார்கள். களைத்துப்போய் மூழ்கும் தறுவாயில், அவர்கள், ஒரு மரப்பலகை நீரில் மிதப்பதைப் பார்க்கிறார்கள். அதைப் பிடித்துக்கொண்டு இருவரும் தப்ப முயலுகின்றனர். ஆனால், அந்த மரத்துண்டு ஒருவரது பாரத்தைமட்டுமே தாங்கக் கூடிய நிலையில் இருக்கிறது. இருவரும் அதைப்பற்றினால் இரு வருமே மூழ்க வேண்டியதுதான். இந்த ஆபத்தான நிலையில், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், இருவரும் அந்த மரத்துண்டைப் பிடித்துக்கொள்ளுகின்றனர். ஆனால், பலம் அதிகமுள்ளவர் மற்றவரைப் பலகையிலிருந்து தள்ளிவிடுகிறார். இப்படித் தள்ளுவதால் அவர் மூழ்கி இறந்து விடலாம் என்று தள்ளுபவருக்குத் தெரியாமல் இல்லை. முடிவில், தள்ளப்பட்டவர் மூழ்கி மாண்டு விடுகிறார். மற்றவர் மரத் துண்டின் உதவியால் மூழ்காமல் பிழைத்துக் கொள்ளுகிறார். இப்பொழுது, மரப்பலகையிலிருந்து மூழ்கியவரைத் தள்ளிவிட்டுத், தான் மட்டும் பிழைத்திருப்பவர்மீது கொலைக் குற்றம் சாட்ட முடியுமா? முடியாது. அவரது உயிரைப் பாதுகாக்கச் செய்யப் பட்ட செயலில் மற்றவரின் மரணம் நேர்ந்து விடுகிறது. ஆதலால், அவரைக் குற்றமற்றவர் எனச் சட்டம் கருதுகிறது. இவ்வாறு, இக்கட்டான நிலைமைகளில் நிகழும் தவிர்க்க முடியாத செயல்களினால் தீங்கு நேர்ந்தாலும் அச் செயல்களைச் சட்டம் குற்றங்களாகக் கருதுவதில்லை.[1]

சாதாரணமாகச் சட்டம் விதிக்கும் தண்டனைக்கு அஞ்சியே, மனிதன் தீங்கு செய்வதிலிருந்து விலகி நிற்கிறான் என்று கொள்ளலாம். ஆனால், ஆபத்தான நிலைகளிலும், தன் உயிருக்கே போராடிக் கொண்டிருக்கும் வேளைகளிலும், தண்டனை பற்றிய அச்சம் அவன் மனதில் ஏற்படுவதற்கே இடமில்லாமற்போய் விடுகிறது. சட்டத்தின் அச்சுறுத்தல் சக்தியற்று, வலியிழந்து அப்போது இருக்கிறது.

1. The jus necessitatis is the right of a man to do that from which he cannot be dissuaded by any terror of legal punishment.—Salmond.

இதே மனநிலையில்தான், எதிர்பாராத விதமாக, திடீர் என்று கோபம் கொண்டு, கொடுமையான செயல்களைச் சிலர் செய்து விடுகின்றனர். மட்டுக்கடங்காத உணர்ச்சி வசப்பட்டு, தன்வய மிழந்து, சிலர் கொலை போன்ற கொடிய செயல்களைக் கூடப் புரிந்து விடுகின்றனர். வறுமையின் கொடுமையால் தன் மகவைக் கொல்லும் தாயும், மனைவியின் ஒழுங்கீனத்தைத் திடீரெனக் கண்டு கோபத்தால் தன்வயமிழந்து, மரணத்தை விளைவிக்கும் கணவனும், இந்த வகையைச் சேர்ந்தவர்கள். இம்மாதிரி, கோபத்தால் தூண்டப்பட்டு, தன் நினைவிழந்து, அல்லது வேறு உணர்ச்சி வயப்பட்டு, பெருங் குற்றங்கள் செய்தவர்கள்மீதும் சட்டம் கருணை காட்டுவது உண்டு. சட்டத்தின் தண்டனைக்கு அஞ்சித், தீமையான செயல்கள் புரிவது தகாது என்று உறுதியுடன் இருப்பவர்கள்கூட, தங்கள் உணர்ச்சி வயப்பட்டு இயங்கும் பொழுது, தீமையான செயல்களைத் திடீரென்று செய்து விடுகின்றனர். "தான் செய்யும் செயல் என்ன, அதன் விளைவு என்ன, அதனால் தனக்கு வரும் துன்பம் என்ன?" என்பனபற்றிச் சிறிதும் சிந்திக்காமல் அவர்கள் குற்றங்களைச் செய்து விடுகின்றனர். அந்நிலையில், சட்டத்தின் பயமுறுத்தல் சக்தி இழந்து நிற்கிறது. இயல்பாகவே, நல்ல பண்புடையவர்கள்கூட, ஆத்திரத்திலே அறிவிழந்து, அடாத செயல்களைப் புரிந்துவிட்டு, அதற்குப்பின் வேதனைப் படுகின்றனர். இவர்களைப் போன்றவர்களிடம் சட்டம் இரக்கம் காட்டுவது இயல்பேயாகும். ஆயினும், இவர்களைக் குற்றமற்றவர்கள் என்று சட்டம் கொள்ளுவதில்லை. அவர்களுக்கு விதிக்கும் தண்டனையைக் குறைத்துச் சட்டம் இவர்கள்மீது கருணை காட்டுகிறது.

(ஏ) கவனமின்மை (Negligence)

ஒரு தீங்கை வேண்டுமென்றே செய்வது ஒன்று, கவனக் குறைவினால் செய்வது மற்றொன்று. இரண்டையும் குற்றங்களாகவே சட்டம் கொள்கிறது.

கவனக் குறைவினால் நாம் எப்பொழுது தீமை செய்கிறோம்? ஒருவர் கவனக் குறைவாக இருந்தார் என்பதற்காக அவரைத் தண்டிப்பது நியாயமா? கவனக்குறைவு எவ்வாறு தீர்மானிக்கப் படுகிறது? இது போன்ற கேள்விகளுக்கு நாம் விடைகாண வேண்டியிருக்கிறது.

சாதாரணமாகத், தீமைகள் தீய எண்ணத்தினாலேயே செய்யப் படுகின்றன. தீமையான எண்ணங்கள் மனதில், இல்லாமலே, தீய கருத்து ஏதுமின்றியே, மனிதன் பிறருக்குக் கேடு விளைவிப்பது உண்டு; அஃதாவது, ஒருவரின் கவனமற்ற செயலால் மற்றொருவருக்குக் கேடு விளைகிறது.

மக்கள், நெருக்கமாக நடமாடிக் கொண்டிருக்கும் வீதியில், அளவுக்கு மீறின வேகத்தில் மோட்டாரை ஓட்டிச் சென்றதால், அது வீதியில் நடந்து சென்ற ஒருவர்மீது மோதி, அவருக்குக் காயத்தையோ அல்லது மரணத்தையோ விளைவிக்கிறது. இப்பொழுது, அந்த மோட்டாரை ஓட்டிச்சென்றவருக்குக் காயமடைந்தவர்மீது பகையோ, தீய எண்ணமோ இருந்ததில்லை. இருப்பினும், மோட்டாரை ஓட்டியவரின் கவனமின்மையால் தான் காயமோ, மரணமோ நேர்ந்தது. தீமையான எண்ணம் ஓட்டியவருக்கு இல்லை என்பதற்காக அவரைத் தண்டிக்காமல் இருப்பதா என்பது கேள்வி.

போதிய கவனத்துடன் மோட்டாரை ஓட்டிச் சென்றிருந்தால் இவ்வாறு மற்றொருவருக்குக் காயமோ, மரணமோ, விளைந்திருக்குமா என்ற கேள்விக்கு நாம் விடை காணவேண்டும். போதிய கவனம் என்றால் என்ன? மக்கள் நெருக்கமாக நடமாடும் வீதியில், மோட்டாரை மெதுவாகக் குறைந்த வேகத்தில் செலுத்தினால்தான் விபத்துக்களைத் தடுக்க முடியும். இது சாதாரண அறிவு படைத்த எவருக்கும் தெரியும். மோட்டாரைச் செலுத்துவதால் யாருக்கும் தீங்கு நேரிட்டுவிடக்கூடாது என்று எண்ணி ஒருவர் கவனமாக இருந்தார் என்றால், மோட்டாரை ஒரு குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் அவர் ஓட்டமாட்டார். அவ்வாறு அவர் மெதுவாக ஓட்டுவதே அவர் கவனமாக இருப்பதின் அறிகுறியாகும். ஆனால், அந்தக் குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் ஒருவர் மோட்டாரைச் செலுத்தும்பொழுது, பிறருக்கு விளையும் ஆபத்துக்களைத் தவிர்க்கவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இல்லை என்பது தெளிவாகிறது. அஃதாவது, தமது செயலினால் பிறருக்கு விளையக்கூடிய தீங்கைப்பற்றி அவர் அக்கறை கொள்ளவில்லை. "பிறருக்குத் தீங்கு விளைவதில் அக்கறை இல்லை" என்ற எண்ணத்துடனேயே அவர் மோட்டாரை அளவுக்கு அதிகமான வேகத்தில் ஓட்டினார் என்பது தெளிவாகும். இவ்வாறு ஓட்டுவதின் மூலம் குறிப்பிட்ட எவருக்கும் தீங்கு செய்யவேண்டுமென்று அவர் கருதவில்லை. ஆனால், பிறருக்குத் தீங்கு நேர்ந்து விடக்கூடாது என்பது பற்றி அவருக்கு அக்கறையில்லை. இவ்வாறு, தமது செயலினால் ஏற்படும் விளைவுபற்றி அக்கறை ஏதுமின்றி, அசட்டையாக, ஒருவர் ஒரு செயலைச் செய்யும் பொழுது; அவர் அதைக் கவனக்குறைவாகச் செய்கிறார் என்று கூறுகிறோம்.

" ஒருவர், தமது செயல் பற்றியும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும், அக்கறை ஏதும் கொள்ளாமல், அசட்டையுடன் இருக்கும் மனநிலையே "கவனமின்மை" என்று கூறப்படுகிறது.[1]

1. Negligence, therefore, essentially consists in the mental attitude of undue indifference with respect to one's conduct and its consequences.—Salmond

நம் செயலால் பிறருக்குத் தீங்கு விளையவேண்டும் என்று கருதி, ஒரு செயலைச் செய்தால், அஃது உறுதியாகக் குற்றமாகி விடுகின்றது. பிறருக்குக் கேடு விளைவிக்க வேண்டும் என்ற தீய எண்ணம் மனத்தில் இல்லாமல் மட்டும் இருந்தால் போதாது. நம் செயலால் பிறருக்குத் தீங்கு எவ்விதத்திலும் விளைதல் கூடாது என்ற ஆர்வமும் நமக்கு இருக்க வேண்டும். தீமை நேரக் கூடாது என்ற ஆர்வம் நமக்கு இல்லாத பொழுது, அந்த ஆர்வமற்ற தன்மையை, தீங்கை விலக்குவதில் கவனமின்மையைச் சட்டம் குற்றமாகவே கருதுகிறது.[1] இவ்வாறு, வேண்டுமென்றே தீமை செய்பவரும் குற்றவாளிதான்; தீமையை விலக்கவேண்டுமென்ற ஆர்வமின்றி ஒரு செயலைச் செய்பவரும் குற்றவாளிதான். தீமை செய்யக் கூடாது என்று சட்டம் விதிப்பதால், தீமை வேண்டுமென்றும் செய்யப்படக்கூடாது, கவனமின்றியும் செய்யப்படக் கூடாது.

ஒருவர் கவனக் குறைவாக நடந்துகொள்வது மட்டும் குற்றமாகிவிடுவதில்லை. தமது பொருளை அசட்டையாக ஒருவர் தவற விட்டாரெனில், அவரைச் சட்டம் தண்டிப்பதில்லை. ஒரு காரியத்தைச் செய்கையில் கவனத்துடன் செய்ய வேண்டும் என்ற கடமை அவருக்கு இருந்தும், அச்செயலைக் கவனக்குறைவாக அவர் செய்யும்போது குற்றம் செய்தவராகின்றார்.[2] ஒரு செயலை ஒருவர் வேண்டுமென்று செய்வதைச் சட்டம் குற்றமெனக் கொண்டால், அதே செயலை அவர் கவனக்குறைவினால் செய்யும் பொழுதும் சட்டம் குற்றமாகக் கொள்ளுகிறது.

கவனக் குறைவு எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?

மாட்டு வண்டியைத் தெருவில் ஓட்டிச் செல்வதைவிட மோட்டாரை ஓட்டுவதில் அதிகக் கவனம் வேண்டும். கத்தியை நாம் உபயோகப்படுத்தும்போது வேண்டிய கவனத்தைவிட, கைத்துப்பாக்கியைக் கையாளும் பொழுது அதிகக் கவனம் வேண்டும். இவ்வாறு, உபயோகிக்கும் பொருள், செய்யப்படும் செயல், இதர சூழ்நிலைகள், இவைகளுக்கேற்பத் தேவையான கவனமும் மாறுபடுகின்றது. மாறிக்கொண்டிருக்கும் நம் வாழ்க்கை முறையில் ஆபத்து உள்ள

1 "Negligent wrong doing is that which is not intentional, but results from culpable inadvertence or indifference. The mental attitude of the wrong doer consists not in any desire to do harm, but in the absence of sufficient desire to avoid it."
—Merkal.

2. Negligence consists in the omission to take such care as under the circumstances it is the *legal duty* of a person to take.
—Clark and Lindsell.

காரியங்கள் செய்வது அவசியமாகிறது. அவைகளை அறவே ஒழிக்க முடிவதில்லை. மோட்டாரில் செல்லுவதில் ஆபத்து உண்டு, ரயிலில் செல்லுவதிலும், விமானத்தில் பறப்பதிலும் ஆபத்து இருக்கிறது. இதனால் இவைகளை ஒழித்து விடமுடியாது. மோட்டார் ஓடிக்கொண்டிருக்கும்பொழுதே, எதிர்பாராத விதமாக சக்கரம் வெடித்து, கார் கதி மாறிச் சென்று இன்னொருவர்மீது மோதி அவரைக் கொன்றுவிடலாம். இம்மாதிரிச் சக்கரம் வெடித்ததற்குப் பொதுவாக யாரையும் குற்றம் சொல்வதற்கில்லை. ஏனெனில், யாருடைய கவனக்குறைவின் பயனாகவும் அது நிகழவில்லை. ஆனால், மோட்டாரின் திசை திருப்பும் கருவி சரியாக இயங்காமலிருக்கும் பொழுதோ, அல்லது காரை நிறுத்தும் கருவி பழுது பட்டிருப்பது தெரிந்தும் அதைச் செப்பனிடாமலோ, ஒருவர் காரை ஓட்டிச் சென்று இன்னொருவர்மீது மோதி மரணம் விளைவித்தால், அஃது ஓட்டியவரின் கவனக்குறைவினால் நேர்ந்த குற்றமாகும். மோட்டாரை ஓட்டிச் செல்வது ஆபத்தானது என்றும், நிறுத்தும் கருவி சரியாக இயங்காவிடில் அதை ஓட்டுவது கூடாது என்றும், எந்தப் பகுத்தறிவு உள்ள மனிதனும் அறிவான். இதை உணராமல், இதில் கவனக்குறைவாக, அசட்டையாக நடந்தால், அது "கவனமின்மை" என்ற குற்றமாகிறது. ஆகவே, கவனத்துடன் நடப்பது என்றால், சாதாரண பகுத்தறிவுள்ள மனிதன் எந்த முறையில் ஒரு செயலைச் செய்வானோ, அவ்வாறு செய்வதும், அவன் எவ்வாறு செய்வதில்லையோ, அவ்வாறு செய்யாதிருப்பதுமேயாகும்.[1] ஒருவனுடைய கவனமின்மையைத் தீர்மானிப்பதற்கு இதுவே உரைகல்லாகும். இந்த முறையில் செயலின் தன்மைக்கும், மற்றச் சூழ்நிலைக்கும் ஏற்ப அச்செயல் போதிய கவனத்துடன் செய்யப்பட்டதா என்பதைச் சட்டம் ஆராய்ந்து முடிவு செய்கிறது.

இந்த முறையில், கவனம் இன்றிச் செயல்கள் புரிவோர்கள், "கவனமின்மை" என்ற குற்றத்திற்கு ஆளாகின்றனர்.

அறுவை மருத்துவம் செய்யும் மருத்துவரின் திறமைக்குறைவினால் நோயாளிக்கு மரணம் நேர்ந்தது என்றால், அந்த மரணத்திற்கு மருத்துவரையே சட்டம் பொறுப்பாக்குகிறது. நோய்க்குத் தகுந்த மருந்தைக் கொடுக்காமல், திறமையின்மையால் நோயை அதிகப்படுத்தும் மருந்தைக் கொடுத்து, அதனால் நோயாளிக்குத் தீங்கை விளைவித்த மருத்துவர் அவரது திறமை இன்மைக்குப் பொறுப்

1. Negligence is the omitting to do something that a reasonable man would do, or the doing something which a reasonable man would not do.

—Blyth Vs. Birmingham water works Co.,

பாகிருர். ஒவ்வொருவரும் தாங்கள் ஏற்றுக்கொண்ட தொழிலுக்கு வேண்டிய திறமையுடன் இயங்கவேண்டியதே முறையாகும். சட்டமும், அவரவர்களின் தொழிலுக்கேற்ற திறமை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டுமென்று கருதுகிறது. அந்தத் திறமையிலே குறைவிருந்தால், அதுவும் கவனமின்மையே ஆகும். அத்தகைய திறமை இல்லாதபோது, அவர்கள் கவனத்துடன் நடக்கவில்லை எனக் கருதி, விளைவுகளுக்குச் சட்டம் அவர்களைப் பொறுப்பாக்குகிறது. "நான் முழுக் கவனத்துடன்தானே மருத்துவம் செய்தேன், எனது திறமை அவ்வளவுதான்" என்று கூறி அவர்கள் தப்பிக்க முடியாது. போதிய திறமையின்றித் தொழிலை மேற்கொண்டது "கவனமின்மையாகிய" குற்றமாகிறது. அவருடைய கவனமின்மை இன்று நோயாளிக்கு மருத்துவம் செய்யும் பொழுது நேர்ந்ததாகச் சட்டம் கருதுவதில்லை; ஏனெனில், அவர் தமக்குள்ள திறமை முழுவதும் பயன் படுத்திக், கவனத்துடன்தான், மருத்துவம் செய்திருக்கிருர். ஆதலால், அவருடைய கவனமின்மை அவருடைய மருத்துவத்தால் கேடு அதிகமாக அடைந்த நோயாளிக்கு இன்று செய்த மருத்துவத்தில் அடங்குவதன்று. பின், கவனமின்மை எப்பொழுது நேர்ந்தது? தாம் ஏற்றுக்கொண்ட தொழிலுக்கேற்ற திறமை தம்மிடம் இல்லாதிருந்ததும், இருப்பதாகக் கருதி, அவர் மருத்துவத் தொழிலை ஆரம்பித்த அந்த நாளிலேயே ஏற்பட்டது, இந்தக் "கவனமின்மை" என்ற குற்றம். அஃதாவது அவர் தமது மருத்துவத் திறமையில் நம்பிக்கை வைத்தது கவனமின்மையின் பயனுக என்று சட்டம் கருதுகிறது! ஒவ்வொருவரும் திறமை வாய்ந்த மருத்துவராக இருக்கவேண்டுமென்று சட்டம் கட்டாயப்படுத்தவில்லை. ஆனுல், போதிய திறமையின்றி ஒருவர் மருத்துவராகத் தொழில் நடத்துவதைச் சட்டம் ஏற்பதில்லை. இந்த விதி, வழக்கறிஞர்கள், பொறியமைப்பாளர்கள் போன்ற தொழில் வல்லுநர்கள் அனைவருக்கும் பொருந்துவதாகும்.[1]

ஒரு நகரின் வீதியைப் பழுது பார்ப்பதற்காக, அதன் குறுக்கே ஒரு பள்ளத்தைத் தோண்டி நகர மன்ற ஊழியர்கள் வைத்திருக்கிருர்கள். இரவு நேரத்தில் அந்த வீதியில் வண்டிகள், மக்கள் போக்குவரத்து உண்டு எனில், அந்தப் பள்ளம் யாவருக்கும் தெரியும்படியாக, சிவப்பு விளக்கோ, வேறு அடையாளமோ அங்கு வைக்கப்படவேண்டும் அப்பொழுதுதான் தெருவைப் பயன்படுத்துபவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக

1. No man is bound in law to be a good surgeon or capable attorney, but all men are bound not to act as surgeons or attorneys until and unless they are good and capable as such.
—Salmond.

இருக்கும். இது பகுத்தறிவை ஒட்டிய செயல். நகர மன்ற வேலையாட்கள் அவ்வாறு எச்சரிக்கை ஒன்றும் ஏற்பாடு செய்யாத காரணத்தால், ஒரு வண்டியோ அல்லது நடந்து செல்பவரோ அந்தப் பள்ளத்தில் விழுந்தால், அதனால் விளையும் கேடுகளுக்கு நகர மன்றமே பொறுப்பாகிறது. பள்ளம் இருக்கிறது என்று எச்சரிக்கையாக அடையாளம் வைக்காத செயலைக், கவனமின்மை யாகச் சட்டம் கருதுகிறது,

இவ்வாறு, ஒருவரது கவனமின்மையின் காரணமாக, பிறருக்குத் தீங்கு நேர்ந்தால், கவனக் குறைவாக இருந்தவர் அந்தத் தீங்கிற்குப் பொறுப்பாகின்றார். கவனக் குறைவுடன் ஒரு செயலைச் செய்வது, செய்பவரின் மனநிலையிலுள்ள குறைபாடேயாகும். அந்த மனநிலையிலிருந்து அவரைத் திருத்தும் பொருட்டுச் சில வேளைகளில் அவர் தமது செயலால் பிறருக்கு நேர்ந்த கேட்டிற்கு நட்ட ஈடு கொடுப்பதோடு மட்டுமின்றிச் சிறைத்தண்டனையும் பெறுகிறார்.

இவ்வாறு, தீய எண்ணத்துடன் பிறருக்குத் தீங்கு செய்வது கூடாது என்று விதிப்பது போன்றே, கவனமின்மையின் காரணமாகவோ, அசட்டையின் விளைவாகவோ, தீங்கு விளைவிப்பது கூடாதென்றும் சட்டம் விதிக்கின்றது.

(ஐ) சட்டஞானமின்மை (Mistake of Law)

குற்றமான செயலைச் செய்த ஒருவரை, சட்டப்படி அச்செயல் குற்றமென்று தெரியாமல் செய்துவிட்டார் என்பதற்காகச் சட்டம் மன்னிப்பது இல்லை.

பல தீயசெயல்கள் சட்டப்படி குற்றங்கள் ஆகின்றன. சட்டம் இவ்வாறு விதித்திருப்பது தெரியாது என்ற காரணம் காட்டித் தீமை செய்தவர்கள் பொறுப்பிலிருந்து தப்புவது முடியாது,

"நான் செய்த செயல் சட்டப்படி குற்றமானது என எனக்குத் தெரியாது; ஆதலால் இதைச் செய்துவிட்டேன்; சட்டம் எனக்குத் தெரியாதாகையால் நான் குற்றவாளி அல்லன்", என்று குற்றம் செய்த ஒருவர் சொல்லுவதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதில்லை. அவ்வாறு ஏற்றுக்கொண்டால், நீதிவழங்குவது இயலாததாகி விடும். உண்மையிலேயே சட்டம் தெரியாமல் பலர் இருக்கலாம், இருக்கிறார்கள். ஆனால், அந்த அறியாமையை, செய்த குற்றத்திற்கு விளக்கமாகச் சட்டம் ஏற்றுக்கொண்டால், குற்றம் புரிந்தவர்களில் பலர் இதையே கூறித் தப்பிக்க முயலுவார்கள். இவ்வாறு கூறுபவர்களுக்கு உண்மையிலேயே சட்டம் தெரியுமா இல்லையா என்பதை அறிந்து முடிவு செய்வது மிகவும் கடினம். ஆதலால், "சட்டம் தெரியாது" என்று கூறுவதை நீதிமன்றங்கள் ஏற்றுக்

கொள்வதில்லை. "எல்லோருக்கும் சட்டம் தெரியும்" என்ற அடிப்படையிலேயேதான் சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

சட்டத்தை அறிந்து கொள்வது எல்லோருடைய கடமையுமாகும். ஆதலால், "சட்டம் தெரியாது என்பது மன்னிப்பு ஆகாது",[1] என்பது நீதி வழங்கும் முறையிலுள்ள ஆதாரக் கொள்கையாகும்.

ஒரு வகையில் நோக்கினால், அறநெறியை அடிப்படையாகக் கொண்டதே சட்டம். நியாய அநியாய உணர்வு உள்ளவர்கள், நியாயத்தையே ஒட்டி நிற்கும் சட்டத்தைக் கூடியவரை அறிவார்கள். தீங்கான ஒரு செயலைச் செய்யும்போது, ஒருவர் சட்டப்புறம்பான காரியத்தைச் செய்கிறோம் என்று அறியாவிட்டாலும், நியாயப்புறம்பான செயலைச் செய்கிறோம் என்பதை அவர் உணர்ந்தே இருக்கிறார். எனவே, ஒருவர் தீமையான காரியத்தைச் செய்தால், அது சட்டப்படி குற்றம் என்று அவருக்குத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும், அவரைத் தண்டிப்பது நியாயமேயாகும்.

ஆகவே, சட்டம் கொலு வீற்றிருந்து ஆட்சிபுரியும் நீதி மன்றத்திலே, சட்டத்தை அறியவில்லை என்று சொல்லுவது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

(ஒ) தவறுதலால் விளையும் தீமைகள் (Mistake of Fact)

ஒன்றை நினைத்து இன்னொன்று செய்யப்பட்டால் அது தவறுதலாகச் செய்யப்பட்டது என்று கூறுகிறோம். பழுதையைப் பாம்பு என்று கருதல் போன்ற செயல் இது.

நள்ளிரவில், இருட்டில், என் வீட்டினுள் சந்தடியின்றிச் சந்தேகம் தோன்றும் முறையில் நுழைந்த ஓர் உருவத்தைத் திருடன் என நினைத்துச் சுட்டுவிட்டேன். இரவில், வீட்டினுள் நுழையும் திருடனைக் கொல்வது சட்டப்படி குற்றமில்லை. ஆனால், அந்த உருவம் என் வேலையாள்தான்! சுட்டதின் பயனாய் வேலையாள் இறந்துவிட்டான் என்றாலும், என்மீது கொலைக்குற்றம் சாட்டப்படுவது இல்லை. ஏனெனில், இது நியாயமான தவறுதலின் காரணமாக நிகழ்ந்த செயல்.

ஆனால், உரிமை வழக்குகளில் தவறுதலை விளக்கமாக ஏற்றுக் கொள்வதில்லை. பிறருடைய உடல், உடைமை, புகழ் முதலியவற்றிற்குத் தீங்கிழைத்தால், அதற்கான ஈடுசெய்யும் பொறுப்பைத்

1. **Ignorantia juris neminem excusat.**

தீங்கு விளைவித்தவர், அதைத் தவறுதலாகச் செய்தாலும், ஏற்றே ஆக வேண்டும்.

குற்ற வழக்குகளில் கூட, செய்யப்பட்ட செயல் குற்றமற்ற தாயும், வினைத் தூய்மை உடையதாயும் இருந்தால்தான் சூழ் நிலையைப் பொறுத்த தவறுதல்கள் ஏற்றுக்கொள்ளப்படும். வயது வராத பெண்ணை, அஃதாவது, பதினாறு வயதிற்கு உட்பட்ட பெண்ணைக் கடத்திச் செல்வது குற்றமாகிறது. குற்றம் செய்தவர் "நான் தவறுதலாகப் பெண்ணின் வயது பதினெட்டு என நம்பிக் கடத்திச் சென்றேன்," என்று கூறினால் அது நியாயமான தவறுதல் ஆகாது. ஏனெனில், கடத்திச் சென்ற செயலே தீங்கான, வினைத்தூய்மை இல்லாத செயல். தீமையான காரியத் தைச் செய்கையில், சூழ்நிலைகள் குறித்துத் தவறுதல்கள் நேர்ந்த தின் விளைவாக அது செய்யப்பட்டது என்ற விளக்கம் பலனற்ற தாகும்.

(ஓ) எதிர்பாராத செயல் (Accident)

நாம் செய்யும் செயலின் பயனாய், எதிர்பாராத விளைவு தோன் றினால் அதை "எதிர் பாராத செயல்" (Accident) என்கிறோம்.

மனிதனுடைய கருத்திற்கும் கவனத்திற்கும் அப்பாற்பட்ட விளைவுகளுக்கு யாரையும் பொறுப்பாக்குவது பொருந்தாது என்று சட்டம் விதிக்கிறது.

மரத்தை வெட்டிக்கொண்டிருப்பவரது கோடரியின் இரும்பு முனை கைப்பிடியிலிருந்து பிரிந்து, இன்னொருவர் மீது விழுந்து காயத்தையோ, மரணத்தையோ விளைவித்தது எனில், இது "எதிர்பாராத செயல்". மரம் வெட்டுபவரின் கவனக்குறைவினால் இது நேரவில்லை. ஆதலால், அவரைச் சட்டம் தண்டிப்பது இல்லை.

எதிர்பாராத விளைவு, நமது கவனமின்மையின் காரண மாகவோ, அல்லது, சட்டப்புறம்பான செயலின் பயனாகவோ தோன்றுவது கூடாது.

நான் என் எதிரியை நோக்கிச் சுட்டேன். அது குறி தவறி அருகில் நின்றவர்மீது பட்டு, அவருக்கு மரணத்தை விளைவித்து விட்டது. அருகில் நின்றவரின் மரணம் நான் எதிர்பாராத செயல்தான். இருப்பினும், அது குற்றமாகிறது. எதிரியைச் சுட்ட செயலே குற்றமானதால், அச்செயலிலிருந்து விளைந்த எல்லாவற்றிற்கும் நானே பொறுப்பாகிறேன். ஆதலால், கொலைக் குற்றத்திற்கு நான் பொறுப்பாளியாகிறேன்.

தீய கருத்து ஏதுமின்றி, குற்றமற்ற ஒரு செயலை, குற்றமற்ற முறையில், கவனத்துடன், நாம் செய்யும்பொழுது எதிர்பாராத விதமாகத் தீங்கு நேர்ந்து

விடில், அது "எதிர்பாராத செயல்" (Accident) ஆகிறது.[1] குற்ற வழக்குகளிலும், உரிமை வழக்குகளிலும் எதிர்பாராத செயலினுல் விளைந்த தீமைகளுக்கு அதைச் செய்தவர் பொறுப்பாக்கப் படுவதில்லை.

இந்தக் கொள்கைக்கு முக்கிய விதி விலக்கு உண்டு. சில வேளைகளில், எதிர்பாராத விளைவுகள் நேரும் பொழுது, அந்த விளைவுகள் நேருவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியவர்கள் பொறுப்பாக்கப்படுகின்றனர். புலி, சிங்கம் போன்ற வன விலங்குகளை ஒருவர் தமது தோட்டத்தில் வளர்க்கின்ருர் என வைத்துக் கொள்வோம். அது கூண்டை விட்டுத் தப்பித்துப்போய்ப் பிறருக்குத் தீங்கு விளைவித்தது என்ருல், அதற்குப் பொறுப்பு அந்த விலங்கை வளர்த்தவரையே சாரும். ஒருவர் தமது தோட்டத்தில் பெரிய நீர்த்தேக்கத்தை வைத்திருந்து, அந்தத் தேக்கம் தற்செயலாக உடைந்து, தண்ணீர் பெருகி, அண்டை வீட்டுக்காரருக்கு நட்டத்தை ஏற்படுத்தி விடில், அதற்கான பொறுப்பு நீர்த்தேக்கத்தை வைத்திருந்தவரையே சேருகிறது. வனவிலங்குகளை வளர்ப்பது, நீரைப் பெரிய அளவில் தேக்கி வைப்பது போன்ற செயல்கள் இயற்கையாகவே ஆபத்து நிறைந்தவை. ஆகையால், அதனுல் ஏற்படும் எதிர்பாராத விளைவுகளுக்கும் அவரே பொறுப்பாளியாகிருர். தாம் வளர்க்கும் புலி, கூண்டிலிருந்து தப்பித், தீங்கு விளைவிக்கலாம் என்பது எதிர் பார்க்கப்பட வேண்டியதாகும். இருந்தும், அந்த ஆபத்து நிறைந்த செயலை, அஃதாவது புலியை வளர்ப்பதை, ஒருவர் செய்தால், அதனுல் நேரும் விளைவுகளுக்கு அவரே பொறுப்பாகிருர். அவருக்குத் தீமையான எண்ணம் இருப்பது பற்றியோ, அவர் கவனக்குறைவாக இருந்தாரா என்பது பற்றியோ சட்டம் கவனிப்பதில்லை.

ஆபத்துக்கள் நிறைந்த செயல்களைச் செய்தால், அதன் விளைவுகளுக்கான ஒருவருடைய பொறுப்பை "முழுப் பொறுப்பு" அல்லது "தவிர்க்க முடியாத பொறுப்பு" (Absolute Liability) என்று கூறுகிறேம். ஏனெனில், இது போன்ற ஆபத்து நிறைந்த செயல்களை ஒருவர் செய்ய ஆரம்பிக்கும் பொழுதே, அதனுல் ஏற்படக்கூடிய எல்லா விளைவுகளுக்குமான பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்வதாகவே சட்டம் கருதுகிறது.

1. Nothing is an offence which is done by accident or misfortune, and without any criminal intention or knowledge in the doing of a lawful act in a lawful manner by lawful means and with proper care and caution.

—Section 80 of the Indian Penal Code.

சட்டம், இவ்வாறு விதிக்காவிடில், பிறருக்குத் தீங்கு விளை விக்கும் ஆபத்தான செயல்களைப் பொறுப்பற்ற முறையில் பலர் செய்ய ஏதுவாகும்.

(ஔ) பகரப் பொறுப்பு (Vicarious Responsibility)

சாதாரணமாக, ஒருவர் செய்யும் செயலுக்கு, அவரேதான் பொறுப்பாகிறார்; இன்னொருவர் ஆவதில்லை,

உரிமை வழக்குகளில் இதற்கு விதிவிலக்கு உண்டு.

வேலையாள் தமது வேலையைச் செய்யும்போது, பிறருக்கு அதனால் தீங்கு ஏற்பட்டால், அந்த நட்டத்திற்கு முதலாளி பொறுப்பாகிறார். போதுமான கவனமின்றி, வேலையாள் காரை ஓட்டியதால், ஒருவர்மீது மோட்டார்மோதி, அவரது கால் ஒடிந்து விடுகிறது. இப்பொழுது, காரை ஓட்டிய வேலையாள், கவன மின்றி ஓட்டிய குற்றத்திற்குத் தண்டனை பெறுகிறார். ஆனால், கால் ஒடிந்தவருக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யும் பொறுப்பு காரை ஓட்டியவரையும், ஓட்டிய வேலையாளின் முதலாளியையும் சேருகிறது. வேலையாளின் கவனக்குறைவிற்கு முதலாளியும் பொறுப்பாக்கப்படுகிறார். இவ்வாறு, முதலாளிக்கு ஏற்படும் பொறுப்பு "பகரப் பொறுப்பு" அல்லது "தொடர்புப் பொறுப்பு" (Vicarious Liability) என்று கூறப்படுகிறது.

வேலையாள் அந்த வேலைக்கென்று நியமிக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லது அந்த வேலையைச் செய்யக் கட்டளையிடப் பட்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான், அந்த வேலையைச் செய்கையில் ஏற்படும் விளைவுகளுக்கு முதலாளி பொறுப்பாகிறார். என் தோட்டக்காரன் என் உத்தரவின்றி, எனது மோட்டாரை ஓட்டிச் சென்று, இன்னொருவர்மீது மோதிவிட்டான் என்றால், அதற்கு நான் பொறுப்பல்லன். காரை ஓட்டுவதற்கென்று அவனை நான் வேலைக்கு அமர்த்தவில்லை; அல்லது காரை ஓட்டும்படி அவனுக்குநான் அதிகாரமும் கொடுக்கவில்லை. ஆதலால் என் உத்தரவின்றிக் காரை ஓட்டுகையில் அவன் எனது வேலை யாளாக இல்லை. அவனது செயலுக்கும் அதன் விளைவுகளுக்கும் நான் பொறுப்பு ஆவதில்லை.

வேலையாள் தன் வேலையை முறை தவறிச் செய்திருக்கலாம். மோட்டாரை ஓட்டுபவருக்கு இவ்வளவு வேகத்திற்கு மேல் ஓட்டக் கூடாதென்று முதலாளி கட்டளையிட்டிருக்கலாம். அதை மீறி வேலையாள் அதிகமான வேகத்தில் காரை ஓட்டியதால் இன்னொருவர்மீது மோதலாம். அதற்கும் முதலாளி பொறுப்பாகிறார். "நான் இன்ன வேகத்தில்தான் காரைச் செலுத்தச் சொல்லியிருந் தேன். எனது கட்டளையை மீறி, எனது வேலையாள் அதிவேகமாக

ஓட்டியதாலேயே, விபத்து நேர்ந்திருக்கிறது. எனது கட்டளையை மீறின வேலையாளின் செயலுக்கு நான் பொறுப்பாளியல்லன்," என்று முதலாளி சொல்லுவதைச் சட்டம் ஒப்புவதில்லை. "செய்த வேலை அவருக்கு இடப்பட்ட வேலைதானு" என்பதே கேள்வியாகும். இவ்வாறு, ஒரு வேலையாள் தனக்கு இடப்பட்ட வேலையை முறை தவறிச் செய்தாலும், முதலாளியின் கட்டளையை மீறிய வகையில் செய்தாலும், வேலையாளின் கவனமின்மைக்குப் பொறுப்பு முதலாளிக்கு உண்டு.

பொதுவாகப், பிறருக்கு நட்டஈடு கொடுக்கும் சக்தி இல்லாத ஏழைகளாகவே வேலையாட்களில் பலர் இருக்கின்றனர். முதலாளியை இவ்வாறு சட்டம் பொறுப்பாக்காவிடில், வேலையாட்களின் செயல்களால் நிகழும் கேடுகளுக்கு நட்ட ஈடு பெறுவது இயலாததாகிவிடும்.

ஒருவர், தாம் செய்ய வேண்டிய செயலை (வேலையை), தமது வேலையாள் மூலமாகச் செய்யும்பொழுது, அந்தச் செயலின் விளைவுகளையும் அவரே ஏற்றுக்கொள்வதுதான் நியாயமும், நேர்மையும் ஆகும். ஆதலால் சட்டம், வேலையாளின் (உத்தரவிடப்பட்ட) செயலை முதலாளியின் செயலாகவே கொண்டு, அதன் விளைவுகளுக்கு முதலாளியைப் பொறுப்பாக்குகிறது. இவ்வாறு, ஏவலாளர் செயலுக்குத் தலைவர் பொறுப்பாவதைப் "பகரப் பொறுப்பு" (Vicarious Liability) என்று கூறுகிறோம்.

8. தண்டனை
(Criminal Justice: Punishment)

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்" (*குறள்: 549*)

"அரசன் கடமையைச் செய்யும் பொருட்டும், அனைத்துயிர்களையும் காப்பாற்றுவதற்கும், தருமமே உருவான தெய்வீக ஒளியுடன் கூடிய தண்டனையைக் கடவுள் படைத்தார்."
(*மனு, அத்; 7; விதி: 14*)

ஒருவர் செய்யும் செயலுக்கு அவரே பொறுப்பாக்கப்படுகிறார்; அந்தச் செயலின் பயனை அவரே அடையும்படி சட்டம் செய்கிறது எனக் கண்டோம். அந்த முறையிலேதான், குற்றம் செய்தவர்களைச் சட்டம் ஒறுக்கின்றது.

முறைசெய்து காப்பது இறைமாட்சியாகும். குடிபுறங் "காத்தோம்புவ" தற்குக் "குற்றம் கடிதல்" அரசின் தொழிலாய் அமைகிறது. தீயோரை ஒறுத்தலால் விளையும் பயன் என்ன? அவர்களைத் தண்டிப்பதன் நோக்கம் என்ன?

கொலைக் குற்றவாளியைத் தூக்கிலிட்டதால், கொலை செய்யப்பட்டவர் உயிருடன் திரும்பிவந்துவிடுவதில்லை. பின் எதற்காகக் கொலையாளிக்குத் தண்டனை? திருட்டுப்போன பொருளை நாம் திரும்ப அடைந்த பின்பும், திருடன் தண்டிக்கப்படுகின்றானே, அதன் பயன் என்ன? என்ற வினாக்கள் எழுகின்றன.

தண்டனை அளிப்பதன் நோக்கம் (The purposes of Criminal punishment)

தண்டனை அளிப்பதன் நோக்கங்கள் பற்றி நமது நீதிமுறையில் நான்கு வகையான கொள்கைகள் உண்டு. அவை பற்றி இனி ஆராய்வோம்.

உலகில் எல்லோருமே நல்லவர்களாக, பிறர் நலனையே தந்நலம் என்று பேணுபவர்களாக, இருந்துவிட்டால் ஒருவருக்கு ஒருவர் தீமை செய்வது இருக்காது. குற்றம், அதற்கான தண்டனை என்பவை இல்லாமலே வாழ்க்கை நடைபெறலாம். ஆனால், இஃது அடைய முடியாத ஓர் 'உயர்நிலை' ஆகும். நம்மில் ஒரு சிலர் குற்றங்கள் புரியத் தயங்குவதில்லை. தங்கள் சொந்த நலத்திற்திற்காகவும், தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளும் வகையிலும், அவர்கள் பிறருக்குத் தீங்கிழைக்கின்றனர். பிறரது

உயிரைக்கூட மதியாமல் மரணத்தை விளைவிக்கின்றனர். இவ்வாறு, மதிநலமின்றித், தனி நலம் கருதிப், பிறருக்குத் தீமைபுரியும் தீயோரை அவர்கள் போக்கிலே விட்டுவிட்டால், நல்லவர்கள் வாழ்வது இயலாததாகிவிடும். ஆதலால், தீயோரைத் தண்டிப்பது சட்டத்தின் இன்றியமையாத கடமையாகிறது.

இயற்கையாகவே, அறநெறியிலே பற்று இல்லாதவர்களைச் சட்டம் அச்சுறுத்தி நல்வழிப்படுத்துகிறது. "உனது சிறிய நலனைக் கருதி, நீ பிறருக்குத் தீங்கு விளைவித்தால், நீ எதிர்பார்த்த நலனுக்குப் பதிலாக உனக்குத் தண்டனை என்ற துன்பமே நேரும்; அது காத்திருக்கிறது" என்று சட்டம் தீமை புரிய எண்ணுவோரைப் பயமுறுத்துகிறது. இந்த அச்சுறுத்தலினுலும் பயன் ஏதுமின்றிக், குற்றம் செய்பவர்களைத் தண்டிப்பது தவிர்க்கமுடியாததாகி விடுகிறது. இந்த உண்மையையே, கீழ்க் கண்டவாறு மனு நீதியிலே காண்கிறேம்.

> *"குற்றம் செய்யாதவர்கள் உலகில் இருப்பது அருமை. எல்லா உயிர்களும் தண்டனைக்கு அஞ்சியே ஒழுகுகின்றன. தண்டனை முறையின் பயனுகவே வாழ்வதற்கு உகந்த இடமாக உலகம் அமைகிறது. தண்டனையினுலேயே உலகம் திருத்தப்பட வேண்டியதிருக்கிறது."*

(மனு: அத்: 7; விதி. 22)

ஒருமுறை குற்றம் செய்த ஒருவன் மீண்டும் அதைச் செய்வதற்கு அஞ்ச வேண்டும். குற்றவாளியைத் தண்டிப்பதன் மூலம் அவன் மனத்தில் அச்சத்தை ஏற்படுத்தினுல்தான், அவன் மனம் மறுபடியும் குற்றம் செய்வதை நாடாது. அவனும் மீண்டும் குற்றம் செய்வதிலிருந்து விலகுகிறுன். "நீ பிறருக்குத் தீங்கிழைத்தால், அந்தத் தீங்கு பன்மடங்கு பெருகி, மீண்டும் உன்னையே தண்டனையின் உருவத்தில் வந்தடைகிறது" என்று குற்றவாளியின் மனத்தில் நன்கு பதியும்படி சட்டம் அவனுக்குத் தண்டனையை விதிக்கிறது.

> *"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
> *வீயாது அடி உறைந்தற்று"* (குறள்: 208)

என்ற பொய்யா மொழியின் மெய்த்தன்மையைக் குற்றம் புரிந்தவன் உணரும் வகையில் தண்டனை அவனுக்கு அளிக்கப்படுகிறது.

குற்றவாளி தண்டனையில் உழல்வதைப் பிறர் காண்கின்றனர். அதன் பயனுய்க், குற்றம் செய்தால் தண்டனையாகிய துன்பத்தைப் பட்டாகவேண்டும் என்பதை மற்றவர்களும் உணர்ந்துகொள்ளுகின்றனர். குற்றங்கள் செய்வதில் ஓரளவு நாட்டமுள்ளவர்களும், குற்றவாளி படுகின்ற தண்டனையைக்

கண்டு திருந்திவிட வழி இருக்கிறது. ஆகவே, குற்றவாளிக்கு விதிக்கப் படும் தண்டனை, அவனுக்கும் பிறருக்கும், குற்றம் செய்வதைத் தடுக்கும் மருந்தாக இருக்கிறது. குற்றத்தை நாடி நிற்கும் மனத்தை அச்சுறுத்தி, அதை நல்வழியில் திருப்பவும், குற்றத்தைச் செய்துவிட்டவரின் உள்ளத்தைத் துன்பத்தால் அச்சுறுத்தி, மீண்டும் குற்றத்தை நாடாதவாறு அதைத் திருத்தவும், பயன்படுகிறது தண்டனை.[1]

இவ்வாறு, தண்டனை மூலம் பயமுறுத்துவதால் குற்றங்கள் தடுக்கப்படுகின்றன என்ற கொள்கையை Deterrent Theory of Punishment என்று கூறுவார்கள்.

குற்றம் செய்த ஒருவன் மீண்டும் அதைச் செய்யாதவாறு தடுப்பது சட்டத்தின் கடனாகிறது. மறுபடியும் குற்றம் செய்வதற்கான வாய்ப்பை அவனுக்கு அளிப்பது கூடாது. திரும்பவும் குற்றம் செய்ய முடியாத நிலையில் அவனை வைக்கவேண்டும். திருடியவனைச் சிறையில் அடைத்தால், சிறையில் இருக்கும் வரை, மறுபடியும் திருடுவதற்கான வாய்ப்பு அவனுக்கில்லை. நச்சுப் பாம்பை நாம் எதற்காக அடித்துக் கொல்லுகிறோம்? அம் மாதிரியே தான் கொலையாளியை நாம் தூக்கிலிட்டுக்கொன்றுவிடுகிறோம். அவனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையின் விளைவாகக், கொலை செய்தவன் மீண்டும் அதே குற்றத்தைச் செய்ய முடியாமல் முற்றிலும் தடுக்கப்பட்டுவிடுகிறான். ஒரு கொலையாளியை வாழவிட்டால், மறுபடியும் அவன் அதே குற்றத்தைச் செய்துவிடலாம். ஆகவே, அது தடுக்கப்பட வேண்டும் என்பதற்காகக், குற்றவாளியின் வாழ்வே மரண தண்டனையின் வாயிலாக முடிக்கப்படுகிறது. இவ்வாறு, மீண்டும் குற்றம் செய்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் தண்டனை அளிக்கப்படுகிறது என்பது இரண்டாவது கொள்கை (Preventive Theory of Punishment)[2]

> "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்." (குறள்: 550).

கொலை போன்ற கொடிய குற்றம் செய்தவர்களுக்கு மரண தண்டனையை அரசன் விதிப்பது, பயிரைக் காப்பாற்றுவதற்காக உழவன் களையை எடுத்து எறியும் செயலைப் போன்றது என்று

1. Punishment is before all things deterrent and the chief end of the law of crime is to make the evil doer an example and a warning to all that are like minded with him—Salmond.

2. There can be no case in which the law-maker makes certain conduct criminal without his thereby showing a wish and purpose to prevent that conduct.—Holmes in Common Law.

வள்ளுவர் கூறி இருப்பது என்றும் பொருந்தும் உண்மை ஆகும்.

நம் அனைவருக்கும் நியாய உணர்வு இயற்கையாகவே இருக்கிறது. நம் அற நூல்களும், நன்மை தீமைகளை வெல்வதையே, நல்லோர் தீயோர்மீது வெற்றிகொள்வதையே, போற்றிப்புகல்கின்றன. அந்நூல்களைப் படிக்கும்போது, நல்லவர்கள் படும் துயரம் கண்டு நாமும் வருந்துகிறோம்; தீயோரின் செயல் கண்டு சீற்றம் கொள்ளுகிறோம். நல்லவர்கள்மீது பரிவும் பாசமும், தீயவர்கள்மீது சினமும் சீற்றமும், நம் மனத்தில் இயல்பாகவே எழுகின்றன. இந்த நியாய உணர்வு, மனிதனுக்குள்ள உயர்ந்த இயல்பாகும்.

நம் வாழ்வில் தீமையை வெறுப்பது போலவே, தீயோரையும் வெறுக்கின்றோம். தீமை நமக்குத் தான் செய்யப்பட வேண்டும் என்பது அவசியமில்லை. எங்கு யாருக்குத் தீமை செய்யப்பட்டாலும், நாம் அது குறித்து வருந்துகிறோம். தீமையை அகற்ற வேண்டும், தீயோரை ஒறுக்க வேண்டும் என்று கொதித்து எழுகின்றது நமது உணர்ச்சி. குற்றம் செய்தவன் தண்டனையின்றித் தப்பிவிடக்கூடாது என்று இயற்கையாகவே நமது மனம் ஏங்குகிறது. அவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டவுடன், நமது மனதில் அமைதி பிறக்கிறது. ஒழுங்கின்மைக்கு எதிரான நமக்குள்ள இந்தக் கோப வுணர்ச்சியே சமுதாயத்தின் நெறியான வாழ்விற்கு உறுதுணையாக நிற்கிறது என்று சொல்லலாம்.[1]

"சிற்றின்பத்திற்கும் திருமணத்திற்கும் உள்ள தொடர்பை ஒத்தது, பழிவாங்கும் வேட்கைக்கும் தண்டனை முறைக்கும் உள்ள தொடர்பு," என்று கூறுகிறார் ஒரு பேராசிரியர்.[2] ஆதலால் தீமை செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும், அவர்கள் செய்த தீச்செயலுக்கு அவர்கள்மீது வஞ்சம் தீர்க்கப்படவேண்டும் என்று நாம் ஆத்திரத்துடன் விரும்புகிறோம். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதன் வாயிலாக, சமூகம் அவர்கள்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளுகிறது. குற்றம் செய்தவன், தான் செய்த குற்றத்திற்கு ஈடாகத் தண்டனையைப் பட்டழுந்த வேண்டுமென்று எண்ணு

1. Indignation against injustice is, moreover, one of the chief constituents of the moral sense of the community, and positive morality is no less dependent on it than is the law itself.
—Salmond.

2. The criminal law stands to the passion of revenge in much the same relation as marriage to the sexual appetite.
—Sir James Stephen.

கிறோம். இவ்வாறு, குற்றவாளியைப் பழிவாங்கும் வகையில் தண்டனை விதிக்கப்படுகிறது என்பது மூன்றாவது கொள்கை யாகும்.

இந்த அடிப்படையில்தான், பழங்காலத்தில், ஒருவன் இன்னொருவனின் கையை வெட்டினால், அதற்குத் தண்டனையாகக் குற்றவாளியின் கையை வெட்டினார்கள். மனுநீதிச் சோழ மன்னனின் மகன், தனது தேரை ஓட்டி, ஒரு பசுவினது கன்றைக் கொன்றுவிட்டான். கன்றை இழந்த பசுவின் நிலை கண்டு இரங்கிய அரசன், அக்குற்றத்திற்கு ஈடுசெய்யும்வகையில், குற்றம் செய்த தம் மகன் மீது தேரைச் செலுத்தினான் என்பது நீதிக் கதை.

இவ்வாறாக, பழிவாங்கும் அடிப்படையிலேயே தண்டனை விதிக்கப்படுகிறது என்ற கொள்கையை Retributive Theory of Punishment என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்.

மேலே சொன்ன மூன்று வகையான கொள்கைகளும், ஒவ்வொரு விதத்தில் சரியானவையாக இருந்தாலும், இனி நாம் காணப்போகும் நான்காவது கொள்கையை அறிஞர் பலரும் ஒப்புக்கொள்கின்றனர்.

ஒரு குற்றவாளியைத் தண்டிப்பதற்குமுன், அவன் அக்குற்றமான செயலைத் தீய எண்ணத்துடன்தான் செய்தானா என்பதைச் சட்டம் கவனிக்கிறது என்று முன்னரே பார்த்தோம். மனத்தில் தோன்றும் தீய எண்ணங்களே, தீய செயல்களாக உருவெடுக்கின்றன. ஆகவே, கெட்ட எண்ணங்களை அடிப்படையாகக் கொண்ட குற்றங்கள் தடுக்கப்பட வேண்டுமெனில், அத்தகைய எண்ணங்கள் மனத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். குற்றங்கள் செய்ய வேண்டும் என்ற தீய நினைப்பே மனத்தில் தோன்றாதபடி செய்துவிடில், குற்றங்கள் நிகழ்வதற்கு ஏதுவில்லை அல்லவா? மனது மாசற்றிருந்தால், உள்ளம் உயர்ந்திருந்தால், குற்றங்கள் புரியவேண்டும் என்ற எண்ணங்கள் பிறப்பதற்கே இடமில்லை. தெளிவான மனத்திலே தீய எண்ணங்கள் தோன்றுவதில்லை.

உடலில் நோய் தோன்றுவதுபோல், உள்ளத்தில் நோய் உண்டாகும் பொழுது, தீய எண்ணங்கள் உதிக்கின்றன. உடல் நலம் இல்லாதவர்கள் நோயாளிகள்; உளநலமில்லாதவர்கள் குற்றவாளிகள். உடல் நோயுள்ளவர்களை வைத்திய சாலைகளில் மருந்து கொடுத்துக் குணப்படுத்துகிறோம்; அதுபோலவே, மனநோய் உள்ளவர்களையும் தகுந்த முறையில் திருத்திக் குணப்படுத்த வேண்டும். நோய்வாய்ப்பட்ட உடலுக்கு மருந்து கொடுப்பதுபோல், நோயுற்று இருக்கும் குற்றவாளியின் மனதிற்கு மருத்துவம்

அளிக்கவேண்டும். அஃதாவது, குற்றவாளிக்கு அளிக்கப்படும் தண்டனையின் நோக்கம், அவனது மனதை மாற்றி அவன் எண்ணங்களைத் தூய்மையடையச் செய்வதாக இருக்க வேண்டும், இதுவே, "நோய் நாடி, நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி"ச் செய்யும் செயலாக அமையும்.

குற்றவாளிக்கு விதிக்கப்படும் தண்டனை உடலை வருத்துவதற்கென்று இல்லாமல், உள்ளத்தைத் திருத்துவதற்கென்று அமைய வேண்டும்.[1]

குற்றத்தை மட்டும் கூர்ந்து நோக்கித் தண்டனை விதிக்காமல், குற்றவாளியையும் கருத்திற்கொண்டு, தண்டனை நிறைவேற்றப்படவேண்டும். குற்றவாளிகள் என்று தண்டிக்கப்படுபவர்களில் பெரும்பாலோர், உயர்ந்த குணங்கள் அயர்ந்து கிடக்கும் உள்ளங்கள் படைத்தவர்கள். ஏதோ, சூழ் நிலைகளில் பிறந்த மனநோயின் காரணமாகவோ, வறுமையின் விளைவாகவோ, வஞ்சத்தைத் தீர்க்கும் எண்ணம் கொண்டோ, வழிதவறிக் குற்றங்கள் புரிகின்றனர். அவரவர்களுக்குத் தகுந்த ஒழுக்கப் பயிற்சி கொடுத்து, அவர்களது உள்ளத்தை உயர்த்திவிட்டால், அவர்களும் நாட்டின் சிறந்த குடிகளாகத் திகழ்வார்கள்.

இவ்வாறு, தகுந்த பயிற்சி அளித்துக் குற்றவாளிகளைத் திருத்துவதுதான், சிறைச்சாலைகளில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய வேலையாகும். எழுத்தறிவில்லாதவருக்கு எழுத்தறிவும், உழைப்பில் நாட்டமில்லாதவர்களுக்கு உழைப்பின் உயர்வையும் புகட்டித், தன் மானம், பிறர் மீது அன்பு, மத நம்பிக்கை போன்ற நல்லியல்புகளைக் கற்பித்து, அவர்களின் மனம் பண்படுத்தப் பட்டால், குற்றவாளிகளும் குணவான்களாக மாறுவது இயலாத காரியமில்லை. சிறைக்கு வெளியில் இருப்பவர்கள் அனைவருமே சிறையினுள் இருக்கும் குற்றவாளிகளைவிட ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள், உள்ளத்தில் தூய்மை உடையோர்கள், கள்ளமில்லாது ஒழுகுபவர்கள் என்று கூறிவிட முடியாது. ஆதலால், குற்றவாளிகளைச் சமுதாயத்தின் கடை நிலையில் உள்ளவர்கள் என்று நாம் எண்ணுவதற்கிடமில்லை. ஆகவே, குற்றவாளிகள்மீது பரிவும் இரக்கமும் காட்டுவதே பண்பு மிக்க செயலாகும்.[2] ஆதலால்,

1. "The judge stands to the criminal in the position of the doctor who selects his remedy of the diagnosing the disease and the resources of the patients' organisation".

—Vinogradoff: Historical Jurisprudence.

2. "Crimes are to be treated as infirmities, and the culpable ones as diseased subjects whose fury might be subdued in solitude..............and to enlighten their minds by means of

சிறைச்சாலைகள் கல்விச்சாலைகளாக இயங்கவேண்டும். இவ்வாறு, சீர்திருத்தும் அடிப்படையில் தண்டனை அமைய வேண்டும் என்பது நான்காவது கொள்கையாகும் (Reformative Theory of Punishment).

குற்றவாளிகளின் மனநிலை பற்றியும், பொதுவாக, மனிதரின் மன இயல்பு பற்றியும் புதிய கருத்துக்கள் பரவி வரும் தற்காலத்தில், குற்றவாளியின் மனத்தைப் பண்படுத்த வேண்டும், அதற்கெனவே தண்டனை அமைய வேண்டும் என்ற கொள்கையைப் பலநாட்டு அறிஞர்கள் ஆதரிக்கின்றனர். இதனாலேயே, மரண தண்டனையே விதிக்கக்கூடாது என்ற இயக்கம் பல நாடுகளில் பரவி வருகிறது. கொலைக் குற்றம் புரிந்தவர்களைத் திருத்தி, அவர்கள் மனதை வெல்ல வேண்டுமே தவிர, அவர்களைக் கொல்லக்கூடாது என்ற கொள்கைக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது.

மேலே சொல்லப்பட்ட சீர்திருத்தக்கொள்கை உயர்ந்த குறிக்கோளை ஒட்டி இருக்கிறது என்பதில் ஐயமில்லை. இருப்பினும், "அச்சமே கீழ்களது ஆசாரம்," தீயோரின் நல்ல நடத்தைக்கு அச்சமே ஆதாரமாக இருக்கிறது, என்பதை நாம் மறப்பதற்கு இல்லை. "சொல்லப் பயன்படும் சான்றோரும்", "கரும்புபோற் கொல்லப் பயன்படும் கீழோரும்" நம்மிடையே வாழ்கின்றனர். ஆதலால், சீர்திருத்தும் கொள்கையை நாம் ஓரளவிற்கே ஏற்றுக் கொள்ள முடியும். ஏனெனின், தண்டனையிலுள்ள துன்பமாகிய அச்சம் இல்லையெனில், இழுக்கமே இயல்பாகக் கொண்ட கீழோரை நல்வழியிலே நிறுத்துவது முடியாததாகிவிடும். இருப்பினும், பொதுவாகத் தண்டனை அளிப்பது, குற்றவாளியின் மனத்தைக் குணப்படுத்தும் குறிக்கோளுடன் இருக்க வேண்டுமென்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

இக்கொள்கை, இளம்பருவத்திலிருக்கும் குற்றவாளிகளுக்கும், முதன் முறையாகச் சிறிய குற்றங்கள் செய்தவர்களுக்கும் முற்றிலும் பொருந்தும். இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே, இளங்குற்றவாளிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கெனப் பள்ளிகளும் (Borstal Schools), விடுதலையாகிவரும் குற்றவாளிகளுக்கு உதவி செய்வதற்கெனச் சங்கங்களும், நம்நாட்டிலும் பிற நாடுகளிலும் இயங்குகின்றன.

தண்டனை அளிப்பதன் நோக்கம், மேலே சொன்ன நான்கு கொள்கைகளையும் அடிப்படையாகக்கொண்டதுதான். குற்றத்தின்

instruction, if ignorance had led them astray. By this means, law from being vindictive had become just, and from being just, it became charitable; and it completed the act of punishing by the art of healing."—Prof. Lioy: The Philosophy of Right.

தன்மைக்கும், குற்றவாளியின் இயல்புக்கும், குற்றம் செய்யப்பட்ட சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது.

தண்டனையின் அளவு

> *"குற்றத்தின் தன்மை, அது செய்யப்பட்ட இடம், காலம், இவற்றோடு, குற்றவாளியின் வலிமை, வயது, குணம், செல்வம் முதலியவற்றையும் ஆராய்ந்துதான் தண்டனை விதிக்கப் படுதல் வேண்டும்."*
>
> *(யாக்ஞவல்கியர் அத்: 1; பிரிவு: 13; விதி. 368.)*

குற்றங்கள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன என்றும், தண்டனை அளிப்பதன் நோக்கங்கள் என்ன என்றும் இதுவரை கண்டோம். இனி, தண்டனையின் அளவு எவ்வாறு தீர்மானிக்கப் படுகிறது என்று பார்ப்போம்.

குற்றங்கள் தடுக்கப்படவேண்டும் என்பதற்காக, எல்லாக் குற்றங்களுக்கும் ஒரேவிதமான தண்டனை அளிப்பது ஒவ்வாததாகும். சாதாரணத் திருட்டுக் குற்றத்திற்கும், கொலைக் குற்றத்திற்கும் மரணதண்டனைதான் என்று சட்டம் விதித்தால், அதனால் நன்மையைவிடத் தீமையே அதிகமாக விளையும். திருட்டுக் குற்றங்கள் வெகுவாகக் குறையலாம். ஆனால், முற்றிலுமே அக் குற்றங்கள் நின்றுவிடப் போவதில்லை. சட்டத்தின் அச்சுறுத்தல் எவ்வளவு இருந்தாலும், தீயொழுக்கம் முழுவதுமே மறைந்து விடும் என்று கூறமுடியாது. ஒரு குற்றத்தைச் செய்வதற்குமுன், பின் விளைவுகளை ஒவ்வொருவரும் நன்கு ஆராய்ந்து பார்ப்பது இல்லை. உணர்ச்சி வேகத்தாலோ, இதர சூழ்நிலைகளின் காரணமாகவோ, குற்றங்கள் செய்யப்படுகின்றன. ஆதலால், திருட்டுக் குற்றத்திற்கு மரண தண்டனை என்று விதிக்கப்பட்டாலும், திருட்டுக் குற்றம் அடியோடு மறைந்துவிடப் போவதில்லை. "கையிகந்த தண்ட"மாக அஃது இருப்பதைத் தவிர வேறு பலன் விளையப்போவதில்லை. மேலும், திருட்டுக் குற்றத்திற்கும், கொலைக் குற்றத்திற்கும் ஒரேவிதத் தண்டனைதான் என்றிருந்தால், திருடத் துணிந்தவன் எளிதில் கொலை புரியவும் துணிந்துவிடலாம். இவ்வாறு, தண்டனை விதிப்பதன் நோக்கமே நிறைவேறாமற் போய்விடும். ஆதலால், சட்டம் எல்லாவகைக் குற்றங்களுக்கும் ஒரேவிதமான தண்டனை அளிக்காமல், குற்றங்களுக்குத் தகுந்தவாறு தண்டனையை விதிக்கிறது.

செய்யப்பட்ட குற்றம் என்ன? எந்தச் சூழ்நிலையில் செய்யப்பட்டது? குற்றவாளியின் தன்மை-குணம்-என்ன? என்ற இந்த மூன்று கூறுகளையும் சட்டம் ஆராய்ந்தே தண்டனையை விதிக்கிறது, அஃதாவது தண்டனையின் அளவைத் தீர்மானிக்கின்றது.

குற்றத்தின் தன்மை

சிறிய குற்றங்களுக்கு எளிய தண்டனையும், பெரிய குற்றங்களுக்கு அதற்கேற்ற கடுமையான தண்டனையும் அளிப்பது இயல்பு. பெருங் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை என்று இருந்தால்தான், கொடிய குற்றங்கள் செய்ய நினைப்பவர்கள் தங்களுக்கு வரவிருக்கும் கடுமையான தண்டனைகளை எண்ணி, அக் குற்றமான செயல்களைச் செய்யாது ஒழிவதற்கு ஏதுவாகும். ''நீ பிறரது உயிரைப் பறித்தால், உனது உயிரைச் சட்டம் பறிக்கும்'' என்று இருப்பதால்தான், கொலைசெய்ய முனைபவர்கள் அதைக் கூசாமல் செய்வதில்லை.

குற்றவாளியின் இயல்பு

குற்றம்புரிந்தவரின் குணத்தைக் கருத்தில்கொண்டே, சட்டம் தண்டனை அளிக்கிறது. நம்மில் பெரும்பாலோர் குற்றங்கள் செய்யாமலிருப்பது தண்டனைக்கு அஞ்சும் ஒரே காரணத்தால் தான் என்று சொல்வது தகாது. நம்மிடம் இயல்பாகவே உள்ள நல்லொழுக்கம், பிறர்மீதுள்ள அன்பு, மதநம்பிக்கை, தன்மான உணர்வு, பிறர் நம்மை மதிக்க வேண்டும் என்ற எண்ணம் இவைகள் எல்லாம் நம்மைத் தீமை செய்யாதவாறு தடுக்கின்றன. குற்றம் செய்யவேண்டும் என்ற எண்ணம் நம் மனத்தில் எழுந்தாலும், அவ்வெண்ணத்தை உடனே அகற்றிவிடுகிறோம். இந்த நல்லொழுக்கம் ஒருவரிடம் போதிய அளவு இல்லையெனில், சட்டம் அவரை அச்சுறுத்திக், குற்றங்கள் செய்வதினின்றும் தடுக்க முயல்கின்றது.

ஒழுக்கத்தால் உயர்ந்தோர் நம்மிடை வாழ்வது போலவே, இழுக்கத்தால் இழிந்தோரும் நம்முடன் இருக்கின்றனர். பத்து ரூபாய் பெறுமான நகையை விரும்பிச் சிறுவனைக் கொல்லும் பழிகாரரும், பெற்றெடுத்த தந்தைமீது பற்றுதலின்றிப் பழிதீர்த்துக் கொல்லும் பாவிகளும், மனிதசமூகத்தில் உள்ளனர். அவர்களையெல்லாம் சட்டம் இரக்கமின்றி வன்மையாகத் தண்டிக்கிறது.

வாழ்வில் முதல் முறையாக ஒழுக்கத்தினின்றும் வழுக்கி இழுக்கம் செய்தவர்கள்மீது இரக்கம் காட்டும் சட்டம், பலமுறை குற்றம் செய்பவர்கள்பால் பரிவு காட்டுவதில்லை. ஏற்கெனவே தண்டனை பெற்றவர் விடுதலை அடைந்தபின், மீண்டும் குற்றம் செய்தால், அவருக்கு அந்தக் குற்றத்திற்கான தண்டனையைவிட அதிகமான தண்டனை விதிக்கப்படுகிறது. ஏனெனில், முதலாவது அளிக்கப்பட்ட தண்டனை குற்றவாளியின் மனத்தைத் திருத்தவில்லை யாதலால், அதிகத் தண்டனையை அவருக்களித்து அவரைச் சட்டம் திருத்த முயல்கிறது.

நூற்நிலைகளின் விளைவு

ஒரு குற்றத்தைச் செய்வதற்கான உள்ளத் தூண்டுதல் அல்லது வேட்கை அதிகமாக இருந்தால், அந்த உள்ளத் தூண்டுதலை மாற்றுவதற்காகச் சட்டம் தனது அச்சுறுத்தலை அதிகமாக்குகிறது. அஃதாவது, அக்குற்றம் செய்யவேண்டும் என்ற ஆசையை, காத்திருக்கும் கடுமையான தண்டனை என்ற அங்குசத்தால் அடக்குகின்றது. விலங்கு உணர்ச்சிமேலிட்டு, வெறியின் வேகத்தில் செய்யப்படும் கற்பழித்தல் போன்ற கொடுங் குற்றங்களுக்குக் கடுந் தண்டனை அளிப்பதன் நோக்கம், கொடிய குற்றங்கள் செய்வதிலுள்ள மயக்கம் மறையவேண்டும், வேட்கை விலகவேண்டும் என்பதேயாகும். புலையான இன்பத்திற்காகக் கொடுங்குற்றத்தை இழைத்தவன் தொலையாத துன்பமான கடுந் தண்டனையில் அழுந்தவேண்டும், மனம் வருந்த வேண்டும், என்று சட்டம் விதிக்கிறது.

மனிதனின் இயல்பான உணர்ச்சிகளைச் சட்டம் மறப்பதில்லை. மனிதனுக்கு அற உணர்வு எவ்வளவு இருந்தாலும், கூடவே கோபம், மானம்போன்ற உணர்ச்சிகளும் இருக்கின்றன. மனிதன் இயங்குவது அவனது அறிவினால் மட்டுமன்று; உணர்ச்சியினாலும் ஆகும். பசியால் வாடும் தன் பிள்ளைகளுக்கு உணவு வாங்குவதற்காகத் திருடியவனைச் சாதாரண திருடனைப்போல் சட்டம் கருதுவதில்லை. தாங்கொணாத அவமானத்தைத் தனக்கு உண்டாக்கியதைக் கண்டவுடன் ஏற்பட்ட கோபத்தால், தன்வயமிழந்து, ஒருவர் இன்னொருவரைக் கொல்லுவதற்கும், பணத்தைப் பறிப்பதற்காகக் கொலை செய்வதற்கும் உள்ள வேறுபாட்டைச் சட்டம் ஒப்புக்கொள்ளுகிறது. அவமானம் தாங்காமல், திடீரென்று கோபமூட்டப்பட்டதால் பழிவாங்கியவரைச் சாதாரண கொலையாளியாகச் சட்டம் கருதுவது இல்லை. வறுமையின் காரணமாகவோ, பசியின் கொடுமையைத் தாங்கமாட்டாமலோ, அல்லது மிகுந்த ஆத்திரத்தினாலோ குற்றம் புரிபவர்கள் மனிதத் தன்மையை இழந்து குற்றங்களைச் செய்தார்கள் என்று சொல்லுவதற்கு இடமில்லை. ஆறாத துயரத்தாலோ, ஆத்திர மிகுதியாலோ, சோர்வான மனநிலையில், தேர்ந்தெண்ணிச் செய்யும் திறன் மனிதர்களுக்கு இருப்பதில்லை. ஆகவே, இவர்கள்மீது சட்டம் இரக்கம் காட்டிக் குறைந்த தண்டனை விதிக்கிறது.

இந்த முறையில், குற்றத்தின் தன்மை, குற்றவாளியின் இயல்பு, சூழ்நிலைகளின் விளைவு, இவை மூன்றையும் ஆராய்ந்தே நீதிமன்றங்களில் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் தண்டனையின் அளவு தீர்மானிக்கப்படுகிறது.

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து" (குறள் : 561)

செய்த குற்றத்தின் தன்மையை ஆராய்ந்து, மீண்டும் அக் குற்றம் செய்யாதபடி, குற்றத்திற்குத் தகுந்த தண்டனையை அளிப்பது முறை செய்யும் அரசனின் கடமையென்று திருவள்ளுவர் கூறி இருப்பதில் தற்காலச் சட்ட நூற் கருத்துக்கள் ஒளிர்வதைக் காணுகிறோம்!

மூன்ருவது பிரிவு

மனித உரிமைகள் அல்லது ஆதார உரிமைகள்

1. மக்களின் இன்பவாழ்வும், மக்களாட்சி முறையும்

மக்களின் இன்பவாழ்விற்கு அடிப்படை அவர்களின் நலன்கள் - அரசாங்கத்தால் பாதுகாக்கப்படும் நலன்களே உரிமைகள் - மக்கள் நலனைப் பேணுதலே முறை செய்தல் - மக்கள் நலனுக்கு இன்றியமையாதது மக்களாட்சி முறை.

2. மக்களாட்சி மலர்ந்த வரலாறு

முடியாட்சி குடியாட்சியாக மாறிய கதை - ஆங்கிலேய மக்கள் பெற்ற "தன்னுரிமை உறுதிமொழி"-பிரஞ்சுப்புரட்சி- அமெரிக்க நாட்டுத் தன்னுரிமை - ரஷ்யப்புரட்சி - தனி வல்லாட்சி முறை மறைந்தது.

3. அரசு : அன்றும், இன்றும்

ஆதிகால அரசர்களின் கடமைகள் - மக்களாட்சியின் குறிக்கோள்கள் - அரசியல் நீதி - சமூக நீதி - பொருளாதார நீதி - மக்களின் அடிப்படைத் தேவைகள் அளிக்கப்படுவதன் அவசியம் - பொது நல அரசு - பொது நலனோடு மனிதனின் தனி நலனும் பேணப்படவேண்டும் - தனி நலனே மனிதனின் தனிப்பட்ட தன்னுரிமை.

4. ஆதார உரிமைகளின் அடிப்படைத் தத்துவம்

"மனிதன்" என்ற சொல் எதைக் குறிக்கிறது? மனிதன் என்ருல் அவனது உயிரே, ஆன்மாவேயாகும் - சட்டவியலும் உயிரையே மதித்து இயங்குகிறது. - ஆன்மாவின் தனிச் சிறப்பு - ஆன்மாவின் அடிப்படையில் அனைவரும் சமமே - சட்டம் ஒழுகும் சமத்துவ நெறி - ஆன்மாவின் இயல்பான இயக்கமே அதன் இன்பம் - சிந்தித்தல், சொல்லுதல், சேர்ந்து செயல் படுதல் இவையே மனித உயிரின் மாண்பு மிக்க செயல்கள் - இவையே ஆதாரத் தன்னுரிமைகள் - எண்ணுதல், இயம்புதல், இசைந்து இயங்குதல் இவை இல்லாத வாழ்வு வாழ்வன்று - இதுவே இயற்கையின் நியதி.

5. ஆதார உரிமைகளும், அரசியல் சட்டமும்

மக்கள் ஆட்சியிலும் ஆதார உரிமைகளுக்கு ஆபத்து உண்டு - அரசமைப்புச் சட்டம் ஆதார உரிமைகளுக்கு அரணாக அமைகின்றது - ஆதார உரிமைகளைக் காப்பது நீதி மன்றங்களின் கடமையும் உரிமையுமாகும்.

6. பொது நலனும், தனி நலனும்

தனிநலம் இன்றிப் பொது நலம் இல்லை - பொது நலன் என்ற பெயரால் தனிநலன்கள் அழிக்கப்படுவது கூடாது - தனி நலன்களின் கூட்டே பொது நலன் ஆகும் - ஆதார உரிமைகள் இன்றித் தனி நலன் இல்லை, பொது நலன் இல்லை, மக்களாட்சி இல்லை, மனிதனின் மாட்சி இல்லை.

7. அடிப்படை உரிமைகளும், அறநெறியும்

உரிமையை உணர்த்துவது சட்டம் - கடமையைக் காட்டுவது அறம் - சட்டத்தின் தன்மையும், சமயங்களின் உண்மையும், அறத்தின் அடிப்படையும் ஒன்றே தான் - அதுவே, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பது.

1. மக்களின் இன்பவாழ்வும், மக்களாட்சி முறையும்

"மனித உரிமைகள்" "அடிப்படை உரிமைகள்" "ஆதார உரிமைகள்", என்று நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். முன்னேற்றமடைந்த நாடுகளின் அரசியல் சட்டங்களிலே இந்த ஆதார உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் சங்கம் மனித உரிமைகளைத் தொகுத்து, பிரகடனம் (Declaration of Human Rights) செய்திருக்கிறது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த "மனித உரிமைகள்" என்றால் என்ன? அவைகள் பாதுகாக்கப்படவேண்டிய அவசியம் என்ன? அவைகளுக்கு நேரும் இடையூறுகள் எவை? இவை பற்றி நாம் ஆராய விருக்கிறோம்.

பழைய சட்டவியல் நூல்களிலே மனித உரிமைகள் குறித்துக் கூறப்படுவது இல்லை. வளர்ந்துவரும் அரசியல் முறைகளில், அரசின் அதிகாரம் பெருகிக் கொண்டே இருப்பதால், மக்கள் தங்களின் அடிப்படை உரிமைகள் பற்றி அறிந்து கொள்வது அவசியமாகிறது. சட்டவியலைப் பற்றிய அடிப்படை ஞானம் ஒருவருக்கு முழுமை பெறவேண்டுமெனில், "மனித உரிமைகள்" பற்றி நன்கு தெரிந்து கொள்வது முக்கியமானதாகும்.

மக்களது இன்ப வாழ்விற்கு அவர்களின் நலன்கள் (interests) அடிப்படையானவை. அந்த நலன்களைப் பொறுத்தே உரிமைகள் (Rights) எழுகின்றன. உரிமைகளையே அரசு, நீதிமன்றங்கள் மூலம், தனது வலிமை கொண்டு பாதுகாக்கிறது. மக்களின் உரிமைகளுக்கு ஊறு விளைவிப்போரை, அரசு நீதிவழங்குவதின் வாயிலாக ஒறுக்கிறது. பிறர் நலனுக்குக் கேடு விளைவிக்காமல், மக்களனைவரும் ஒருவரோடொருவர் இசைந்து வாழச்செய்வதே முறை செய்தல் (administration of justice) ஆகிறது. அரசால் விதிக்கப்படும் சட்டம் முறை செய்வதற்கென அமைந்த கருவியே யாகும். இவையனைத்தையும் பற்றி முதல் பாகத்தில் விரிவாகக் கண்டோம்.

இவ்வாறு, அரசும், நீதிமுறையும், சட்டமும் மக்களின் இன்ப வாழ்வை எதிர் நோக்கியே இயங்குகின்றன. மக்களின் இன்ப நலன்களைக் குறிக்கோளாகக்கொண்டே அரசு அமைகின்றது. இந்த உண்மையை யாரும் மறுப்பதற்கில்லை; எந்நாட்டினரும் இதை ஒப்புக்கொள்ளுகின்றனர்.

ஒரு நாட்டின் ஆட்சிமுறை மக்களின் நலன்களுக்காக, அவர்களது இன்ப வாழ்விற்காக, இயங்கவேண்டும் எனில், அது மக்கள் விருப்பப்படி அமையவேண்டும். மக்களால் அந்நாட்டின் ஆட்சி நடத்தப்படவேண்டும்; குடிகளே அரசை ஓச்சவேண்டும். மக்களின் நலன்களுக்காக, மக்களால் நடத்தப்படும் ஆட்சியை "மக்களாட்சி" என்கிறோம். குடிகளால் இயக்கப்படும் அந்த அரசைக் "குடியரசு" என்று அழைக்கிறோம். அந்த நாட்டிலே, ஆளும் அதிகாரம், அரசு, மக்களிடமிருப்பதால் அதைக் "குடியரசு" "சனநாயகம்" என்று சிறப்பித்துக் கூறுகிறோம். இவ்வாறு, குடிகளின் நலன்களுக்காகக் குடிகளே நடத்தும் அரசாட்சியைக் குடியரசு, மக்களாட்சி, (சனநாயகம்) என்ற பெயர்களால் குறிப்பிடுகிறோம்.

இன்று உலகில் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகள் எல்லாவற்றிலும், இந்த மக்களாட்சி முறையே இயங்கிவருகிறது.

மக்கள், தங்களைத் தாங்களே ஆட்சிபுரியும் உரிமையைப் பெறுவதற்கு நடத்திய போராட்டங்களும், அடைந்த அல்லல்களும் அளவற்றவை. உலக சரித்திர ஏடுகளை ஒரு சிறிது புரட்டினலும், மக்கள் இந்த உரிமையைப் பெறுவதற்காக, உலகில் பல்வேறு நாடுகளிலும் நடத்திய போராட்டங்களையும், தியாகங்களையும் காணுகின்றோம். மனித நாகரிகத்தின் சரித்திரத்தில் இந்தப் போராட்டங்கள் பொன்னெழுத்துக்களிலே பொறிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் தன்னாட்சி உரிமை பெற்ற இந்தப் போராட்டக் கதையைச் சுருக்கமாக நாம் தெரிந்து கொண்டால்தான், மக்களாட்சி முறையின் மதிப்பையும், மாண்பையும் நாம் ஓரளவு உணரமுடியும்.

2. மக்களாட்சி மலர்ந்த வரலாறு

கோனுட்சி தோன்றிய கதை முதல் பாகத்திற் கூறப்பட்டது. அரசியல் அறிவு பெருத மக்கள் கூட்டத்தில் தோன்றிய ஒரு தலைவன் தனது வலிமையினுல் மக்களை ஆண்டு, அவர்களைப் பகைவர்களிடமிருந்து பாதுகாத்து வந்தான். அந்தத் தலைவன் காலப்போக்கில் மக்கள் நிலையாக வசிக்கும் நாட்டின் அரசனுகி விட்டான். இவ்வாறு, பல அரசர்கள் உலகின் பல பகுதிகளிலே ஆட்சிபுரிந்து வந்தனர்.

அந்தக் காலத்து அரசர்களின் அதிகாரம் எல்லையற்றது. அவர்களில் பெரும்பாலோரின் விருப்பமெல்லாம் தங்கள் அரசை விரிவாக்கவேண்டும் என்பதுதான்; தங்களரசுடன் பிற நாட்டைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற ஆசைதான் அவர்களை ஆட்டிவைத்தது. ஆதலால், வல்லரசுகளை நிலைநாட்டும் முயற்சிகளிலே பல போர்கள் நிகழ்ந்தன. இதனுல், படையெடுப்புகளும், போர்களும் உலக சரித்திரத்தில் மலிந்து கிடப்பதைக் காண்கிறேம்.

உலக வரலாற்றிலேயே மாபெரும் பேரரசராக இருந்தும் போர் முறையைக் கைவிட்டு, அன்பையும், அறத்தையும் உலகெங்கும் பரப்பிய பெருமை நமது பாரத நாட்டின் பெரும் பகுதியை ஒரு குடைக்கீழ் ஆண்ட அசோகப் பேரரசரையே சாரும்.

ஆனுல், உலக மன்னர்களெல்லாம் அசோகர்களாகத் திகழவில்லை. பரம்பரையாக வரும் அரச மரபில் இடையிடையே கொடுங்கோல் மன்னர்கள் தோன்றுவது இயல்பு. குடிகளின் நலனைப் புறக்கணித்துத் தங்களது இன்ப வாழ்வையும் போரையுமே நம்பி வாழ்ந்த அரசர் பலர். மன்னவனின் வாய்மொழியே வலிமை பொருந்திய சட்டமாக இருந்தது அக்காலத்தில். மக்கள், வாயிருந்தும் ஊமையராய் உழன்றனர். இருப்பினும், அவ்வப்போது தோன்றிய அறிஞர்கள் நீதி தவருத அரசு வேண்டும் என்று வலியுறுத்திவந்தனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்க நாட்டு அறிஞர்களான பிளேட்டோவும், அரிஸ்டாட்டலும் அரசாங்கத்தின் குறைகளை எடுத்துக்கூற மக்களுக்கு உரிமைவேண்டும் என்று போதித்தனர். மக்களின் சம்மதத்தின்படியே அரசு இயங்க வேண்டும் என்பது அரிஸ்டாட்டலின் கொள்கை. ரோமாபுரியில் தோன்றிய சிசரோ (Cicero) என்ற அறிஞர், தாம் எழுதிய "குடியரசு" என்ற நூலில், மக்கள் ஆணையின்படி நடக்கும் அரசில்தான் தன்னுரிமை மலரமுடியும் என்று அறிவுறுத்தினர்.

ஏறக்குறைய அதேகாலத்தில் இயற்றப்பட்ட திருக்குறளிலே "கொடுங் கோன்மை" வன்மையாகக் கண்டிக்கப் பட்டிருக்கிறது. குடிகளை வருத்தும் அரசன் கொலைஞர்களைவிடக் கொடியவன் என்கிறார் திருவள்ளுவர்.

"கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து" (குறள் : 551)

அரசர்கள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக்கொள்ளவும், குடிகளைத் தங்களுக்குப் பணிந்திருக்கச் செய்யவும், தங்களைத் தெய்வத்தின் சின்னங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். தெய்வ நியதியின்படி அதிகாரம் பெற்றுத் தாங்கள் ஆட்சி புரிவதாகக் கூறிவந்தனர்.

காலப்போக்கிலே, குடிகளிடம் கல்வியறிவு பரவியது; ஆளப் படுவோர் என்ற முறையிலே மக்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டது. அரசனும் ஒரு நியதிக்கு உட்பட்டுத்தான் அரசு செலுத்த வேண்டும் என்பதை மக்கள் உணர்ந்தனர். அல்லவை செய்தொழுகும் வேந்தர்களைப் பணியவைத்துக் குடிகளின் நலனுக்காகவே அரசன் ஆட்சிபுரிய வேண்டும் என்பதை, "குடிதழீஇக் கோலோச்சு"வதே மன்னவனின் கடமை என்பதை, மக்கள் அறிவுறுத்த ஆரம்பித்தனர். "குடி புறங்காத்து ஓம்பு"தலில் குற்றமிழைக்கும் மன்னர்களைக் குடிகள் எதிர்க்க முற்பட்டனர்.

இங்கிலாந்தில் கொடுங்கோன்மை நடத்திய ஜான் என்ற மன்னனை அந்நாட்டு மக்கள் பணியவைத்து, கி. பி. 1215 ஆம் ஆண்டிலே "குடிகளின் தன்னுரிமைப் பட்டயம் (சாசனம்)" (Magna Carta) ஒன்றில் அவனைக் கையெழுத்திடச் செய்தனர். அரசனின் அதிகாரத்தைவிடக் குடிகளின் நலனே உயர்ந்தது என்ற உண்மையைப் பறைசாற்றுவது, இந்தச் சரித்திரப் புகழ் பெற்ற தன்னுரிமைப் பட்டயம் (சுதந்திரச் சாசனம்). சில நூற்றாண்டுகளுக்குப்பின், சார்லஸ் என்ற மன்னன் இங்கிலாந்தில் கொடுங்கோலனாக ஆள ஆரம்பித்தான். கி. பி. 1628 ஆம் ஆண்டில், அந்த நாட்டை ஆளும் மக்கள்மன்றம் அவனிடம் "உரிமை விண்ணப்பம்" என்ற பத்திரத்தைக் கொடுத்து, மன்னனின் அதிகாரத்திற்கு வரம்பு கட்டியது. கொடுங்கோலனான சார்லஸின் செயல்கள் உள்நாட்டுப் போரைக் கிளப்பிவிட்டன. மக்களின் கட்சி முடிவில் வெற்றிபெற்று, நாடாளுமன்றம் கூட்டப் பட்டது. அந்த மன்றம் அரசனை நாட்டுத் துரோகி, கொடுங் கோலன் என்று தீர்மானித்து அவனுக்கு மரண தண்டனை விதித்தது. கி. பி. 1649 ஆம் ஆண்டில் சார்லஸ் மன்னனின் தலை துணிக்கப்பட்டது. தெய்வீக உரிமையோடு அரசு செலுத்துவதாகச் சொன்ன மன்னன், குடிகளால் கொடுங்கோலன் என்று

தீர்மானிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான்! அன்றிலிருந்து, அந்த நாட்டில் முடிமன்னர்கள் பெயரளவில் இருந்தாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோர்கள் கொண்ட நாடாளும் மன்றமே உண்மையில் ஆட்சி புரிந்து வருகிறது.

இங்கிலாந்தில் நடந்த இந்த நிகழ்ச்சி, ஐரோப்பாவில் அப்பொழுது இருந்த முடி மன்னர்களைக் கலக்கியது. ஆயினும், வருமுன்னர்க் காக்கும் அறிவோ, அறமோ, ஆற்றலோ அவர்க ளிடம் இருக்கவில்லை. பதினெட்டாம் நூற்றுண்டில், பிரான்சு தேசத்தில் பதினுலாவது லூயி என்ற மன்னன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தான். உலகத்தை ஆண்டுவந்த உன்மத்த மன்னர் களுக்கெல்லாம் சிகரமாக அவன் விளங்கினுன். அப்பொழுது பிரான்சில் வாழ்ந்த ஏழைமக்களின் நிலை மிகவும் இரங்கத் தகுந் தது. போதியஉணவின்றிப் புகலிடமின்றி, வேதனையுற்றுவெதும்பி நின்றனர். பசியால் வாடி ஏங்கி நின்ற மக்களை நோக்கி, "மைதானத்தில் விளைந்து கிடக்கும் புல்லை மேயலாமே" என்று ஏளனமாகக் கூறினுனும் இறுமாப்பு நிறைந்த அரசாங்க அதிகாரி. பசிக் கலகங்கள் பல கிளம்பின. கி. பி. 1789ஆம் ஆண்டில் பாரிஸ் நகர மக்கள் பொங்கி எழுந்து "பாஸ்டில்" என்ற சிறையைத் தகர்த்தனர். நாடு முழுதும் கொந்தளித்தது. ஆயுதங்கள் ஏது மின்றிப் பொதுமக்கள் அரசனின் படைப்பலத்தைச் சிதைத்தனர். அடிமைத் தளைகள் அகன்றன. பிரெஞ்சு நாட்டுப் பொதுமக்கள் செய்த அந்தப் புரட்சி, உலகசரித்திரத்திலேயே சிறப்புவாய்ந்தது. கி. பி. 1792ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டு மன்றம் கூடிக் குடியரசு நிறுவனத் திட்டம் செய்தது. லூயி மன்னன் மக்களிடம் மரண தண்டனை பெற்று உயிரிழந்தான். மக்கள் சபை "மனித உரிமைத் திட்டம்" ஒன்றை நிறைவேற்றியது. "தன்னுரிமை, சமத்துவம், சகோ தரத்துவம்," என்று அப்பொழுது அந்த நாட்டிலே எழுந்த மக்களின் வீர முழக்கம் உலகெங்கும் எதிரொலித்தது.

இங்கிலாந்தின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த அமெரிக்க நாடு பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கிலாந்துடன் போர் செய்து தன்னுரிமை பெற்றது. கி. பி. 1776 ஆம் ஆண்டு அமெரிக்க மக்கள் வெளியிட்ட தன்னுரிமை அறிக்கையில், "எல்லா மனிதர் களும் பிறப்பினுல் வேறுபாடற்றவர்கள்" என்று பறைசாற்றி மக்களாட்சியை நிறுவினுர்கள்.

கி.பி. 1914ஆம் ஆண்டில் முதலாவது உலகப்போர் ஆரம்பித்த பொழுது ரஷிய நாட்டில் நிக்கோலஸ் என்ற ஜார் அரசாட்சி செய்து வந்தான். யுத்தத்தில் ருஷ்யப்படைகள் தோல்வியடைந்து கொண்டு வந்தன. மன்னன் மக்களின் நலத்தில் சிறிதும் கவனம் செலுத்தவில்லை. நாட்டில் பஞ்சம் பரவியது; பட்டினி மக்களை

வாட்டியது. இதன் விளைவாகத் தொழிலாளர்களும் விவசாயிகளும் சேர்ந்து மாபெரும் புரட்சியை நடத்தி ஜார் ஆட்சியை ஒழித்தனர். கி. பி. 1917ஆம் ஆண்டு மக்களால் நிறுவப்பட்ட சோவியத் அரசாங்கம் உருவாகி நிலைத்தது. இரண்டாவது உலகப் போர் முடிந்தபின், பிற நாடுகளால் ஆளப்பட்டு வந்த பல நாடுகள் விடுதலை பெற்றன. அவ்வாறு விடுதலை அடைந்த நாடுகளில் குடியாட்சி நிறுவப்பட்டது. அந் நாடுகளில் முக்கியமானது நமது பாரத தேசம்.

ஜெர்மனி, இத்தாலிய நாடுகளில் மக்களால் அதிகாரத்தில் அமர்த்தப்பட்டவர்கள் அரசாங்கத்தின் படைவலியால் தங்கள் பதவிகளிலே நிலையாக இருக்கத் தலைப்பட்டனர். தங்கள் அதிகாரங்களையும் நாளடைவில் பெருக்கிக்கொண்டு தனி வல்லாட்சி (சர்வாதிகார ஆட்சி) நடத்தி வந்தனர். அந்த ஆட்சியிலே மக்கள் அடைந்த இன்னல்களும், அவர்கள் வாழ்ந்த பயங்கர நிலையும் மனித நாகரிகத்தின் சோகக் கதையாகும். இந்தத் தனி வல்லதிகாரிகளால் தொடங்கப்பட்ட இரண்டாவது உலகப் போர், அவர்களையும் அழித்து, தனி வல்லதிகார ஆட்சி முறையையும் அந்த இரு நாடுகளிலிருந்து மறையச் செய்தது.

இவ்வாறு, கொடுங்கோன்மை நிலவிய நாடுகளில், மக்கள் "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரே", அவர்கள் சிந்திய இரத்தமே, மன்னர்களைத் தேய்க்கும் படையாக அமைந்தது.

மக்கள் தங்களை ஆளும் உரிமையைத் தாங்களே அடைந்து குடியாட்சி உரிமை பெறுவதற்கு எத்தனையோ நூற்றாண்டுகள் ஆயின. காலப்போக்கிலே எண்ணற்றவர்கள் உலகின் பல பாகங்களிலும் உயிரை அர்ப்பணித்ததன் பயனாக அடைந்த ஒப்பற்ற செல்வம் குடியாட்சி ஆகும். அரசியல் வாழ்விலே மனிதன் அடைந்திருக்கும் இந்தத் தன்னாட்சி உரிமை, மனித வரலாற்றிலே அவன் அடைந்த பெரும் வெற்றியாகும். கலைகளிலே, இலக்கியத்திலே, விஞ்ஞானத்திலே மனிதன் அடைந்திருக்கும் முன்னேற்றம்பற்றி அவன் பெருமைப்படுவதைப் போலவே, தன்னைத்தானே ஆண்டுகொள்ளும் உரிமையை அவன் அடைந்தது பற்றியும் பெருமையும் களிப்பும் கொள்ளலாம். இதுவே, அரசுமுறை கோனாட்சியில் தோன்றி, குடியாட்சியாக மலர்ந்த கதையின் சுருக்கமாகும்.

3. அரசு: அன்றும், இன்றும்

உலகில் முடியரசுகள் குடியரசுகளாக மாறிய வரலாற்றைக் கண்டோம். இனி, கோனாட்சி முறைக்கும் குடியாட்சி முறைக்குமுள்ள வேறுபாட்டைப் பற்றி ஆராய்வோம்.

ஆதிகால அரசர்கள் தங்களது நாட்டைப் பிறர் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பது, மக்களுக்குள் எழும் வழக்குகளைத் தீர்த்து நீதிவழங்குவது, இந்த இரண்டு காரியங்களையே தலையாய கடமையாய்க் கொண்டு ஆட்சிபுரிந்தனர்.

ஆனால், மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் ஆட்சியிலே, குடிகளின் எல்லா நலன்களும் பேணப்படுவது இயல்பேயாகும். தங்கள் வாழ்விற்கு இன்றியமையாத நலன்களைப் பெற்று, மக்கள் இன்பமாக வாழவேண்டும் என்பது மக்களாட்சியின் உயர்ந்த குறிக்கோளாக அமைகிறது.

அரசியல் வாழ்விலும், சமூக வாழ்விலும், பொருளாதார வாழ்விலும் மக்கள் அனைவருக்கும் சம உரிமை இருக்கவேண்டும். அரசியல் அதிகாரத்திலே எல்லாருக்கும் ஓரேவிதப் பங்கு இருக்க வேண்டும். இது அரசியல் நீதி. ஒவ்வொருவருக்கும் ஓரேவிதமான வாக்குரிமை அளிப்பதன்மூலம் இந்த அரசியல் நீதி அமைகின்றது. சமூக வாழ்விலே, பிறப்பினால் மக்களுக்குள் ஏற்றத் தாழ்வு இருப்பது இயற்கைக்கு மாறுபட்டதாகும். ஆதலால், பிறப்பினால் எவருக்கும் தனிச் சலுகை அளிக்காமல், மக்களாட்சியில் அனைவரும் சமமாகவே நடத்தப்படுகின்றனர். இது, சமூக வாழ்விலே உள்ள சம உரிமை, சமூக நீதி. நாட்டின் இயற்கை வளங்களை நுகர்வதில் மக்கள் அனைவருக்கும் சம உரிமை வேண்டும். இது பொருளாதார நீதியாகும்.

பொருளாதார நிலையில் மக்களிடையே மாறுபாடுகள் இருப்பது இயல்பாகிறது. பின்பு, பொருளாதார வாழ்விலே இந்தச் சமத்துவ உரிமையை ஏற்படுத்துவது எப்படி? சமூக, அரசியல் சம உரிமையைச் சட்டங்கள் மூலமாக நிலை நாட்ட முடியும். ஆனால், பொருளாதார சம உரிமையைக் கொள்கையளவில் உறுதியாகப் பறை சாற்றுவதால் மட்டும் மக்கள் அடைந்துவிட முடிவதில்லை. ஏனெனில், மக்கள் இயல்பாகவே திறமையிலும், மற்றச் சிறப்புக்களிலும் வேறுபட்டவர்கள். அவரவர்களின் திறனுக்கேற்பப் பொருளை ஈட்டுகின்றனர், வாழ்க்கையில் வளம் பெறுகின்றனர். ஆதலால் பொருளாதார நிலையில் மக்களிடையே மாறுபாடுகள் இருப்பது இயல்பாகிறது. பின்பு, பொருளாதார நீதி என்று எதைக் கூறுகிறோம்?

பொருளாதார நீதியென்றால், எல்லோரையும் ஒரே நிலைக்கு உயர்த்துவதோ அல்லது தாழ்த்துவதோ என்பது அன்று. அவ்வாறு செய்வதும் இயலாததாகும். பொருளாதார நீதி யின்படி, வாழ்விற்கு அடிப்படையான பொருள்கள் எல்லோருக் கும் கிடைக்க வேண்டும். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு, இவை மக்களின் வாழ்விற்கு அடிப்படைத் தேவைகள். ஒருவர் மாடமாளிகையில் மகிழ்வுடன் வாழ்வதும், இன்னொருவர் குடியிருக்கக் குடிசைகூட இல்லாமல் கொதித்து நிற்பதும் சமூக நீதியாகாது. மக்கள் அனைவரின் இன்ப வாழ்விற் காக இயங்கும் குடியரசு முறையிலே, ஒருவர் வாழவும் ஒருவர் வாடவும் உள்ள நிலை இடம்பெற முடியாது.

குடிகளின் அடிப்படைத் தேவைகள் அளிக்கப்பட வேண்டும். இந்த உண்மையை இடித்துரைக்கும் முறையில் எழுந்ததே, "தனி யொருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்", என்ற பாரதியின் வீரமுழக்கம். இல்லாமையாகிய வறுமையை நெருப்பைவிடக் கொடியது என்கின்றார் வள்ளுவர்.

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது." (குறள் : 1049)

அம்மட்டோடு அவர் நின்றுவிடவில்லை. அறவாழ்வை எடுத் துரைக்கும் வள்ளுவரின் உண்மை ஒளிரும் உள்ளம், வறுமையின் காரணமாக ஒருவன் இரந்து வாழ்வதைக் காணும்போது, கொதித்துக் குமுறுகின்றது. இவ்வுலகில் சிலர் இரந்துதான் உயிர் வாழவேண்டும் என்ற அவசியமிருந்தால், இவ்வுலகத்தைப் படைத்தவனே அலைந்து கெடுவானாக என்று சீறுகின்றார்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற் றியான்" (குறள் : 1062)

பொதுநல அரசு

இவ்வளவு கொடுமையான வறுமையைப் போக்காவிடில், மக்களிடையே இன்பவாழ்வு இருக்கமுடியாது. ஆதலால், "இல்லை என்ற சொல்லை இல்லையென்றாக்கும்" பெருமுயற்சியில் குடியரசு ஆட்சிமுறை தீவிரமாக ஈடுபடுகிறது. இதற்காக மக்களின் கல்வி, உடல்நலம், விளைபொருள் வளம் இவைகள் பற்றியெல்லாம் அரசாங்கம் அக்கறையெடுத்துச் சட்டங்கள் இயற்றுகின்றது. மக்கள் எல்லோருடைய நலத்தையும் கருத்திற்கொண்டு மக்களாட்சி இயங்குவதால், அந்த ஆட்சி முறையைப் "**பொது நல அரசு**" (Welfare State) என்று கூறுவதுண்டு.

குடிஅரசு, பொதுநல அரசாக இயங்குவதுதான் முறை. இதை எந்நாட்டினரும் ஏற்றுப் போற்றுகின்றனர். உலகில்

முன்னேற்றமடைந்துள்ள எல்லா நாடுகளிலும் நடைபெறும் ஆட்சிமுறைகள், எந்தப் பெயருடன் விளங்கினாலும், பொதுநல அரசுகளாகவே இன்று இயங்குகின்றன.

பொது நல அரசாக ஆட்சிமுறை அமையும் பொழுது, அரசின் அலுவல்களும் அதிகாரங்களும் விரிந்து பரவுகின்றன. பயிர், வாணிபம், கல்வி, கலைதொழில் முதலிய துறைகளில் எல்லாம் மக்களின் வாழ்வு அரசால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. பொது நலனைக் கருத்திற்கொண்டு, அதற்கு இசைய மக்கள், வாழ்வில் பலதுறைகளிலும் இயங்கும்படி அரசு விதிக்கிறது,

பொதுநலனும் தனிநலனும்

பொது நலனையே குறிக்கோளாகக்கொண்டு, அரசு இயங்கும் பொழுது, மக்களின் தனிநலன் ஒருவேளை புறக்கணிக்கப்பட்டு விடலாம்; பொதுநலனைப் பெருக்கவேண்டும் என்ற ஆர்வத்தால் மக்களின் தனிநலன்கள் அழிக்கப்படுவது கூடாது. அவரவர் களின் தனிநலன்கள் பாதிக்கப்படாத முறையிலே மக்களின் பொது நலன் விருத்தி செய்யப்படவேண்டும்.

தனி நலன் என்பது ஒவ்வொரு மனிதனின் தனி உரிமையே யாகும். தங்களுக்குரிய தன்னுரிமையை இழந்து, மக்கள் வாழ்வது சமூக நீதியாகாது.

இசைந்து வாழ்தல் என்பது இசைவுபட வாழ்வதேயாகும். தன்னுரிமையை இழந்து வாழ்வதன்று.

இந்தத் தனிமனிதனின் தன்னுரிமை (Individual Liberty) இல்லாத மனிதன் மனிதனாக வாழ்வது முடியாது. ஆதலால், பொது நலத்திற்காக இயங்கும் அரசு, மக்களின் தனி நலத்தையும், தனிப் பட்ட தன்னுரிமையையும் போற்றவேண்டும் என்பது உலக அறிஞர்கள் கண்ட உண்மை.

மனிதனின் தனித் தன்னுரிமை, உலகில் வாழும் மனிதர்கள் அனைவருக்கும் அவசியமானது. ஒரு தனிப்பட்ட நாட்டின் மக்களுக்கென்றோ, ஒரு காலத்திற்கென்றோ இல்லாமல், உலகில் வாழும் மக்கள் யாவருக்குமே, மனித குலத்திற்கே, பொதுவானதாக இருப்பதால், மனிதனின் தனித் தன்னுரிமையை "மனித உரிமை" என்பார்கள். அந்த உரிமையின்றி மனிதன் இன்பமாக வாழ்வது இயலாத தாகையால், அந்த உரிமையே அவனது வாழ்விற்கு ஆதாரமாக அமைவதால், அதை, "ஆதார உரிமை" (Fundamental right), அல்லது "அடிப்படைச் சுதந்திரம்" என்று அழைப்பதுண்டு.

இனி, இந்த "ஆதார உரிமை (மனித உரிமை)" என்பது என்ன என்று காண்போம்.

4. ஆதார உரிமைகளின் அடிப்படைத் தத்துவம்

(அ) "மனிதன்" என்ற சொல் எதைக் குறிக்கிறது?

ஆதார உரிமைகள் மனிதர்கள் அனைவருக்குமே, மனித குலத்திற்கே, பொதுவான உரிமைகளாக இருப்பதால், அவைகளை **மனித உரிமைகள்** என்று கூறுகிறோம். மனித உரிமைகளின் உட்பொருளைப்பற்றி நாம் அறிய முற்படும் பொழுது, **மனிதன் என்ற சொல் எதைக் குறிக்கின்றது? மனிதனின் உரிமைகள் எத்தன்மையன?** என்ற இரு பொருள்களைப் பற்றியும் ஆராயவேண்டியது அவசியமாகிறது.

முதலாவதாக, "**மனிதன்**" **என்ற சொல் சுட்டிக்காட்டும் பொருள் எது என்பதைக் காண்போம்.**

'மனிதன்' என்று நாம் கூறும்பொழுது, அவனது புற உருவமான **உடலை மட்டுமின்றி**, அந்த உடலை இயக்கி நிற்கும் **உயிரையே** சிறப்பாகக் குறிப்பிடுகிறோம். உயிர் பிரிந்த உடலுக்கு, ஊரோ, பெயரோ, பதவியோ, பட்டமோ இல்லை. புள் பறந்து சென்றபின் தனித்து ஒழியும் குடம்பை போன்ற உயிரற்ற உடல், உயிர் பிரிந்த உடனே அழியும் சடப் பொருளாகி விடுகிறது. ஆதலால், உயிரே முக்கியமானதாகும் என்பது தெளிவு.

இந்த உயிர் கண்களுக்குத் தெரியாத நுண் பொருள். கண்களால் அதை நாம் பார்க்க இயலாததால், அஃது இல்லாத பொருள் என்று நாம் சொல்லிவிட முடியாது. உலகச் சமயங்கள் எல்லாம், நுண் பொருளான உயிர் என்று ஒன்று இருப்பதை ஒப்புக் கொள்ளுகின்றன. அவ்வாறு ஒரு சக்தி இருக்கின்றது, அது உடலை விட்டு நீங்கிய பின்னும் அழிந்து விடுவதில்லை, என்ற கொள்கையின் அடிப்படையில்தான் பலவகைச் சமயங்கள் தோன்றி இருக்கின்றன.

நம் நாட்டு மெய்ஞ்ஞானிகள், இவ்வாறு அழிவின்றி நிற்கும் சக்தியை "ஆன்மா" என்று அழைக்கின்றனர்.[1] இந்த ஆன்மாவே, அழிவில்லாத, நிலையான பொருள்; உலகில் உள்ள மற்ற பொருள்களெல்லாம் அழியும் தன்மை உடையன; ஆதலால்,

1. *உயிருக்கும் உயிராக, உயிரினுள் நின்று இயக்கும் சக்தியே ஆன்மா; ஆதலால் ஆன்மா வேறு, உயிர் வேறு என்பதே வேதாந்தக் கொள்கை. ஆனால், இந்தச் சட்ட நூலிலே, அந்த நுட்ப ஆராய்ச்சியில் புகாமல், உயிரையும் ஆன்மாவையும் ஒன்றாகவே கொண்டுள்ளோம்.*

ஆன்மாவே மெய்ப்பொருள் என்பது அவர்கள் காணும் உண்மை.

சாதாரணமாக, அறிவியல் நூல்களிலே (Science) ஆன்ம விசாரணைக்கோ, மெய்ப்பொருளின் தத்துவ ஆராய்ச்சிக்கோ இடமில்லை. ஆனால், சட்டவியல் வெறும் அறிவியல் மட்டுமன்று; அஃது ஒரு வகையில் சமூகவியலும் ஆகிறது. மற்ற அறிவியல் நூல்கள் பருப்பொருள்களைப் பற்றிமட்டும் ஆராய்வன. மனிதனின் சமூக வாழ்வை ஒழுங்குபடுத்தும் சட்டம், மனிதனைப் பற்றியும், அவனது சமூக வாழ்வைப் பற்றியும் ஆராய்கின்றது. மனித உரிமைகள் குறித்து ஆராயும் பொழுது, மனிதனைப் பற்றியும், மனிதன் என்ற சொல்லின் உட்கருத்துப் பற்றியும் சட்டவியலில் சிந்திப்பது அவசியமாகிறது.

சட்டத்தின் அடிப்படையிலேயே, சட்டத்தின் கண்கொண்டே, இந்த ஆராய்ச்சி செய்வது அமைதியுடையதாகும்.

சட்டவியல், "பொறுப்பு", "ஒப்பந்தம்" "உடைமை", "உரிமை", "சொந்தம்" "தண்டனை" என்ற சட்டக் கருத்துக்களை நுணுகி ஆய்கின்றது. அந்த ஆராய்ச்சியின் விரிவான விவரங்களை முன்னர்க் கண்டோம். மனிதனின் தன்மை பற்றி ஓர் அடிப்படைக் கொள்கையின்றி, மேலே சொன்ன கருத்துக்களை, சட்டம் ஆய்வது இயலாது. எந்தக் கொள்கையை ஆதாரமாகக்கொண்டு, பொறுப்பு முதலிய நுண் கருத்துக்களைச் சட்டம் ஆராய்கின்றது என நாம் காண முற்பட்டால், "மனிதன்" என்ற சொல்லைச் சட்டம் எந்த வகையில் ஏற்று இயங்குகிறது என்பது எளிதில் புலனாகும்.

"பொறுப்பு" (Liability) என்ற கருத்தைச் சட்டம் விளக்கும் விதத்தைக் காண்போம். ஒருவர் செய்த செயலுக்கு அவர் பொறுப்பாவதை, அச் செயலின் விளைவை அவர் அனுபவிக்க வேண்டிய அவசியத்தை, 'பொறுப்பு' என்று சட்டம் குறிக்கின்றது. ஒருவர் இழைத்த குற்றமான செயலுக்கு, அவரைப் பொறுப்பாக்குதற்குமுன், அவர் அந்தச் செயலைத் தீய எண்ணத்துடன் செய்தாரா என்பதைச் சட்டம் கவனிக்கிறது. தீமையான செயலைத் தீய எண்ணத்தோடு செய்தவரையே சட்டம் தண்டிக்கின்றது. தீய எண்ணம் சிறிதுமின்றிச் செய்யப்பட்ட செயல் பிறருக்குக் கேடு விளைவித்தாலும் அது குற்றம் ஆவதில்லை; அதைச் செய்தவரைக் குற்றவாளி எனச் சட்டம் கொள்வதும் இல்லை. இவ்வாறு, பொறுப்பைத் தீர்மானிப்பதில், புறத்தில் நிகழும் வெளிச் செயலைவிட, அகத்தில் நிகழும் எண்ணத்தையே சட்டம் முக்கியமாகக் கருதுகிறது. மனத் தூய்மையிலிருந்தே வினைத்தூய்மை தீர்மானிக்கப்படுகிறது. இதிலிருந்து, சட்டம், செயலைவிடச் சிந்தனைக்கும், இயக்கத்தைவிட எண்ணத்திற்கும் மதிப்பளிப்பது புலனாகும்.

ஆகவே, ஒருவனது எண்ணமே அவனைக் குற்றவாளியா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரைகல்லாக அமைகிறது.

ஓர் ஒப்பந்தம் செயல் படுத்தப் படத்தக்கதா என்பதைத் தீர்மானிப்பதற்குமுன், அந்த ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் மனம் ஒன்றி அதைச் செய்து கொண்டனரா என்பதைச் சட்டம் ஆராய்கின்றது. எழுதப்பட்டிருக்கும் உடன்பாட்டுப் பத்திரத்தை விட, அதில் பொதிந்திருக்கும் இசைவு எண்ணமே (Consensus ad idem) முக்கியமாகிறது. சம்பந்தப்பட்டவர்களின் மனது ஒன்ருத செயலைச் செல்லத்தகுந்த ஒப்பந்தமாகச் சட்டம் கொள்வதில்லை.

"உடைமை" (Possession) என்ற கருத்தை எடுத்துக் கொள்வோம். உடைமை எண்ணமும் உடைமைச் செயலும் ஒன்றியிருந்தாலே சட்டப்படியான உடைமை பிறக்கிறது. எனது பெட்டியைச் சுமந்துவரும் கூலியாளின் கையிலே பெட்டி இருந்தாலும் கூட, கூலியாளுக்கு "பெட்டி தன்னுடையது" என்ற உடைமை எண்ணம் இல்லாததாலும், அந்த எண்ணம் எனக்கே இருப்பதாலும், பெட்டியின் உடைமை என்னிடம் இருப்பதாகவே சட்டம் கொள்கிறது. இங்கும், புறச் செயலைவிட எண்ணத்திற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

"சொந்தம்" (சொத்துரிமை) (Ownership) என்ற கருத்துப் பற்றி நாம் முன்னர் ஆராயும்பொழுது, பருப்பொருள்மீது நமக்குள்ள உரிமையைத்தான் 'சொந்தம்' என்ற சொல் குறிக்கிறது எனக் கண்டோம். ஒருவரது 'உரிமை' என்பது, சட்டத்தால் பாதுகாக்கப்படும் அவரது நலனேயாகும். எனக்குச் சொந்தமான வீட்டைப் புழங்கும் நலன், அதைப் பொறுத்த உரிமை, எனக்கு இருக்கிறது. "எனக்கு" என்று நான் கூறும் பொழுது, நான் எதைக் குறிக்கிறேன்? பருப்பொருளான கட்டிடத்திற்கும் எனது உடலுக்கும் எந்த உறவும் இல்லை, இருக்கவும் முடியாது. எனது உடலை இயக்கும் உயிர்தான் அந்த வீட்டைப் புழங்கும் உரிமையை உடையதாய் இருக்கிறது. நுண் பொருளான எனது உயிருக்கும், அந்த வீட்டைப் புழங்கும் உரிமை என்ற நுண் பொருளுக்கும் உள்ள உறவையே, "சொந்தம்" அல்லது "சொத்துரிமை" என்ற சொல் சட்டப்படி குறிப்பதாகும். நான் இறந்தபின், உயிர் பிரிந்த எனது உடலுக்கு, இந்த வீடோ, உலகப் பொருள் எதுவுமோ சொந்தமாக இருக்க முடியாது. எந்தப் பொருள்மீதும் இறந்தவர்களுக்கு உரிமை இருப்பதாகச் சட்டம் கொள்வது இல்லை. ஆகவே, சொந்தம் (சொத்துரிமை) என்பதை, எனது உயிரை ஒட்டிய உரிமையாகவே சட்டம் விதிக்கிறது என்பது தெளிவாகும்.

கொலைக் குற்றவாளிக்கு அளிக்கப்படும் மரண தண்டனையின் தன்மை என்ன? அந்தத் தண்டனை அவனது உடலுக்கா,

உயிருக்கா? கொலைக் குற்றம் செய்தவன், இனி இவ்வுலகில் வாழ்வது தகாது என்று கருதி, சட்டம் இவ்வுலகிலிருந்து அவனை அகற்றுகிறது. அவ்வாறு அகற்றப்படுவது, மரண தண்டனை நிறைவேற்றப்பட்டபின் குற்றவாளி விட்டுச் செல்லும் பூத உடலை அன்று; உடலிலிருந்து பிரிக்கப்பட்டு, இவ் வுலகிலிருந்து அகற்றப்பட்ட அவனது உயிரைத்தான். ஆகவே, குற்றவாளியின் உடலில் உறைந்து நிற்கும் உயிரே கொலைக் குற்றத்திற்குப் பொறுப்பாகக் கருதப் படுகிறது, இந்த உலகிலிருந்தும் அகற்றப்படுகிறது என்பது தெளிவாகும்.

இவ்வாறு, "உரிமை", "உடைமை", "சொந்தம்" "பொறுப்பு", முதலிய முக்கியமான சட்டக் கருத்துக்களை விளக்கு கையில், எண்ணம் மனம் உயிர் இவைகளையே அடிப்படையாகக் கொண்டு சட்டம் இயங்குகிறது என்பதை நன்கு அறிகிறோம். அடிப்படையான இந்தச் சட்டக் கொள்கைகள், உள் எண்ணத் தைப் பொறுத்தே இருக்கின்றன, வெளிச் செயலைப் பொறுத்தல்ல; உயிரை ஒட்டியே இருக்கின்றன, உடலை ஒட்டி அல்ல என்பது வெளிப்படை.

"உயிர் என்று ஒரு சக்தி உண்டு, அதை ஆதாரமாக வைத்தே சட்டக் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன. சட்டத்தைப் பொறுத்தவரை, ஒருவரது எண்ணமும் அதைத் தோற்றுவிக்கும் உயிருமே அடிப்படையானவை" என்ற உறுதிப்பாடு சட்டவியலின் ஆதாரக் கொள்கையாக அமைந்திருப்பதை ஐயமற அறிகின்றோம்.

இன்னும் சிறிது நாம் சிந்தித்தால், உயிர், எண்ணம் என்ற கருத் துக்களை அடிப்படையாக ஏற்றுக்கொள்ளாமல், சட்டவியலில் உள்ள கருத்துக்களை விளக்குதல் இயலாது என்பது புலனாகும். ஆகவே, சட்டவியலில் வரும் "உரிமை", "உடைமை", "சொந்தம்", "பொறுப்பு" என்ற கருத்துக்கள் மனிதனின் உடலைப் பொறுத்தல்ல, அவனது உயிரைப் பொறுத்தே இருக் கின்றன என்பதைத் தெளிவாகக் காணுகிறோம்.

எனவே, எண்ணத்தையும் அதைத் தோற்றுவிக்கும் உயிரை யும் ஆதாரமாகக் கொண்டு சட்டத்தை விளக்கும் சட்டவியல், கண்ணுக்குத் தெரியாத உயிர் என்ற சக்தியை ஒப்புக்கொண்டு, அந்த அடிப்படையிலேயே இயங்குகிறது என்பது தெளிவாகிறது. இவ்வாறு, மெய்யறிவு நூல்கள் காணும் உயிர் நிலையை, அறிவு நூலான சட்ட வியலும் ஏற்று இயங்குகிறது. இனி, உயிர், ஆன்மா என்ற சொற்கள் சட்ட வியலில் இடம் பெறுமா என்ற கேள்விக்கு இடமில்லை.

இதுவரை நாம் கண்டது என்ன? மெய்யறிவு நூல்களின் படியும், சட்டவியலின் படியும், "மனிதன்" என்ற சொல் அவனது உடலினுள் இருந்து இயக்கும் உயிரையே-ஆன்மாவையே-குறிக்கின்றது என்பது ஆகும்.

(ஆ) உயிரின் - ஆன்மாவின் - தனிச் சிறப்பு

அவனது ஆன்மாவே மனிதனை மாண்பு மிக்கவனாகச் செய்கின்றது.

உலகப் பருப்பொருள்கள் அனைத்தும் மாறி அழியும் தன்மை உடையன. ஆனால், ஆன்மா நிலைபெற்றது, அழிவில்லாதது.

(இ) • உயிரும், உலகப் பொருள்களும்

இந்த ஆன்மாவிற்கும் உலகப் பொருள்களுக்கும் உள்ள உறவு நிலையற்றது. ஏன்? பருப்பொருட் செல்வங்களான பொன்னும் பொருளும், உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் பயனற்றதாகின்றன. உடலை நீத்து உயிர் செல்வது எப்பொழுது என்பதை எவரும் அறிவதில்லை. ஆகவே, உயிருக்கு உலகப் பொருள்கள் மீதிருக்கும் உரிமைகளெல்லாம், அது உடலைவிட்டுப் பிரிந்த அதே நேரத்தில் மறைந்து விடுகின்றன. இறந்தவர் எவரும் அவர்களுடைய பருப்பொருள் உடைமைகளை உடனெடுத்துச் சென்றதில்லை. அதனால், பருப்பொருள்கள் எல்லாம் உயிரைப் பொறுத்தமட்டில் நிலையற்றவையாகவும், உடலைவிட்டுஅது பிரிந்த பின் பயனற்றவையாகவும் ஆகிவிடுகின்றன. இந்த உண்மையை நாம் உணராமல், பருப்பொருட் செல்வங்கள்மீதுள்ள உரிமைகள் நிலையானவை என்று கொள்ளுவது புல்லறிவாண்மையாகும்.

"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை." (குறள் : 331)

இந்தப் பருப்பொருள்களின் தன்மையிலிருந்து, முற்றிலும் வேறுபட்டவை கல்வி, அறிவு, அன்பு போன்ற குண நலன்கள். ஒருவர் தமது கல்வி நலத்தையோ, நுண்ணறிவின் திறனையோ தம் பிள்ளைகளுக்கு அளித்துவிட்டு இறந்தார் என்பது இயலாததாகும். இவை எல்லாம் உயிருடன் ஒன்றி நிற்கும் தன்மை உடையன. பருப்பொருள்கள்போல் உலக வாழ்வோடு நின்று போவதில்லை. ஆதலால்தான், கல்வியை "கேடில் விழுச்செல்வம்" என்றும், அது "ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என்றும் சிறப்பித்து வள்ளுவர் கூறுகின்றார். கேள்வி, அறிவு, அருளுடைமை போன்ற குணநலச் செல்வங்களை, "செல்வத்துட் செல்வம்" என்று அவர் போற்றுகிறார். இச் செல்வங்கள் உயிரோடு ஒன்றி நிலைத்து நிற்கும் தன்மை உடையன. ஆதலால் தான் அவை விழுச் செல்வங்கள் ஆகின்றன. "பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் மருள்" நீங்கியவர்கள், உயிர் ஒன்றே நிலையானது என்பதையும், கல்வி, அறிவு போன்ற குண நலன்களே உயிருடன் ஒன்றி நிற்கும்சிறந்த செல்வங்களென்றும்,

மற்ற பருப்பொருட் செல்வங்களனைத்தும் நிலையற்றவை, பொருளல்லவை என்றும் ஓர்ந்து உணர்கின்றனர்.

இவ்வாறு, உயிரை அடிப்படையாக வைத்தே, உலகப் பொருள்களின் மதிப்பு அளக்கப்படுகிறது.

(ஈ) ஆன்மாவே உண்மையில் வாழ்கின்றது

உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் விடச் சிறப்புடையது ஆன்மா. உலகப் பொருள்களைத் துய்ப்பதும், இன்பத்தை நுகர்வதும் ஆன்மாவே ஆகும். கண்ணுக்குப் புலப்படாத இனிய இசையையும், நறுமணத்தையும், நுண் பொருளான இலக்கிய நயத்தையும், ஓவியத்தின் உள்ளழகையும் நுகர்ந்து மகிழ்வது நுண் பொருளான ஆன்மாவேயாகும். வேதனைப்படுவதும், வெறுப்புக்கொள்வதும், அன்பு காட்டுவதும், ஆதரவு அளிப்பதும், சிரிப்பதும், அழுவதும் எல்லாம் ஆன்மாவின் செயல்களே ஆவன. இவ்வாறு, மனித உடலினுள் உறையும் ஆன்மாவே உண்மையில் வாழ்கின்றது.

(உ) ஆன்மாவின் அடிப்படையில் அனைவரும் சமமே

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்." (குறள் : 972)

ஆன்மாவை - மனிதனை மையமாகவைத்தே உலகப்பொருள்கள் அனைத்தையும் காண்கிறோம். மனிதனின் தனிச் சிறப்பு, அவனது ஆன்மாவின் அடிப்படையில் அமைவதால், மனிதர்கள் ஒவ்வொருவருமே சிறப்புடையவர் ஆகின்றனர். அவர்களது தனிப் பெருமை அவர்களிடமுள்ள உலகப் பொருள்களைப் பொறுத்தது அன்று; அவர்களின் ஆன்மாவைச் சார்ந்ததே ஆகும். எல்லா மனிதர்களின் உயிர்களும் அழிவில்லாதவை, நிலையானவை. இவ்வாறு ஓரே தன்மை உடையவை. ஆதலால், ஆன்மாவின் அடிப்படையில் மனிதர்களை மதிப்பிடும்போது, அனைவரும் சமமானவர்களாகவே ஆகின்றனர். பலவகைகளிலும் அவர்களிடையே வெளி வேறுபாடுகளை நாம் கண்டாலும், ஆன்மா அடிப்படையில் அவர்கள் எல்லோரும் ஒரே தன்மை உடையவர்களே.

"வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் — அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் — இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்." (பாரதியார்)

உலகில் வாழும் மனிதர்கள் பல வகைளில் மாறுபட்ட தன்மையுடன் வேறுபட்டுத் தோன்றுகின்றனர். மன நலன்களாலும், மதி நுட்பத்தாலும், செல்வத்தாலும், சீரியபண்பினாலும், மக்களிடையே

ஏற்றத் தாழ்வு உண்டு. அண்டங்களைத் தாண்ட ஆராய்ச்சி செய்வோரும், உண்டு உறங்கியே உயிர் வாழ்ந்திருப்போரும்; அன்பே செய்து அறம் போற்றி வாழ்வோரும், இன்பத்தைக் கெடுத்து இடர் செய்யும் ஈனர்களும்; கோடி கோடியாய்த் தேடி வைத்திருப்போரும், ஓடி உழைத்தும் ஒன்றும் இல்லாதவரும்; இவ்வுலகில் வாழ்கின்றனர். இவர்களுக்குள்ள வேறுபாடுகள் அதிகம்தான். ஆயினும், இந்த மாறுபட்ட மனிதர்கள் அனைவரையும்; உட்பொருளாய் இருந்து இயக்குவது அவர்களது ஆன்மாவேயாகும். இசைபடக் கற்றோர்க்கும் எழுத்தறியாதிருப்போர்க்கும், நல்லார்க்கும், பொல்லார்க்கும், எல்லார்க்கும் பொதுவாக இருக்கும் ஆன்மா, அடிப்படையில் ஒருதன்மை உடையதே. இவ்வுலக வாழ்விலே தோன்றும் உயர்வும் தாழ்வும், பெருமையும் சிறுமையும். வலிவும் மெலிவும், நித்தியமான ஆன்மாவை நிலையாகப் பாதிப்பது இல்லை.

> ''மானுடச் சாதி ஒன்று; மனத்திலும்
> உயிரிலும் தொழிலிலும் ஒன்றேயாகும்'' (பாரதியார்)

''எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர் இனம்'' என்று கவி பாரதியார் பாடியது ''ஒன்றே மெய்ப்பொருளாம்; உயிர்களெல்லாம் அதன் வடிவாம்'' என்ற உண்மையை ஒட்டியேதான்.

(ஊ) சட்டத்தின் முன் அனைவரும் சமமே (சட்டம் ஒழுகும் சமநெறி)

இவ்வாறு, ஆன்மாவின் அடிப்படையில் அனைவரும் ஒரே நிலையில் இருப்பதால், சட்டம் மக்கள் அனைவரையும் சம நிலையோடு காணவேண்டும். ஒரு மனிதனுக்கும் இன்னொருவருக்கும் கல்வியை வைத்தோ, செல்வத்தை வைத்தோ, வேறெந்தச் சிறப்பை வைத்தோ வேற்றுமை பாராட்டுதல் தகாது. ''சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம்'' என்ற உண்மை, அடிப்படை உரிமைகளில் ஒன்றுகிறது.

முறை செய்தலின் அடிப்படை, அதன் இறைத் தன்மை—நடுவு நிலைமை—ஆகும். முறைசெய்ய முன்நிற்கும் சட்டம் இறைத் தன்மையோடு, மக்கள் அனைவரையும் ஒரே கண்கொண்டு பார்த்தலே அறமாகும். வலியார்க்கு ஒரு நீதி, மெலியார்க்கு ஒரு நீதி, செல்வம் உடையவர்களுக்கு ஒரு நீதி, அஃது இல்லாதவர்களுக்கு வேறொரு நீதி, கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மாறுபட்ட நீதிமுறை என்று ஏற்பட்டால், அதை நாம் நீதி முறைமை என்று கூற முடியாது.

''இறை'' என்ற சொல் தெய்வத்தையும், நடுவு நிலைமையையும் குறிப்பதாகும். நடுவு நிலைமையைத் தெய்வத் தன்மையாகப்

போற்றியே நம் முன்னேர்கள், இறையின் அடிப்படையில் முறை செய்தல் வேண்டும் என்று விதித்திருக்கின்றனர். ஒளி இல்லாதது மணியாகாது; வெப்பமில்லாதது நெருப்பு ஆவதில்லை. அது போல், இறைமை இல்லாதது முறைமை ஆகாது. ஆதலால், முறை செய்வது என்ருல், அது நடுவு நிலைமை தவருமல் இறைத் தன்மையோடு இருக்க வேண்டும்.

இவ்வாறு மனிதர்களின் - ஆன்மாக்களின் - மெய்த்தன்மை யையும், சட்டத்தின் அடிப்படைத் தன்மையையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது, "சட்டம், மக்கள் எல்லோரையும் ஒரே கண் கொண்டு நோக்க வேண்டும்"; "சட்டத்தின் முன் அனைவரும் சமமே" என்ற அரிய உண்மை எளிதிற் புலனுகும். மக்களிடையே, "சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபாற் கோடாது" சட்டம் இயங்கவேண்டும். மக்கள் அனைவரையும் சமநிலையில் கண்டு, அந்தச் சமத்துவ நெறியின் அடிப்படையில் ஒழுகுகின்றது சட்டம்.

இந்த உண்மைதான், "சட்டத்தின் முன் சமத்துவம்" (Equality before Law) என்ற மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்ருக விளங்குகிறது.

(ஏ) ஆன்மாவின் இன்பம் எது?

மனிதனின் அடிப்படை உரிமை என்ருல், மனிதனுடைய உடலுக்குள்ள உரிமைகளல்ல; அவனது உயிருக்கு, ஆன்மா விற்கு உள்ள உரிமைகள் என்பதை நாம் எளிதில் உணருகிருேம்.

மனிதனது வாழ்வின் இன்பங்களை, நலன்களைப் பாதுகாப்ப தையே உரிமைகள் என்கிருேம். ஆகவே, மனிதனின் அடிப்படை யான உரிமைகள், அவனது அடிப்படையான இன்பத்தை, ஆன்ம இன்பத்தைப் பாதுகாப்பதாக அமைவதேயாவன.

மனிதனின் அடிப்படை இன்பம், ஆன்ம இன்பம் எது?

ஒரு தனி மனிதனைப் பொறுத்தவரை, அவனின் குண நலன் களைக் கண்டு, அவனுக்கு எது இன்பத்தைக் கொடுக்கின்றது என்று உறுதி செய்துவிடலாம். ஆனல் பல்வேறு இயல்புகளையும் சிறப்புக்களையும் உடைய மனிதர்களிடம், பொதுவான அடிப் படைத் தன்மையுடன் அமைந்து நிற்கும் ஆன்மாக்களின் இன்பத்தை எதைக்கொண்டு தீர்மானிப்பது? வேறுபட்ட குண நலன்களைக் கொண்டு ஒழுகும் ஆன்மாக்களின் போக்கு வியப் பானது. ஒரு மனிதனுக்கு இன்பமாகத் தோன்றுவது இன்னெரு வனுக்குத் துன்பமாக இருக்கிறது. ஒரு மனிதன் எந்தப் பொருள் கிடைக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டு அலைவுற்று நிற்கின் ருனே, அந்தப் பொருளைப் பொருளாக மதியாமல் இருக்கிருன் இன்னெரு மனிதன். பொன்னும் பொருளும் மின்னல் போன்

றவை; மெய்ப்பொருளல்லாதவை என்று எண்ணும் துறவுள்ளம் படைத்தோரும், அவை இல்லையேல் வாழ்வு தாழ்வாகிறது என்று எண்ணி ஏங்கிநிற்போரும், நம்மிடையே உண்டு. ஈத்துவப்பதில் இன்பம் பெறுவாரும், சேர்த்து வைப்பதே சிறப்பென்று கொள்வாரும்; ஓடி உழைப்பதில் உயர்வு காண்போரும், ஓய்ந் திருப்பதில் உவகை கொள்வோரும் இருக்கின்றனர். தன்னலம் பேணித் தனி இன்பம் அடைவோர் பலர், பிறர்நலம் பேணிப் பெருங்களிப்புக் கொள்பவர் சிலர், ''இன்பத்துள் இன்பம் விழை யாத'' ஏற்றம் உடையோரும் உளர். இவ்வாறு, மாறுபட்ட இன்ப உணர்வுகள் மனிதர்களுக்குள் இருக்கின்றன. இதற்குக் காரணம் கூறுவது இயலாது.

மக்கள் அவரவர்களின் இயல்புக்கேற்ப இன்பங்களை விழை கின்றனர். மாறுபட்ட இயல்புகள் ஆன்மாக்களுக்கு இருப்பதால், வேறுபட்ட இன்பங்களை அவை நாடுகின்றன. ஆகவே, ஆன்மா அடையும் இன்பம் அதன் இயல்பைப் பொறுத்ததாகிறது.

இம்மாதிரியே, மனிதர்களின் சிறப்புத் திறமைகள் ஒரு தன்மை உடையன அல்ல. காவியம் புனைபவர் ஒருவர், ஓவியம் வரைபவர் ஒருவர், இன்னிசைக் கலைஞர் ஒருவர், பன்மொழிப் புலவர் மற்றொருவர். அணுவைப் பிளந்து அதன் ஆற்றலை அளக்கும் விஞ்ஞானியும், அகத்தையடக்கி ஆனந்தம் காணும் மெய்ஞ்ஞானியும், வெவ்வேறு சிறப்பியல்புகள் கொண்டவர்கள். பலவகைப்பட்ட திறன்கள் மனிதர்களிடம் இருப்பதாலேயே, நம் வாழ்வு சிறப்படைகின்றது. அறிவும், உணர்வும், கருத்தும், கலை யும், விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும நம் வாழ்விலே மேம்பட்டு நிற்பது, வெவ்வேறு மனிதர்களிடம் வெவ்வேறு சிறப்புக்கள் அமைந்திருப்பதால்தான். ஒரு துறையில் திறன் பெற்று விளங்கு பவர் மற்றொரு துறையில் சிறப்பாக விளங்குவதில்லை. ஏன்? இந்தச் சிறப்புத் திறன்கள், அவரவர்களின் இயல்புகளுக்கேற்ப அமைகின்றன. இவ்வாறு, மக்கள், அவர்களின் இயல்புகளுக்குத் தகுந்தபடி இன்பங்களையும் சிறப்புத் திறன்களையும் பெறு கின்றனர்.

ஆதலால், எல்லா மனிதர்களுக்கும் இன்பம் அளிப்பது இதுதான் என்று ஒன்றை உறுதியோடு அறுதியிட்டுக் கூறுவது இயலாது. ஆன்மாக்கள் தங்கள் இயல்புகளுக்கேற்ற முறையில் இயங்கி இன்பங்களைத் துய்ப்பதுதான் இயற்கை நியதி ஆகிறது. ஆன்மா தனது இயல்பின்படி இயங்குவதில்தான் இன்பம் பெறுகிறது.

ஆன்மாவின் (மனிதனின்) இன்பம் எது என்ற கேள்விக்கு விடை இதுதான்,

மனிதன் (ஆன்மா) இயல்பாக இயங்க வேண்டும். அதுவே அவனது இன்பம். அப்பொழுதுதான் மனிதன் தனது இயல்புக்கேற்ற இன்பத்தையும் சிறப்புத் திறனையும் பெறமுடிகிறது. ஆகவே, ஆன்மாவின் இன்பம் அதன் இயல்பில் இயங்குவதாகும்.

(ஏ) சிந்தித்தல், சொல்லுதல், சேர்ந்து செயல்படுதல், இவையே மனித உயிரின் மாண்பு மிக்க இயல்புகள்:

கட்டுப்பாடோ தடையோ இன்றி, ஆன்மா தன் இயற்கையில் இயங்குவதே அதற்கு இன்பம் அளிப்பது ஆகிறது.

மனித உயிரின் இயல்பான இயக்கம் எது? அதுதான் சிந்தனை. ஆன்மா, உடல் அசைவின்றி இயங்கமுடிவது சிந்திப்பது ஒன்றில் தான். சிந்தனையே ஆன்மாவின் தனிப்பட்ட சிறப்பாகிறது. ஆன்மாவின் இயல்பான இயக்கம் சிந்தனை; மனிதனின் மாண்பு மிக்க செயல் சிந்தனை.

சிந்திக்கும் தன்மையிலேதான் ஆன்மாவின் சீரிய திறன் இருக்கிறது. இந்தச் சிறப்பியல்பு மனித ஆன்மாவிற்கு இல்லை எனில், மக்களுக்கும் மாக்களுக்கும் வேறுபாடு இல்லாமல் ஆகி விடும். மனிதனின் சிந்தனையில் பிறந்தவையே இன்று உலகில் இருக்கும் அறிவியல் நூல்கள், அரிய கலைப்பொருள்கள், விஞ்ஞான முன்னேற்றம், மெய்ஞ்ஞான தத்துவங்கள், நாகரிக வாழ்வு, நலந்தரும் பிற செல்வங்கள், எல்லாம்.

சிந்தனையின்சக்தி அளவற்றது. செயலுக்கு மூலம் சிந்தனையே ஆகும். எண்ணத்திலிருந்து எழுவதே இலக்கியம். கலையும் இலக்கியமும், வாழ்வும், எண்ணத்தில் அரும்பியே எழிலுருப் பெறுகின்றன. ஆக்கமும், அழிவும் சிந்தனையின் விளைவுகளே. ரூஸோ, மார்க்ஸ் முதலிய அறிஞர்களின் சிந்தனையால்தான் வல்லரசுகள் வன்மையிழந்து மறைந்தன. பல புரட்சிகள் நிகழ்ந் தன. மக்கள் சமுதாயம் மாபெரும் மாறுதல்களை அடைந்தது.

புலன்களுக்குப் புலப்படாத உண்மை ஒன்று உண்டு என்று ஓர்ந்து உணர்வது சீரிய சிந்தனை அளிக்கும் செல்வமேயாகும். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று வாழாமல், இறைமையை எண்ணிப்பார்க்கும் திறன் மனித உள்ளத்தின் மாண்பிற்குச் சான்றாகும். உலக மக்கள் ஓதி நிற்கும் உன்னத சமயக் கொள்கைகள் சிந்தனைச் செல்வங்களே.

அண்டரண்டங்களையும் தன்னுள் அடக்கிச் சிந்திக்கும் திறத் தாலே, மற்ற எல்லாப் பொருள்களைவிடச் சிறப்புப் பெற்று, ஒப்புயர்வற்ற உயர்ந்த நிலையில் உள்ளது உயிர் என்ற ஆன்மா

"விண்ணில் தெரிகின்ற மீனெலாம் நான்
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்
....
அண்டங்கள் யாவையும் ஆக்கினேன் நான்
அவை பிழையாமே சுழற்றுவோன் நான்." (பாரதியார்)

எனச் சிந்திக்கும் சீரிய மனித உள்ளமே முழங்க முடியும்.

ஆகவே, மனிதன் அவனது இயல்பான சிந்திக்கும் சக்தியைக் கட்டுப்பாடற்ற சூழ்நிலையில் வளர்க்க வேண்டும். மனிதன் சிந்திப்பதைத் தடுக்கும் சக்தி உண்மையில் யாருக்கும் கிடையாது. உடல் சிறையில் வாடும்பொழுதுகூட உள்ளம் சீரிய சிந்தனைகளில் ஈடுபடலாம். இருப்பினும், தடையின்றிச் சிந்திப்பதற்கு இயைந்த சூழ்நிலையும் வாய்ப்பும் அமைதல் வேண்டும். இதையே "சிந்தனை உரிமை"(Freedom of Thought) என்கிறோம். மனிதனுக்குச் சிந்தனை உரிமை இல்லாவிடில் வாழ்வின் முன்னேற்றம் தடைப்பட்டு விடுகிறது. ஆன்மாவின் இயல்பு தடைப்படுகிறது. இன்பம் கெடுகிறது. ஆதலால்தான், சிந்தனை உரிமை ஆதார உரிமைகளில் முதல் இடம் பெறுகின்றது.

மனிதன் சிந்திப்பதோடு நின்றுவிடுவதில்லை; சிந்தனையில் எழும் கருத்துக்கள் பேச்சாகவோ, எழுத்தாகவோ வெளிவருகின்றன. எண்ணத்தில் எழும் கருத்துக்களை இயம்புவதற்கு எவ்விதத் தடையும் இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் சிந்தனை உருவெடுக்கமுடியும்; பயனளிக்க முடியும். சிந்தித்தலும், சிந்தித்த கருத்துக்களை வெளியிடுவதும், சிந்தனையென்ற ஒரு தொழிலின் இருநிலைகள்தாம். இவ்வாறு, சிந்தித்த கருத்துக்களைச் சொல்லும் உரிமையைச் "சொல்லுரிமை" "பேச்சுரிமை" (Freedom of Speech) என்று கூறுகிறோம். பேசுவது போன்றே, சிந்தனையில் தோன்றிய கருத்துக்களை எழுதுவதும், வெளியிடுவதும் அவசியம் ஆகிறது. இந்த உரிமையை எழுத்துரிமை (Freedom of Expression) என்கிறோம்.

சொல் உரிமை இல்லாவிடில், கேள்விச் செல்வம் என்பது இல்லாது போய்விடும். "நாநலம்" (நாவன்மை) என்னும் செல்வத்தை மனிதன் இழந்தவனாகிறான்.

"என்றன் பாட்டுத் திறத்தாலே-இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்" (பாரதியார்)

என்று முழங்கும் வீரர்களின் கனவு, சொல் உரிமையின்றி நனவாக முடியாது.

பேசுவது என்றால் ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் கூட வேண்டியது அவசியமாகிறது. இரண்டு மனிதர்கள் மட்டும்

உரையாடுவது ஒன்று; பலர் கூடிய கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றுவது மற்ருென்று. ஒருவர் தமது சிந்தனையில் எழுந்த கருத்துக்களை எல்லோருக்கும் எடுத்து இயம்ப வேண்டுமெனில், மக்கள் கூடுவதற்கு வாய்ப்பு வேண்டும். சிந்தனையைச் செயலாக்கு வதற்கும் மக்கள் கூடுவது சில வேளைகளில் அவசியமாகிறது. மனிதன் பிறருடன் தோழமைகொண்டு கூடி இயங்கும் இயல்புடையவன். அன்பரொடு மருவுதல் ஆன்மாவின் இயல்பாகும். ஆதலால், மக்கள், கூடி இயங்குவதற்கு உரிமை (Freedom of Association) வேண்டும்.

இவ்வாறு, சிந்தனை, சொல், சேர்ந்து இயங்குதல் இம் மூன்று பற்றிய உரிமை, மனிதனுக்கு இன்றியமையாததாகும். இம்மூன்றும் ஆன்மாவின் இயல்பான செயல்கள். இவைகளின்றி மனிதன் வளர்ச்சிபெற முடியாது. இயல்பாக இயங்க முடியாது.

(ஐ) எண்ணுதல், இயம்புதல், இசைவுபட இயங்குதல், இவையே மனிதனின் ஆதார உரிமைகள்

இயல்பான இயக்கம் — தன்னிச்சையாகச் செயல்படுதல் — இதையே தன்னுரிமை (சுதந்திரம்)என்ற சொல் குறிக்கிறது. மனிதனின், ஆன்மாவின் இயல்பான இயக்கங்கள் சிந்தித்தல், (சிந்தித்த கருத்துக்களைச்) சொல்லுதல், (பிறருடன்) சேர்ந்து இயங்குதல் ஆவன. இவைகளை மனிதனின் உரிமை என்கிருேம். மனிதனின் மனம், மொழி, மெய் என்ற மூன்றின் உரிமை, மனத்தாலும், மொழியாலும், மெய்யாலும் அவன் இயல்பாக இயங்குவதிலேயே இருக்கிறது. இந்த உரிமைகளே, சிந்தனை உரிமை (Freedom of Thought), சொல் லுரிமை (Freedom of Speech and Expression), சேர்ந்து இயங்கும் உரிமை (Freedom of Association) ஆகின்றன.

இந்த உரிமைகளில்லாத மனிதவாழ்வு, மனிதனின் இயல்புக்கு மாறுபட்ட வாழ்வாகிறது, இன்பமற்ற வாழ்வாகிறது. ஆகவே தான், இவ்வுரிமைகளை வாழ்வின் அடிப்படை உரிமைகள் (Fundamental Freedoms) என்கிருேம்.

(ஒ) அடிப்படை உரிமைகள் இல்லாத வாழ்வு வாழ்வன்று

இந்த அடிப்படை உரிமைகளை உலக வாழ்விற்கும் மேலாக மனிதன் மதிக்கிருன். மனிதனது ஆன்மா, தனது இயல்வில் இயங்கும் தன்மையை - அடிப்படை உரிமைகளை - பாதுகாத்துக் கொள்வதற்கு இடையருது முயன்று வருகிறது. உடலோடு சேர்ந்து வாழும் உயிர், தனது இயக்கத்திற்குத் தடை ஏற்படும் பொழுது, அந்தத் தடையைத் தகர்த்தெறிய இடையின்றிப் போரிடுகிறது. அந்தப் போராட்டத்திலே ஆன்மா தனது உடலை

இழப்பதைக்கூடப் பெரிதாகக் கருதுவதில்லை. ஆதலால்தான், இந்த அடிப்படை உரிமைகளைக் காப்பாற்றுவதற்கென நடத்திய போராட்டங்களில் பல மனிதர்கள் தங்கள் உயிரையே தியாகஞ் செய்தனர் எனச் சரித்திரத்திலே காண்கிறோம். மனிதன் என்றால் அவனது உயிரே எனக் கண்டோம். உயிர் உயிரை இழப்பதில்லை. தன் உரிமைக்காகப் போராடிய மனிதர்கள் உயிரை இழந்தனர் என்றால், அதன் உட்பொருள், போராடிய உயிர்கள்—ஆன்மாக்கள் - உடலை நீத்தன என்பதே ஆகும். ஆகவே மனித உயிர் தனது இயல்பான உரிமைகளை இழந்துவிடாது காப்பாற்றும் முயற்சியில், தனது உடலைக்கூட ஒருபொருளாக மதிப்பதில்லை என்பது தெளிவாகும்.

மனிதன், தனது உடலைவிட அடிப்படைத் தன்னுரிமைகளை அதிகமாக மதிக்கின்றான் என்றால், தனது வாழ்வைவிட இந்த உரிமைகளையே விரும்பிப் போற்றுகின்றான் என்பது தெளிவு. ஏனெனில், தன்னுரிமை இல்லாத வாழ்வு, வாழ்வு ஆவதில்லை. அடிப்படைத் தன்னுரிமைகளே, மனிதனின் வாழ்வாக, வாழ்வின் ஆதாரமாக அமைகின்றன.

இந்தத் தன்னுரிமைகள் இல்லையெனில், ஆன்மா அடிமை நிலை எய்துகிறது. ஆனால் அடிமைப்பட்டு ஆன்மா இருப்பதில்லை. வலிமை கொண்ட ஒருவரோ அல்லது அரசோ ஒரு மனிதனை, அவனது உயிரை, அடிமை கொள்ளுவது என்பது ஆகாத காரியம். அடிமைத் தளையைத் தகர்த்தெறியப் போரிடும் மனித உயிர், அந்த முயற்சியிலே உடலையே துறந்து நீங்கிவிட்டால், அந்த உயிரை எவ்வாறு அடிமைகொள்ள இயலும்? இயலாது. ஆதலால், மனித உயிர்களை, மனிதர்களை அடிமைகளாக்கி விடலாம் என்று எண்ணுபவர்களே உண்மையறியாத பித்தர்கள் என்று கூறுகிறார் பாரதியார்.

> *"அறிவு கொண்ட மனித வுயிர்களை*
> *அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்."* (பாரதியார்)

(ஒ) தன்னுரிமை இயற்கையின் நியதி

தன் இயல்பில் இயங்க வேண்டும் என்னும் வேட்கை மனித உயிர்களுக்கு மட்டுமின்றி, மற்ற உயிர்களுக்கும், ஏன், உயிரற்ற பொருள்களுக்கும் கூட, இயற்கையாக இருக்கிறது. இது இயற்கையின் நியதி. பறந்து திரியும் பறவை ஒன்றைப் பிடித்து அழகான கூட்டில் அடைத்து, அமுதான உணவைக் கொடுத்து வளர்த்தாலும் அது இயற்கை எழிலை இழந்து, ஏங்கி வாடுகிறது, ஏன்?

இயற்கைப் பொருள்களெல்லாம் இயல்பான இயக்கத்தின் இன்பத்திலேயே இசைந்து நிற்கின்றன. அலையும் கடலின் அலைகள் இயல்பான

இயக்கத்தால் இன்ப முழக்கம் செய்கின்றன. விண்ணிலே பறக்கும் பறவைகள் பாடுவது இயல்பான இன்ப கீதம். வீசும் தென்றலில் விரவிவருவது இயல்பான இன்பம். ஓடும் நீரில் எழுவது, நீரின் இயல்பான இயக்கத்தின் இன்ப ஒலி. தேக்கி நிறுத்தப்பட்ட நீர்ப்பெருக்கு, திறந்துவிடும் பொழுது, எத்தகைய வேகத்திலே பாய்ந்து செல்லுகிறது! மனிதனின் தன்னுரிமை வேட்கையும், அத்தகைய வேகத்தைக் கொண்டது.

இயங்காத பொருள்கள் எதுவும் விண்ணிலும் மண்ணிலும் இல்லை. அண்டங்கள் அனைத்தும் அயராது சுழல்கின்றன. அணுவும், அதனுள் அடங்கியிருக்கும் பரமாணுக்களும் ஓயாது சுழன்றுகொணடிருப்பதை விஞ்ஞான மேதைகள் காண்கின்றனர். இயக்கம்! இயக்கம்!! இயல்பான இயக்கம்!!! இதுவே இயற்கையின் நியதி. மனிதனும் இந்த இயற்கை விதிப்படியே, தன் இயல்பான இயக்கத்தை, தன்னுரிமையைப் போற்றி வாழ்கிறான்; அது இல்லையேல் மாள்கிறான்.

5. ஆதார உரிமைகளும், அரசியல் சட்டமும்

ஒரு மனிதனின் தனி நலன், அவனது இன்பம், தன் இயல்பில் இயங்குவதுதான்; சிந்தனை, சொல், சேர்ந்து இயங்குதல் இவைகளே மனிதனின் இயல்பான இயக்கங்கள்; இவையின்றி மனிதனின் வாழ்வு இன்பமற்றதாகிறது; ஆகவே, இவை அவனின் அடிப்படைத் தன்னுரிமைகள் ஆகின்றன, என்று இதுவரை கண்டோம்.

நமக்கு நாமே எதைச் செய்து கொள்ளுகின்றோமோ, அது நமது தன்னுரிமை (Freedom) ஆகிறது. அந்தத் தன்னுரிமை அரசால் பாதுகாக்கப்படும்பொழுது, அது உரிமை (Right) எனப் பெயர் பெறுகின்றது. நமது அடிப்படைத் தன்னுரிமைகள் நம் வாழ்விற்கு இன்றியமையாதவைகளாக இருப்பதால் அவைகளை அரசு பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, அத் தன்னுரிமைகளை. அடிப்படை உரிமைகள் அல்லது ஆதார உரிமைகள் (Fundamental Rights) என்று அழைக்கிறோம்.

நம் அடிப்படை உரிமைகளுக்குப் பிறர் ஊறு விளைவித்தால், அவர்களை அரசு ஒறுக்கின்றது. அரசு தன் வலிமையைக் கொண்டு, நம் உரிமைகளுக்குக் கேடு விளைவிக்க இருப்போர்களைத் தடுக்கின்றது. இதையே, நீதி வழங்குதல், முறை செய்தல் என்கிறோம்.

நம் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, நாம் அரசையே நம்பி வாழ்கிறோம். ஆதலால், மக்களின் ஆதார உரிமைகளைப் பாதுகாப்பது அரசின் தலையாய கடமை ஆகிறது.

இந்த உரிமைகளை, அரசே அழிக்க முற்பட்டால் என்ன செய்வது? அரசு நம் உரிமைகளுக்கு ஊறு செய்யும் நிலை எப்பொழுது ஏற்படலாம்? அதற்கு நாம் செய்து கொள்ளும் பாதுகாப்பு என்ன? இவை பற்றி இனி ஆராய்வோம்.

மக்கள் ஆட்சியில், மக்களனைவரும் சேர்ந்து, நேரடியாக, ஆட்சியை நடத்துவது இயலாததாகிறது. ஆதலால், தேர்தல் முறையில் மக்கள் தங்கள் வாக்குகளை அளித்து, தங்கள் பேராட்களைத் தேர்ந்தெடுத்து நாடாளு மன்றத்தின் உறுப்பினர்களாக அனுப்பிவைக்கின்றனர். அவர்களில் ஒரு சிலரே அமைச்சர்களாக இருந்துகொண்டு, அரசாங்கத்தை நடத்துகின்றனர். இதனால், அரசின் அதிகாரம் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு சிலரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. இவ்வாறு அவர்கள்

ஆட்சிபுரியும்பொழுது, அவர்கள் கையிலுள்ள அரசின் அதிகாரத்தை, அதன் ஒப்பற்ற வலிமையை, மக்களின் நலனுக்காகவே பயன்படுத்துவார்கள் என்பதற்கு உறுதிப்பாடு வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு அரசாங்கத்தை நடத்துபவர்கள் மக்கள் நலனுக்குப் புறம்பாக அரசை இயக்கினுல், அவர்களை அதிகாரத்திலிருந்து அகற்றும் வாய்ப்பு மக்களுக்கு இருக்க வேண்டும். பேச்சுரிமையும், சேர்ந்து இயங்கும் உரிமையும் மக்களுக்கு இல்லாவிடில், அரசாங்கத்தின் குற்றங்களை எடுத்துக் கூறி, அதை மாற்றும் திறன் மக்களுக்கு இல்லாது போய் விடுகிறது. உண்மையான மக்களாட்சி முடிவில் மறைந்துவிடும். ஆகவே, மக்களுக்குப் பேச்சுரிமையும், சேர்ந்து இயங்கும் உரிமையும் இல்லை எனில், மக்களாட்சி ஒழுங்குபெற இயங்குவது இயலாது.

ஆட்சியிலுள்ள ஓர் அரசாங்கம், தன் குறைகளை மக்கள் கூறுவதைத் தடுக்கவேண்டும் என்பதற்காக, அரசாங்கத்தைப் பற்றிய கருத்துக்களை எவரும் எடுத்துரைக்கக் கூடாது என்று ஒரு சட்டம் இயற்றலாம். அரசாங்கத்தின் குறைகள் பற்றி எழுதுவதோ, பேசுவதோ குற்றமென விதிக்கப்படலாம். மக்கள் கூடி இயங்குவதைத் தடுக்கும் சட்டமும் இயற்றலாம். இந்த அடக்குமுறைச் சட்டங்களினுல், மக்களின் சொல்லுரிமையையும், சேர்ந்து இயங்கும் உரிமையையும் பறித்துவிடலாம். இவ்வாறு தான், குடியாட்சியில் தொடங்கும் சில நாடுகள் சர்வாதிகார ஆட்சியில் நிலைத்து விடுகின்றன. இவ்வாறு, அரசினுலேயே மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு ஊறு விளையலாம்.

மக்களாட்சியிலே எல்லா மக்களின் நலன்களும் பேணப் படுவதால், அது பொதுநல அரசாக இயங்குகிறது எனக் கண்டோம். பொது நலனைக் குறிக்கோளாகக் கொண்டு பல சட்டங்கள் இயற்றப்படுகின்றன. அந்தச் சட்டங்களால், மக்களின் தனி நலன்கள் பாதிக்கப்படலாம்.

இவ்வாறு, மனிதனின் அடிப்படை உரிமைகளுக்கு அரசினுலேயே ஆபத்து விளையும் நிலை ஏற்படுகிறது. இத்தகைய இன்னல்கள் விளைந்து, மக்கள் அல்லலுற்றதை வரலாற்றிலே காண்கிருேம்.

அரசின் அதிகாரத்திலிருந்து, நம்முடைய ஆதார உரிமைகளைப் பாதுகாப்பது எவ்வாறு?

முன்னேற்றமடைந்த நாடுகளிலெல்லாம், அரசியலமைப்புச் சட்டம் என்று மக்களாலேயே இயற்றப்பட்ட சட்டம் ஒன்று உண்டு என்று முன்னர்க் கண்டோம். அரசின் கடமைகளான, சட்டங்கள் இயற்றல், ஆட்சி செய்தல், நீதி வழங்குதல் என்ற

மூன்று பிரிவுகளையும் தனித்தனி உறுப்புக்களாகக் கொண்டு, அந்தந்த உறுப்புக்களின் அதிகாரங்களையும், அலுவல்களையும் அரசியலமைப்புச் சட்டம் கூறுகின்றது. அரசு இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பது இந்தச் சட்டம்தான். இதை, மற்றச் சட்டங்களைப் போல் நாடாளுமன்றம் எளிதில் மாற்றுவதோ, திருத்துவதோ முடியாது. இவ்வாறு, அரசமைப்புச் சட்டம் அரசின் இலக்கணமாக, அதன் ஆதாரமாக அமைவது என்றும், அது புனிதமாகப் போற்றப்படுகிறது என்றும் முன்னர்க் கூறப்பட்டது.

இவ்வளவு சிறப்புப் பெற்ற அரசமைப்புச் சட்டம் என்ற புனிதமான திருக் கோயிலிலே போற்றப்படும் தெய்வத் திருவுருவங்களாக ஆதார உரிமைகள் அமைந்திருக்கின்றன. மனிதனின் அடிப்படை உரிமைகளைத் தெளிவாகக் கூறி, அவைகளைப் பாதுகாக்கும் முறையிலேயே அரசு இயங்கவேண்டும் என்று திட்டவட்டமாகக் கட்டளையிடுகிறது அரசமைப்புச் சட்டம். மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு அடங்கியே அரசு இயங்கவேண்டும். அரசின் செயல்களோ அஃது இயற்றும் சட்டங்களோ மக்களின் ஆதார உரிமைகளுக்கு முரணுள்ளனவாக இருப்பது இவ்வாறு தவிர்க்கப்படுகிறது.

நம் நாட்டு அரசமைப்புச் சட்டத்திலும், அமெரிக்கா முதலிய குடியரசு நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களிலும், அடிப்படை உரிமைகளைப் போற்றும் கொள்கைகள் வீறுடன் கொலுவீற்றிருக்கின்றன. எழுதப்படாத, ஆனால், வழக்கை ஒட்டிய அரசமைப்பு முறை இயங்கும் இங்கிலாந்து நாட்டிலும், மக்களின் ஆதார உரிமைகள் அரசியல் வழக்க முறைப்படி பேணப்படுகின்றன.

"குடிகள் அனைவருக்கும்,
சமூகம், பொருளாதாரம், அரசியல் இவற்றில் நீதி,
சிந்தனை, கருத்துக்களை வெளியிடுதல்,
நம்பிக்கை, சமயம், வழிபாடு, இவற்றில் தன்னுரிமை
தரத்திலும், வாய்ப்பிலும், சமநிலை,
தனி மனிதன் மாண்பையும், நாட்டின்
ஒருமையையும் வளர்க்கும் இன ஒற்றுமை"

இவைகளைப் பாதுகாத்துப் பேணி வளர்ப்பதற்கென்று இந்திய மக்களாகிய நாம், நமது நாட்டை, மக்களாட்சி நிலவும் குடியரசாக அமைத்துக் கொள்ளுகிறோம் என்ற புனிதமான முன்னுரையோடு ஆரம்பிக்கின்றது நமது பாரத நாட்டு அரசமைப்புச் சட்டம்.

"பிறப்பில் எல்லா மக்களும் சமமானவர்கள். உயிர், தன் உரிமை, இன்ப வாழ்வு இவைகளைப் பொறுத்த நிலைத்த உரிமைகள் மக்களுக்கு ஆண்டவனால் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த உரிமைகளைப் பாதுகாப்பதற் கென்றே, ஆளப்படும் மக்களிட

யிருந்து அதிகாரத்தைப் பெற்று, அரசாங்கங்கள் முறையாக இயங்குகின்றன. இவை நாம் ஏற்றுப் போற்றும் ஆதார உண்மைகள்,'' என்று அமெரிக்க மக்களின் தன்னுரிமை அறிக்கை முழங்குகிறது.

இம்மாதிரியே நாகரிகத்தில் முன்னேற்ற மடைந்துள்ள எல்லா நாடுகளின் அரசுகளும் மக்களின் தன்னுரிமையைப் பேணி நிற்கின்றன.

ஆதார உரிமைகளுக்கு மாறுன சட்டங்களை அரசு இயற்ருமல் இருக்கலாம். ஆனுல், அரசாங்கத்திற்கு வேண்டாதவர்களைச் சிறையிலே அடைத்து விடலாம். இதைத் தடுப்பதற்காகக் குடிமக்கள் எவரையும் நீதி மன்றங்களின் தண்டனையை நிறைவேற்றும் வகையில் இன்றி, வேறு காரணம் காட்டி, அரசாங்கம் சிறை வைப்பது கூடாது என்று, அரசியல் சட்டம் விதிக்கிறது. ஒருவரைக் கைது செய்தால், உடனேயே நீதிமன்றத்தின் முன்னர் அவரை நிறுத்திச் சிறைப்படுத்திய காரணத்தைக் கூறி, நீதி மன்றத்தின் உத்தரவு பெற்ற பின்னரே அவரது சிறை வாசத்தை நீடிக்கமுடியும்.

சிறையிலுள்ள எவரையும் தன்முன் கொண்டு வரும்படி, அரசாங்கத்திற்கு உத்தரவிடும் உன்னத அதிகாரம் நீதி மன்றங்களுக்கு உண்டு.

ஆதலால், குடிமக்கள் எவரையும், அரசாங்கம், நீதி மன்றங்களின் உத்தரவின்றிக் காவலில் வைப்பது இயலாததாகிவிடுகிறது. மனிதனது ஆதார உரிமைக்கு அடிப்படையானதாகும் இது.

ஒருவர், சில மாதங்களுக்கு அல்லது சில ஆண்டுகளுக்கு முன் செய்த செயல் குற்றமற்றதாக இருக்கிறது. அரசாங்கம் இப்பொழுது, அச் செயலைக் குற்றமெனச் சட்டமியற்றி, அவரை இன்று தண்டிக்க முற்படலாம். இவ்வாறு செய்யப்படும்போது குற்றமில்லாத ஒரு காரியத்தைப் பிற்காலத்தில் குற்றமாகத் தீர்மானித்து ஒருவரைத் தண்டிக்க அரசாங்கம் விழையலாம். இதுவும் நீதிக்கு ஒவ்வாத செயலே ஆகும். ஒரு செயல், செய்யப்படும் பொழுதே குற்றம் எனச் சட்டம் விதித்திருந்தால் மட்டுமே அச் செயலைச் செய்தவரை ஒறுப்பது முறையாகும். இல்லாவிடில், எல்லோரையுமே குற்றத்திற்கு ஆளாக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு வந்துவிடும். குடிமக்களின் தன்னுரிமை உறுதியற்றதாகி விடும். ஆதலால், குற்றங்களைத் தீர்மானிக்கும் எந்தச் சட்டமும், சென்ற காலச் செயல்களை, கடந்த காலக் காரியங்களைக் கட்டுப் படுத்துதல் கூடாது என்று அரசியல் சட்டம் விதிக்கின்றது.

யான், எனது என்ற எண்ணங்கள் மனிதனுக்கு இயல்பாக உண்டு. தன்னைப்பற்றிய நினைவு மனிதனுக்கு இருக்கும் வரையில்,

"தனது" என்ற எண்ணமும் இருக்கவே செய்கிறது. "இந்தப் பொருள் என்னுடையது, இந்த வீடு எனக்குச் சொந்தமானது" என்று மனிதன் அவன் உடைமைப் பொருள்கள்மீது உரிமை கொண்டாடுகிருன். அந்த உடைமை எண்ணம் அவனது இன்ப வாழ்விற்கு ஏற்றதாக இருக்கிறது. சொத்துரிமை மனிதனின் ஆதார உரிமைகளில் ஒன்ருகும். ஆகவே, ஒரு மனிதனுக்குச் சொந்தமான பொருளைப் பிறர் வன்முறையாக எடுத்துக் கொள்வதோ, அரசே அம் முறையில் எடுத்துக் கொள்வதோ மனிதத் தன்னுரிமைக்கு மாறுபட்டதாகும். இன்றியமையாத பொது நலனுக்காக அரசு ஒருவரது சொத்தை எடுத்துக்கொள்ளும் அவசியம் நேர்ந்தால், அதற்கு ஈடு செய்யும் வகையில் அவருக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டும். இவ்வாறு, மக்களின் சொத்துரிமையை அரசியல் சட்டம் பாதுகாக்கிறது.

நாடாளு மன்றத்தால் இயற்றப்படும் சட்டம், அடிப்படை உரிமைகளைப் பாதிக்காமல் இருக்கின்றதா என்று பார்க்கும் அதிகாரமும் கடமையும் உயர்நீதி மன்றங்களுக்கு உண்டு. எந்தச் சட்டமாவது, மக்களுக்குள் வேறுபாடு காட்டுவதாகவோ மக்களது அடிப்படைத் தன்னுரிமையைப் பறிக்கும் முறையிலோ இருந்தால், அந்தச் சட்டம் முறையற்றது, ஆதலால், அது நடைமுறையிலிருக்கத் தகுதியற்றது என்று தீர்மானிக்கும் பொறுப்பு உயர்நீதி மன்றங்களுக்கு இருக்கிறது. இந்த முறையிலே, மக்களிடையே தோன்றும் வழக்குகளைத் தீர்க்கும் நீதிமன்றங்கள், அரசாங்கம் வரம்பு கடந்து தனது அதிகாரத்தைச் செயல்படுத்தாமல் கண்காணித்து வருகின்றன.

சட்டமியற்றும் அதிகாரம் பெற்ற நாடாளுமன்றமும், அரசின் ஆட்சி அதிகாரிகளும், அரசமைப்புச் சட்டத்தை ஒட்டி இயங்குகின்றனரா, மக்களின் ஆதார உரிமைகளுக்கு ஊறு செய்யாமல் அதிகாரத்தைச் செலுத்துகின்றனரா என்பதை உன்னிப்பாகக் கண்காணிக்கின்றன, அரசின் உறுப்பான நீதிமன்றங்கள். அரசின் மற்ற உறுப்புக்களின் அலுவல்களைக் கவனித்துச் சீர் திருத்தும் உரிமை நீதிமன்றங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது, அரசியல் சட்டத்தில். இவ்வாறு, மக்களின் அடிப்படைத் தன்னுரிமைகளைக் காப்பாற்றும் கடமையையும் உரிமையையும் பெற்று உயர்நீதி மன்றங்கள் ஒப்பற்ற பெருமையுடன் விளங்குகின்றன.

இந்த முறையில், ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டமே அந்நாட்டு மக்களின் ஆதார உரிமைகளுக்கு ஆதாரமாக இருக்கும் உரிமைச் சாசனமாகிறது.

6. பொது நலனும், தனி நலனும்

குடியரசு முறையில் வாழும் மக்கள், அடிப்படை உரிமைகள் பற்றி மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். பொது நலனைப் பெருக்கும் ஆர்வத்திலே, தாங்கள் மக்களின் அதிகாரம் பெற்றவர்கள்தாமே என்ற நம்பிக்கையிலே, நாடாளு மன்றங்கள் தனி மனிதனின் தன்னுரிமைக்குப் புறம்பான சட்டங்களை இயற்றிவிடலாம். பொதுநலனுக்காகத் தனி நலன் தியாகம் செய்யப்படவேண்டும் என்று ஒரு வேளை நியாயம் காட்டப்படலாம். இது, பொதுநலனின் உண்மைத் தன்மையை உணராத நிலையில் எழும் குற்றமாகும்.

மக்களனைவருடைய தனி நலன்களின் கூட்டே, பொது நலன் ஆகிறது. தனி நலன்கள் இல்லையெனில், தனிப்பட்ட நபர்களின் தன்னுரிமை, இன்பம், இல்லையெனில், "பொது நலன்" என்பது பொருளற்றதாகிவிடும்.

உண்ண உணவும், உடுக்க உடையும் அனைவருக்கும் கிடைத்துவிட்டால் மட்டும் உண்மையான தன்னுரிமை இன்பத்தை மக்கள் பெற்றுவிடுவதில்லை. உணவைத் தேடிப் பங்கிட்டுக்கொள்ளும் எறும்புக் கூட்டங்களாக மனிதர்கள் வாழ்வதில்லை. ஒற்றுமையும், ஒப்புரவும் மக்களிடை வேண்டும். இசைந்து வாழ்தல் என்பது அதுவேதான். ஆனால், ஒற்றுமை என்பது ஒருமை அன்று; மக்கள் உறவு மந்தை உறவன்று.

மூன்றும் இரண்டும் கூடினால் ஐந்து என்கிறோம். இதன் பொருள் என்ன? மூன்றிலுள்ள மூன்று ஒன்றுகளும், இரண்டிலுள்ள இரண்டு ஒன்றுகளும், சேர்ந்து ஐந்து ஒன்றுகள் ஆகின்றன. மூன்றிலுள்ள ஒன்றுகளும் இரண்டிலுள்ள ஒன்றுகளும், ஒன்றுகளாகத் தனித்து நிற்பதால்தான், அதன் கூட்டு ஐந்து எனப் பெயர் பெறுகின்றது. ஒன்றுகளின் தனித்தன்மை அழிந்துவிட்டால், ஐந்து ஒன்றுகளும் தங்கள் தனித் தன்மையை இழந்துவிட்டால், அந்தக் கூட்டை "ஐந்து" என்று சொல்ல முடியாது. ஒன்று என்ற எண், தனது தனித் தன்மையை என்றும் இழந்துவிடுவதில்லை. அவ்வாறு இழந்துவிடும் தன்மை அதற்கு உண்டு என நாம் நினைத்தால், அதை ஒன்று என்று நாம் அழைப்பதில் பொருளில்லை. ஒன்று என்ற தனது தனித் தன்மையை இழந்துவிட்டால், அது, இன்மை எண் குறி (0) ஆகிவிடுகிறது. ஐந்து இன்மை எண்குறிகள் சேர்ந்தால், ஐந்து என்ற எண்ணாக ஆவதில்லை. இது கணித நியதி மட்டுமன்று, இயற்கை நியதியுமாகும். இம்முறையிலேதான், தனி நலன்கள் அழிந்து

விட்டால், அவைகளின் கூட்டாகப் பொது நலன் என்று நாம் எதையும் சொல்லுவது முடியாது. மக்களின் தனிநலன் இன்றி மக்களின் பொதுநலன் இல்லை. ஆதலால், ஒவ்வொரு மனிதனின் தனி நலனை, அவனது அடிப்படைத் தன்னுரிமையைப் பாதுகாத்தே பொதுநலன் களைப் பெருக்க வேண்டும்.

தனி நலன்கள் என்ற கோடிக் கணக்கான தீபங்களால் நாடு அலங்கரிக்கப்பட்டால் தான், பொது நலம் என்ற முழு அழகு பொலிவுற்று விளங்கும். தனி நலன்கள் என்ற சிறு தீபங்களின் ஒளி மறைந்துவிட்டால், பொதுநலன் என்ற பேரொளி இல்லாது போகிறது.

மனிதனின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை யெனில், அனைவரும் அரசின் அடிமைகளாகிவிடுகின்றோம். வலியார் மெலியாரை அடிமைப்படுத்துவது தகாது என்ற அடிப் படையிலேயே அரசியல் வாழ்வு எழுந்தது. வலியாரும் மெலியாரும் அனைவரும் சேர்ந்து, அரசுக்கு அடிமையாகிவிடும் அவலநிலையும் கூடாது. மக்களாட்சியிலே, மக்கள் அனைவரும் தன்னுரிமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். மக்கள் அடிமை யாகிவிட்டால் அந்த ஆட்சியை மக்களாட்சி என்று கூறுவது தகாது. அது அடிமைகள் ஆட்சியாக ஆகிவிடும். குடியரசு கொடிய அரசாகத் திரும்பிவிடும். தன்னுரிமை என்ற மாண்பை இழந்துவிட்ட மக்கள் மாக்கள் நிலையில் வாழவேண்டியவர்களாகி விடுகின்றனர். உணவும் உடையும் கொடுக்கிறது அரசு என்பதற் காக மனிதன் தனது இயல்புரிமையை இழந்துவிட முற்பட்டால், "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கும்" நிலையாகிவிடும்.

"மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண் டும்விற்றுச் சித்திரம் வாங்கினல்
கைகொட்டிச் சிரியாரோ?" (கவி பாரதியார்)

ஆகவே, பொது நலன் பெருக வேண்டுமெனில், அதற்கு அடிப்படையாக, மக்கள் ஒவ்வொருவரின் தனி நலன்களும் அமைதல் வேண்டும். ஒரு மனிதனின் தனிநலம் அவனது அடிப்படைச் சுதந்திரத்தை ஆதாரமாகக் கொண்டது. ஆகவே, இந்த ஆதார உரிமைகள் இல்லை எனில், தனி நலன் இல்லை, பொது நலன் இல்லை, மக்களாட்சி இல்லை, மனிதனின் மாட்சி இல்லை. இவ்வாறு, மனிதனின் மாண்பிற்கு, அவனது இன்ப வாழ்விற்கு, மக்கள் ஆட்சிக்கு, அடிப்படை உரிமைகள் ஆதாரமாக அமைந்திருக்கின்றன..

இந்த முறையிலே, எண்ணுதல், இயம்புதல், இசைந்து இயங்குதல், சொத்துரிமை போன்ற இயல்புரிமைகளும் இவை

களைப் போற்றி நிற்கும் மக்களாட்சி முறையும், மனிதனின் இன்ப வாழ்விற்கு அடிப்படையாக இருப்பதால், "ஆதார உரிமைகள்" என்று அழைக்கப்படுகின்றன. இவை மனித குலத்திற்கே—பொதுவான, அவசியமான உரிமைகளாக இருப்பதால், "மனித உரிமைகள்" என்ற பெயருடன், மனிதனின் மாண்புமிக்க உரிமைகளாக விளங்குகின்றன.

7. அடிப்படை உரிமைகளும், அறநெறியும்

சட்டநூல் விளக்கும் மனித உரிமைகளுக்கும், அறநூல்களும், சமய நூல்களும் உணர்த்தும் ஒழுக்க நெறிக்கும் வேறுபாடு இல்லை என்பது சிறிது சிந்தித்துப் பார்த்தால் எளிதில் புலனாகும்.

உரிமை என்றால் அதை ஒட்டிய கடமை உண்டு என்று முன்னர்க் கண்டோம். அடிப்படையான உரிமைகள் நமக்கு உண்டு எனில், அடிப்படையான கடமைகளும் நமக்கு இருக்கின்றன.

தன் இச்சையாக இயங்கும் உரிமை எனக்கு இருக்கிறது என்பதை வைத்து, நான் இன்னொருவருடைய மரணத்தை விளைவித்தல் தகாது. எனது இன்பத்தைப் பெருக்குவதற்காக, இன்னொருவருக்குத் துன்பத்தைச் செய்வது முறையாகாது. உயிர் வாழும் உரிமையும், இன்பத்தை நாடி இயங்கும் உரிமையும் எனக்கிருப்பது போலவே பிறருக்கும் இருக்கின்றன. ஆதலால், பிறருடைய அடிப்படை உரிமைகளுக்குக் கேடு விளைவிக்காத முறையிலேதான் என்னுடைய அடிப்படை உரிமைகள் இயங்க வேண்டும். இதுவே முறையாகும். இதுவே இசைந்து வாழ்தல் எனப்படுகிறது.

மனித உரிமைகள் மக்கள் எல்லோருக்கும் பொதுவானவை. என் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்; அது போலவே பிறருடைய உரிமைகளும் பேணப்பட வேண்டும். என் உரிமைகளுக்கு ஊறு செய்யாதிருக்கும் கடமை பிறருக்கு இருப்பது போல், பிறர் உரிமைகளைப் பாதிக்காதிருப்பது எனது கடமையாகிறது. இவ்வாறு, என் உரிமைகளோடு கடமைகளும் கலந்திருக்கின்றன. "மனித உரிமைகள்" என்பதில் "மனிதனின் கடமைகளும்" அடங்கியே இருக்கின்றன.

இவ்வாறு, மனிதனின் ஆதார உரிமைகளும், ஆதாரக் கடமைகளும் அணைந்து நிற்கின்றன. ஒன்று இன்றி மற்றொன்று இல்லை. ஆதாரக் கடமைகள் இல்லையேல், ஆதார உரிமைகள் இல்லை; ஆதார உரிமைகள் இன்றி, ஆதாரக் கடமைகளும் இல்லை.

ஆதார உரிமைகளும் ஆதாரக் கடமைகளும் அணைந்து நிற்பதை நாம் அறிந்துகொண்டால், சட்டமும் சமயமும் எவ்வாறு சேர்ந்து நிற்கின்றன என்பது எளிதில் புலனாகும்.

சட்டமும் அறமும்

சட்ட நூல், மனிதனின் ஆதார உரிமைகளை அறிவித்து, அவைகளைப் பாதுகாக்கும் பணியைக் குறிக்கோளாகக் கொண்டிருக்

கிறது. சமய நூல்களும், அற நூல்களும், மனிதனின் ஆதாரக் கடமைகளை அறிவுறுத்தி, அவனை இசைந்து வாழச்செய்யும் இன்பப் பணியில் ஈடுபடுகின்றன.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்ற தீய குணங்களினாலேயே அறத்திற்கு மாறுபட்ட தீமையான செயல்களில் மனிதன் இறங்கிப் பிறருக்குத் தீங்கு இழைக்கிறான். இந்தத் தீய குணங்களை அகற்றி மனிதன் வாழவேண்டும் என்பதையே அறநூல்கள் அறிவுறுத்துகின்றன. தீக்குணங்களுக்கு இடம் கொடுக்காமல் இயங்கும் வாழ்வே ஒழுக்க வாழ்வாகிறது, உயர் வாழ்வாகிறது.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.'' (குறள் : 131)

என்று கூறி உயிர் வாழ்வதைவிட ஒழுக்கத்திற்கு உயர் இடம் அளிக்கின்றது அறநூல். பிறருடைய ஆதார உரிமைகளின் விளைவான நலனை, இன்பத்தைப் போற்றிப் பேணும் நல்லொழுக்கம் நமக்கு இருக்க வேண்டும் என்பதற்காகவே, அன்புடைமை, அருளுடைமை, அறிவுடைமை, அழுக்காறாமை முதலிய சீலங்களை உணர்த்தி நிற்கின்றன உலகிலுள்ள அறநூல்கள்.

பிறரது இன்பத்திற்கு இன்னல் விளைவிக்கும், உரிமைகளுக்கு ஊறு செய்யும், தீய குணங்கள் இன்றி, இசைந்து வாழ்வதே ஒழுக்கமுடைய வாழ்வாகின்றது. ஒழுக்கத்தின் உயர் நோக்கம் பிறர் இன்பங்களைப் பேணுதலே ஆகும். சட்டத்தின் குறிக்கோளும் இதுவேதான்.

சட்டம், பிறருக்குக் கேடு விளைவிக்கும் தீய செயல்களைக் குற்றங்கள் எனக் கொண்டு, குற்றவாளிகளை ஒறுக்கின்றது. அறநூல்கள் தீய செயல்களுக்குக் காரணமான தீய எண்ணங்களை மனத்திலிருந்து அகற்றுவதைக் கடனாகக் கொண்டிருக்கின்றன. மக்களின் புறச் செயல்களை இசைவுபடச் செய்கிறது சட்டம்; அவர்களின் உள் எண்ணங்களை இனிதாக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது அறம். இன்னாமை செய்ய எண்ணுபவர்களை அச்சுறுத்தி அடக்க முற்படுகிறது சட்டம்.

''தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்.'' (குறள் : 318)

என்று, காரணத்தோடு இனிமையாக எடுத்துக்கூறி இன்னாமை செய்யவேண்டுமென்ற எண்ணத்தையே மனத்திலிருந்து விலக்குகிறது அறம். இவ்வாறு, சட்டம் புறச் செயல்களையும், அறம் உள் எண்ணங்களையும் இனியதாக்குகின்றன; இசைவு பெறச் செய்கின்றன.

மக்களின் இன்பம் பேணப்படுதல் வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே சட்டமும் அறமும் இயங்குகின்றன. ஆனால், குறிக்கோளைப் பெறுவதற்குச் சட்டமும் அறமும் வெவ்வேறு வழிகளைப் பின்பற்றுகின்றன. தீமை செய்ய எண்ணுவோரின் மனத்தைப் பயமுறுத்துவது சட்டம், அதைப் பண்படுத்துவது அறம்; கட்டளையிடுவது சட்டம், காரணங் காட்டுவது அறம்; அச்சுறுத்துவது சட்டம், அறிவுறுத்துவது அறம். மனிதனின் உரிமைகளை உணரப்பது சட்டம், அவனுடைய கடமைகளைக் காட்டுவது அறம்.

இவ்வாறு, இருமுறைகளில் இயங்கும் சட்டத்திற்கும் அறத்திற்கும் உள்ள ஒரே குறிக்கோள், நோக்கம், மக்கள் இன்பம் என்பதே ஆகும்.

தீய எண்ணங்களின்றி, ஒழுக்கத்துடன் ஒருவன் வாழ வேண்டும் என்று கூறுவதோடு அறம் நின்றுவிடவில்லை. "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்று கூறும் அறநூல், தீய குணங்களை மனத்திலிருந்து போக்கும் வழியையும் உணர்த்தி நிற்கிறது. அழுக்காறு போன்ற தீமையான எண்ணங்கள் என்ற நோய் நமது மனத்தைப் பற்றி விடாமல் இருப்பதற்காக, அருமருந்து ஒன்றையும் அறநூல்கள் நமக்கு அளிக்கின்றன. அதுதான் "அன்பு" என்பது. அன்பு என்ற பண்பு அகத்திலே அமைந்துவிட்டால், அழுக்காறு, அவா, வெகுளி போன்ற தீய எண்ணங்கள் தாமாக மறைந்து போகின்றன.

தீய எண்ணங்களில்லையேல், தீய செயல்களும் இல்லை.

பிறரின்பத்திலே நம் இன்பம் காணுவதும், அவர் துன்பத்திலே நம் துன்பம் தோன்றுவதுமான குண நலனையே அன்பு என்கிறோம்.

அன்பு என்ற உள்ளொளி மனத்திலேஒளிரும்போது,"பிறிதின் நோய் தந்நோய் போல் போற்றாத" அறியாமை என்னும் இருள் அகன்று விடுகிறது. "அன்பின் வழியது உயிர் நிலை" என்பது அறநெறி.

"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு." (குறள் : 75)

அன்புடன் இயைந்து வாழ்வதின் சிறந்த பயனாக இன்பம் கிடைக்கிறது என்று கூறுகின்றார் வள்ளுவர். அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும் என்று அறிவுறுத்துகிறார்.

"அன்பென்று கொட்டுமுரசே!— மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்— இங்கு யாவரும்
ஒன்றென்று கொண்டால்."
(கவி பாரதியார்,

எல்லாச் சமயங்களும் ஏற்றிப் போற்றுவது இந்த அன்பு என்ற அருங்குணத்தைத்தான்.

"பிறர் உனக்கு எதைச் செய்யக்கூடாது எனக் கருதுகிறாயோ, அதை நீ பிறருக்குச் செய்யாதே", என்று சீன அறிஞர் கன்பியூஷியஸ் அறிவுறுத்துகிறார்.

"அயலான் மீது அன்பு காட்டு", என்பது இயேசுநாதரின் பொன்மொழி.

"நீ பிறரிடம் நியாயமாக நடந்து கொண்டால், பிறர் உன்னிடம் நியாயமாக நடப்பார்கள்" என்பது நபிகள் நாயகத்தின் நல்வாக்கு.

"அன்பினில் விளைந்த ஆரமுதாய்" ஆண்டவனைப் போற்றி நிற்கின்றன எல்லாச் சமயங்களும்.

இவ்வாறு, அறநூல்களும் சமய நூல்களும் அன்பையே அடிப்படையாகக் கூறுகின்றன.

பிறரது இன்பத்திற்கு அடிப்படையான உரிமைகளைப் போற்ற வேண்டும் என்று சட்டம் விதிக்கும் கடமையிலிருந்து நாம் வழுவாமல் இருப்பதற்கு, அன்புடைமையே ஆதாரமாக அமைகிறது. அன்பே நல்லொழுக்கத்தின் உயிர்நிலை. ஒழுக்கத்தை ஓம்பி அன்பின் அடிப்படையில் நடப்பவர்கள் பிறருக்குத் தீங்கு செய்வதில்லை; பிறர் உரிமைகளுக்கு ஊறு விளைவிப்பதில்லை. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் அன்பு குடிகொண்டுவிட்டால், அழுக்காறு அழிந்துவிடுகிறது; இன்னமை எண்ணம் எழுவதில்லை; இன்பமே நிலைக்கிறது. இவ்வாறு எல்லோருடைய இன்பங்களும் போற்றப் படுகின்றன. அன்பு வாழ்வு இன்ப வாழ்வாகிறது.

இப்படியாகச் சட்டத்தால் பாதுகாக்கப்படும் ஆதார உரிமைகளுக்கு, மனிதனின் இன்ப வாழ்விற்கு, அன்பு வாழ்வே அடிப்படையாக அமைகிறது.

பிறர் இன்பத்தையும் நம் இன்பமாக மாற்றும் பேராற்றல், அன்பு என்ற அருங்குணத்திற்கே உண்டு. எல்லாச் சமயங்களுக்கும் அன்பே அடிப்படையாக அமைகிறது. அறத்திற்கும் அடிப்படை அதுவேயாகும்.

பிறரின்பம் பேணுதல் நம் கடமையென விதிக்கிறது சட்டம். பிறரின்பத்தையே நம் இன்பமாக அன்பெனும் அருங்குணத்தால் மாற்றி, இருவரின்பத்தையும் நிலைபெறச் செய்கின்றன சமயமும், அறமும்.

இவ்வாறு, மனிதனின் இன்பத்தையே, ஆதார உரிமைகள் என்ற பெயரால் சட்டமும், ஒழுக்கம் என்ற பெயரால் அறமும், அன்பு என்ற பெயரால் சமயமும் பேணி நிற்கின்றன.

இந்த முறையிலே, சட்டத்தின் நீர்மையும்,
சமயத்தின் உண்மையும்,
அறத்தின் அடிப்படையும்,

ஒன்ருக ஒளிர்வதை நாம் ஓர்ந்து உணருகிறேம்!

"பிறர் நலம் போற்றித் தந்நலம் காத்தல்" என்ற பேருண்மை யையே போற்றி நிற்கின்றன சட்டமும், சமயமும், அறமும்!

இந்த உண்மையை நாம் அனைவரும் உணர்ந்து,

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறென் றறியேன் பராபரமே"

என்ற பொன்மொழியைப் போற்றி வாழும் பெற்றிமை பெறுவோமாக.

கலைச்சொல் விளக்கம்

(தமிழ்—ஆங்கிலம்)

அடிப்படை உரிமைகள் - Fundamental Freedoms, Fundamental Rights
அதிகாரம் - Power
அரசியல் நூல் - Politics
அரசியல் சட்டம் - The Constitution of the State
அரசியல் கூட்டு - Political Society
அரசு - State
அழகு உருவ நுண் அமைப்பு - Abstract sense of artistic form
அறம் - Natural Law
அறிவியல் - Science
அறிவுத்திறமை - Capacity
அனுபோக வசதி உரிமை - Dominant Right, Easement
ஆதார உரிமைகள் - Fundamental Rights
இசைவு எண்ணம் - Consensus *ad idem*
இசைவு - Consent
இலக்கணை - Metonymy
இளங்குற்றவாளிகளுக்குப் பயிற்சியளிக்கும் பள்ளிகள் - Borstal Schools
இயங்காச் செயல் - Negative act, act of omission
இயங்கும் செயல் - Positive act, act of commission
இயற்கை நபர்கள் - Natural Persons
இயற்கை நெறி - Natural Law
இயற்கையான நீதி - Natural Justice
இயற்றப்படாத சட்டம் - Unenacted Law
இயற்றப்பட்ட சட்டங்களின் விளக்கம் - Interpretation of Enacted Law
இயற்றப்பட்ட சட்டங்கள் - Enacted Laws, Statutes
இனிப் பிறக்க இருப்பவர்கள் Unborn persons
இன்றுமை - Wrong
ஈடு உரிமை - Mortgage Right
ஈடு செய்யும் பொறுப்பு - Remedial Liability
உடன்படிக்கைகள் - Agreements
உடன்பாடு - Agreement
உடன்பாட்டுச் செயல்கள் - Bilateral Acts
உடைமை - Possession
உடைமை எண்ணம்-The *Animus Possidendi*
உடைமைச் செயல் - The corpus of possession
உரிமை - Right
உரிமைகளைப் பாதுகாத்து நீதி வழங்குதல் - Civil justice
உரிமைகள் - Legal Rights
உரிமைக்குச் சான்று - Evidence of title
உரிமை மூலம் - Title, Source of title
உரிமை வழக்குகள் - Civil cases
உரிமை நிறுத்தல் முறை - Civil Justice
உலக நீதி மன்றம் - International Court of Justice
எதிர்பயன் - Consideration
எதிர்பாராச் செயல் - Accident
எதிர்பார்க்கும் வாரிசுபாத்தியம் - *Spes successionis*
எழுதப்படாத அரசியல் அமைப்பு முறை - Unwritten constitution
எழுத்துரிமை - Freedom of Expression
ஒப்படைத்தல் - Delivery
ஒப்பந்தம்-Agreement, Contract
ஒப்புச் சீட்டு - Pronote
ஒப்புதல் - Acknowledgement, Consent

ஒறுத்தல் முறை - Criminal Justice
ஒரு தலைச் செயல் - Unilateral act
ஒரே சீருடைய தன்மை - Uniformity
ஒழுக்க நூல் - Ethics
ஒழுக்க நெறி - Moral Law
கடமை - Duty
கம்பெனிச் சட்டம் - Companies Act
கருதிய செயல்கள் - Intentional acts
கருத்து - Intention
கலைத்தல் - Dissolution
கலை நுண் அமைப்பு உரிமை - Artistic Copyright
கவனமின்மை - Negligence
கற்பனையில் உருவாகிய நபர் - Fictitious Person
காலவரையறைச் சட்டம் - Limitation Act
குத்தகை உரிமை - Lease right
குற்ற முயற்சிகள் - Criminal Attempts
குற்ற வழக்குகள்-Criminal Cases
குற்றம் - Offence
குற்றம் செய்தவர்களைத் தண்டித்து நீதி செலுத்துதல் - Criminal Justice
கூடி இயங்குவதற்கு உரிமை - Freedom of Association
கூட்டமைப்பு - Corporation, Company
கூட்டமைப்பு விதிகள் - Articles of Associations
கூட்டு உடைமைகள்-Concurrent Possession
கூட்டுச் சொந்தம் - Co-owner ship
சட்ட ஞானமின்மை - Mistake of Law
சட்டத்தால் ஆக்கப்பட்ட நபர்கள் - Legal Persons
சட்டத்தின் மதிப்பற்ற வெறும் வாசகம் - *Obiter dictum*
சட்டத்தின் முன் சமத்துவம் - Equality before Law
சட்டத்தை ஒட்டிய நீதிமுறை - Justice according to Law
சட்டப்படியுள்ள இன்னுமை - Legal wrong
சட்டப்படியுள்ள கடமை - Legal duty
சட்ட மூலங்கள் - Sources of Law
சட்டம் - Law
சட்டம் இயற்றல் - Legislation
சட்டம் தோற்றுவிக்கும் நபர்கள்- Legal Persons
சட்டவியல் - Jurisprudence
சட்ட விளக்கம் - Interpretation of statutes
சர்வதேசச் சட்டம்-International Law
சர்வதேச வழக்காறுகள் - International Conventions
சிந்தனை உரிமை - Freedom of thought
சீர்திருத்தும் அடிப்படையில் தண்டனை அமையவேண்டும் என்ற கொள்கை-Reformative Theory of Punishment
சுதந்திரம் - Liberty
செயல்கள் - Acts
செயல் படா உரிமைகள் - Imperfect Rights
செயல்படும் உரிமைகள் - Perfect Rights
செல்லத்தக்க உடன்பாடுகள் - Valid contracts
செல்லுபடி ஆகாத ஒப்பந்தம் - Void Contracts, Invalid agreements
சொத்து - Property
சொத்துரிமை - Ownership
சொந்தம் - Ownership
சொல்லுரிமை - Freedom of speech
தகுதி - Capacity
தண்டனை - Penal Liability, Punishment
தண்டனை மூலம் பயமுறுத்துவதால் குற்றங்கள் தடுக்கப்படுகின்றன என்ற கொள்கை - Deterrent Theory of Punishment

தலையான அதிகாரம்-Sovereignty
தவிர்க்கத் தக்க ஒப்பந்தங்கள் - Voidable Contracts
தவிர்க்க முடியாத செயல்கள் - *Jus necessitatis*
தனி உரிமைகள் - Rights *in Personam*, Personal Rights
தனிக் கூட்டமைப்பு-Corporation Sole
தனிச் சொந்தம்-Sole owner ship
தனிப்பட்ட சொந்தம்-Individual ownership
தனி மனிதனின் தன்னுரிமை - Individual Liberty
தன்னுரிமை - Liberty, Freedom
தீங்கு - Wrong
தீய எண்ணம் - *Mens Rea*
தீர்ப்பு அறிக்கைகள் - Law Reports
தீர்ப்பு முறைமை - Precedent
தெய்வத் திருவுருவங்கள் - Idols
தெய்வ நியதி - Divine Law
தெளிவின்மை - Ambiguity
தொகுதிக் கூட்டமைப்பு - Corporation aggregate
தொடர்புப் பொறுப்பு-Vicarious Responsibility
தொன்று தொட்டு வரும் சம்பிரதாயங்கள் - Conventions
நபர்கள் - Persons
நம்பிக்கைத் துரோகக் குற்றம் - Criminal Breach of Trust
நம்பிக்கைப் பொறுப்பமைப்பு - Trusteeship
நம்பிக்கைப் பொறுப்பாளர் - Trustee
நம்பிக்கைப் பொறுப்பாளரின் சொந்தம் - Trust Ownership
நலனுக்குரியவர் - Beneficiary
நலன்கள் - Interests
நன்மதிப்பு - Status
நிபந்தனைக்கு உட்பட்டது - Conditional
நிபந்தனையுள்ள சொந்தம்-Contingent ownership
நிமித்த ஒப்படைப்பு - Constructive delivery
நிறைவுள்ள சொந்தம் - Vested Ownership
நீண்டகால (எதிர்) அனுபோக உரிமை - Prescription
நுண் பொருள்கள் - Immaterial property, Incorporeal property
நுண் பொருள்கள் மீதுள்ள உரிமைகள் - Rights over Immaterial property
நுண்பொருள் உடைமை - Incorporeal possession
நுண்பொருள் சொந்தம் - Incorporeal Ownership
நேரடி உடைமை - Immediate possession
நேர் ஒப்படைப்பு - Actual delivery
நேர்மையான கடமை - Moral obligation
நோக்கம் - Motive
பகர உடைமை - Mediate Possession
பகரப் பொறுப்பு - Vicarious Responsibility
பங்கமைப்பு - Partnership
பங்குதாரர்கள் - Shareholders
பரிகாரப் பொறுப்பு - Remedial Liability
பருப் பொருள்கள் - Corporeal property, Material things
பருப்பொருள் உடைமை - Corporeal possession
பருப்பொருள் சொந்தம் - Corporeal Ownership
பலனுக்கு உரியவரின் சொந்தம் - Beneficial ownership
பழமையைப்பற்றி நிற்கும் தன்மை - Conservatism
பழிவாங்கும் அடிப்படையிலேயே தண்டனை விதிக்கப்படுகிறது என்ற கொள்கை - Retributive Theory of Punishment
பிரிக்கப்பட்ட உரிமைகள்- Rights *in re aliena*
புகழ் - Reputation
புதுப் புனைவுச் செயல்கள்-Inventions

பேச்சுரிமை - Freedom of speech
பொருளியல் நியதி - Physical Laws
பொறுப்பு - Liability
'போலி நபர்' - Fictitious person
மனித உரிமைகளின் பிரகடனம் - Declaration of Human Rights
மாறிய உரிமை மூலம் - Derivative title
மாற்றப்பட்ட உரிமை - Right *in re aliena*
மீண்டும் குற்றம் செய்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் தண்டனை அளிக்கப்படுகிறது என்ற கொள்கை-Preventive Theory of Punishment
முடிவு - Completion
முதல் உரிமை மூலம் - Original title
முரண்பாடு - Inconsistency
முழு உரிமை - Rights *in rem*, Real Rights
முழுப் பொறுப்பு - Absolute Liability
முழுமை பெறுமை - Incompleteness
முழுமையானது - Perfect
முறை - Natural Justice
முறை செய்தல் - Administration of Justice
முன் தீர்ப்பு முறைமை-Precedents
முன்னேற்பாடு - Preparation
வரையறுக்கப்பட்ட பொறுப்பு - Limited Liability
வழக்க நெறி - Custom
வாணிபப் பெயர் - Trade mark
விலாசத்திற்கான உரிமை - Commercial goodwill
வாரிசு உரிமை - Inheritance
விஞ்ஞான நியதி-Scientific Laws
விதி முறைகள் - Procedure
விதிமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்குந்தன்மை - Formalism
விருப்பப் பத்திரம் - will

கலைச்சொல் விளக்கம்

(ஆங்கிலம்—தமிழ்)

Absolute Liability - முழுப் பொறுப்பு
Abstract sense of artistic form- அழகு உருவ நுண் அமைப்பு
Accident - எதிர்பாராச் செயல்
Acknowledgement - ஒப்புதல்
Actual delivery - நேர் ஒப்படைப்பு
Act of commission - இயங்கும் செயல்
Act of omission - இயங்காச் செயல்
Acts - செயல்கள்
Administration of Justice - முறை செய்தல், நீதி முறை
Agreements - உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், உடன்பாடுகள்.
Ambiguity - தெளிவின்மை
Articles of Association - கூட்டமைப்பு விதிகள்.
Artistic Copyright - கலை நுண்அமைப்பு உரிமை
Beneficial ownership - பலனுக்கு உரியவரின் சொந்தம்
Beneficiary - நலனுக்குரியவர்
Bilateral Acts - உடன்பாட்டுச் செயல்கள்
Borstal Schools - இளங் குற்றவாளிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பள்ளிகள்
Capacity- அறிவுத்திறமை, தகுதி
Civil Cases - உரிமை வழக்குகள்
Civil Justice - உரிமைகளைப் பாதுகாத்து நீதி வழங்குதல், உரிமை நிறுத்தல் முறை
Collective Ownership - கூட்டுச் சொந்தம்
Commercial goodwill - வாணிப விலாசத்திற்கான உரிமை
Companies Act - கம்பெனிச் சட்டம்
Company - கூட்டமைப்பு
Completion - முடிவு
Concurrent Possession - கூட்டு உடைமைகள்
Conditional - நிபந்தனைக்கு உட்பட்டது
Consensus *ad idem* - இசைவு எண்ணம்
Consent - இசைவு, ஒப்புதல்
Conservatism - பழமையைப் பற்றி நிற்கும் தன்மை
Consideration - எதிர்ப்பயன், பிரதிபலன்
Constructive delivery - நிமித்த ஒப்படைப்பு
Contingent Ownership-நிபந்தனையுள்ள சொந்தம்
Contract - ஒப்பந்தம்
Conventions - தொன்றுதொட்டு வரும் சம்பிரதாயங்கள்
Co-ownership-கூட்டுச் சொந்தம்
Corporeal possession - பருப் பொருள் உடைமை
Corporate Sole - தனிக் கூட்டமைப்பு
Corporation - கூட்டமைப்பு
Corporation Aggregate - தொகுதிக் கூட்டமைப்பு
Corporeal ownership - பருப் பொருள் சொந்தம்
Corporeal property, Material things - பருப் பொருள்கள்
Criminal attempts - குற்ற முயற்சிகள்
Criminal Breach of Trust - நம்பிக்கைத் துரோகக் குற்றம்
Criminal Cases - குற்ற வழக்குகள்
Criminal Justice - குற்றம் செய்தவர்களைத் தண்டித்து நீதி செலுத்துதல், ஒறுத்தல் முறை
Custom - வழக்க நெறி
Delivery - ஒப்படைத்தல்

Declaration of Human Rights - மனித உரிமைகளின் பிரகடனம்.
Derivative title - மாறிய உரிமை மூலம்
Deterrent Theory of Punishment - தண்டனை மூலம் பயமுறுத்துவதால் குற்றங்கள் தடுக்கப்படுகின்றன என்ற கொள்கை.
Dissolution - கலைத்தல்
Divine Law - தெய்வ நியதி
Dominant Right - அனுபோக வசதி உரிமை.
Duty - கடமை
Easement - அனுபோக வசதி உரிமை
Enacted Law - இயற்றப்பட்ட சட்டங்கள்
Equality before Law - சட்டத்தின் முன் சமத்துவம்
Ethics - ஒழுக்க நூல்
Evidence of title - உரிமைக்குச் சான்று
Fictitious person - கற்பனையில் உருவாகிய நபர், 'போலி நபர்,'
Formalism - (நடை) விதி முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மை
Freedom of Association - கூடியியங்குவதற்கு உரிமை
Freedom of Expression – எழுத்துரிமை
Freedom of Speech - சொல்லுரிமை, பேச்சுரிமை
Freedom of thought - சிந்தனை உரிமை
Fundamental Freedoms - அடிப்படை உரிமைகள்
Fundamental Rights - அடிப்படை உரிமைகள்
Idols - தெய்வத் திருவுருவங்கள்
Immaterial Property - நுண்பொருள்கள்
Immediate possession - நேரடி உடைமை
Imperfect Rights - செயல்படா உரிமைகள்
Incompleteness - முழுமை பெருமை
Inconsistency - முரண்பாடு
Incorporeal Ownership - நுண்பொருள் சொந்தம்
Incorporeal possession - நுண்பொருள் உடைமை
Incorporeal property - நுண்பொருள்கள்
Individual Liberty - தனி மனிதனின் தன்னுரிமை
Individual Ownership - தனிப்பட்ட சொந்தம்
Inheritance - வாரிசு உரிமை
Intention - கருத்து
Intentional acts - கருதிய செயல்கள்
International Conventions - சர்வதேச வழக்காறுகள்
International Court of Justice - உலக நீதி மன்றம்
International Law - சர்வதேசச் சட்டம்
Interpretation of Enacted Law - இயற்றப்பட்ட சட்டங்களின் விளக்கம்
Interpretation of statutes - சட்ட விளக்கம்
Interests - நலன்கள்
Invalid Agreements - செல்லுபடியாகாத உடன்பாடுகள்
Inventions - புதுப்புனைவுச் செயல்கள்
Jurisprudence - சட்டவியல்
Jus necessitatis - தவிர்க்க முடியாத செயல்கள்
Justice according to Law - சட்டத்தை ஒட்டிய நீதிமுறை
Law - சட்டம்
Law reports - தீர்ப்பு அறிக்கைகள்
Lease right - குத்தகை உரிமை
Legal duty - சட்டப்படியுள்ள கடமை
Legal persons - சட்டத்தால் ஆக்கப்பட்ட நபர்கள்; சட்டம் தோற்றுவிக்கும் நபர்கள்
Legal rights - சட்ட உரிமைகள்

Legal wrong - சட்டப்படியுள்ள இன்னுமை
Legislation - சட்டம் இயற்றல்
Liability - பொறுப்பு
Liberty - சுதந்திரம், தன் னுரிமை
Limitation Act - காலவரை யறைச் சட்டம்
Limited Liability-வரையறுக்கப் பட்ட பொறுப்பு
Material Property - பருப் பொருள்கள்
Mediate possession - பகர உடைமை
Memorandum of Association - கூட்டமைப்பு விதிகள்
Mens rea - தீய எண்ணம்.
Metonymy - இலக்கணை
Mistake of Law - சட்ட ஞான மின்மை
Moral Law - ஒழுக்க நெறி
Moral Obligation - நேர்மையான கடமை
Mortgage Right - ஈடு உரிமை
Motive - நோக்கம்
Natural Justice - இயற்கையான நீதி, முறை
Natural Law - அறம், இயற்கை நெறி
Natural Persons - இயற்கை நபர்கள்
Negative Act-இயங்காச் செயல்.
Negligence - கவனமின்மை
Obiter-dictum - சட்டத்தின் மதிப் பற்ற வெறும் வாசகம்
Offence - குற்றம்
Ownership - சொந்தம், சொத் துரிமை
Ownership in immaterial things- நுண் பொருள் செல்வம்
Original title - முதல் உரிமை மூலம்
Partnership - பங்கமைப்பு
Penal liability - தண்டனை
Perfect - முழுமையானது
Perfect Rights - செயல்படும் உரிமைகள்
Personal Rights-தனி உரிமைகள்
Persons - நபர்கள் -
Physical Laws - பொருளியல் நியதி
Political Society - அரசியல் கூட்டு, அரசியல் சமுதாயம்
Politics - அரசியல் நூல்
Positive act - இயங்கும் செயல்
Possession - உடைமை
Power - அதிகாரம்
Precedent - (முன்) தீர்ப்பு முறைமை
Preparation - முன்னேற்பாடு
Prescription-நீண்டகால (எதிர்) அனுபோக உரிமை
Preventive theory of punishment - மீண்டும் குற்றம் செய் வதைத் தடுக்கும் நோக்கத் துடன் தண்டனை அளிக்கப் படுகிறது என்ற கொள்கை
Procedure - விதி முறைகள்
Pronote - ஒப்புச் சீட்டு
Property - சொத்து
Punishment - தண்டனை
Real Rights - முழு உரிமைகள்
Reformative Theory of Punishment-சீர்திருத்தும் அடிப்படை யில் தண்டனை அமைய வேண் டும் என்ற கொள்கை
Remedial liability - ஈடுசெய்யும் பொறுப்பு, பரிகாரப் பொறுப்பு
Reputation - புகழ்
Retributive theory of punishment-பழிவாங்கும் அடிப்படை யிலே தண்டனை விதிக்கப்படு கிறது என்ற கொள்கை
Right - உரிமை
Rights *in re aliena* - பிரிக்கப் பட்ட, மாற்றப்பட்ட, உரிமை கள்
Rights *in Personam* - தனி உரிமை
Rights *in re Propria* - சொத் தின் மீதுள்ள ஆதார உரிமைகள்
Rights *in rem* - முழு உரிமை
Rights over Immaterial property - நுண் பொருள்கள் மீதுள்ள உரிமைகள்
Science - அறிவியல்
Scientific Laws-விஞ்ஞான நியதி

Security - ஈடு உரிமை
Share-holders - பங்குதாரர்கள்
Sole Ownership- தனிச் சொந்தம்
Source of title - உரிமை மூலம்
Sources of Law - சட்ட மூலங்கள்
Sovereignty-தலையான அதிகாரம்
Spes Successionis - எதிர்பார்க்கும் வாரிசு உரிமை
State - அரசு
Status - நன் மதிப்பு
Statutes - இயற்றப்பட்ட சட்டங்கள்
The *Animus Possidendi* - உடைமை எண்ணம்
The Constitution of the State - அரசியல் சட்டம்
The Corpus of Possession - உடைமைச் செயல்
Titles - உரிமை மூலங்கள்
Trade-mark - வாணிபக் குறி
Trustee - நம்பிக்கைப் பொறுப்பாளர்
Trusteeship - நம்பிக்கைப் பொறுப்பமைப்பு
Trust ownership - நம்பிக்கைப் பொறுப்பாளரின் சொந்தம்
Unborn persons - இனிப்பிறக்க இருப்பவர்கள்
Unenacted Law - இயற்றப் படாத சட்டம்
Uniformity - ஒரே சீருடைய தன்மை
Unilateral act - ஒருதலைச் செயல்
Unwritten Constitution-எழுதப் படாத அரசியல் அமைப்பு முறை
Valid Agreements -செல்லத்தக்க உடன்பாடுகள்
Vested Ownership - நிறைவுள்ள சொந்தம்
Vicarious Liability or Responsibility - பகரப் பொறுப்பு, தொடர்புப் பொறுப்பு
Voidable Contracts - தவிர்க்கத் தக்க ஒப்பந்தங்கள்
Void Contracts - செல்லுபடியாகாத ஒப்பந்தங்கள்
Will - விருப்பப் பத்திரம்
Wrong - தீங்கு, இன்னுமை

கழக வெளியீடு, கOளச

பதிப்பாளர்:

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம்:

98, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி-6.

விலை ரூ. 12-00

அப்பர் அச்சகம், சென்னை - 1.